# சார்ல்ஸ் ஸ்பர்ஜனின் போதனைகள்



1

# சார்ல்ஸ் ஸ்பர்ஜனின் போதனைகள்

(1834 - 1892)

பாகம் - 1

மொழிபெயர்ப்பு: விநோதா சுரேந்தர்

பூர்வபாதைகள் வெளியீடு

தொடர்பு கொள்ள: 99424 38063 jpsurendar@yahoo.com

First Edition : July 2013
Copies : 1500

Second Edition : July 2015
Copies : 2000

Logo design : Arun Gnanasekar

Cover design : Prasanna Surendar

# பூர்வ பாதைகள்!

***"வழிகளிலே நின்று, பூர்வபாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" - எரே 6:16***

தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு, சரியான ஆவிக்குரிய போதனையை அளிக்கும் நூல்கள் தமிழில் அதிகமாக இல்லை என்பது வருந்தத் தக்க விஷயம். ஆங்கிலம் சுலபமாக படிக்கக் கூடியவர்களுக்கு ஆங்கிலத்தில் இருக்கும் கணக்கிலடங்கா நல்ல நூல்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் தமிழில் வெளிவந்துள்ள நல்ல ஆவிக்குரிய போதனைகள் சொற்பமே. ஆகவேதான் 16ஆம் 18ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த தலைசிறந்த போதகர்களின் நூல்களை அப்படியே மொழிபெயர்ப்பு செய்து வெளியிட்டால் தமிழ்க்கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் சிறந்த முன்னேற்றத்தைக் காண இயலும் என நாங்கள் நம்புவதால்தான் இந்த சிறிய முயற்சியை எடுக்கிறோம். ஸ்பர்ஜன், ஜெ.சி.ரைல் போன்ற ஊழியர்கள் வாழ்ந்திருந்த காலத்தில் கிறிஸ்தவம் சரியான முறையில் தழைத்தோங்கியிருந்தது. இம்மாதிரியான முன்னோர்கள் சென்ற பூர்வபாதைகளை கண்டறிந்து அவர்கள் காட்டும் வழிகளில் செல்வது நமக்கு நன்மை பயக்கும். தமிழர்களின் மத்தியில் இந்த சான்றோர்களின் நல்ல அறிவுரைகளை பரப்புவதே எங்கள் நோக்கம். இந்தப் புத்தகத்தினால் பயனடைந்தவர்கள் அதை மற்ற தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கும் அறிமுகப்படுத்துவதை உங்கள் நோக்கமாகக் கொண்டீர்களானால், கிறிஸ்துவுக்காக நீங்களும் ஒரு சிறு பங்கு ஊழியம் செய்கிறவர்கள் ஆவீர்கள். தேவன்தாமே உங்கள் செயலை ஆசீர்வதிப்பாராக.

இந்த ஊழியம் லாப நோக்கில் செய்யப்படவில்லை. இதன் மூலமாகப் பெறப்படும் தொகை, மேலும் இது போன்ற நல்ல புத்தகங்களை அச்சிடுவதற்கென்றே உபயோகப்படுத்தப்படும்

***"நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய் காண்கிறீர்களோ, அவ்வளவாய் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்." - எபி 10:25***

# பொருளடக்கம்

பக்கம்

**1. மகிமை அடைந்தவர்களின் பேரானந்தம்** **7-24**

அ) பரிசுத்தவான்கள் அடைந்துள்ள பேரானந்தம்

ஆ) எவ்வாறு அப்பாக்கிய நிலையை அடைந்தார்கள்?

இ) நாம் கற்றுக் கொள்கிற பாடங்கள் யாவை?

**2. முந்தினோர் பிந்தினோராயும், பிந்தினோர் முந்தினோராயும்** **25-50**

அ) கர்த்தருக்கு செய்யும் ஊழியம் கிருபையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது

ஆ) நமது சேவையை அவர் தமது அளவுகோலினால் அளவிடுகிறார்

இ) ஊழியக்காரராகிய நாம் என்னவிதமான ஆவியை கொண்டிருக்க வேண்டும்

**3. ராகாபின் விசுவாசம்** **51-70**

அ) இரட்சிக்கும் விசுவாசம்!

ஆ) தனித்து நின்ற விசுவாசம்

இ) நிலையானவிசுவாசம்

ஈ) தன்னைத்தானே வெறுக்கும் விசுவாசம்

உ) கருணையுள்ள விசுவாசம்

ஊ) பரிசுத்தப்படுத்துகின்ற விசுவாசம்

**4. அன்பு மகனின் நலம் குறித்த கவலையான விசாரிப்பு** **71-98**

அ) இது ஒரு கவலை நிறைந்த கேள்வி

ஆ) எந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் இக்கேள்வி கேட்கப்படும்?

இ) இக் கேள்விக்கு வரக்கூடிய பதில்கள்

**5. பட்டுப்போன அத்திமரம்** **99-126**

அ) முதன்மையாயிருக்க விரும்புகிற, ஆனால் அதற்கேற்ற கனிகள் இல்லாதவர்கள் அநேகர் இவ்வுலகில் உண்டு

ஆ) கனிகள் ராஜாவாகிய இயேசுவால் பரிசோதிக்கப்படும்.

இ) முதன்மையாகத் தென்பட்டும் கனியற்றவர்களா-யிருக்கிறவர்களிடத்தில் கிறிஸ்து வருவதின் விளைவு மிகவும் பயங்கரமானதாக இருக்கும்

# 1. மகிமை அடைந்தவர்களின் பேரானந்தம்!

***இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை. வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள் மேல் படுவதுமில்லை***

***- வெளிப் 7:16***

பரலோகத்தைக் குறித்து நாம் அடிக்கடி சிந்தித்துப் பார்ப்பதில்லை. இது, உலகவாழ்க்கையின் மிகப்பெரும் சாபம். உலகவாழ்க்கையில் நம்மைக் கட்டியிருக்கின்றதான கயிறுகளை அவிழ்த்து நாம் விடுதலை பெற வேண்டுமானால், பரலோகத்தோடு நமக்கு இருக்கின்ற இணைப்பை அதிகமாக வலுப்படுத்திக் கொண்டால்தான் முடியும். வரப்போகின்ற உலகத்தைக் குறித்து நீங்கள் அதிகமாக சிந்திப்பீர்களானால், இந்த உலகத்தைக் குறித்த உங்கள் சிந்தனையானது குறைந்து போகும். மேலோகத்தைக் கற்பனை செய்து பார்ப்பதால், நாம் இவ்வுலகில் நஷ்டம் அடைந்ததாக நினைக்கிற காரியங்களிலிருந்துகூட ஆறுதல் அடைய வழியுண்டு. இவ்வுலகிலிருந்து நம்மை விட்டு பிரிந்து போனவர்களினிமித்தமாகவும் நாம் ஆறுதல் பெறமுடியும். இங்கிருந்து போனவர்களுக்கு அது நன்மையாக மாறிப் போயிற்று. அதனால் நாமும் மகிழ்ச்சியடைலாம். கிறிஸ்துவுக்குள்ளாக மரித்துப் போனவர்கள் ஒருபோதும் அழிந்து போவதில்லை என்கிற தைரியத்தைக் காட்டிலும் சிறந்த ஆறுதல் வேறு எதுவுமில்லை. அவர்கள் உயிர் துறக்கவில்லை, அதற்கு பதிலாக முழுமையான ஜீவனைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இங்கிருக்கும் சகல துயரங்களிலிருந்தும் நீங்கி, நமது கற்பனைக்கும் எட்டாததான அளப்பரிய ஆனந்தத்தை அங்கு அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். துயரத்தில் இருக்கிறவர்களே! முத்துக்கள் பதிக்கப்பட்ட பரலோகத்தின் வாசலை நோக்கிப் பார்த்து உங்கள் இருதயங்களைத் தேற்றிக் கொள்ளுங்கள். தங்கள் மீட்பரின் சிங்காசனத்தண்டையில் எப்பொழுதும் சூழ்ந்திருக்கின்றவர்களைப் பார்த்து ஆறுதல் அடையுங்கள்.

பரலோகத்தைப் பற்றி அதிகமாக நினைப்பதால், அது நமது ஜாக்கிரதை உணர்ச்சியையும் தூண்டிவிடக்கூடியதாக இருக்கிறது. ஒருவேளை நான் அதை இழந்து போய்விடுவேனோ? அதை இழந்து போகாதபடிக்கு நான் என்ன செய்ய வேண்டும்? பரலோகம் ஒரு சாதாரண விஷயமாக இருந்தால், நான் அதை அடையாமல் போனாலும்

அதனால் பெரிய இழப்பில்லை. அதைக் குறித்து நாம் அறிந்திருப்பது அதன் உண்மை நிலையில் பாதிகூட இல்லை. ஆனால் கொஞ்சம் அறிந்திருப்பதே இவ்வளவு மகிழ்ச்சிகரமாகத் தென்படுமானால், அதை அடைந்தே தீரவேண்டும் என்கிற உறுதியோடு நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு தேவன்தாமே நமக்கு ஊக்கத்தை அருளிச் செய்வாராக. எகிப்திலிருந்து வந்த இஸ்ரவேலர், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தில் பிரவேசிக்காமல் வழியிலேயே மரித்துப் போனதுபோல நாமும் ஆகிவிடாமல், அந்தப் பரம இளைப்பாறுதலில் பிரவேசிக்கப் போவதை நிச்சயப்படுத்திக் கொள்வோமாக. இவை எல்லாவற்றையும் வைத்துப் பார்க்கும்போது, கடவுளுடைய ஜனங்கள் அடையப்போகிற பரமஇளைப்பாறுதலைக் குறித்து அடிக்கடி தியானிப்பதைக் காட்டிலும் அதிக நன்மை தரக்கூடிய தியானங்கள் வேறு எதுவும் இருக்காது என நான் நம்புகிறேன். ஆகவே, உங்களுடைய சிந்தனைகளை மேல்நோக்கி, அந்த பொன்னான வீதிகளின் பக்கமாக சற்றுத் திருப்புங்கள் எனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நாம் எடுத்துக் கொண்டிருக்கும் வசனத்திலுள்ள (அ) பரிசுத்தவான்களின் பேரானந்தத்தைக் குறித்து முதலாவதாக தியானிப்போம். (ஆ)அந்த பாக்கியத்தை அவர்கள் எவ்வாறு அடைந்தார்கள் என்பதைக் குறித்து அடுத்தபடியாகப் பார்ப்போம். (இ)கடைசியாக, அதன் மூலமாக நாம் என்ன பாடங்களைக் கற்றுக் கொள்கிறோம் என்பதையும் பார்க்கலாம்.

## அ) பரிசுத்தவான்கள் அடைந்துள்ள பேரானந்தம்!

அவர்கள் அடைந்துள்ள பேரானந்தத்தின் முழுநிலைமையும் இங்கே நமக்கு அறிவிக்கப்படவில்லை. சில விஷயங்களிலிருந்து அவர்கள் பெற்றுள்ள விடுதலையைக் குறித்து இந்த வசனம் நமக்கு அறிவிக்கிறது. இரண்டு மூன்று அசௌகரியமான விஷயங்களிலிருந்து அவர்கள் பெற்றுள்ள விடுதலையை இவ்வசனம் குறிப்பிடுகிறது. முதலாவதாக நமக்குள்ளேயே இருக்கின்றதான சில அசௌகரியங்கள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. "இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை". அதாவது இவர்கள் தங்களுக்குள்ளிருந்து புறப்படுகின்ற அசௌகரியங்களிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அடுத்தபடியாக அவர்களுக்கு வெளியிலிருந்து வருகின்றதான அசௌகரியங்கள் - "வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல்

படுவதுமில்லை" - ஒரு வசனத்தில் ஆவிக்குரிய கருத்தை காண வேண்டுமென்பதற்காக, அது இயல்பாகவும் வெளிப்படையாகவும் கூறுகின்ற கருத்துக்களை விலக்கி விட்டு, வேறு அர்த்தம் கண்டுபிடிக்க நாம் சிரமப்பட வேண்டியதில்லை. ஆகவே முதலில் இதில் எளிமையாக காணப்படுகின்ற கருத்தை நாம் எடுத்துக் கொள்வோம். பரலோகத்தில் அவர்களுக்கு ஒரு மகிமையான சரீரம் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பரலோகத்தில் உணவு, நீர் இவைகளுக்குத் தேவை இருக்குமா என்பதைக் குறித்து நமக்கு வசனம் கூறவில்லை. ஆகவே அதைக் குறித்து நாம் பேசப்போவதில்லை. இருந்தாலும் அவர்களுக்கு உணவுத் தேவை இருக்குமானால் அது சந்திக்கப்படும் என்பதை வசனம் நமக்கு கூறுகிறது - "சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவதண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்". எதிர்காலத்தில் என்ன தேவைகள் ஏற்பட்டாலும் அதைக் குறித்து கலக்கம் கொள்ள வேண்டிய நிலமை அவர்களுக்கு இல்லை. இங்கே, இவ்வுலகத்திலே, பசியுள்ள ஒரு மனிதன், "நான் எதை சாப்பிடுவது?" என அங்கலாய்க்க வேண்டியதாயிருக்கிறது. தாகமுள்ளவனும் "நான் என்னத்தைக் குடிப்பேன்"? எனத் தேடுகிறான். நாம் அனைவருமே, "எதை உடுத்துவது?" என கவலை கொள்கிறவர்களாயிருக்கிறோம். ஆனால் மறுஉலகத்திலோ இந்தக் கேள்விகளுக்கெல்லாம் இடமேயில்லை. அவர்களுக்கு வேண்டியவைகள் எல்லாம் அங்கு தாராளமாக கிடைக்கும். கடவுளுடைய ஜனங்கள்கூட இவ்வுலகில் பட்டினியை அனுபவிக்கிறார்கள். கடவுளின் ஒரே பேறான குமாரன், சகலத்திற்கும் அதிகாரியானவர்கூட, இங்கே பசியாயிருந்தார். இந்தவிதமான பாடுகளில் ஒருவன் கிறிஸ்துவோடு பங்குபெற வேண்டியவனாக இங்கு இருந்தால் அதைக் குறித்து அவன் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. கடவுளின் மக்கள் இங்கே தாகமாயிருக்க வேண்டியதாயிருக்கிறது - அவர்களுடைய ஆண்டவரும் "தாகமாயிருக்கிறேன்" என்றாரே. அவர் அனுபவித்த பாடுகளில் எதையேனும் நீங்களும் அனுபவிக்க நேர்ந்தால், கடவுளின் ஜனமாகிய நீங்கள் அதைக் குறித்து ஆச்சரியம் கொள்ளாதீர்கள். பரலோகத்திலே அவரைப் போலவே இருக்கப் போகிற ஜனங்கள் இங்கே பூலோகத்திலேயும் தமது தலைவரைப் போலவே இருக்க வேண்டுமல்லவா? ஆனால், பரலோகத்திலோ தரித்திரம் இல்லை, வேதனையான சூழ்நிலையை உருவாக்கக்கூடிய விபத்துக்கள் இல்லை, "இவர்கள் இனிப் பசியடைவதுமில்லை, தாகமடைவதுமில்லை".

சரீரசம்பந்தமான இந்தக் காரியங்களை நாம் ஆராய்ந்து பார்த்ததையும் தவிர்த்து, இதை **மனது** சம்பந்தமாகவும் விளங்கிக் கொள்ள வேண்டுமென்பதில் சந்தேகமில்லை. நமது மனதும் ஓயாமல் பசிக்கும் தாகத்துக்கும் ஆளாகிக் கொண்டுதான் இருக்கிறது. இவ்வுலகில் பலவிதமான பசிகளும் தாகங்களும் காணப்படுகின்றன. அவைகளில் சில தீமையானவை, சில தீங்கில்லாதவை. உலகில் அநேக மனிதர்கள் சொத்துக்களின் மீது தீராத பசியுள்ளவர்களாய் இருக்கிறார்கள். பொருளாசை உடையவனை ஒருபோதும் திருப்திப்படுத்த முடியாது. "தா, தா" என்கிறதான அட்டையை ஒருபோதும் திருப்தி செய்ய முடியாது. இம்மாதிரியான பசி பரலோகத்தில் ஒரு போதும் இருக்காது, இருக்கவும் முடியாது. ஏனென்றால் அங்கு சகலமும் பரிபூரணமாக நிறைந்து காணப்படுவதால் இவ்வித தேவை எழ வாய்ப்பில்லை. தேவனுடைய சிங்காசனத்துக்கு அருகாமையில் இருந்து, அவருடைய மகிமையை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இருக்கும் சந்தோஷத்தின் அளவற்ற நிலைமையில் அவர்களுக்கு வேறு எந்தவிதமான தேவைகளும் இருக்கப் போவதில்லை. தங்களுக்குத் தேவை என அவர்கள் எதிர்பார்த்ததற்கும் மேலாகவே அங்கு அவர்களுக்குப் பரிபூரணமாக கிடைத்திருக்கும். அவர்களுடைய பொக்கிஷங்களுக்குக் குறைவேயிராது. அவர்கள் விரும்புகின்ற பொக்கிஷம் எதுவும் அவர்களுக்கு மறுக்கப்படுவதில்லை. இவ்வுலகிலே பல மனிதர்கள் புகழின் மீது பசிதாகமுடையவர்களாயிருக்கிறார்கள். தாங்கள் விரும்புகின்ற புகழை அடைந்துகொள்ள அவர்கள் எவ்வளவாகப் பாடுபடுகிறார்கள்! தங்களுக்குத் தடையாக வருகின்ற யாவற்றையும் உடைத்து நொறுக்கி அதை அடைந்து கொள்ளுகிறார்கள். தங்களுடைய குறிக்கோளை எப்பாடுபட்டாவது நிறைவேற்றிக் கொள்கிறார்கள். புகழை அடைவதற்காக சாகவும் துணிகிறார்கள். ஆனால் பரலோகத்தில் இந்தவிதமான பசிதாகங்களுக்கு இடமில்லை. ஒருகாலத்தில் புகழை அடைவதற்காக மிகவும் ஆசைப்பட்டவர்கள்கூட இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டபின் தங்களுடைய ஆசைகளை அற்பமானதாக எண்ணுகிறார்கள். அவர்களுடைய அற்ப ஆசைகளுக்கு பரலோகத்தில் என்ன இடமிருக்கப் போகிறது? தங்களுடைய கிரீடங்களை அவர்கள் கழற்றி, தங்களை மீட்ட இரட்சகருடைய பாதத்தில் வைத்துவிடுவார்கள். பரலோகத்தில் அவர்கள் தங்களுடைய வெற்றிக் கொடியை சுமந்து செல்வார்கள். ஆனால் அந்த வெற்றிக்கு ஆட்டுக்குட்டியானவரும், அவரது மரணமும்தான் காரணம் என்பதை அறிவித்துக் கொண்டே செல்வார்கள். ஆட்டுக்குட்டியானவருக்குக் கிடைக்கும் புகழில்

அவர்களுடைய ஆத்துமா மகிழ்ந்திருக்கும். ஆட்டுக்குட்டியானவர் அடையும் கீர்த்தியினால் அவர்களுடைய ஆவியானது நித்தியத்துக்கும் மனதிருப்தியடைந்திருக்கும். புகழைவேண்டி அவர்கள் இனி ஒருபோதும் பசியோ தாகமோ அடையமாட்டார்கள். இன்னொரு வகையான பசிதாகம், அன்பை நாடி நிற்பது! அன்பு செலுத்தவும், அன்பைப் பெறவும் மனித இதயமானது எப்போதும் தாகத்துடன் இருக்கிறது. "காதல்" என்று தற்போது வழங்கி வருகிறதான அன்பைக் குறித்து நான் இங்கு குறிப்பிடவில்லை. தோழமையையும் நேசத்தையும் விரும்பி நாடுகின்றதான உணர்வைக் குறித்து சொல்லுகிறேன். யாரையாவது நாடிப் பற்றிக் கொள்வதற்கு மனித மனது எப்போதும் விரும்புகிறது. நாம் அப்படியாகத்தான் படைக்கப்பட்டிருக்கிறோம். அப்படியாகத்தான் வாழுகிறோம். மனிதர்கள் சேர்ந்துதான் வாழவேண்டும். நாம் தனித்திருக்க முடியாது. தன்னுடைய மனதின் துயரங்களை யாராவது கேட்க மாட்டார்களா என அநேகருடைய மனது தேடித் திரிகிறது. தங்கள் துயரங்களைக் கொட்டி அழுவதற்கு கருணையுள்ள ஆள் இல்லாததால் அநேக மனிதர் புத்திசுவாதீனமற்றவர்களாகக்கூட ஆகிவிடுகிறார்கள். தங்கள் நம்பிக்கைக்குரியவர்களாக யாரேனும் இருப்பார்களா எனத் தேடி அலைகின்ற பசிதாகமுடைய ஆத்துமாக்கள்தான் எத்தனை ஏராளம்! ஆனால் இந்தவிதமான பசியும்தாகமும் மேலோகத்தில் அவர்களுக்கு இல்லை. அவர்களுடைய நேசம் முழுவதும் தங்களுடைய மீட்பரை மட்டுமே நோக்கியதாக இருக்கும். பூலோகத்தில் வாழும்போது அவர் மீது அவர்கள் வைத்திருந்த நம்பிக்கையானது பரலோகத்திலும் தொடர்ந்து நிலைத்திருக்கும். அவரே அவர்களுடைய இருதயத்தின் ஆண்டவர், மனதை ஆளுபவர். அவரில் அவர்கள் திருப்தியடைந்திருப்பார்கள். அவரால் அணைக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். இனி ஒருபோதும் அன்பைத் தேடி அலையும் பசிதாகமுடையவர்களாகக் காணப்படமாட்டார்கள்.

அறிவை அடையும்படிக்கு பசியோடும் தாகத்தோடும் தேடி அலைகிற இளம்பிராயத்தினர் எத்தனை பேர்! பூலோகத்தின் கடந்த காலத்து சரித்திரங்களை அறிந்து கொள்வதற்காக எவ்வளவாக முயற்சிக்கிறார்கள்! தத்துவசாஸ்திரத்தை ஆராய்ந்து அதில் கரை காண முயற்சிப்பவர்கள் எவ்வளவு பேர்! அறிவு! அறிவு! அறிவு! மனித மனது அறிவை அடையும்படி வாஞ்சித்து அலைகிறது. ஆனால், மேலோகத்திலோ அவர்கள் இருக்கிறவண்ணமாகவே அறிந்து கொள்வார்கள். மேலோகத்தில் அவர்கள் எல்லாவற்றையும் அறிகின்றதான

சர்வஞானத்தை அடைவார்கள் என நான் நினைக்கவில்லை. ஏனென்றால் கடவுள் ஒருவர் மாத்திரமே சகலத்தையும் அறிந்த சர்வஞானியாக இருப்பார். ஆனால் அதன் குடிமக்களோ தாங்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறவற்றை மாத்திரம் அறிந்து கொண்டு அதில் திருப்தியாக இருப்பார்கள். மிகுந்த கஷ்டப்பட்டு அறிவைத் தேடி கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் அங்கு இருக்காது. அறிவைப் பெற்றுக் கொள்ளுவதில் அங்கேயும் படிப்படியான முன்னேற்றம் இருக்கலாம். ஞானி ஒருவன் தினமும் மேலும் மேலும் ஞானத்தைப் பெற்றுக் கொள்கிறவனாகக் காணப்படலாம். ஆனால், மனதை வருத்தி, கசக்கிப் பிழிந்து அறிவை அடைய வேண்டியதான பசிதாகம் அங்கே இருக்காது. அவர்கள் இனி பசியடையார், இனி தாகமும் அடையார். என்ன ஆசீர்வாதமான இடம் அது! மனிதனின் அலைபாயும் மனது அங்கே ஆழ்கடலைப் போன்ற அமைதியைப் பெற்றுக் கொள்கிறது. அழிந்து போகின்ற காரியங்களுக்காக கடுமையாக உழைத்தும் திருப்தியைப் பெற்றுக் கொள்ளாத மனிதனுடைய தாகமுள்ள ஆவியானது, ஆசீர்வாதம் நிறைந்த அந்நாட்டிலே, தூதர்களின் அப்பத்தினாலே திருப்தி செய்யப்பட்டு, கர்த்தரால் வருகின்ற பரிபூரண நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும்.

இவை மாத்திரமல்ல, நாம் தியானிக்க எடுத்துக் கொண்ட வசனமானது, நிச்சயமாக **ஆவிக்குரிய** பசிதாகங்களைப் பற்றியும் குறிப்பிடுவதாக இருக்கிறது. "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் திருப்தியடைவார்கள்". இந்தவிதமான பசிதாகத்தை நாம் வாஞ்சிக்கிறவர்களாக இருக்க வேண்டும். இந்தவிதமான பசிதாகம் யாருக்கு அதிகமதிகமாக இருக்கிறதோ அவர்கள் அதிகமான கிருபையை பெறுவார்கள் என்பதற்கு அது அடையாளமாக இருக்கிறது. பூலோகத்திலே பரிசுத்தவான்கள் ஆவிக்குரியபிரகாரமான பசியையும் தாகத்தையும் உடையவர்களாக இருப்பது மிகவும் நல்லது. ஆனால், பரலோகத்திலோ அந்த ஆவிக்குரிய பசியும் தாகமும் பரிபூரணமாக நிறைவுசெய்யப்படும். இன்னும் சிலர் இங்கே பரிசுத்தம் அடைவதில் பசிதாகத்தோடிருக்கிறார்கள். என்னிலுள்ள எல்லா தீமைகளும் நீங்கி முற்றிலுமாக பரிசுத்தம் அடைவதற்கு நான் எதைக் கொடுத்தாலும் தகும். பாவத்தில் விழப்பண்ணுகிற கண்களைக்கூட நான் பரிசுத்தத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இழந்துவிடத் துணிகிறேன். நாவினால் பாவம் செய்வதைக் காட்டிலும் ஊமையனாக இருந்துவிடுவதில் எனக்கு சம்மதம். பாவத்தில் விழப்பண்ணுகிறதான என்னுடைய எல்லா அவயவங்களையும்

சந்தோஷத்தோடு கடவுளுக்கு ஒப்புவித்துவிட ஆவலாயிருக்கிறேன். பரிசுத்தத்தின்மேல் பசிதாகமுடையவர்களாயிருப்பவர்கள் இப்படியாக சகலத்தையும் விட்டுவிட மனதாயிருப்பார்கள். ஆனால், பரலோகத்திலோ இந்தவிதமான பசிதாகம் இருக்காது. ஏனென்றால் அவர்கள் தங்கள் பிதாவின் சிங்காசனத்துக்கு முன்பாக குற்றமற்றவர்களாக காணப்படுவதினால்தான். இதை நினைக்கும்போதே இனிமையாக இருக்கிறதல்லவா? பரிபூரணமுள்ளவர்களாக காணப்படுவதே பரலோகத்தின் இயல்பாக இருக்கிறது. பாவத்தின் வேராகிலும், கிளையாகிலும் எதுவும் அங்கே காணப்படுவதில்லை. நம் சரீரத்திலும் ஓர் இம்மியளவு பாவம்கூட தென்படாது. கறைதிரை முதலானவை ஒன்றுமில்லாமல் முழுவதுமாக சுத்திகரிக்கப்பட்டவர்களாக அங்கு காணப்படுவோம். நமது ஆண்டவரைப் போலவே முற்றிலும் பரிசுத்தமுள்ளவர்களாக இருப்போம். இவ்வுலகத்திலே நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்களாக இருப்பது நன்மையான காரியம்தான். இரட்சிப்பின் நிச்சயத்தை அடைவதில் அநேகர் பசிதாகத்தோடு இருக்கிறார்கள். தாங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பதாக நம்பிக்கையோடிருக்கும் அவர்கள் அதற்கான நிச்சயத்தைப் பெற்றுக் கொள்வதில் பசிதாகத்தோடு இருக்கிறார்கள். ஆனால், இவ்வுலகத்தைக் கடந்து அக்கரை சேர்ந்தபின் "நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேனா?" என்கிற பசிதாகம் அவர்களில் காணப்படாது. அங்கே தமது இரட்சகரை அவர்கள் முகமுகமாக தரிசித்திருப்பார்கள். அவரைத் தேடி அலைகிறவர்களாக இருக்க மாட்டார்கள். அவருடைய அன்பின் கடலிலே மூழ்கித் திளைத்திருப்பார்கள். இடைவிடாமல் சந்தோஷத்தில் திளைத்துக் கொண்டிருக்கிற அவர்களுக்குள் சந்தேகத்தின் கேள்விகள் எழாது. பூலோகத்திலே இயேசுக்கிறிஸ்துவோடு ஐக்கியப்படுவதற்கு விசுவாசிகள் பசிதாகத்தோடு இருக்கிறார்கள். ஒரு கனப்பொழுதாகிலும் அவர் தமது முகத்தை நமக்கு மறைத்துக் கொண்டால், "என் ஆத்துமா இராக்காலங்களில் உம்மை வாஞ்சிக்கிறது" என கலங்கித் தவித்துப் போகிறோம். பரிசுத்தஆவியினால், தேவனுடைய அன்பை நமது உள்ளங்களில் திரும்ப அனுபவிக்கும் வரை நாம் திருப்தியடைவதில்லை. ஆனால் பரலோகத்தின் நிலைமை அப்படியில்லை. அங்கே மேய்ப்பர் எப்போதும் தம் மந்தையோடே இருக்கிறார். மேலோகத்தின் ராஜா எப்போதும் தமது பிரஜைகளோடு இருக்கிறார். அவருடைய இடைவிடாத பிரசன்னத்தினால் அவரைத் தேடி அலைகிறதான பசிதாகம் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுப் போகிறது. இருதயமானது முற்றிலுமாக பரிசுத்தமாக்கப்பட்டுவிட்டபடியால்,

உள்ளுக்குள்ளிருந்து வருகின்ற உணர்வுகள் தூய்மையாக இருக்கிறது. ஆகவே, அவைகள் விசுவாசிகளுக்கு பேரானந்தத்தை அளிப்பதாகவே இருக்கிறது.

நமக்கு வெளியிலிருந்து வரக்கூடிய தீங்குகளைக் குறித்து இப்போது சற்று சிந்திப்போம். நாம் பாலஸ்தீனா போன்ற தேசத்திலே, பயங்கரமான வெயிலின் உஷ்ணத்திலே வசித்துக் கொண்டிருக்கிறவர்களாக இருந்தால், "வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை" என்கிற வாக்கைக் குறித்து மிகவும் ஆனந்தப்படுகிறவர்களாக இருப்போம். இதன் உள்ளான அர்த்தம் என்னவெனில் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட ஜனங்கள், வெளியிலிருந்து வருகின்ற எந்தத் தீமையினாலும் பாதிப்படையமாட்டார்கள் என்பதே. அதை அப்படியே உள்ளபடி எடுத்துக் கொள்ளுங்கள். மகிமையடைந்த பரிசுத்தவான்களை பரலோகத்திலே இருக்கின்ற எந்த காரியமும் அசௌகரியத்துக்கு ஆளாக்காது. பரிசுத்தவான்கள் முற்றிலுமாக மகிமை அடைந்திருக்கிறபடியால் எதுவும் அவர்களை பாதிக்காது என நாம் எண்ண வேண்டும். பூலோகத்திலே சூரியன் மாத்திரமல்லாது பலவிதமான கஷ்டங்களும் துயரங்களும் நம்மைத் தகிக்கிறது. பரிசுத்தவான்கள் என்னவிதமான பாடுகளையெல்லாம் இங்கு கடந்து போயிருக்கிறார்கள்! பலருக்கு சரீரத்தில் பலவிதமான உபாதைகள் இருந்திருக்கிறது. இடைவிடாத நோயினால் தொந்தரவுகள்! அநேக பரிசுத்தவான்கள் இவ்வுலகில் சிறிது காலமாவது சரீரப் பாடுகள் இல்லாமல் ஓய்ந்திருக்க முடிந்ததில்லை. தேவனுடைய பிள்ளைகளில் இன்னும் பலர் வேறுவிதமான பாடுகளோடு ஓயாமல் போராடியிருக்கிறார்கள். ஏழ்மையினால் துன்புற்றிருந்திருக்கிறார்கள். பலர் கடுமையாக பாடுபட்டு உழைக்க வேண்டியதாக இருந்தது. இருந்தாலும் அவர்களுக்கு பற்றாக் குறையான ஆகாரமும், நைந்து கிழிந்துபோன உடைகளுமே இருக்கும்படியான துன்பங்களுக்குள்ளாக கடந்துபோகும்படி தேவன் குறித்திருந்தார். குழந்தைப் பருவத்திலே ஏழ்மையை அனுபவித்தவர்களின் துயரமானது கடும் உஷ்ணமாக அவர்களைத் தகித்தது. இன்னும் சில விசுவாசிகள் தங்களுக்கு அருமையானவர்களை அடுத்தடுத்து பறிகொடுத்த துயரத்துக்குள்ளாகியிருந்தார்கள். ஓ! விதவைகளின் நிலமை எவ்வளவு துயரமானது! தகப்பனில்லாத பிள்ளைகளின் துயரம் எவ்வளவு ஆழமானது! பிள்ளைகளை பறிகொடுத்த பெற்றோரின் துக்கம் எவ்வளவு பெரிது! சிலவேளைகளில் தேவனுடைய அம்பானது அடுத்தடுத்து நம் மீது பாய்ந்து துயரத்தை ஏற்படுத்துகிறதோ என எண்ணத் தோன்றும்

அளவிற்கு பிரச்சனைகளை சந்திக்க நேரிடுகிறது. இதற்கு மேலும் ஏதாவது பாக்கி இருக்கக் கூடுமோ என நினைக்கும்படியாக துன்பங்கள் தொடருகிறது. இதெல்லாம் இவ்வுலகில் நாம் சந்திக்கிற பிரச்சனைகளின் உஷ்ணத் தாக்கங்கள். சில பிள்ளைகள் நன்றிகெட்டத்தனமாக நடந்து பெற்றோரை மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாக்குகிறார்கள். இறந்து போன பிள்ளைகளினால் ஏற்படும் துயரத்தைக் காட்டிலும் பக்தியற்ற பிள்ளைகளால் ஏற்படும் துயரம்தான் பெற்றோருக்கு மிகவும் அதிகமாக இருக்கும் என நான் கருதுகிறேன். முடிந்து போன சிலுவையைக் காட்டிலும் சுமந்து கொண்டிருக்கிற சிலுவைதான் அதிக பாரமானது. பெற்றோருக்கு அவமானத்தைக் கொண்டுவரும் வகையில் வாழுகின்ற பிள்ளைகளினால் பெற்றோர் அடைகிற துயரம்தான் எவ்வளவு பெரியது! இவன் பிறந்தபோதே இறந்து போயிருந்தால் எவ்வளவு நலமாயிருந்திருக்கும் என்று பெற்ற தாயையே எண்ண வைக்கிற விதத்தில் வாழுகின்ற பிள்ளையால் ஏற்படுகின்ற துக்கம் மகா கொடியது. இந்தவிதமான துக்கங்களையெல்லாம் நீங்கள் சீக்கிரமாகக் கடந்து போய்விடுவீர்கள். “வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள் மேல் படுவதுமில்லை”. அங்கு ஏழ்மை இல்லை, வியாதி இல்லை, இறப்பு இல்லை, நன்றிகெட்டதனம் இல்லை - இவை போன்ற தீமை எதுவும் அங்கே இல்லை. தங்கள் துயரத்திலிருந்து அவர்கள் நித்தியத்துக்கும் ஓய்ந்திருப்பார்கள்.

இன்னும் வேறுவிதமான உஷ்ணங்களையும் நாம் இவ்வுலகில் அனுபவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அது சோதனைகளின் வடிவத்தில் வருகிறது. ஓ! கடவுளுடைய ஜனங்களுக்கு சரீரத்தில் வந்த சோதனைகள் எவ்வளவாய் இருக்கிறது! தேவன் மாத்திரம் தமது மிகுந்த கிருபையினால் குறுக்கிட்டு அநேகந்தரம் அவர்களை சோதனைகளுக்கு விலக்கியிராவிட்டால் அதினால் பிடிக்கப்பட்டுப் போயிருப்பார்களே! அவர்களும் சோதிக்கப்பட்டார்கள். சிலவேளைகளில் அவர்கள் குடும்பத்தாரே அவர்களுக்கு விரோதியாக இருந்திருக்கிறார்கள். பலவிதமான சூழ்நிலைகளினால் சோதனைக்குட்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தடுமாறி விழக்கூடிய நிலமைக்குப் போயிருக்கிறார்கள். பிசாசினாலும் அவர்கள் சோதிக்கப்பட்டிருக்கிறார்கள். சாத்தானின் மறைமுகமான சோதனைகளுக்குத் தப்பிப்பது கடினம். அவன் தனது பொல்லாத விஷ அம்புகளை எய்யும்போது அது விசுவாசியை பயங்கரமாகத் தாக்கும். ஓ! இவ்விதமான பயங்கரத் தக்குதல்களை சமாளித்த நம்மில் பலர், இவ்வுலகைக் கடந்து அக்கரைக்கு சென்றபின்

எப்படியாக நிம்மதிப் பெருமூச்சு விடுவோம்! பூலோகத்திலே நம்மைத் தாக்கின அந்த நாயானது, நம்மைப் பார்த்துக் குரைக்கக்கூட இயலாமல் நரகத்தின் அக்கினியிலே கிடப்பதைக் கண்டு நகைப்போமல்லவா? அவனிடமிருந்து நாம் முற்றிலுமாக விடுவிக்கப்பட்டிருப்போம். இங்கே அவன் நம்மைப் பட்சித்துப் போட வகை தேடிக் கொண்டிருப்பதால் இங்கு நாம் கவலையோடிருக்கிறோம். ஆனால், பரலோகத்திலோ அவனால் நம்மைப் பட்சிக்க முடியாது. ஆகவே அங்கு நாம் கவலையற்றிருப்போம். சோதனையாகிய "வெயிலாகிலும் உஷ்ணமாகிலும்" அங்கு நம் மேல் படுவதில்லை. சோதனைகளை அனுபவித்து வந்த ஜனங்கள் அங்கு மிகவும் சந்தோஷத்தோடு இருப்பார்கள்.

உபத்திரவமென்னும் உஷ்ணமும் அநேக பரிசுத்தவான்களைத் தகித்து வந்திருக்கிறது. கடவுளுடைய ஜனங்கள் இந்தவிதமான சோதனைக்குள்ளும் உட்படுத்தப்படுகிறார்கள். அநேக பாடுகளின் வழியாக நடந்து வந்து அவர்கள் பரலோகராஜ்ஜியத்தை சுதந்தரித்துக் கொண்டிருக்கிறார்கள். பரிசுத்தவான்களின் பெயருக்குக் களங்கம் விளைவிக்கிறவர்கள் யாரும் பரலோகத்தில் இல்லை. குற்றஞ் சுமத்துகிறவர்கள் இல்லை. திரும்பவும் துன்பப்படும்படியாக அவர்கள் அங்கு உபத்திரவங்களை சந்திப்பதில்லை. எதைக் குறித்தும் கவலைப்படுகின்ற உஷ்ணமும் அவர்களை அங்கு தகிப்பதில்லை. இவ்வுலகிலேகூட நாம் கவலைப்பட வேண்டியது அவசியமா என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால், கடவுளுடைய ஜனங்களில் அநேகர் பலவிதமான கவலைகளுக்குள்ளாகி அதனால் பாதிப்படைந்தவர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்று இக்கூட்டத்தில் அமர்ந்து, "பரலோகத்தில் இருப்பது எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்!" எனப் பாடினவர்களில் சிலபேரின் எண்ணமெல்லாம் தங்களுடைய வியாபாரத்தைக்குறித்தும்,வீட்டைக்குறித்தும்கவலையோடிருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இங்கே நாங்கள் பரலோகத்தைக் குறித்துப் பிரசங்கித்து உங்கள் கவனத்தை மேல்நோக்கித் திருப்ப முயற்சி செய்து கொண்டிருக்கும் வேளையில்கூட. சில குடும்பப் பெண்களின் கவனமானது வீட்டுக் காரியங்களில் செய்ய மறந்தவைகளைக் குறித்தோ அல்லது சாவியை எங்கே வைத்தோம் என்பதைக் குறித்தோ அலைபாய்ந்து கொண்டிருக்கலாம். கவலைப்படுவதற்கு நாம் பல காரணங்களைக் காட்டிக் கொண்டு புதிது புதிதான கவலைகளை தொடர்ந்து கண்டுபிடிக்கிறவர்களாக இருக்கிறோம். இந்த விஷயத்தில் நாம் ஒரு வசனத்தை மறந்துவிடுகிறோம் -"அவர் உங்களை

விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மீது வைத்து விடுங்கள்". மோட்சத்திலோ கவலைக்கே இடமில்லை. "இவர்கள் இனிப் பசியடைவதுமில்லை, இனித் தாகமடைவதுமில்லை. வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள் மேல் படுவதுமில்லை" ஓ! மனிதர்களே, அங்கு கடலில் செல்லுகிற வியாபாரக் கப்பல்கள் இல்லை. அறுப்பும் விதைப்பும் இல்லை. வெயிலையோ மழையையோ குறித்து கவலை கொள்ள வேண்டியதில்லை. ஓ! பெண்ணே, அங்கு நீ கவலைப்பட்டு பராமரிக்க வேண்டிய குழந்தைகள் எதுவுமில்லை. பிள்ளையின் வியாதியினிமித்தமாக நீ அங்கலாய்க்க வேண்டிய நிலமையில்லை. ஒருபோதும் பிரிந்து போகாத ஒரு பெரிய குடும்பத்திலே நீயும் அங்கத்தினளாக இருப்பாய். கடவுளுடைய குடும்பத்தின் சகோதர சகோதரிகளாக நாம் அங்கே நிரந்தரமாக சேர்ந்து வாழுவோம். நித்திய காலத்துக்கும் ஆசீர்வதிக்கப்படவர்களாய் பேரானந்தத்தை அனுபவித்திருப்போம்.

பரிசுத்தவான்கள் அடையப் போகிறதான பேரானந்தத்தைக் குறித்து நாம் விரிவாகப் பார்த்தோம். இப்போது அவர்கள் எவ்வாறு அந்த நிலமைக்கு வந்தார்கள் என்பதை சற்று ஆராய்வோம்:-

## ஆ) எவ்வாறு அப்பாக்கிய நிலையை அடைந்தார்கள்?

அவர்கள் பூலோகத்திலே மிகவும் அதிர்ஷ்டசாலிகளாக இருந்ததால் அப்பாக்கிய நிலையை அடைந்தார்கள் என்று நாம் கூறமுடியாது. ஏனென்றால் வசனம், "இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்" என்று கூறுகிறது. பரலோகத்திலே ஆனந்தத்தை அனுபவிப்பவர்களில் அநேகர் பூலோகத்திலே வருத்தங்களையும் சோதனைகளையும் அனுபவித்து வந்தவர்களாகவே காணப்படுவார்கள். ஆகவே இப்போது வருத்தத்தையும் சஞ்சலத்தையும் அனுபவிக்கிற ஆத்துமாக்களே, இதை நினைத்து உங்களைத் தேற்றிக் கொள்ளுங்கள். அவர்கள் தங்களுடைய சொந்த நற்குணத்தினாலே அங்கு வந்திருக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் தங்களுடைய அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே "தோய்த்து வெளுத்தவர்கள்" என்று காண்கிறோம். அவர்களுடைய வஸ்திரங்கள் வெளுக்கப்பட வேண்டியதாக இருந்தது. எப்போதும் கறையில்லாதவர்களாக அவர்கள் வாழ்ந்திருக்கவில்லை. அவர்களிடத்தில் குற்றங்குறைகள் இருந்தன. ஏதோ தகுதிகள் இருந்தபடியினால் அவர்கள் மோட்சத்தை

அடைந்திருக்கவில்லை. அவர்கள் கடவுளுடைய கிருபையின் ஐசுவரியத்தை அடைந்திருந்தார்கள். அவர்கள் அங்கு வந்தது எப்படி? அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் மூலமாக அங்கு வந்தார்கள் என்பதே முதலாவது காரணம். வெயிலும் உஷ்ணமும் அவர்கள் மீது படாதபடிக்கு ஆட்டுக்குட்டியானவர்தாமே அவைகளைத் தம் மீது ஏற்றுக் கொண்டார். தேவனுடைய உக்கிர கோபாக்கினையாகிய தீர்ப்பானது நமது மீட்பரின் மீது செலுத்தப்பட்டது. அது அவரைத் தகித்து எரித்தது. துயரமும் அங்கலாய்ப்பும் அவரை ஆட்கொண்டது. நமது மீட்பர் அந்தப் பாடுகளை ஏற்றுக் கொண்டபடியால் நமக்கு இனி அந்தப் பாடுகள் இல்லை. பரலோகத்தைக் குறித்த நமது நம்பிக்கையானது கிறிஸ்துவின் சிலுவையில் இருக்கின்றது.

மீட்பரானவர் தமது இரத்தத்தை சிந்தினார் என்பதே அவர்கள் பரலோகத்தை அடைந்ததற்கு இரண்டாவது காரணமாயிருக்கிறது. தங்கள் வஸ்திரங்களை அதிலே தோய்த்து அவர்கள் வெளுத்தார்கள். விசுவாசமானது அவர்களை மீட்பரோடு இணைத்தது. அவர்கள் அதிலே வெளுத்திருக்காவிட்டால் அவர்கள் சுத்தமாகியிருக்க மாட்டார்கள். கடவுள் அருளிச் செய்திருப்பவைகளை விசுவாசித்து ஏற்றுக் கொள்ளாவிட்டால் யாருமே மோட்சத்திற்கு வரமுடியாது. நீங்கள் என்ன நிலமையில் இருக்கிறீர்கள் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் உங்கள் வஸ்திரங்களை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்திருக்கிறீர்களா? கிறிஸ்துவே உங்களுக்கு எல்லாமுமாக இருக்கிறாரா? அப்படி இல்லையென்றால் நீங்கள் மோட்சத்திற்கு வருவதில் என்ன நிச்சயமிருக்கிறது? அங்கே வருபவர்கள் மிகுந்த ஆனந்தத்தை அடைவார்கள் என சொல்லப்பட்டிருக்கிறது. வெயிலோ உஷ்ணமோ இவர்கள் மீது படப்போவதில்லை. ஏனென்றால் சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவர்தாமே இவர்களோடேகூட இருப்பார். கிறிஸ்துவை தரிசித்து அவர் சமூகத்தில் இருக்கிறவர்கள் துக்கமாயிருக்கக்கூடுமோ? இயேசு தம்மையே முழுவதுமாக அவர்களுக்கு வெளிப்படுத்தியிருப்பதே அவர்களுடைய ஆனந்தத்துக்குக் காரணமாயிருக்குமல்லவா?

அதையும் தவிர்த்து அவர்கள் தேவனுடைய அன்பையும் அனுபவிப்பார்கள். ஏனென்றால், "தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்" என்று அந்த அதிகாரத்தின் கடைசி வசனம் சொல்லுகிறது. இயேசுக்கிறிஸ்துவின் இரத்தம் செலுத்தப்பட்டிருக்கிறது, இயேசுவின் பிரசன்னம் அனுபவிக்கப்படுகிறது, கடவுளின்

அன்பு முழுவதுமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது - இவைகளே மீட்கப்பட்டவர்கள்பரலோகத்திலேபேரானந்தத்தைஅனுபவிப்பதற்கான காரணங்கள். இவைகள் நமக்குப் போதிக்கும் காரியங்கள் யாவை என்பதை ஆராய்ந்து இந்த தியானத்தை முடிப்போம்:-

## இ) நாம் கற்றுக் கொள்கிற பாடங்கள் யாவை?

பரலோகத்தில் காணப்படுகின்ற பேரானந்தம் நமக்கு உணர்த்துவது என்னவென்றால், அதை அடையும்படிக்கு நாமும் ஏங்கித் தவிக்க வேண்டும் என்பதே. பரலோகத்தை அடைய வாஞ்சிப்பது மிகவும் நல்ல காரியமே. ஆனால், பூலோகத்திலே நாம் செய்ய வேண்டிய கடமைகளிலிருந்து தப்பிப்பதற்காக அதை வாஞ்சிக்கக் கூடாது. அதன்காரணமாக இவ்வுலகத்தை விட்டு சீக்கிரமாகப் போய்விட வேண்டும் என நினைத்துக் கொண்டேயிருப்பது சோம்பேறித்தனம் - அது கடமையை செய்ய மனதில்லாமையைக் காட்டுகிறது - ஆனால் இயேசுக்கிறிஸ்து எங்கே இருக்கிறாரோ அங்கே நானும் இருக்க வேண்டும் என நினைப்பது விசுவாசிக்கு இயல்பானது. அவனுக்கு அது மகிமையானது. பிள்ளைகள் பள்ளி முடிந்ததும் வீடு போகவேண்டுமென வாஞ்சிப்பார்களல்லவா? சிறைபிடிக்கப்பட்டவன் விடுதலையை நாடுவானல்லவா? அந்நிய தேசத்திலே பிரயாணம் பண்ணிக் கொண்டிருக்கிறவனுக்கு தனது சொந்த நாட்டுக்குப் போக விருப்பம் இருக்குமல்லவா? புதிதாக திருமணமான மணப்பெண் தன் கணவனைப் பிரிந்து சிலகாலம் இருக்க நேர்கையில் மீண்டுமாக அவன் முகத்தைக் காண ஆசைப்படுவாள் அல்லவா? அது போன்றதுதான் விசுவாசியின் நிலமையும். பரலோகத்துக்கு செல்வதைக் குறித்து உங்கள் மனம் ஆசைப்படவில்லையென்றால், நீங்கள் அந்த உலகத்திற்கு உரியவர்தானா என்பது சந்தேகத்துகிடமானது. பூலோகத்தில் விசுவாசிகளாக இருந்துகொண்டே, நீங்கள் பரலோகத்துப் பரிசுத்தவான்களின் சந்தோஷத்தை ருசித்துப் பார்த்திருந்தால் உங்கள் முழு உள்ளத்தினாலும் கீழ்கண்டவாறு பாடுவீர்கள்:-

*"நான் பெரிதும் விரும்புகின்ற,*
*பரிசுத்தவான்களின் இருப்பிடமான*
*மேலான எருசலேமை அடைய*
*எனது ஆவி வாஞ்சிக்கிறது!"*

இப்படியாக நீங்களும் வாஞ்சிக்கலாம்.

அடுத்தபடியாக நாம் கற்றுக் கொள்ள வேண்டியது, நீங்கள் அதை அடையும் வரைக்கும் பொறுமையாக இருப்பதே. நீங்கள் போய் சேருகின்ற இடமானது மிகவும் உன்னதமான இடமாயிருக்கிறபடியால், வழியில் சந்திக்கிற கஷ்டங்களைக் குறித்து சோர்ந்து போகாதிருங்கள். நாம் இங்கு பாடுகிற ஒரு பாடலை நீங்கள் அறிவீர்கள்:-

*"பாதை கடினமாக இருக்கலாம்.*

*ஆனால் தூரம் அதிகமில்லை.*

எனவே,

*நம்பிக்கையோடும் உற்சாகமூட்டும்*

*பாடல்களோடும் அதைக் கடப்போம்".*

குதிரையில் சவாரி செய்பவன் அதன் கடிவாளத்தை வீடு நோக்கித் திருப்பும்போது, அது எவ்வளவு உற்சாகத்துடன் செல்கிறது! ஒருவேளை நீங்கள் அதை முன்னதாகவே சற்றுப் பழக்கப்படுத்தியிருந்தால், வீட்டுக்குச் செல்கிறோம் என்கிற உணர்வு அதற்கு வந்தவுடனேயே காதுகளை உயர்த்திக் கொண்டு அது தனது பாதையிலே மிகவும் விரைவாக செல்வதைக் காண்பீர்கள். நமக்கும் அந்தக் குதிரையைக் காட்டிலும் அதிகமான உணர்வு இருக்க வேண்டும். நமது எண்ணமானது பரலோகத்தை நோக்கித் திருப்பப்பட்டிருக்கிறது. நாம் சென்று அடையவேண்டிய துறைமுகத்தை நோக்கி நமது சுக்கான் திருப்பப்பட்டுள்ளது. அது வீடு நோக்கிய பயணம்! வழியில் காற்று அகோரமாக வீசலாம். ஆனால் சீக்கிரத்திலே நாம் அந்த மகிமையான இல்லத்திலே இருப்போம். அங்கே நமக்குக் கஷ்டம் ஏற்படுத்துகிற ஒரு சிறு அலையும் இராது. திராட்சைத் தோட்டக்காரர் அங்கே பூலோகத்தின் அருமையான கனிகளுக்காக எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறார். ஆகவே நீயும் பரலோகத்தின் பொக்கிஷங்களைப் பெறுவதற்காக இங்கே காத்துக் கொண்டிருக்கலாம். நீ கண்ணீரோடே விதைப்பாய். சந்தோஷத்தோடே அறுப்பாய். அவர் உனக்கு ஒரு அறுவடையை வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். விதைப்பும் அறுப்பும் ஒருபோதும் ஒழிந்து போவதில்லை என்று பொய்யுரையாதவராகிய தேவன் சொல்லியிருக்கிறார். இங்கே அவைகள் ஒழிந்து போகவில்லை. ஆகவே மேலோகத்திலும் அவை ஒழிவதில்லை. இங்கே பூலோகத்திலே விதைக்கிறவர்களாகிய உங்களுக்கு மேலோகத்திலே அறுப்பாகிய

பலன் உண்டு.

நாம் முதலாவதாகக் கற்றுக் கொண்ட பாடம், மேலோகத்தைக் குறித்து அதிக வாஞ்சையோடு இருப்பது. அடுத்தபடியாக, அதற்காகப் பொறுமையோடு காத்திருப்பது. உனக்காக அவர் குறித்திருக்கும் நேரம் வரைக்கும் காத்திருத்தல் வேண்டும் எனப் பார்த்தோம். அடுத்தபடியாக நாம் பார்க்கப் போவது, விசுவாசத்தில் அதிகமதிகமாக வளருதல். பரலோகத்தில் பிரவேசிக்கிறவர்கள் தங்களுடைய வஸ்திரங்களை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தில் தோய்த்து வெளுத்ததினாலேயே அங்கு காணப்படுகிறார்கள். அவருடைய இரத்தத்தினால் மென்மேலும் பரிசுத்தம் அடைந்து, அதிகமான விசுவாசத்தையும் அடைந்து கொள்ள பாடுபடுங்கள். நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் விசுவாசம் இருக்கிறதா? இருக்குமானால் அதுவே பரலோக மேன்மையை அடைவதற்குரிய திறவுகோலாயிருக்கிறது. ஆனால் "எல்லா மனிதரிலும் விசுவாசம் காணப்படவில்லை" என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். உங்களுக்கு விசுவாசம் இருக்கிறதா? நீங்கள் இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிக்கிறீர்களா? இன்னொரு வகையில் சொல்வதானால் நீங்கள் அவரில் மாத்திரமே நம்பிக்கை வைத்திருக்கிறீர்களா? கீழ்கண்டவாறு உங்களால் பாடமுடியுமா?:-

*"வெறுங்கையாய் உம்மிடம் வருகிறேன்*
*உமது சிலுவையை நம்பிப் பற்றிக் கொள்கிறேன்*
*நிர்வாணியாய், உம்மிடம் ஆடை பெற வருகிறேன்*
*நிர்பந்தன் நான். உமது கிருபையை நாடுகிறேன்*
*அழுக்கான நான், உமது நீரூற்றண்டை வருகிறேன்*
*கழுவியெடும் மீட்பரே, இல்லையெனில் அழிவேனே"*

மோட்சத்தில் உங்களைக் கொண்டு சேர்க்கும்படியாக, அவர் மீதுள்ள விசுவாசத்தில் பெருகுங்கள்.

நாம் எடுத்துக் கொண்ட வசனம் இன்னுமொரு பாடத்தையும் கற்றுத் தருகிறது - பூலோகத்திலேயே மோட்சத்தைக் காண யாராவது விரும்புகிறீர்களா? எனக் கேட்டால் பல பேர் "ஆம்" என்று சொல்லுவீர்கள். பூலோகத்திலே மோட்சத்தை எவ்விதத்தில் காண்பது என்பதை நமது வசனம் கூறுகிறது. பரலோகத்தில் உள்ளவர்கள் காண்பது போலவே நீங்களும் காண்பீர்கள். முதலாவதாக நீங்கள் இயேசுக்கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவமறக் கழுவப்படுங்கள். அது, பூலோகத்திலேயே உங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறது. "எல்லா புத்திக்கும் மேலான

தெய்வ சமாதானத்தை" அது உங்களுக்குக் கொடுக்கிறது. சினிமா தியேட்டர்களிலும், நடன அரங்குகளிலும், நவநாகரீக இடங்களிலும்தான் மோட்சானந்தத்தை அனுபவிக்க முடியும் என்று பலர் நினைக்கிறார்கள். ஒருசிலருக்கு அதுவே மகிழ்ச்சி தருகின்ற மோட்சமாக இருக்கலாம். ஆனால், நீங்கள் கடவுளால் நேசிக்கப்படுகிறவர்களாக இருந்தால் அது உங்களுக்கு மோட்சமாக இருக்க முடியாது. உங்களுடைய வஸ்திரங்களை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தில் தோயுங்கள். அப்போது உங்களுக்கு இங்கேயே மோட்சம் ஆரம்பமாகும்.

அடுத்ததாக நமது வசனத்தோடு சம்பந்தப்பட்டதாக நாம் பார்ப்பது, மோட்சானந்தத்தை அனுபவிக்கிறவர்கள் இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரை சேவிக்கிறார்கள். நீங்கள் பூலோகத்திலேயே மோட்சத்தை அனுபவிக்க வேண்டுமானால் இரவும் பகலும் அவருக்கு சேவை செய்யுங்கள். முதலாவது உங்களுடைய வஸ்திரங்களை அவருடைய இரத்தத்தில் தோய்த்து வெளுத்த பின்பு, அதை அணிந்து கொண்டவர்களாக வெளியில் சென்று அவருக்காக இரவும் பகலும் தொடர்ந்து உழையுங்கள். சோம்பேறிக் கிறிஸ்தவர்கள் சந்தோஷமாக இருப்பதில்லை. ஆவிக்குரிய காரியங்களை ஜீரணிக்காத கிறிஸ்தவர்கள் பலர் சந்தேகமுடையவர்களாகவும், பயம் பிடித்தவர்களாகவும் இருப்பதை நான் பார்த்திருக்கிறேன். இளைஞனே, ஒரு சமயத்தில் நீ பெற்றிருந்த ஒளியையும் சந்தோஷத்தையும் இழந்தவனாக பயத்தோடும் சந்தேகத்தோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறாயா? சகோதரனே அவைகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும்படி உழைப்பாயாக. பனிப்பிரதேசங்களில், உடல் உஷ்ணம் அடைய வேண்டுமானால் நெருப்புக்கு முன்னால் அமர்ந்தால் மாத்திரம் போதாது. உடலை வருத்தி உழைக்க வேண்டும். உடற்பயிற்சி ஆரோக்கியமான உஷ்ணத்தை சரீரத்திற்கு அளிக்கிறது. பனிப்பொழிவின் மத்தியிலும் "நான் ஏதாவது செய்து கொண்டிருப்பேன்" என்று ஒருவர் கூறுகிறார். ஒரு கை சோர்ந்துவிட்டாலும் மறுகையினால் உழைக்கலாம். நான் அதிகமாக உழைத்ததினால் சோர்ந்துவிட்டேன் என்று கூறாதே. கிறிஸ்துவுக்காக அதிகமாக உழைத்ததின் காரணமாக தங்களை மரணத்திற்கும்கூட ஒப்புக் கொடுத்தவர்களின் எண்ணிக்கை ஒன்றும் அவ்வளவு பெரிதல்ல. கிறிஸ்துவுக்காக கடினமாக உழையுங்கள். இரவும் பகலும் அவருக்கு சேவை செய்வது பரலோகத்தில் வாழ்கின்ற பரிசுத்தவான்களுக்கு அதிக மகிழ்ச்சியை அளிக்கிறது. இங்கே பூலோகத்திலும் அவருக்கென ஓயாமல் பணி செய்து வாழ்பவர்களுக்கும் அது மகிழ்ச்சியையே

அளிக்கும். உங்களால் செய்யக்கூடிய யாவற்றையும் செய்யுங்கள்.

கிறிஸ்துவோடு இங்கேயே ஐக்கியப்படுவது மோட்சத்தை அனுபவிக்க மற்றொரு வழியாகும். அந்த வசனங்களை மீண்டுமாகப் படித்துப் பாருங்கள் - "சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார் . . . இவர்களை மேய்த்து . . . நடத்துவார்". ஓ! நீங்கள் சந்தோஷமாக இருக்க வேண்டுமானால், கிறிஸ்துவுக்கு அருகாமையில் வாழுங்கள். ஏழையின் வீட்டில் கிறிஸ்து வசித்தாரானால் அவன் ஏழையேயில்லை. கிறிஸ்து அருகாமையில் இருந்தாரானால் வியாதிப்படுக்கையும் கஷ்டமானதாக இராது. "அவன் படுக்கையை நான் மாற்றிப் போடுவேன்" என்று அவர் சொல்லியிருக்கிறாரல்லவா? இயேசுக்கிறிஸ்துவோடு ஐக்கியம் கொள்ளுங்கள். அப்போது எந்த சூழ்நிலையாலும் பாதிப்படையாமல் இருப்பீர்கள். மழை பெய்து கொண்டிருக்கும்போதுகூட, "இதுவும் நல்ல சீதோஷணந்தான்" என்று கூறின ஒரு மேய்ப்பனைப் போல நீங்களும் இருப்பீர்கள். "இதுவும் எனக்குப் பிடித்திருக்கிறது" என்று கூறின அந்த மேய்ப்பனிடம், "அது எப்படி?" என்ற கேள்வி கேட்கப்பட்டபொழுது, "இது என் தேவனுக்குப் பிடித்திருக்கிறது. அவருக்கு எதெல்லாம் பிடிக்குமோ அது எனக்கும் பிடிக்கும்" என பதில் கூறினான். ஒரு கிறிஸ்தவர், "நான் தேவனிடமாக மனந்திரும்பிய நாளிலிருந்து எந்த நாளும் எனக்குக் கெட்ட நாளாக இருந்ததில்லை" என்று கூறினார். "கிறிஸ்து என்னுடைய மீட்பராக இருக்கிறபடியால் எல்லா நாட்களுமே எனக்கு நல்ல நாட்கள்தான்" என்றார். உன்னுடைய ஆசைகள் யாவும் கட்டுப்படுத்தி வைக்கப்பட்டிருக்கையில், உனக்கு எதன் மீதும் பசிதாகம் இல்லாத நிலையில், கிறிஸ்து உனக்கு அருகாமையிலே இருப்பதை உணருகையில் பரலோகத்தை நீ பூமியிலேயே அனுபவித்துக் கொண்டிருக்கிறாய் என்பது உனக்குத் தெரிகிறதா? அப்படியானால் பரலோக வாழ்க்கையை இங்கேயே வாழத் தொடங்கிவிடு. "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்" என்று வசனம் கூறுகிறது. உலகத்தில் நாம் எவ்வாறு வாழவேண்டுமென்றால், இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும்போதே பரலோகத்தை நோக்கிப் பார்த்தவர்களாக வாழ வேண்டும் என்பது அநேகருடைய கருத்து. அது நல்ல வழிதான். அதைக் காட்டிலும் சிறந்த வேறொரு வழியை நான் உங்களுக்குக் கூறுகிறேன். நீங்கள் பரலோகத்தில் வாழ்ந்து கொண்டு, பூலோகத்தை எட்டிப் பார்க்கிறவர்கள் போல வாழுங்கள். "எங்கள் குடியிருப்போ

பரலோகத்தில் இருக்கிறது” என்று கூறிய அப்போஸ்தலன் அதை உணர்ந்தவராகத்தான் கூறுகிறார். பூலோகத்தில் இருந்து பரலோகத்தை நோக்கிப் பார்த்தவர்களாக வாழ்வதும் நல்லதுதான். நமது மனதை பரலோகத்திற்கு ஒப்புவித்தவர்களாக, பூலோகத்தை நோக்கிப் பார்த்து வாழ்வது அதைவிட சிறந்தது. இந்த இரகசியத்தை நாம் கற்றுக் கொள்வோம். கர்த்தர் நம்மை அதில் வழிநடத்துவாராக. நமது விசுவாசம் பலமடையும்போது, அன்பு அதிகரிக்கும்போது, நம்பிக்கை பிரகாசமடையும்போது, நாமும் வாட்ஸ் என்கிற கவிஞரோடு சேர்ந்து இப்படியாகப் பாடலாம்:-

*“கிருபையைப் பெற்ற மனிதர்கள்*

*பூலோகத்திலேயே மகிமை ஆரம்பமாவதை உணர்ந்தார்கள்!*

*வானுலகத்துக் கனிகள், விசுவாசத்தினாலும் நம்பிக்கையினாலும்*

*பூவுலகிலேயே தோன்றுவதை கண்டுகொண்டார்கள்*

இந்த மகிமையில் பங்குபெறும் சிலாக்கியத்தை கர்த்தர் உங்களுக்கு அருளியிருக்கிறார். இயேசுக்கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படும்படியாக அந்தப் பேரானந்தத்தின் வாசல் எப்போதும் உங்களுக்குத் திறந்திருப்பதாக - ஆமேன்.

*(ஆகஸ்டு 13, 1871-ஆம் ஆண்டு, மெட்ரோபாலிடன் டேபர்நாகிள்-நியூயிங்டன் என்கிற இடத்திலே, கர்த்தருடைய நாளின் மாலையிலே ரெவ. சார்ல்ஸ் ஸ்பர்ஜன் அளித்த தியானத்தின்(3499) சாராம்சம்! இது பிப்ரவரி 17வியாழன், 1916ல் ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது)*

---

## 2. முந்தினோர் பிந்தினோராயும், பிந்தினோர் முந்தினோராயும்

*"ஆகிலும், முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள்" மத் 19:30.*

*"இவ்விதமாக, பிந்தினோர் முந்தினோராயும், முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள்" மத் 20:16.*

தேவனுக்கு பணிவிடை செய்ய வருபவர்களைக் குறித்த உபதேசத்தில் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து மேற்கூறிய இரு வசனங்களையும் குறிப்பிடுகிறார். நாம் கர்த்தருக்கு சேவை செய்ய வேண்டுமானால் நாம் இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும். இரட்சிப்படையாத நிலையில் கடவுளுக்கு சேவை புரிய முடியாது. "மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட்டார்கள்." மாம்ச சிந்தனை தேவனுக்கு விரோதமான பகை. தேவனுக்குப் பகைஞராக இருந்து கொண்டு அவருக்கு ஊழியம் செய்வதால் பிரயோஜனமில்லை. அவரது விரோதிகள் அவருக்கு பணிபுரிவதில் அவருக்கு விருப்பமில்லை. அடிமைகள் அவரது சிங்காசனத்தை அலங்கரிப்பதில் அவருக்குப் பிரியமில்லை. நாம் முதலாவதாக இரட்சிப்பைப் பெற வேண்டும். இரட்சிப்பு கிருபையாகக் கிடைக்கிறது. "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். அப்படியாக இரட்சிக்கப்பட்ட பிற்பாடு, இந்த இரட்சிப்பின் பலனாக, நாம் அவருக்கு ஊழியம் செய்கிறோம். முதலாவது இரட்சிப்பு! பிறகு ஊழியம்!! இரட்சிக்கப்படுகிறவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகிறார்கள். அதன் பிற்பாடு ஒரு பிள்ளையைப் போல தனது தகப்பனின் வீட்டில் வேலை செய்கிறார்கள். அந்த ஊழியமும்கூட கிருபையினால் வருவதே. ஒருவன் செய்கிற இந்த ஊழியம் உடன்படிக்கையின் பிரகாரமானதல்ல. "இதை செய். அப்போது பிழைப்பாய்" என்கிறபடியான பழைய உடன்படிக்கையின் ஊழியமல்ல. கிருபையின் கீழாக அவன் இருக்கிறான். ஆகவே, பாவம் அவன் மீது அதிகாரம் செலுத்துவதில்லை, கிருபையே அவன் மீது அதிகாரம் செலுத்துகிறது. ஆகவே அவன் தன் வாழ்நாள் முழுவதுமாக கர்த்தருக்குப் பணி செய்து அவரைப் பிரியப்படுத்த

விரும்புகிறான். நாம் அவருக்கு பணி செய்வதற்காகவே இரட்சிப்பை அடைந்திருக்கிறோம் என்பதை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. தேவனுக்கு ஊழியராய் இருப்பதற்காகவே நாம் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். "கர்த்தாவே, நான் உமது அடியேன். நான் உமது அடியாளின் புத்திரனும், உமது ஊழியக்காரனுமாய் இருக்கிறேன். என் கட்டுகளை அவிழ்த்து விட்டீர்" என்று தாவீது கூறுகிறார். நமது கட்டுகள் அவிழ்க்கப்பட்டபடியால், நாம் வேறுவிதமான கட்டுகளுக்குள்ளாக இருக்கிறோம். அவை அன்பின் கட்டுகள். உன்னதமானவருக்கு சேவை செய்யும்படியாக அன்பின் கட்டுகளால் கட்டப்பட்டிருக்கிறோம்.

அந்தவிதமாக அவருக்கு ஊழியம் செய்ய வரும்போது, நாம் இரட்சிக்கப்பட்ட ஆண்களும் பெண்களுமாய் இருக்கிறோம் என்பதை மறக்கக் கூடாது. நம்முடைய திறமையினால் நம்மால் ஆத்தும ஆதாயம் செய்ய முடியும் என நாம் கற்பனை செய்து கொண்டிருந்தோமானால், உரிமையைக் கோருகிறவர்களாக காணப்படுவோம். கடவுளிடம் உரிமை கேட்டு சட்டம் பேசுகிறவர்கள், அவருக்கு முன்பாக தங்களுடைய உண்மை நிலையை இழந்து போய் விடுவார்கள். "நீங்கள் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டவர்கள் அல்ல, கிருபைக்குக் கீழானவர்கள்" என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். உங்களை மீட்டுக் கொண்டதற்காக மாத்திரமல்ல, உங்களுடைய தற்போதைய நிலமைக்கும், உங்களுக்கு சொந்தமானவைகளுக்காகவும், நீங்கள் செய்கின்ற யாவற்றிற்காகவும் நீங்கள் எவ்வளவாக கர்த்தருக்குக் கடமைப்பட்டவர்கள் என்பதை மறக்கத் தொடங்கிவிட்டீர்களானால், நீங்களும் புத்தியில்லாத கலாத்தியரைப் போலத்தான் காணப்படுவீர்கள். ஆவியினாலே ஆரம்பம் பண்ணின அவர்கள் மாம்சத்தினாலே முடிவு பெறும்படியாக நாடினதைப் போல ஆவீர்கள். "என்னிடத்தில் இன்னும் என்ன குறைவுண்டு?" என்று கேட்ட வாலிபனைப் போல இருப்பீர்கள். "நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே. எங்களுக்கு என்ன கிடைக்கும்?" என்று உரிமை கோரிய பேதுருவைப் போலிருப்பீர்கள். காலையிலிருந்து மாலை வரைக்கும் திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்து விட்டு, ஒரு மணி நேரம் மாத்திரம் வேலை செய்தவர்கள் பெற்றதாகிய ஒரு பணத்தையே தாங்களும் பெற்றதற்காக முறுமுறுத்த வேலையாட்களைப் போல காணப்படுவீர்கள். தனது ஊழியர்கள் இவ்விதமான ஆவிக்கு அடிமைப்பட்டவர்களாக இருப்பதை கிறிஸ்து ஏற்றுக் கொள்வதில்லை. அவ்விதமான மனப்பான்மையை

அவர் எங்கெல்லாம் காண்கிறாரோ உடனடியாக அதை கண்டிக்கிறார். ஊழியமும் அதற்கு வருகின்ற வெகுமதியும் ஆகிய எல்லாமே கிருபையினால் கிடைக்கிறது. கடவுள்தாமே ஊழியத்தை நமக்குக் கொடுக்கிறார். தாம் அளித்த வேலைக்குரிய வெகுமதியையும் அவரே தருகிறார். இதை கிருபையின் மிக உன்னதமான நிலை என்றுதான் நாம் கூறவேண்டும். கடவுள் நமக்கு சிறந்த ஊழியத்தைத் தருகிறார். அவரே கொடுத்த அந்த வேலைக்காக அத்ற்கு வெகுமதியையும் பிற்பாடு அவரே தருகிறார். ஆகவே முதலில் இருந்து கடைசி வரைக்கும் எல்லாமே கிருபையினால் கிடைப்பதுதான். ஊழியத்தையோ அதற்குக் கிடைக்கும் வெகுமதியையோ நியாயப்படுத்திக் கொள்ளும் நோக்கில் பார்க்கக் கூடாது. இதை மனதில் கொண்டவர்களாக நாம் இந்த தியானத்தைத் தொடருவோம்.

மேற்கூறிய வசனத்தின் பேரில் நீங்கள் பிரசங்கங்களைக் கேட்டிருப்பீர்கள். ஆனால் அதோடு தொடர்புடையவைகளை ஒருவேளை கேட்டிருக்க மாட்டீர்கள். இந்த வசனம் என்னுடைய இருதயத்திற்கு எதைப் பிரசங்கித்ததோ அதை நான் உங்களுக்கும் பகிர்ந்தளிக்க விரும்புகிறேன். இந்த வசனத்திற்கு முன்னால் வரும் வசனங்களையும் அதற்குப் பின்னால் வரும் வசனங்களையும் சேர்த்துப் பார்த்து அதன் மூலமாக பரிசுத்த ஆவியானவர் நமக்கு என்ன கற்றுத் தருகிறாரோ அதைக் கற்றுக் கொள்ளலாம்.

## அ) கர்த்தருக்கு செய்யும் ஊழியம் கிருபையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது

மேலோட்டமாக பார்த்தால் இவ்வசனத்தில் இந்த கருத்து தென்படவில்லை. ஆனால் மற்ற வசனங்களோடு தொடர்புபடுத்தி பார்க்கையில் அது விளங்குகிறது. நமது கர்த்தருக்கு செய்யும் ஊழியத்தில் இலவச கிருபை வெளிப்படுகிறது. இக்கருத்தை சிந்தித்துப் பாருங்கள். கர்த்தருக்கு ஊழியம் செய்வது கிருபையாகத்தான் அருளப்பட்டிருக்கிறதென்பதை சிந்தியுங்கள்.

ஏனென்றால், ***அவருக்கு ஊழியம் செய்வது நம் மேல் விழுந்த கடமையாயிருக்கிறது.*** வெகுமதி கொடுக்கப்பட்டாலுங்கூட, அது நமது கடமை. நியாயப்பிரமாணத்தின்படி நாம் கர்த்தரில் முழு இருதயத்தினாலும், முழு ஆத்துமாவினாலும், முழுமனதினாலும், முழுபெலத்தினாலும் அன்பு செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம். அதற்கு மேற்பட்டது எதுவுமில்லை. நாம் அவருக்காக எதையாவது செய்வதற்கு முடியுமானால்

அதை செய்வதற்கு நாம் ஏற்கனவே கடமைப்பட்டவர்களாகத்தான் இருக்கிறோம். அவசியமானவைகளுக்கு மேலாக எந்த கிரியையும் செய்வதற்கு நியாயப்பிரமாணத்தில் இடமில்லை, ஏனென்றால் அது எல்லா பரிசுத்தத்தையும் உள்ளடக்கியுள்ளது. அது சகல பாவங்களையும் கண்டிக்கிறது. சகலத்தையும் செய்து முடித்தவர்களாயிருந்தாலும் நாம் அப்பிரயோஜனமான வேலையாட்கள்தான். கடமையை மாத்திரமே நாம் செய்து முடித்தவர்களாயிருப்போம். ஆகவே சகோதரரே, ஏதாவதொரு ஊழியம் செய்யும்படிக்கு நாம் அழைக்கப்பட்டிருப்போமானால், அதற்கு ஒரு வெகுமதியும் உண்டென்று வாக்களிக்கப்பட்டிருக்குமானால் அது நிச்சயமாக கிருபையால் கிடைத்த ஊழியமாகவே இருக்கும். அதைத் தவிர்த்து வேறொன்றும் இல்லை. சுவிசேஷத்திற்குக் கீழாகவும் அப்படித்தான் இருக்கிறது. நாம் செய்யக்கூடியவைகள் யாவுமே, அவருக்கு செய்வதற்கு ஏற்கனவே கடமைப்பட்டவைகளாகத்தான் இருக்கிறது. "நீங்கள் உங்களுடையவர்கள் அல்ல, கிரயத்திற்குக் கொள்ளப்பட்டிருக்கிறீர்களே!" உங்கள் சிந்தனை, செயல், பெலன், திறமை, குணம் போன்ற அனைத்துமே கிறிஸ்துவினால் விலைக்கிரயம் செலுத்தப்பட்டு மீட்கப்பட்டிருக்கிறது. அவர் மீட்டுக் கொள்ளாத எதுவுமே உங்களிடம் கிடையாது. ஆகவே உங்களிடமுள்ள அனைத்தும் கிறிஸ்துவுக்கே சொந்தம். உங்களை நேசித்தபடியால் தமது சொந்த இரத்தத்தை சிந்தி உங்களை மீட்டுக் கொண்ட இயேசுவுக்காக சந்தோஷத்தோடும் மிகுந்த நன்றியோடும் உங்களால் முடிந்த யாவற்றையும் செய்வதற்கு நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள். சுவிசேஷகர்களின் ஆர்வம், இரத்தசாட்சிகளின் பொறுமை, மன்னிப்பு கோருபவர்களின் விசுவாசம், தேவபக்தர்களின் பரிசுத்த வாழ்வு ஆகிய அனைத்துமே நியாயமாக கிறிஸ்துவுக்கு சேரவேண்டிய உரிமையாகும். ஆகவே அதற்காக அவர்களுக்கு வெகுமதி தர வேண்டியதில்லை. அவர்களின் நடவடிக்கை, செயல் யாவுமே அவர்கள் கிறிஸ்துவுக்கு செலுத்த வேண்டிய கடமையாகும். நாம் அவருக்காக செய்கிற எதற்காகவது வெகுமதி கொடுக்கப்பட வேண்டுமானால், அந்த செயலை செய்யும்படி அவர் அனுமதித்திருப்பதே நமக்குக் கிருபையாக கிடைத்திருக்கிற வெகுமதியாகும். அதின் மூலமாக நாம் கிருபையை பெறுகிறோம்.

***நமது ஊழியம் எதுவுமே ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.*** நாம் செய்கிற எந்த காரியமும் பலவீனமாகவும், குறைவுள்ளதாகவும், களங்கப்பட்டதாகவும்தான் இருக்கிறது. ஆகவே எதற்காகவும்

நாம் அவரிடம் வெகுமதியை எதிர்பார்க்க வழியில்லை. யோபு, தாழ்த்தப்பட்ட தறுவாயில் இதை உணர்ந்து கொண்டார். "நான் என்னை நீதிமானாக்கினாலும் என் வாயே என்னைக் குற்றவாளியாக்கும். நான் உத்தமன் என்று சொன்னாலும், நான் மாறுபாடானவன் என்று அது சாட்சி கொடுக்கும். நான் உத்தமனென்றாலும் என் உள்ளத்தை நான் அறியேன். என் ஜீவனை அரோசிப்பேன்" என்று சொல்லுகிறார். நமது திறமையைக் கொண்டு நாம் அவர் முன்பாக நின்றோமானாலும், அவருக்கு முன்பாக நாம் தேவமகிமையை இழந்தவர்களாகத்தான் காணப்படுகிறோமென்று நமக்கே தெரியும். பல விஷயங்களில் நாம் குற்றவாளிகளாகக் காணப்படுவதால்,நமதுநீதிஅனைத்தும்அழுக்கானகந்தைகளாக,எறிந்து விடப்பட வேண்டிய நிலையில்தான் இருக்கிறது. நமது மிகச் சிறப்பான செயல்கள் கூட அவர் பார்வையில் அழுக்கான கந்தைகள்தான். "எனக்கு லாபமாயிருந்தவைகள் எவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். . . நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும், விசுவாசம் மூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும் . . எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்" என்று பவுல் சொல்லுகிறார். நமது தோல்விகளையும், மீறுதல்களையும், கீழ்ப்படியாமையையும் குறித்து நமக்கு குற்றஉணர்வு இருக்கிறது. அவைகளுக்காக தேவனிடம் மன்னிப்பை வேண்டி, இரக்கத்திற்காக கெஞ்சி நிற்கிறோம். நம்மிடம் இருப்பதாக நினைக்கின்ற மிகச் சிறந்த குணத்திலுங்கூட பாவம் தென்படுவதை உணர்ந்து அதை அவரிடம் அறிக்கையிட்டுக் கொண்டிருக்கிறோம். இப்படியிருக்கையில் அவருக்கு செய்கின்ற ஊழியமும் கிருபையினால் வருவதாயிருக்க, நமக்கு வெகுமதி கிடைத்ததானால் அது கிருபையால் கிடைப்பதைத் தவிர்த்து வேறு எப்படி இருக்க முடியும்?

***கடவுளுக்கு சேவை செய்ய முடிவதுகூட கடவுளின் கிருபையினால் பெறும் வெகுமதியே.*** இதை மீண்டுமாக சிந்தித்துப் பாருங்கள். அறிவை உபயோகித்து செய்கின்ற சேவையை மாத்திரம் நான் இவ்விடத்தில் குறிப்பிடவில்லை. கடவுளின் சேவைக்காக தாராளமாக பொருளுதவியை அளிக்கக் கூடிய திறனுடையவர்களையும் சேர்த்துதான் கூறுகிறேன். சிந்திக்கும் ஆற்றலையும், பிரசங்கிக்கும் வல்லமையையும் கடவுள் தருவது போல பணம் சம்பாதிக்கக் கூடிய திறமையையும் கடவுளே

கொடுக்கிறார். அப்படியிருக்க "உங்களுக்கு உள்ளவைகளில் நீங்கள் பெற்றுக் கொள்ளாதது என்ன?" இங்கிருப்பவர்களில் யாராவது தங்களது தாலந்துகளைக் கொண்டு கடவுளுக்கு சேவை செய்தார்களென்றால், அதுவும் தங்களுக்கு அருளப்பட்டதால்தான் அதை அவர்கள் சொந்தமாகக் கொண்டிருக்கிறார்கள் என நான் கருதுவேன். யாரும் தாலந்துகளை சம்பாதித்துக் கொள்ள முடியாது. அல்லது யாராவது தாங்கள் சம்பாதித்த பொருட்களினால் கடவுளுக்கு ஊழியம் செய்தீர்களென்றால், அந்த பொருளை சம்பாதிக்கக் கூடிய திறனைத் தந்ததும் கடவுள்தான். அவரிடமிருந்தே எல்லா நல்ல ஈவுகளும், பரிபூரணமான எந்த நன்மையும் வருகிறது. ஆகவே கடவுளுக்கு ஊழியம் செய்யக்கூடிய திறன், கிருபையாகக் கிடைக்கும் வெகுமதியாகும்.

பிரியமானவர்களே, ***எந்த விசேஷித்த விதத்திலாவது, கடவுளுக்கு சேவை செய்யும்படி அழைப்பு பெற்றீர்களானால் அதுவும் கிருபையினால் வருவதே.*** ஊழியத்திற்கு நாம் அழைப்புப் பெறுவோமானால், பவுலின் முன்மாதிரியை கவனிப்போமாக: "பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் . . . கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" என்கிறார். நமது இராஜாங்க நாணயத்திலே, "கடவுளின் கிருபையினாலே" என்று ஆட்சியாளர்கள் அச்சடித்துக் கொள்கிறார்கள். இருக்கட்டும், நல்லதுதான். ஆனால் நாம் அதை நமது வாழ்க்கையிலே செயல்படுத்துவோம். "ஞாயிறு பாடசாலை ஆசிரியர் - கடவுளின் கிருபையினாலே", "தெருப்பிரசங்கிகள் - கடவுளின் கிருபையினாலே", "கல்லூரி மாணாக்கர்கள் - கடவுளின் கிருபையினாலே", "சுவிசேஷ ஊழியர்கள் - கடவுளின் கிருபையினாலே" என்பதே நமது எண்ணமாயிருக்கட்டும். தேவன்தாமே நம்மை பலவிதமான நல்ல பணிகளுக்கென அழைக்கிறார். நமக்கு ஒரு பணி நியமிக்கப்படுகிறதென்றால் அதை நியமிப்பவர் ஆத்துமாக்களின் பிரதான மேய்ப்பரே. அவர் யாரை அனுப்ப வேண்டுமென தீர்மானித்திருந்தாரோ அவர்களைத் தம்மிடமாக மலை மீதினில் அழைத்து, அவர்களை முதலாவதாக உலகத்தில் அனுப்பினார். அவர்களை விட்டுச் செல்வதற்கு முன்பாக, அவர்களுக்கு அந்த பிரதான கட்டளையைக் கொடுத்தார். அந்தக் கட்டளையானது அவரைப் பின்பற்றுகிற அனைவருக்கும் இன்றைக்கும் பொருத்தமானது. "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்." எந்த வகையிலாவது ஊழியம் செய்யும்படி அவர்

நம்மை நியமிப்பது அவருடைய கிருபைதான். அவருக்காக எதையாவது செய்யக்கூடுமானால் அது எவ்வளவு பெரிய கிருபை! அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கு நாம் பாத்திரவான்கள் அல்ல. அவருடைய பாதரட்சைகளை சுமக்கவும் பாத்திரமானவர்கள் அல்ல. ஒரு தாழ்வான வேலையைப் போல இருந்தாலும், கிறிஸ்துவுக்கு செய்கிற எந்த வேலையும் அது ராஜாவுக்கு செய்கிற பணிவிடை. சமையலறையில் பாத்திரங்களைக் கழுவுகிற வேலையாக இருந்தாலும், அவருக்காக பணிவிடை செய்ய நியமிக்கப்பட்டேனென்றால் அவருக்கே ஸ்தோத்திரம். அந்த சமயலறை, அரண்மனையில் அல்லவா இருக்கிறது! கிறிஸ்துவின் அரண்மனைப் பணிப்பெண்கள் மரியாதைக்குரியவர்கள். கடவுளுக்குப் பணிவிடை செய்கிறவன், ஆளுகிறவனாயிருக்கிறான். பூலோகத்திலே அவருக்கு சேவை செய்வது புகழப்படத்தக்கது. பரலோகத்திலே அவருக்கு பணிவிடை செய்வது நமக்குக் கிடைக்கும் நித்தியமான மகிமையில் ஒரு பகுதி. இதெல்லாம் கிருபையினால்தான் கிடைக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

***கர்த்தருக்கு சேவை செய்வதற்குக் கிடைக்கிற ஒவ்வொரு சந்தர்ப்பமும் கிருபையே.*** உடல்நலக் குறைவின் காரணமாக பிரசங்கம் செய்ய முடியாமல் போய், பிற்பாடு சரீரசுகம் கிடைத்தபின் மீண்டுமாக பிரசங்கமேடையில் நிற்பதற்கு வாய்ப்பு கிடைக்கிற தருணங்களில் அதை கடவுளிடமிருந்து கிடைக்கப் பெற்ற பெரும் கிருபையாக நான் நினைப்பேன். ஒருவருக்கு பேனாவைக் கரங்களில் பிடிக்க முடியாதபடி சுகவீனம் ஏற்பட்டு, எழுதமுடியாத நிலையை அனுபவித்தபிறகு, மீண்டுமாக எழுதக்கூடிய நிலை வரும்போது அதை கிருபையாக கிடைத்ததென கருதுகிறோம். சிலரிடம் மிகவும் நெருக்கமாக பேசக்கூடிய சந்தர்ப்பங்களை கடவுள் உங்களுக்கு அளிப்பதும் கிருபை என்றுதான் எண்ணுகிறேன். சிறுபிள்ளைகள் உங்களிடமிருந்து கற்றுக் கொள்ளும்படியாக அவர்களை ஞாயிறுபாடசாலைக்கு அழைத்து வருவதும் கடவுளின் கிருபையே. நாம் விழிப்புள்ளவர்களாக இருந்தால், உபயோகித்துக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் நம்மைச் சுற்றிலும் நாள் முழுவதும் இருப்பதைக் காணலாம். அப்போது, “கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவர் தமது அனாதி தீர்மானத்தின்படியாக, அவருக்கு சிறுசிறு சேவைகள் செய்யக்கூடிய நிலையில் என்னை வைத்திருப்பதற்காக ஸ்தோத்திரம். அவருடைய நாமம் புகழப்படும்படியான பலனை அவர் விளைவிப்பதற்காக ஸ்தோத்திரம்” என்று துதிக்கக் கூடியவர்களாக இருப்பீர்கள். எல்லாமே கிருபையினால் வருவது. அவருக்கு சேவை செய்யும்படியான வழிகளைத் தருவது, அவைகளை நாம் பிரயோஜனப்படுத்திக்

கொள்ளும்படியான எண்ணத்தையும், பெலனையும் அளிப்பது ஆகிய யாவுமே கடவுளிடமிருந்து வரும் வெகுமதிகள்தான்.

***கடவுளுக்கு சேவை செய்வதற்கான சரியான மனப்பாங்கை பெறுவதும் கிருபையினால்தான்.*** நீங்கள் அவருக்கென ஒரு வேலையை செய்வதற்கான சந்தர்ப்பத்தையும், அழைப்பையும் பெறுவது கிருபையினால்தான். இருந்தாலும் அதை செய்யக்கூடிய சரியான மனநிலையைக் கொண்டிருப்பதும் கிருபையே. நீங்கள் எவ்வளவோ நேரங்களில் சுறுசுறுப்பில்லாமலும் உற்சாகமில்லாமலும் இருந்ததில்லையா? பரிசுத்தஆவியானவர் உங்களைத் தட்டி எழுப்பாவிட்டால் நீங்கள் அப்படியேதானே இருப்பீர்கள்? பல சமயங்களில் நீங்கள் குளிர்ந்து போய், உறைந்த பனிக்கட்டியைப் போல விறைத்துப் போனவர்களாகக் காணப்படுவதில்லையா? பரிசுத்தஆவியானவர் உங்களை அனல் மூட்டி விடாவிட்டால் உங்கள் உள்ளத்திலிருந்து ஜீவஊற்று புறப்படுமா? சகோதரரே, விடுதலை பெற்ற பெண்மானைப் போல கர்த்தர் உங்களை சுதந்திரமாகசெயல்படவைத்தகிருபையுள்ளஅநேகசந்தர்ப்பங்களுக்காக நீங்கள் அவருக்கு நன்றி செலுத்துவதில்லையா? கிருபை பொருந்திய நல்வார்த்தைகளை நீங்கள் பேசியது யாரால் வந்தது? அந்த வல்லமை யாருடையது? நீங்களாக பேசும்போது, ஓ, அது எவ்வளவு கீழானதாக இருந்திருக்கிறது! ஆனால், கடவுள் உங்கள் மூலமாக பேசும்போது, ஓ, அது எவ்வளவு மேன்மையானதாக இருந்திருக்கிறது! இவை யாவும் கிருபையின் செயல்பாடு என்பது உங்களுக்கு விளங்குகிறதா? மனிதரை கிறிஸ்துவிடம் வரும்படியாக அழைப்பு விடுத்து பேசுகிற பிரசங்கியாரின் ஒவ்வொரு கண்ணீர் துளியும், அந்த ஆத்துமாவின் நிமித்தமாக அவர் படுகிற அங்கலாய்ப்பும் வேதனையும், கிருபையை உணர்ந்திருக்கிற ஊழியர் அனுபவிக்கிற உணர்வுகள் யாவும் கிருபையினால் வருவதே. அதற்காக கடவுளுக்கே மகிமையை செலுத்த வேண்டும். நாம் நியாயப்பிரமாணத்தின் கீழாக வேலை செய்கிறவர்கள் அல்ல. ஏனென்றால் நியாயப்பிரமாணம் பெலனைத் தருவதில்லை. கிருபைதான் நம்மை சேவை செய்ய வைக்கிறது. ஏனென்றால் அதுவே சேவை செய்வதற்கு வேண்டிய பெலனை நமக்குத் தருகிறது. "தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன்: வல்லமை தேவனுடையது என்பதே. கிருபையும் உம்முடையது, ஆண்டவரே! தேவரீர் அவனவன் செய்கைக்குத் தக்கதாகப் பலனளிக்கிறீர்." நீர் அவனவனுடைய தேவைக்குத் தக்க பெலத்தைத் தருகிறீர். அந்தந்த

வேலைக்கேற்ற வழிநடத்துதலையும் அளிக்கிறீர். இதுவும் கிருபைதான், இல்லையா?

***பரிசுத்த ஊழியத்தின் வெற்றி முழுவதும் கர்த்தராலேயே வருகிறது.*** இந்த கருத்தை நீங்கள் மறுப்பு எதுவும் தெரிவிக்காமல் ஒத்துக் கொள்வீர்கள். விதைத்ததும், தண்ணீர் ஊற்றியதும் நாங்கள்தான் எனத் துணிகரமாக நாம் சொன்னாலும்கூட, விளையச் செய்தது நாங்கள்தான் என்று யாரும் துணிந்து கூறமாட்டோம் என நினைக்கிறேன். "நான் விதைத்தேன்" என்று கூறிய பவுல், "அப்பெல்லோ நீர் பாய்ச்சினான். தேவனே விளையச் செய்தார்" என்று குறிப்பிடுகிறார். பரிசுத்தஆவியானவர் ஒரு மனிதனின் இருதயத்தில் கிரியை செய்து, அவனுடைய பாவங்களை அவனுக்கு உணர்த்தி, அவனை மனந்திரும்பச் செய்யாவிட்டால், நமது அறிவுரைகளில் ஒன்றையாவது அவன் ஏற்றுக் கொள்வானா? இயேசுக்கிறிஸ்துவை, அவர் அருளும் வெளிச்சத்தில் காணாத ஒருவனின் மனக்கண்களை நமது பலவீனமான பிரசங்கத்தினால் திறந்துவிட முடியுமா? கடவுளின் ஆவியானவர் நம்மிடம் இல்லாமல், இருதயம் நொறுங்குண்டவர்களுக்கு நம்மால் ஆறுதல் அளித்துவிட முடியுமா? சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை கூற முடியுமா? கட்டப்பட்டிருப்பவர்களின் கட்டுகளை அவிழ்க்க இயலுமா? நாம் சுவிசேஷத்தை அறிவித்தாலுங்கூட, கடவுளின் கிரியை அதில் இல்லாவிட்டால் அது மண்ணில் விழுவது போல விழுந்து வீணாய்த்தானே போகும்? அவரே நம் மூலமாகவும் நம்மைக் கொண்டும் கிரியை செய்கிறார், நாம் அவரோடு சேர்ந்து வேலை செய்கிற வேலையாட்கள். நமது கரத்தை உயர்த்துகிறோம், அதில் அவர் தமது கரத்தை உயர்த்துகிறார். நாம் பேசுகிறோம், அவர் நம் மூலமாகப் பேசுகிறார். நாம் மனிதருடைய இருதயத்தைத் தொடும் விதத்தில் பேசுகிறோம், ஆனால் அவர்தான் அவர்களைத் தொடுகிறார். அவர்களை அழுகிறவர்களாக கிறிஸ்துவிடம் அழைத்து வருகிறோம், ஆயினும் அவரே அவர்களைக் கிறிஸ்துவிடம் அழுகிறவர்களாக வரப்பண்ணி அவர்களை இரட்சிக்கிறார். அவருடைய நாமத்திற்கே துதி உண்டாவதாக! அவருடைய நாமத்தினால் அநேக ஆண்டுகளாக தீர்க்கதரிசனம் உரைத்து வந்தாலும், உலர்ந்த எலும்புகளுக்கு உயிர் கொடுத்ததாக யாராவது துணிந்து சொல்ல முடியுமா? கலியாண விருந்துக்கு அநேக நாட்களுக்கு முன்பாகவே அழைப்பு கொடுத்திருந்தாலும், அவர்களில் யாரையாவது கடவுளுடைய உதவியில்லாமல் நம்மால் வரவழைக்க முடியுமா? இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்களின் இரட்சிப்புக்கு நாம்

காரணமாயிருந்ததாக பெருமை கொள்ள இயலுமா? அது துணிகரம், அது தேவதூஷணம். அப்படிப்பட்ட பாவத்தை நாம் செய்யாமல் இருப்போமாக. நமது ஊழியம் வெற்றி அடைந்ததானால், அது சிறந்த ஊழியமாக இருந்ததானால் அதற்கு கடவுளின் கிருபையே காரணம்.

***கிறிஸ்துவின் நிமித்தமாக பாடுபடுதலும் ஒரு விசேஷித்த வெகுமதியாயிருக்கிறது.*** பிரியமானவர்களே, உங்களில் யாராவது கிறிஸ்துவுக்காக துன்பப்படுவதற்கு அழைக்கப்பட்டிருந்தால் அது மிகவும் விசேஷமானது. உங்களை யாராவது தூஷித்தார்களென்றால், உங்களுடைய அந்தஸ்த்தை இழந்தீர்களானால், கிறிஸ்துவுக்காக இரத்தசாட்சிகளாக மரிக்க நேர்ந்ததானால், "கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிப்பதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது" என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். "களிகூறுங்கள், பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். அவர்களுடைய பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்". ஆனால், அதற்குரிய புகழ்ச்சியை நீங்கள் எடுத்துக் கொள்ளாதீர்கள். பாடுபடக்கூடிய அந்த நிலைமைக்கு நீங்கள் உயர்த்தப்பட்டீர்கள். உங்களை அந்நிலைக்குக் கொண்டுவந்தது உங்கள் ராஜாவாகிய கர்த்தர். பெரும் பாடுகளைக் கடந்து செல்லும்படியாக அவர் உங்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார். ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்திலே நீங்கள் உங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து வெளுத்தவர்களாயிருந்தால் அந்தப் பாடுகளெல்லாம் உங்களுக்கு ஒன்றுமேயில்லை. உங்களுடைய பொறுமை, தைரியம், உறுதி இவற்றுக்கெல்லாம் கடவுளின் ஆவியே காரணம். அவர் உங்களைக் கைவிட்டிருந்தாரானால், நீங்கள் மனுஷருக்கு பயந்து, விலகியோடி இருப்பீர்கள். அது உங்களுக்கு கண்ணியாயிருந்திருக்கும். சத்தியத்திற்கும் கர்த்தருக்கும் துரோகம் செய்திருப்பீர்கள். உண்மையாக நடக்க வேண்டியது உங்கள் கடமை. நீங்கள் உண்மையாக நடந்து கொள்ளும்போது, அது உங்களால் ஏற்படுவதல்ல. அவரே தம்முடைய கிரியையை நம்மில் நடப்பிக்கிறார். அதற்காக புகழப்படத்தக்கவரும் அவரே. "அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசைப்படுங்கள்". முழு முயற்சியாக உழையுங்கள். அதில் எந்த குறைவும் வைக்காதீர்கள், "ஏனென்றால், தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி, விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். "நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும்

பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக." கடவுள் உங்களுக்கு வெகுமதியளிப்பார். ஆனால் உங்களுடைய உறுதியும், சுறுசுறுப்பும், பொறுமையும் ஆகிய இவைகளெல்லாம் கடவுளின் கிருபையினால் உண்டான கிரியைகள். அது உங்களுக்கும் தெரியும். அவைகள் உங்களுக்கு இருந்ததானால், கடவுள்தான் அவை உருவானதற்குக் காரணம் என்று உணர்ந்து நன்றி செலுத்த வேண்டும்.

மேற்கூறிய கருத்துக்களை ஆவிக்குரிய மனிதர்கள் யாரும் எதிர்ப்பு தெரிவிக்க முடியாத வகையில் எடுத்துக்கூறி விட்டதாக நினைக்கிறேன். அதாவது, கடவுளுக்கு செய்கின்ற ஊழியத்தில் இலவசமான கிருபையே பிரதானமாக இருக்கின்றது. இந்த கருத்துக்களை விளங்கிக் கொண்டபின் நாம் அடுத்த தலைப்பிற்குச் செல்லலாம்.

## ஆ) நமது சேவையை அவர் தமது அளவுகோலினால் அளவிடுகிறார்

இதைநீங்கள்திராட்சைத்தோட்டத்தில்வேலைசெய்தவேலையாட்கள் உவமையில் காணலாம். அவர்களுடைய எஜமானன், அவர்கள் செய்த வேலையை தமது அளவுகோலின்படியாக அளவிடுகிறார். ஒரு மணி நேரத்திற்கு இவ்வளவு கூலி என்கிற கணக்கின்படியாக அவர் அளவிடவில்லை. கிருபையின்படியாக அளவிடுகிறவரான அந்த எஜமானன், ஒரு மணி நேரத்திற்கும் ஒரு பணம், பன்னிரெண்டு மணி நேரத்திற்கும் ஒரு பணம் என்கிற அவருடைய கணக்கின்படி அளவிடுகிறார். கடைசியையும் முதலாவதையும் அவர் சமமாகவே பார்க்கிறார். ஆகவேதான், "பிந்தினோர் முந்தினோராயும், முந்தினோர் பிந்தினோராயும்" என்கிறார். சட்டத்தின்பிரகாரமாக சம்பளம் கொடுக்கிற ஒரு எஜமானனை அல்ல, கிருபையின்பிரகாரமாக செயல்படுகிற கடவுளை இவ்விடத்தில் காண்கிறோம். அவர் நமது ஊழியத்தை நாம் அளவிடுகிற பிரகாரமாக அல்ல, தமது அளவின் முறைப்படி அளவிடுகிறார். அந்த ஊழியமும் அவர் கிருபையாக நமக்கு அளித்ததேயாகும் என்பதை மறவாதீர்கள்.

***ஒவ்வொரு ஊழியனுக்கும் அவர் வெகுமதி அளிப்பார். ஆனால் நாம் தீர்மானிக்கிறபடியாக அல்ல.*** கிருபையில் வல்லவரான அவர், யாருக்கும் அநியாயம் செய்ய மாட்டார். "சிநேகிதனே, நான் உனக்கு அநியாயம் செய்யவில்லையே" என்று சொல்லக்கூடியவராகத்தான் அவர் இருப்பார்.

அவர் தமது ஊழியக்காரர் யாருக்கும் அநியாயம் செய்ய மாட்டார். அது யாராக இருந்தாலும் அவர்களுக்கு அநியாயம் செய்ய மாட்டார். அது நிச்சயம். ஆனாலும், "என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா?" என்று அவர் பதில் அளிப்பார். தமது ராஜரீக அதிகாரத்தையும், அதே வேளையில் தயாளகுணத்தையும் வெளிப்படுத்தும் வகையில் அவர் தமது ஊழியருக்கு வெகுமதி அளிப்பார்.

ஆகவே, ***எவ்வளவு நேரம் செலவிடப்பட்டது, எவ்வளவு பரப்பளவில் ஊழியம் செய்யப்பட்டது*** என்பதை கணக்கில் கொண்டு அவர் வெகுமதி அளிப்பதில்லை. சிலபேர் முப்பது நாற்பது ஆண்டுகளாகக் கிறிஸ்தவர்களாக இருந்திருக்கலாம். ஆனால் அவர்கள் முதலாவதாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாமலும் இருக்கலாம். எவ்வளவு காலம் நீங்கள் ஊழியம் செய்தீர்கள் என்பது முக்கியமல்ல. அதிக காலம் ஊழியம் செய்தால் நல்லதுதான். அதனால் கடவுளுக்கு லாபம். சிலபேர் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவிடம் வந்து, ஓராண்டுக்குள்ளாகவே மரித்து பரலோகம் போயிருக்கலாம். ஆனால் அந்த குறுகிய காலப்பகுதியிலும் அவர்கள் தங்கள் எஜமானனுக்கு பெரும் புகழ்ச்சி ஏற்படக்கூடியவர்களாக வாழ்ந்திருப்பார்கள். அதிக ஆண்டுகள் நீங்கள் ஊழியப்பணியில் ஈடுபட்டிருந்தீர்களா என்பது முக்கியமல்ல, எவ்வளவு அதிகமான இடங்களில் சென்று பணியாற்றினீர்கள் என்பதும் முக்கியமல்ல. சிலபேர் உலகமெங்கிலும் சென்று அதிகமான இடங்களில் ஊழியம் செய்கிறார்கள். ஆனால் கடவுள் அதைக் கொண்டு அளவிடுவதில்லை. நேரத்தையோ, தூரத்தையோ அவர் கணக்கில் எடுப்பதில்லை. அப்படி எடுப்பது சட்டப்படி நியாயமானதாக இருக்கலாம். ஆனால் தயவு பொருந்தினவராகிய அவருடைய அளவிடுதல் அப்படிப்பட்டதல்ல.

நமது ***திறமையை கணக்கில் கொண்டு அவர் வெகுமதி அளிப்பதில்லை.*** ஒருவனுடைய புத்திசாலித்தனமோ, கருத்தாழமோ, சந்தர்ப்பங்களோ ஊழியத்திற்கு உதவலாம் - இவைகளைக் கொண்டு அவர் அளவிடுவதில்லை. அப்படி அளவிட்டாரானால் சிலபேருக்கு திரளான வெகுமதியும், சிலருக்கு சொற்பமான வெகுமதியும்தான் கிடைக்கும். ஆனால் நமது எஜமானன் அப்படியாக அளக்கிறவரல்ல. ஒருவனுக்கு அவர் பிரசங்கிக்கும் வரத்தை அருளுகிறார், வேறொருவனுக்கு வேதவசனங்களை ஆழமாகப் பகுத்தாராயும் வரத்தைத் தருகிறார். சிலபேருக்கு அவர் அனுபவங்களைத் தருகிறார். என்றாலும் அவர்

தரப் போகின்ற வெகுமதி, அவரவர் கொண்டிருக்கிற வரத்தை அடிப்படையாகக் கொண்டிராது. அவர் வேறுவிதமான சட்டத்தைக் கடைப்பிடிக்கிறவர்.

***சகமனிதன் தீர்மானிக்கிறபடியாக அந்த வெகுமதி இருக்காது.*** ஒரு சகோதரன் கடவுளுக்கு ஊழியம் செய்கிறான். மற்ற சகோதரர்கள் அவனைப் பற்றி நல்ல அபிப்ராயம் கொள்கிறார்கள். அவனை சபையில் ஒரு ஊழியக்காரனாக நியமிக்கிறார்கள். மூப்பனாகவோ, உதவிக்காரனாகவோ நிர்ணயிக்கிறார்கள். அப்படிப்பட்ட ஊழியவாய்ப்பு கிடைப்பது நல்ல வெகுமதிதான். கடவுளுக்கு உபயோகமாக அநேக ஊழியங்கள் செய்வதற்கு அதில் வாய்ப்பு அதிகமாக கிடைக்கும். ஆனால் நமது இறுதி வெகுமதி, நாம் எவ்வளவு பெரிய பதவி வகித்தோம் என்பதைப் பொறுத்துக் கிடைக்கப் போவதில்லை. கிறிஸ்து ஆளுகை செய்கின்ற ராஜ்ஜியத்தில் அந்தவிதமான விதிமுறையில்லை.

***மனிதர் தமக்குத்தாமே தீர்மானித்துக் கொள்கிற விதமாக அவர்கள் அளவிடப்படுவதில்லை.*** தங்களுக்கு பெரிய வெகுமதி கிடைக்கும் என்று நினைக்கின்ற சில நண்பர்களை எனக்குத் தெரியும். அவர்கள் பாவத்திற்கு நீங்கியிருக்கிறார்கள். அவர்கள் பரிபூரணராக இருப்பதாக சொல்கிறார்கள். தாங்கள் சொல்வது உண்மையா இல்லையா என்பதை தங்கள் எஜமானன் அறிவார் என்று கூறுகிறார்கள். இன்னும் சிலர், "நான் இதை செய்தேன், அதை செய்தேன்" என்று சொல்லிக் கொள்கிறார்கள். நீங்கள் செய்ததாக சொல்லுகின்ற காரியங்களைக் கொண்டு எஜமானன் உங்களுக்கு வெகுமதி அளிக்கப் போவதில்லை. சிலபேர் தாங்கள் செய்த காரியங்களைப் பட்டியலிட்டு பறைசாற்றிக் கொள்வார்கள். அவர்கள் தங்களையே உயர்த்திக் கொள்வதால், அவர்களுடைய சகோதரரும்கூட அவர்களைப் பற்றி அதிக உயர்வாக எண்ண மாட்டார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். தங்களுடைய திறமையையும், தங்களுடைய உபயோகத்தையும் குறித்து மிகவும் குறைவாக மதிப்பிடுபவர்களே கடவுளுடைய பரிசுத்தவான்களின் மத்தியிலே அதிக மதிப்பைப் பெறுவார்கள் என்று நான் நம்புகிறேன். நம்மை நாமே பாராட்டிக் கொள்வது, நம்மை உயர்த்தி பேசுவது, பிறர் கவனத்தை ஈர்க்கும் வகையில் சத்தமாக சொல்லிக் கொள்வது இவை போன்ற காரியங்களைக் கொண்டு நமது வெகுமதி தீர்மானிக்கப்படுவதில்லை. அப்படி தீர்மானிக்கப்பட்டிருக்குமானால், "பகலின் கஷ்டத்தையும், வெயிலின் உக்கிரத்தையும் சகித்தோமே" என்று சொன்னவர்களுக்கு இரண்டு பணமாவது அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்குமே. பதினோராம் மணி

வேளையிலே வந்து வேலை செய்தவர்களுக்கு சமமாகவே எஜமான் அவர்களையும் நடத்துகிறார்.

***மற்ற மனிதர்களைக் கவரும் விதத்தைப் பார்த்து வெகுமதி அளிக்கப்படுவதில்லை.*** நமது வயதும், நமக்கு ஆதரவு அளிப்பவர்களும், சுற்றுசூழ்நிலைகளும் நமக்கு அனுகூலமாக இருக்கலாம். சில மனிதர்களின் பெயர் மிகவும் பிரபலமடைந்து அடுத்த தலைமுறையினரையும் சென்றடையும். ஆனால் சிலரோ புகழ் பெறுவதில்லை. சிலமனிதர்களின் வாழ்க்கை சரித்திரம் எழுதப்பட்டு, எங்கும் பிரசித்தமாகி உலகின் பல்வேறு பகுதிகளையும் சென்றடையும். சிலரோ, தங்களது குடும்ப வட்டாரத்துக்குள் மாத்திரம் அறியப்பட்டவர்களாக வாழ்வார்கள். ஆனால், கடவுள் யாரையும் இதைக் கொண்டு அளவிடுவதில்லை. நான்கு அல்லது ஐந்து பிள்ளைகளுக்குத் தாயான ஒரு இல்லத்தரசி, தனது பிள்ளைகளை கடவுளின் வழியில் நடக்கும்படியாக தனது வீட்டிலேயே அளிக்கின்ற பயிற்சியினிமித்தமாக, அவள் கடவுளின் பார்வையிலே முதலாவதாகக் கருதப்படுவாள். ஆனால் பிரசங்க மேடையிலே வல்லமையாய்ப் பிரசங்கிக்கிற பிரசங்கி ஒருவரின் வாயிலே வருகின்ற வார்த்தைகளைக் கேட்பதற்காக ஆயிரம் பேர் கூடி வருகிறதாயிருந்தாலும், அந்தப் பிரசங்கி கடவுளால் கடைசியானவராகவும் கருதப்படலாம். மனிதர்களுடைய சேவையை நிறுத்துப் பார்ப்பதற்கு கடவுள் அவருடைய சொந்த அளவுகோலைக் கொண்டிருக்கிறார்.

***நமது வெற்றியைப் பொறுத்தும் அவர் வெகுமதி அளிப்பதில்லை.*** சில மனிதர்கள் அதிகமான வெற்றியை அடைகிறார்கள். அந்த வெற்றியானது உண்மையில் அவர்களுடையதல்ல. அது மற்றவர்களின் உழைப்பினால் விளையும் கனி. ஒரு மனிதர் அதிகக் கண்ணீரோடு அநேக காலம் உபதேசிக்கிறார். ஆனால் அவர் வெகு சொற்பமான பலனையே காண்கிறார். அதன்பின் அவர் இறந்து போகிறார். அவருக்குப் பின்பாக, ஆவியில் உற்சாகமுள்ள இன்னொருவர் எழும்பி, முன்குறிப்பிட்ட மனிதரின் வழிமுறைகளை பின்பற்றி அதிகமாக ஆத்தும ஆதாயம் செய்கிறார். முந்தினமனிதர் விதைத்தார். அடுத்தவர் அவரது வேலையைத் தொடர்ந்தார். யாருக்கு வெகுமதி கொடுக்கப்படும்? அதிகமான பலனைப் பெற்றவர் போலக் காணப்படுகிறவர் அந்த வெற்றிக்குக் காரணமல்ல. ஒரு பழங்கால கதை உண்டு. அது ஒரு பெரிய உண்மையை அறிவிக்கிறது. ஒரு சகோதரன், மிகவும் வல்லமையாகப் பிரசங்கித்து, கிறிஸ்துவுக்காக அநேக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தினார். ஒரு நாள் இரவிலே கனவின் மூலமாக அவருக்கு ஒரு காரியம் வெளிப்படுத்தப்பட்டது.

அவர் செய்தவைகளுக்காக அவருக்கு பரலோகத்தில் வெகுமதி ஒன்றுமில்லையென்று கண்டார். அதற்குண்டான வெகுமதிகளெல்லாம் யாருக்குக் கொடுக்கப்படும் என்று அந்த சகோதரர் கேட்டார். பிரசங்க மேடையின் படியிலே அமர்ந்து கொண்டு, அந்தப் பிரசங்கிக்காக ஜெபித்து வந்த ஒரு வயதான மனிதனுக்கே அந்த வெகுமதிகளெல்லாம் கொடுக்கப்படும் என்று ஒரு தேவதூதன் சொன்னானாம். ஒருவேளை அவர்கள் இருவருமே தங்களுடைய எஜமானனால் புகழப்படுவார்கள் என்று நாம் கருதலாம். நமக்கு வெற்றியாகத் தோன்றுவதை பொறுத்து நமக்கு வெகுமதி அளிக்கப்படுவதில்லை என்பதை இதினால் அறிந்து கொள்ளலாம்.

அதுபோலவே, நாம் வெற்றி அடையவில்லை என்பதற்காக கடவுள் நம்மைக் கடைசியில் வைக்கவும் மாட்டார். மனிதர்கள், வெற்றிக்கு சில விதிமுறைகளை வைத்திருக்கிறார்கள். அவர்கள் வகுத்திருக்கின்ற விதிமுறையின்படியாக, கடவுள், சிலமனிதர்களை வெற்றியடைய விடுகிறதில்லை. அவர் தமது ஊழியனாகிய ஏசாயாவை மக்களின் மத்தியிலே அனுப்பியது, ஜனங்களின் இருதயம் கடினப்படும்படியாகவும், காதுகள் மந்தமாகும்படியாகவும் செய்வதற்கே. அவர் தமது ஊழியனாகிய எரேமியாவை, ஒரு தேசத்திற்காக புலம்பி அழும்படிக்கு அனுப்பினார். எரேமியாவின் கண்ணீர் மக்களிடம் மனந்திரும்புதலையோ சீர்திருத்தத்தையோ ஏற்படுத்திவிடவில்லை. ஒருவேளை தேவன் உங்களை நோவாவைப் போல அனுப்பக்கூடும். நூற்றி இருபது வருஷங்கள் பிரசங்கித்தும், தனது குடும்பத்தாரைத் தவிர்த்து ஒரு ஆத்துமாவைக்கூட பேழைக்குள் கொண்டுவர முடியாமல் போகலாம். ஆனால், நீங்கள் உண்மையாக நடந்து கொண்டீர்களானால் அதுவே அவருடைய கண்களுக்கு முன்பாகப் பிரியமாக இருக்கும். அதில்தான் கடவுளின் சந்தோஷம் இருக்கிறது. வாழ்நாள் எல்லாம், உழுதல் அனைத்தையும் நீங்களே செய்தும், விதைப்பு முழுவதையும் நீங்களே செய்தும் உங்களுடைய கைகளில் எந்த அறுவடையும் இல்லாமல் போகும் என்று நான் கூறவில்லை. அப்படியே ஆனாலும்கூட, நீங்கள் கடைசிவரைக்கும் கடவுள் கொடுத்த ஊழியத்தில் தேவனுக்கு முன்பாக உத்தமமாக நடந்து கொண்டீர்களானால், உங்களுக்கு வெகுமதி கிடைக்காமல் போகாது என்று சொல்லுகிறேன். மனிதன் வெற்றியை அளக்கிறபிரகாரமாக அளக்கப்பட்டு உங்கள் வெகுமதி நிர்ணயிக்கப்படுவதில்லை.

**கடவுளின் விதிமுறை**: அது எப்படியிருக்கும் என நான் நினைப்பதை

உங்களுக்குக் கூறுகிறேன். அது பல கிளைகள் அடங்கிய விதிமுறை. சில மனிதர்கள் முதலாவதாக வருவதற்குக் காரணம் அவர்களுடைய உறுதியான ***ஆர்வம்.*** அவர்களால் முடியுமானால் அவர்கள் மக்களை இரட்சித்து விடுவார்கள். மக்களைக் கிறிஸ்தவர்களாக்க அவர்களால் கூடுமானால் அதை செய்துவிடுவார்கள். அதை செய்வதற்குத் தங்கள் உயிரையும் இழக்கத் தயாராக இருப்பார்கள். கேட்பவர்கள் இரட்சிப்பை அடையும்படிக்கு தங்கள் இருதயத்திலிருக்கும் ஆர்வம் முழுவதையும் வெளிப்படுத்திப் பேசுவார்கள். மக்களிடம் அவர்கள் பேசும்போது அவர்களுடைய ஆத்துமாவே அவர்கள் வாயிலிருந்து பேசும். அவர்களுடைய ஆர்வத்தைக் கடவுள் அறிவார். அவர்களுடைய ஆர்வத்தை அவர் கணக்கில் எடுத்துக் கொள்கிறார். ஆகவே "பிந்தினோர் முந்தினோராகிறார்கள்".

கடவுள், ஒருவனிடம் இல்லாததின் அடிப்படையில் அல்ல, ***உள்ளதின்*** அடிப்படையில் அளவிடுகிறார். ஒரு சகோதரனிடம் ஒரு தாலந்து மாத்திரமே இருக்கிறது. ஆனால் அவன், பத்து தாலந்துகளைப் பெற்றவன் செய்யக்கூடிய அளவு சேவையை செய்கிறான். ஆனாலும் அவனுக்கு அதில் திருப்தியில்லை. தான் கொஞ்சம்தான் செய்வதாக அவன் எப்போதும் குறைவுபட்டுக் கொள்கிறான். தான், கடலின் அடிவாரத்தில் வாழுகின்ற பவளப் பூச்சியைப் போல இருப்பதாக நினைக்கிறான். தன்னால் சிறிதளவே பவளத்தை உருவாக்க முடிகிறது, அது ஒருபோதும் கடலின் மேற்பரப்பிற்கு வரப்போவதில்லை என்று வருத்தப்பட்டுக் கொள்கிறான். ஆனால் ஒரு பெரிய பவளப்பாறை அல்லது பவளத்தீவின் ஒரு சிறு பகுதி உருவாக, தான் காரணமாயிருப்பதும், அது பிற்பாடு ஒரு பெரும் பவளத்திட்டாக கடலின் மேற்புறத்தில் காணப்படப் போகிறது என்பதும் அறியாமல் இருக்கிறான். ஒருவனிடம் இல்லாததின் அடிப்படையில் நமது கடவுள் அவனை அளவிடப் போவதில்லை. அவனிடம் என்ன இருக்கிறது என்பதையே அவர் பார்க்கப் போகிறார்.

இன்னொரு சகோதரன், அவனிடம் வேறு எதுவும் இல்லாவிட்டாலும், ***உற்சாகமுள்ள நல்ல ஆவி*** மாத்திரம் இருக்கிறது. அவன் மிகுந்த இரக்கமுள்ளவன். அவன் கடவுளுக்காக காத்திருப்பவன். கர்த்தரின் வசனத்திற்கு நடுங்குகிறவன். தன் முழுமனதினாலும் மிகுந்த மரியாதையோடும், மிகவும் மென்மையாகவும் பேசுகிறவன். கர்த்தர் தன்னை மௌனமாக இருக்கும்படி செய்தால் மௌனத்தைக் கடைப்பிடிக்கவே விரும்புவான். அவர் தன்னை பேசும்படி ஏவுகிற

சந்தர்ப்பங்களில் மாத்திரம் பேச விரும்புவான். கர்த்தருடைய சித்தத்தை மாத்திரமே நிறைவேற்ற வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் உள்ளவன். தன்னை ஒரு பொருட்டாக யாரும் எண்ணாவிட்டாலும் பரவாயில்லை, அவர் சித்தம் மாத்திரமே நடைபெறுவதில் மிகுந்த திருப்தி அடைவான். "ஒன்றுமில்லாவிட்டாலும், கர்த்தாவே, உமது பாதபடியில் நான் அமர்ந்திருந்தாலே போதுமானது" என்பதே அவனுடைய ஜெபமாக இருக்கும். இப்படிப்பட்ட மனிதனை கடவுள் ஒருவேளை முதலாவதானவனாக வைக்கலாம். அதே சமயத்தில் தன்னில்தானே நிறைவுள்ளவனாக, கடவுளின் ஊழியத்தை உத்தமமாக செய்து கொண்டிருந்தவனுங்கூட கடைசி இடத்திற்குப் போக நேரிடலாம்.

இன்னொருவன், தான் எந்த வேலையை செய்தாலும் அதை ***மிகவும் சரியாக* செய்து முடிப்பவன்.** அவன் பல காரியங்களை செய்வதற்கு முயற்சிக்க மாட்டான். ஆனால், ஒன்றை மாத்திரமே செய்தாலும் அதை பழுதின்றி செய்து முடிப்பான். அவனால் ஒரு பணியை மாத்திரம்தான் செய்ய முடியும். என்றாலும் தனது முழு மனதையும் கவனத்தையும் செலுத்தி அந்தக் காரியத்தை செம்மையாக செய்வான். ராஜ அரண்மனையில் ராஜாவின் ஓவியத்தை வரைவதற்கு ஓவியன் எவ்வளவு கவனம் எடுத்துக் கொள்வானோ அந்த அளவுக்கு கவனமாக தன் பணியை செய்வான். தனது வாழ்க்கை முழுவதையும் தான் எடுத்துக் கொண்ட சேவையை செய்வதில் கவனமாக செலவிடுவான். அதை தேவன் தமது கணக்கில் முதலாவதாக எடுத்துக் கொள்வார். வேறொருவன், சோம்பலாகவும், அரைகுறையாகவும் அநேக காரியங்களை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வான். தான் அதிகமான வேலைகளை செய்வதாக அவன் நினைத்துக் கொண்டிருப்பான். ஆனால் அவனுடைய பணிகள் நிராகரிக்கப்படும். ஏனென்றால் அவன் செய்தவைகள் ராஜாவின் தரத்துக்கு ஏற்றவிதத்தில் இல்லாததால், அவை அவரது அரண்மனையை அலங்கரிக்க முடியாது.

***கடவுளைக் குறித்த சிந்தை***யை மாத்திரம் கொண்டவர்களாக நாம் என்ன சேவையை செய்கிறோமோ அதையே அவர் தமது கணக்கில் எடுத்துக் கொள்வார் என நான் நினைக்கிறேன். நாம் செய்பவற்றை அவருக்கு செய்வோமானால், அவருக்காகவே நாம் எல்லாவற்றையும் செய்தோமானால் அதை அவர் விரும்புவார். நமது சிநேகிதர்களுக்கென்றோ, நமது சொந்த நலனுக்கென்றோ இராமல், கடவுளை மாத்திரமே மனதில் கொண்டவர்களாக நாம் செய்கின்ற பணியை அவர் கனப்படுத்துவார். தம்மைக் குறித்த சிந்தை மாத்திரம்

உள்ளவர்களை அவர் முதலாவது இடத்தில் வைப்பார். மற்றவர்களை அவர் கடைசியில் வைப்பார். "என்னை கனம் பண்ணுகிறவர்களை நானும் கனம் பண்ணுவேன்" என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

அதிலும் நாம் அவர் மீதுள்ள ***அன்பில்*** மூழ்கினவர்களாக அவருக்கு சேவை செய்யும்போது அது மிகுந்த மதிப்பைப் பெறும். அதிக விலையேறப்பெற்றதான நளதைலத்தை எடுத்து வந்து, இயேசுவின் சிரசில் ஊற்றின அந்தப் பெண்ணின் அன்பை நினைத்துப் பாருங்கள்! அவள் நிச்சயம் முதலாவதாக எண்ணப்படுவாள். எங்கெல்லாம் சுவிசேஷம் சொல்லப்படுமோ அங்கெல்லாம் இவள் செய்ததும் கூறப்படும் என்று கிறிஸ்துவே அவளைக் குறித்து விசேஷமாக சொன்னார். அதிகமான ஊழியம் செய்தவர்களில் சிலபேர்கூட கடைசி இடத்திற்குப் போக வேண்டியதிருக்கும். ஏனென்றால் இயேசுவின் மீது இந்த ஸ்திரீ கொண்டிருந்த அளவுக்கு, அதிகமான அன்பு அநேகரிடத்தில் காணப்படுவதில்லை.

சில பேர் ***மிகுந்த விசுவாசம்*** உடையவர்களாக கடவுளுக்கென பணி செய்கிறார்கள். விசுவாசத்தோடு நாம் அவருக்கு வேலை செய்வதைக் காண்பதே அவருக்குப் பிரியமாக இருக்கிறது. அவிசுவாசத்தோடு அதிகமான வேலைகளை செய்வது குறைவுள்ள பணியாகவே கருதப்படும். ஏனென்றால் விசுவாசம் இல்லாமல் ஜெபிக்கின்ற ஜெபம் கேட்கப்படாதது போலவே, அவிசுவாசத்தோடு செய்கின்ற பிரசங்கங்களும் உபதேசங்களும் பலனளிக்காமல் போய்விடும். நீங்கள் செய்யும் சேவையை விசுவாசத்தோடு செய்யுங்கள். அப்போது நீங்கள் முந்தினோரின் இடத்தில் இருப்பீர்கள்.

நமது ஊழியத்திற்காக எவ்வளவு ***ஜெபித்திருக்கிறோம்*** என்பதைக் கொண்டு அவர் நம்முடைய வேலையை அளவிடுவார். ஒருவேளை அது ஒரு நல்ல பிரசங்கமாக இருக்கலாம். அதைப் பிரசங்கித்தவர் மிகவும் கருத்தோடு அதைத் தயாரித்திருக்கலாம். அதன் வாக்கியங்களை அவர் எவ்வளவு சிறப்பாக அமைத்திருக்கிறார் என்பதை நீங்கள் காணக்கூடும். அழகாக சொல்லக்கூடிய விதத்தில் சொற்சாதூரியங்களை அவர் உபயோகித்திருக்கலாம். ஆனால் அதற்காக ஜெபிக்கப்படவேயில்லை என்பதையும் நீங்கள் உணர்ந்து கொள்ளக்கூடும். வெறுமனே தயாரிக்கப்பட்டு அல்லது நகல் எடுக்கப்பட்டு, அல்லது பரிசுத்த ஆவியானவரின் உதவியில்லாமல் மனிதனின் மனதில் தோன்றின கருத்துக்களை வைத்து தயாரிக்கப்பட்ட

பத்தாயிரம் பிரசங்கங்களைவிட, நன்றாக ஜெபிக்கப்பட்டதான பிரசங்கம் மேலானது. பிரசங்கம் தயாரிக்கும்போது அதற்காக எப்போதும் ஜெபித்தவர்களாக, ஜெபசிந்தையோடு, கடவுளை சார்ந்து கொண்டு அதை தயாரிக்க வேண்டும்.

நாம் ***கொடுப்பதில்*** எந்தவித மனநிலை கொண்டிருக்கிறோம் என்பதை நமது கர்த்தர் கவனிப்பார். நாம் எவ்வளவு கொடுக்கிறோம் என்பதைக் கொண்டு அவர் அளவிடாமல், ***நமக்கு எவ்வளவு மீதியாக இருக்கிறது*** என்பதைத்தான் அவர் தமது அளவுகோலில் அளவிடுவார் என நான் நினைக்கிறேன். தனக்கு உரியதையெல்லாம் கொடுத்து விட்ட அந்த பெண்மணி, மற்ற செல்வந்தர்கள் கொடுத்ததைக் காட்டிலும் அதிகமாகக் கொடுத்தாள் என்று இயேசு குறிப்பிடுகிறார். ஏனென்றால் அவளுக்கு மீதியாக எதுவுமில்லை. தனது ஜீவனத்துக்கு உண்டாயிருந்த அனைத்தையும் அவள் கொடுத்தவிட்டபடியால் அவள் முதலாம் இடத்தைப் பிடித்தாள். ஒருவர் ஆயிரம் பணம் கொடுக்கிறார், அதற்காக நாமும் அவருக்கு அதிக மரியாதை செலுத்துவோம். ஆனால் அவர் கடவுளின் அளவுகோலின்படி பிந்தின இடத்தைதான் பெறுகிறார். ஏனென்றால் அவருக்கு மீதியாக இருப்பது அதிகமாக இருக்கிறதே.

தாங்கள் செய்த சேவைக்காக ***எந்த வெகுமதியும் பெறாதவர்கள்,*** முதலிடத்தை அடைவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. நாம் விருந்து செய்யும்போது குருடரையும், செவிடரையும், சப்பாணிகளையும் அதற்கு அழைக்கும்படியாக நமது கர்த்தர் சொல்லுகிறார். ஏன்? அப்போதுதான் அவர்களால் பதிலுக்கு செய்ய முடியாமல் போகும். மேலும், அவர் பரிசேயர்களைக் குறிப்பிட்டு கூறுகிறார்: “அவர்கள் தங்கள் பலனை அடைந்தாயிற்று என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.” உங்கள் சேவைக்காக இரண்டு முறை உங்களுக்கு பலன் கிடைக்காது. நீங்கள் கிறிஸ்துவுக்காக ஏதோ ஒரு பணியை செய்திருக்கிறீர்கள். உதாரணமாக விசுவாசத்திற்காக வாதாடியிருக்கிறீர்கள். அதன் காரணமாக உங்களை எதிர்த்து குற்றப்படுத்துகிறார்கள். தூற்றுகிறார்கள். நீங்கள் நல்லதைத்தான் செய்தீர்கள். ஆனால் அதற்கு பலன் ஒன்றும் கிடைக்கவில்லை. வெகுமதி கிடைக்கப்பெறாத சேவைகளுக்கெல்லாம் பிரதியுபகாரம் செய்யப்பட வேண்டியது மீதியாக இருக்கிறது. கடவுளின் ஞாபகப்புத்தகத்திலே நீங்கள் செய்தவைகள் சட்டத்தின்படியாக அல்ல, அவருடைய கிருபையின்படியாக குறித்து வைக்கப்பட்டிருப்பது மிகுந்த பாக்கியமானது. ஒருவேளை நீங்கள் ஏழை ஒருவனுக்கு ஏதாவது உதவி செய்திருக்கலாம். ஆனால் அவனோ அதற்காக

நன்றியுள்ளவனாயிருக்கவில்லை. அவன் நன்றிகெட்டதனமாக நடந்ததற்காக நீங்கள் நன்றியோடிருங்கள். ஏனென்றால் அவன் உங்களுக்குத் தனது நன்றியைக் காண்பித்திருந்தானென்றால், அப்போதே நீங்கள் ஒருவேளை உங்களுடைய பலனை அடைந்ததாயிருக்கலாம். உங்களால் உதவியைப் பெற்றவர்கள், உங்கள் மீது மிகுந்த அன்பு செலுத்தி, உங்களைப் புகழ்ந்து பேசி, உங்களுக்கு கைம்மாறாக வேறு ஏதாவது விதத்தில் உதவி செய்தார்களானால் அது நல்லதுதான். ஆனால், நீங்கள் செய்ததின் பலனை நீங்கள் அடைந்துவிட்டீர்கள். ஆனால் யாராவது நன்மை செய்தும் பாடு அனுபவிக்கிறவர்களாயிருந்தால், சிறப்பானதை செய்தும் தீமையையே பலனாகப் பெறுகிறவர்களாயிருந்தால், அன்பு செலுத்தியும் அன்பைப் பெறாதவர்களாயிருந்தால் அவர்களைக் குறித்துதான் கர்த்தர் சொல்லுகிறார்: "இவர்கள் பிந்தினோராய் இருந்தார்கள். ஆனால் அவர்கள் முந்தினோர் ஆவார்கள்" என்று. மனிதரின் அபிப்ராயத்தில் முதலாவது இடத்தைப் பிடித்து, பிரதியுபகாரங்களைப் பெற்றுக் கொண்ட அநேகம் பேர் கடைசி இடத்திற்குத்தான் செல்வார்கள்.

## இ) ஊழியக்காரராகிய நாம் என்னவிதமான ஆவியை கொண்டிருக்க வேண்டும்

இந்த தலைப்பில் நடைமுறைக்கு உதவும் சில ஆலோசனைகளைக் கொடுக்க விரும்புகிறேன். நமது ஊழியம் கிருபையினால் வந்தது. அந்த ஊழியத்தை அவர் தமது அளவுகோலின்படியாக அளவிடுகிறார். அது சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதல்ல. அவருடையது கிருபையின் அளவுகோல். அப்படியிருக்கையில் நாம் இரண்டு காரியங்களை கவனிக்க வேண்டும். முதலாவது நாம் பெருமை உடையவர்களாய் இருக்கக் கூடாது. இரண்டாவது, நாம் சோர்ந்து போய்விடக் கூடாது.

பெருமை அடையவே அடையாதீர்கள். ஏனென்றால் முதலாவது இடத்திலிருக்கிற அநேகர் கடைசி இடத்தில்தான் இருப்பார்கள். ஒருவேளை சகோதரரே, நீங்கள் உண்மையாகவே கர்த்தருக்கென்று அருமையாக உழைக்கிறவராக இருந்து, முதலாவதான இடத்தில் இருந்தீர்களென்றால், அதைக் குறித்து நீங்கள் பெருமை அடைவீர்களா? எப்படி அடைய முடியும்? நீங்கள் இன்னும் அதிகமாகவல்லவா அவருக்கு கடன்பட்டிருக்கிறீர்கள்! நீங்கள் இன்னும் அதிகமாக அவருடைய ராஜ்ஜியத்திற்காக உழைக்கும்படியாக நியமிக்கப்பட்டிருப்பதால், அவர்

உங்களுக்கு அளித்திருக்கும் அந்தக் கிருபைக்காக நீங்கள் இன்னும் அதிக கடமைப்பட்டிருக்கிறீர்களே. கர்த்தரின் பாதத்தில் தாழ விழுந்து பணிந்து கொண்டு தாழ்மையாயிருங்கள்.

அடுத்தபடியாக, ஒரு வேளை நீங்கள் உங்களை முதலாவதாக இருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கலாம். ஆனால் உண்மையில் கடைசியாகத்தான் இருப்பீர்கள். உங்களைக் குறித்து நீங்களே மதிப்பிட்டுக் கொள்வது சரியான மதிப்பீடாக இருக்காது. உங்களைக் குறித்து நீங்கள், “ஐசுவரியவான் என்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லை என்றும்” எண்ணிக் கொண்டிருப்பீர்கள். ஆனால் கடவுளின் பார்வையில் நீங்கள், “நிர்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாய்” இருக்கிறீர்கள். உங்களுடைய ஊழியமானது மிகப் பெரிய வைக்கோல் போரினாலும், அதிக அளவு புல் கட்டினாலும், குவித்து வைக்கப்பட்ட கட்டைகளாலும் செய்யப்பட்டதாக இருக்கலாம். ஆனால் கடவுள் அதை பரீட்சைக்கு உட்படுத்தும்போது, அவை யாவும் எரிந்து ஒரு கைப்பிடி அளவு சாம்பல் மட்டுமே மிஞ்சக்கூடும். ஆனால், உங்களுடைய சகஊழியன் ஒருவனைக் குறித்து, அவன் மிகச் சிறிய அளவே கர்த்தருக்கு ஊழியம் செய்ததாக நீங்கள் நினைத்துக் கொண்டிருந்திருப்பீர்கள். ஆனால் அவனோ பொன்னினாலும், வெள்ளியினாலும், விலையேறப்பெற்ற கற்களாலும் கட்டியிருந்தான் என்பதை பிற்பாடு காண்பீர்கள்.

நாம் ஒருவேளை உண்மையாகவே முந்தினவர்களின் பட்டியலில் இருப்பவர்களாக இருந்தாலும், நாம் அதைக் குறித்து பெருமை அடைந்தோமானால், ***நமது பெயர் பிந்தினவர்களின் பட்டியலுக்குப் போய்விடும்.*** ஓ! கடவுளின் ஊழியக்காரர்களில் எத்தனைபேர் மாயையைப் பற்றிக் கொண்டு பெருமைக்காரர்களாக மாறியிருந்திருக்கிறார்கள்! அவர்கள் பலவீனராய், தாழ்மை-யானவர்களாய், கடவுளின் பெலனையே சார்ந்தவர்களாக வாழ்ந்த வரைக்கும் அவர் அவர்களை ஆசீர்வதித்திருந்தார். ஆனால் அவர்கள் பெலனடைந்து, தங்களுடைய சொந்த பெலனை சார்ந்து வாழ ஆரம்பித்தபோது, அவர்கள் பயங்கரமான தோல்வியைத் தழுவ ஆரம்பித்தார்கள்.

ஒன்று மட்டும் மிகவும் நிச்சயம். ***நீங்கள் முதலாவதாய் இருந்தால், நீங்கள் கடைசியில் இருப்பதாகத்தான் நினைப்பீர்கள்.*** தன்னை

கேவலமாக எண்ணிக் கொள்பவன்தான் சிறந்தவன். ரோமர் ஏழாம் அதிகாரத்தில் பவுல் தன்னைக் குறித்து என்னவிதமான விளக்கம் தருகிறார்! பவுல் இந்த அதிகாரத்தை எழுதியபோது அவர் இரட்சிக்கப்படாத நிலையில் இருந்ததாக சிலபேர் சொல்கிறார்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், அவர் இதை எழுதும்போது அவர் மூன்றாம் வானத்திற்கு சென்ற அனுபவத்தை அடைந்திருந்தார். அந்நாட்களில் வாழ்ந்தவர்களில், பவுல் மாத்திரமே கிறிஸ்துவுக்கு ஒத்த குணாதிசயங்களைக் கொண்டவராக இருந்தார். ஒருவேளை யோவானும் அப்படி இருந்திருக்கலாம். அவர் மிகுந்த பரிசுத்தநிலையில் இருந்திருக்காவிட்டால், இப்பேர்பட்டதான பயங்கர வேதனையை அவர் எழுத்தில் காண்பித்திருக்க முடியாது: “நிர்பந்தமான மனுஷன் நான். இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?” என அங்கலாய்க்கிறார். தன்னை பரிசுத்தவானாக எண்ணிக் கொள்பவன் ஒருபோதும் பரிசுத்த கடவுளைக் காண்பதில்லை. ஒருவேளை அவன் கடவுளைக் கண்டுவிட்டானென்றால், அவனும் யோபைப் போல, “என் காதினால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன். இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது. ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன்” என்றுதான் சொல்லுவான். கடவுளுடைய மகா பரிசுத்தத்தையும், இயேசுக்கிறிஸ்துவின் பரிபூரணமான முன்மாதிரியையும் ஒருவன் உணர்ந்து கொண்டுவிட்டானென்றால், அவன் தனது சுயபெருமையை விட்டுவிட்டு தன்னை ஒன்றுமில்லாதவனாக எண்ணுவான். தன்னை கடைசியாக எண்ணிக்கொள்வதற்கு விருப்பம் உடையவனே உண்மையில் முதலாவதாக இருப்பவன். பவுல், மற்ற அப்போஸ்தலர்களைக் காட்டிலும் சற்றும் குறைந்தவர் அல்ல. இருந்தபோதிலும், அவர் தன்னை அப்போஸ்தலரெல்லாரிலும் மிகவும் சிறியவன் என்று குறிப்பிடுகிறார். பாவிகளில் பிரதான பாவி என தன்னை அழைத்துக் கொள்கிறார். பிரியமானவர்களே! தேவன் தம்முடையவர்களில் சிறந்தவர்களைக் குறிக்கும் அடையாளக் குறியீடுகளில் ஒன்று, அவர்கள் தங்களைக் குறித்த தாழ்வான எண்ணம் கொண்டிருப்பதுதான். ஆகவே பெருமையாக இராதேயுங்கள்.

அடுத்தபடியாக, நீங்கள் கடைசியாக இருப்பதாக நினைத்தீர்களானால் சோர்ந்து போகாதிருங்கள். ***கடவுள் அளப்பது உங்கள் அளவின்படியாக அல்ல.*** கடைசியில் இருப்பதாக நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் ஒருவேளை அவர் அப்படி நினைத்திருக்க மாட்டார். “நான்

அப்போஸ்தலன் என்று அழைக்கப்படுவதற்குத் தகுதியானவன் அல்ல" என்று நினைத்தாலும் அப்போஸ்தல ஊழியத்திற்கு தகுதியானவன்தான் என அவர் நினைக்கக்கூடியவர். தகுதியைக் குறித்த உனது எண்ணத்திற்கும் கடவுளுடைய எண்ணத்திற்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. அவருடைய மதிப்பீடுதான் சரியானதாக இருக்கும்.

நீங்கள் கடைசியானவராக இருந்தாலும், "அவர் அதிகமான கிருபையை அளிக்கிறவர்." நாம் ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்காக மாத்திரம் அல்ல, அதை "இன்னும் அதிகமாக" தருவதற்காக கிறிஸ்து வந்திருக்கிறார். உங்களிடம் இருப்பது போதுமானது என எண்ணாதீர்கள். இன்னும் அதிகமான வரங்களை நாடித் தேடுங்கள். "நாம் நினைப்பதற்கும் வேண்டிக் கொள்வதற்கும் அதிகமாகவே" நமக்குத் தருவதற்கு அவர் வல்லவராய் இருக்கிறார். அவரிடம் மேன்மையான காரியங்களைக் கேளுங்கள். "உங்கள் வாயை விரிவாய்த் திறவுங்கள். நான் அதை நிரப்புவேன்" என்று கர்த்தர் சொல்லவில்லையா? விசுவாசமுள்ள ஜெபம் வளரும் ஜெபமாயிருக்கிறது. நீங்கள் எவ்வளவு அதிகமாக கேட்கிறீர்களோ அவ்வளவு அதிகமாகப் பெற்றுக் கொள்வீர்கள். கிடைக்க கிடைக்க இன்னும் அதிகமாகக் கேட்டுக் கொண்டே போவீர்கள். அவரிடமிருந்து பெறப் பெற அதிகமதிகமாக நிரப்பப்படுவதை உணர்வீர்கள். நாம் கடைசியானவர்களாக இருந்தால் தேவன்தாமே இவ்விதமாக நம்மை நிரப்புவாராக!

கர்த்தருக்கென மிகவும் கொஞ்சமாகத்தான் உங்களால் சேவை செய்ய முடிகிறதென்றாலும் ***சரியான மனப்பாங்கை உடையவர்களாய்*** இருந்தீர்களானால், அந்த சொற்ப ஊழியமே மிகவும் விலையேறப்பெற்றதாகி அந்தக் குறைவை சரிசெய்து விடும். உங்களால் பெருமளவில் ஊழியம் செய்ய முடியாவிட்டால், அதை விரும்பாதீர்கள். ஒரு இளம் ஊழியர், வயதான ஊழியரிடம் "ஐயா, நான் நூறு பேருக்கு மாத்திரம்தான் பிரசங்கம் செய்கிறேன். ஆயிரம் பேருக்கு பிரசங்கிக்கக் கூடிய இடத்தில் நான் இருக்க வேண்டுமென விரும்புகிறேன்" என்று கூறினார். அதற்கு அந்தப் பெரியவர், "இளைஞனே, நீ நூறு பேருக்கு கணக்கு ஒப்புவித்தால் போதுமானது. அவர்கள் அத்தனை பேருடைய ஆத்துமாவுக்கும் வேண்டியவைகளை நீ உண்மையாக செய்யக் கூடுமானால் அதுவே போதுமானதாயிருக்கும்" என்று கூறினார். மிகப்பெரும் கூட்டத்தில் அனைவருடைய ஆத்துமாவுக்கும் ஏற்றவைகளைக் கொடுக்க உன்னால் முடியுமானால் நீ பெருமளவில் ஊழியம் செய்ய ஆசைப்படு. தற்போது உள்ளவைகளில்

உத்தமமும் உண்மையுமாக நடந்து கொள்வது மாத்திரமே, அதிலும் அதிகமானவைகளை செய்வதற்கேற்ற பயிற்சியாக இருக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு நான் கடைசியாக சொல்வது: நாம் முந்தினவர்களாயிருந்தால் என்ன, பிந்தினவர்களாயிருந்தால் என்ன? நாம் அதைக் குறித்து அதிகமாகக் கவலைப்பட வேண்டாம். ***ஏனென்றால் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் மகிமையை நாம் அனைவருமே பகிர்ந்து கொள்ளப் போகிறோம்.*** நாம் மனந்திரும்பியபோது, கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமானோம். நாம் கிருபையில் பெருகும்போது, நல்ஆவி அந்த சரீரத்தில் ஊடுருவுகிறபோது, அந்த சரீரத்தின் எந்த அங்கத்தினர் கனமடைந்தாலும், "இது எங்களுக்கு கிடைக்கும் கனம்" என்று சொல்லக் கூடியவர்கள் ஆகிறோம். எந்த சகோதரனாவது கர்த்தரால் அதிக கனத்தைப் பெற்றானென்றால், அவனது கனத்தால் நானும் கனமடைவதை உணருகிறேன். கர்த்தர் உங்கள் சகோதரனை ஆசீர்வதித்து, அவனை உங்களைக் காட்டிலும் பத்து மடங்கு உபயோகமுள்ளவராகச் செய்தாரென்றால், அது உங்கள் சகோதரனுக்கு மாத்திரம் கிடைத்த ஆசீர்வாதமல்ல, உங்களுக்கும்தான் அது ஆசீர்வாதமாயிருக்கும். என் கை ஏதாவது ஒரு பொருளை வைத்துக் கொண்டிருக்கும்போது, என் கால் அதைப் பார்த்து, என்னிடம் அந்தப் பொருள் இல்லையே என்று சொல்லுமா? சொல்லாது. என் கையில் இருக்கும் பொருள் காலுக்கும் உரியதுதான். அது சரீரம் முழுவதற்கும் சொந்தமானது. என்னுடைய வாய் சாப்பிடுகிறது. ஆனால் அது வாய்க்காக மாத்திரம் சாப்பிடுவதில்லை. அது எனது மூளைக்காகவும், கைக்காகவும், முதுகெலும்புக்காகவும், சரீரத்திலுள்ள எல்லா அங்கங்களுக்காகவும்தான் சாப்பிடுகிறது. அது போலவே, நீங்கள் கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தை உணரும்போது, அவருடைய ஜனங்களோடுள்ள ஐக்கியத்தை உணரும்போது, உங்களுக்குத் தோன்றும் எண்ணமெல்லாம்: "கர்த்தர் மகிமைப்படுவாராக. அவரே மேன்மை அடைவாராக. நான் முதலாவதாக இருப்பதோ கடைசியில் இருப்பதோ பெரிய விஷயமல்ல" என்றுதான் இருக்கும். "போன வாரத்தில்தான் கர்த்தரை ஏற்றுக் கொண்ட அந்த சகோதரன், கர்த்தரின் கரத்திலிருந்து வெகுமதியைப் பெற்றிருக்கிறான். அதைக் குறித்து எனக்கு சந்தோஷம்தான்" என்று எழுந்து நின்று சொல்லக்கூடியவர்கள் ஆவீர்கள். இதோ, இன்னொரு சகோதரன். இவன் கர்த்தருக்கென்று பெரிதாக எந்த சேவையும் செய்துவிடவில்லை. ஆனால் இவனும்

கர்த்தரிடமிருந்து வெகுமதியைப் பெற்றிருக்கிறான். கர்த்தர் இவனுக்கும் அருளிச் செய்ததற்காக ஸ்தோத்திரம் என்று சொல்லுவீர்கள். அவனும் கர்த்தருடைய குடும்பத்தில் ஒருவனாக இருக்கிறானே. கிடைக்கும் வெகுமதிகள் யாவும் ஒருவரிடமிருந்தே வருகிறது. அவை யாவும் அந்த ஒரே குடும்பத்திற்கே வருகிறது. நாம் அனைவரும் ஒரு பெரிய கடையின் வெவ்வேறு தளங்களில் பணிபுரிகின்ற வேலையாட்கள் போல இருக்கிறோம். பெண்கள் வரக்கூடிய இடத்தில் ஒருவன் பணிபுரிகிறான். அவனிடம் அதிகமான பொருட்கள் வாங்குகிறார்கள். அந்நாளில் அவன் அதிக பணத்தை வசூல் செய்கிறான். கடையின் பின்புறத்தில் இன்னொருவன் சாமான்களை இறக்குவதும் ஏற்றுவதுமாக வேலை செய்து கொண்டிருக்கிறான். அவன் அதிகக் கடினமான வேலையை செய்து கொண்டிருக்கிறான். அவனிடம் பணம் எதுவும் வசூலாவதில்லை. கடையின் எஜமானன், யார் அதிக பணத்தை வசூல் செய்தது என்பதின் அடிப்படையிலா வேலையாட்களைப் புகழுவான்? கடையின் பின்புறத்தில் சாமான்களை இறக்கி ஏற்றும் வேலைகளை செய்தவனும், கடையின் முன்புறத்தில் பணம் வசூலித்துக் கொண்டிருந்தவனைப் போலவே சுறுசுறுப்போடு வேலை செய்து கொண்டிருந்தபடியால் அவனும் தன் எஜமானின் பார்வையில் தகுந்த ஊழியனாகக் காணப்படுவான். ஒருவேளை அவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தார்களானால், அந்நாளின் முடிவிலே ஒன்றாக அமர்ந்து என்னென்ன வேலைகள் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன, எவ்வளவு பணம் வசூலாயிற்று என்பதைக் குறித்துதான் அனைவரும் சந்தோஷமாகப் பேசிக் கொள்வார்கள். ஏனென்றால் அவை யாவும் ஒரே குடும்பத்திற்கு செல்கிறது. அனைவரின் உழைப்பின் பலனைப் பெறுவதும் அக்குடும்பத்தைச் சேர்ந்த எல்லோரும்தான். ஆகவே சகோதர சகோதரிகளே, நீங்கள் சென்று கிறிஸ்துவுக்காக உழையுங்கள். ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொள்ளாதீர்கள். கர்த்தருக்காக சேவை செய்யும் இந்தக் கிருபையில் எவ்விதத்திலாவது பங்குபெற அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதே என்று சந்தோஷப்படுங்கள்.

இன்னும் ஒரு காரியத்தை நான் கூற வேண்டும். நான் இதுவரைக்கும் கடவுளுடைய பிள்ளைகளிடம் பேசிக் கொண்டிருந்தேன். இரட்சிக்கப்பட்ட நிலையில் இல்லாத மற்றவர்களாகிய நீங்கள் கடவுளுக்கு சேவை செய்ய முடியாதாகையால் இந்தக் கிருபையைக் குறித்து அவர்களுக்குப் பிரசங்கித்தேன். என்னவொரு பரிதாபமான

நிலைமையில் நீங்கள் இருக்கிறீர்கள்! சேவை செய்யக் கூடாத நிலையில் இருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவிடம் வரும்வரைக்கும் கடவுள் உங்களிடமிருந்து எதையும் பெற்றுக் கொள்ள மாட்டார். மகா பிரதான ஆசாரியராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே எந்த பலியும் செலுத்தப்பட வேண்டும். "நீங்கள் மனந்திரும்பி, சிறுபிள்ளைகளைப் போல ஆகாவிட்டால் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க முடியாது." நீங்கள் ஊழியராகவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டீர்கள். நான் இதுவரைக்கும் சொல்லிக் கொண்டுவந்த கிருபையை நினையுங்கள். கிறிஸ்து என்னை இரட்சித்துவிட்டார், அவருடைய கிருபையில் எனக்கும் பங்களித்திருக்கிறார், தனது ராஜ்யத்தின் சேவைக்காக என்னையும் உபயோகிக்கிறார் என்று கூறும் வரைக்கும் ஓயாதிருங்கள். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

*(மார்ச் 12, 1891ஆம் ஆண்டு, மெட்ரோபாலிடன் டாபர்நாகிள், நியுயிங்டன் என்கிற இடத்திலே, வியாழக்கிழமை மாலையிலே, சார்ல்ஸ் ஸ்பர்ஜன் அளித்த தியானத்தின்(2221) சாராம்சம்)*

---

# 3. ராகாபின் விசுவாசம்

*"விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடேகூடச் சேதமாகாதிருந்தாள்" எபி 11:31*

ஐரோப்பாவின் முக்கிய நகரங்களில் நீங்கள் பார்த்தீர்களானால், பலவிதமான வெற்றிவளைவுகளையும், ஜெயஸ்தம்பங்களையும் காண்பீர்கள். அவைகளில் இந்த தேசத்தின் வீரர்களும், ராஜாக்களும், இராணுவத் தலைவர்களும் ஆற்றிய வீரதீரச் செயல்கள் பொறிக்கப்பட்டிருக்கும். அப்படியான ஒன்றில் நீங்கள் நெப்போலியன் போரிட்ட ஆயிரம் யுத்தங்களைக் குறித்த விவரத்தைக் காணலாம். வேறொரு இடத்தில் நெல்சன் அடைந்த வெற்றியானது சித்திரமாகத் தீட்டப்பட்டிருக்கும். அப்படியிருக்கையில் மிகுந்த வல்லமை பொருந்தியதான விசுவாசத்திற்கென ஒரு ஜெயஸ்தம்பம் எழுப்பப்பட வேண்டியது மிகவும் நல்லதும் அவசியமானதுமாகும். அதன் மீது விசுவாச வீரர்களின் மகிமைப் பிரதாபங்களை பொறிக்க வேண்டியது மிகஅவசியமானது. அப்போஸ்தலனாகிய பவுல், அவ்விதமான ஜெயஸ்தம்பத்தை எழுப்புகின்ற பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார். எபிரேயர் 11ஆம் அதிகாரத்தில் பிரம்மாண்டமானதொரு தூணை அவர் நிறுவியிருக்கிறார். அது விசுவாசத்தின் வெற்றிகளைப் பட்டியலிட்டுக் காண்பிக்கிறது. அதில் ஒரு விசுவாச வெற்றியைக் குறித்து ஆரம்பித்து, தொடர்ச்சியாக பல விசுவாச வெற்றிகளைப் பட்டியலிட்டுக் காண்பிக்கிறார். மரணத்தையே வென்றதான ஒரு விசுவாசத்தைக் குறித்து அதில் காண்கிறோம். ஏனோக்கு என்பவர், மனிதர் வழக்கமாகச் செல்லுகின்ற மரணத்தின் வழியாக செல்லாமல், வேறு வழியாக பரலோகத்தை அடைந்ததை அங்கு காண்கிறோம். காலத்தோடு போராடிய ஒரு விசுவாச வெற்றியை இன்னொரு இடத்தில் காண்கிறோம். 120 ஆண்டுகளுக்குப் பின்பாக நடக்கப் போகிற ஒரு சம்பவத்தைக் குறித்து தேவ எச்சரிப்பைப் பெற்று, அதைக் காணாமலேயே அதைக் குறித்த விசுவாசத்தை உடையவராக பேழையைக் கட்டிய நோவாவின் விசுவாசம், காலத்தோடு போராடிய விசுவாசம்! நடக்க முடியாததாக

நினைக்கத்தகும் காரியத்தைக் குறித்து விசுவாசம் பெற்று, அதனை நம்பி காரியத்தை செய்தபடியினாலே அவர் மனிதசிந்தனைகளின் மீது வெற்றி பெற்றார். அத்தோடுகூட அநேக ஆண்டுகளுக்குப் பிற்பாடு நடக்கப்போகிற காரியத்தின்மீது விசுவாசம் வைத்தபடியினாலே காலத்தையுங்கூட வென்றார். இவருடைய விசுவாசமானது காலத்தையும், நடக்கவியலாத காரியங்களையும் வென்றது. வயோதிபத்தை வென்றதான இன்னொரு விசுவாசத்தையும் நாம் இதில் காண்கிறோம். வயது முதிர்ந்த பிராயத்திலே ஆபிரகாம் ஒரு குமாரனைப் பெற்றார். இயற்கையான பாசத்தையும் வெற்றி கொண்டதான ஒரு விசுவாசத்தையும் நாம் இந்தப் பட்டியலில் காண்கிறோம். தேவனிடமிருந்து கட்டளை பிறந்தபடியினாலே, ஆபிரகாம் தனது ஒரே குமாரனென்றும் பாராமல், விசுவாசமுள்ளவராக மலையின் மீது ஏறி, தேவன் நியமித்த ஸ்தலத்திலே தனது குமாரனை பலியிட கத்தியை ஓங்கிய சம்பவமானது பாசத்தையும் வென்ற விசுவாசமாகும். வயோதிப காலத்தின் கடைசிநேர போராட்டங்களுக்கும் துயரங்களுக்கும் மத்தியிலும் செயல்பட்டதான விசுவாசமும் இங்கு பொறிக்கப்பட்டிருக்கிறது - “விசுவாசத்தினாலே யாக்கோபு தன் மரணகாலத்தில் யோசேப்பினுடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்து, தன் கோலின் முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டான்.” ராஜரீக கவர்ச்சிகளை எதிர்த்துப் போராடி வென்றதானதொரு விசுவாசத்தையும் பார்க்கிறோம். “விசுவாசத்தினாலே மோசே . . இனிவரும் பலன்கள்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிகப் பாக்கியமென்று எண்ணினான்” மோசே, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல், துன்பங்களைப் பொறுமையோடே சகித்தவராக, காணமுடியாத தேவன் நேரில் இருப்பதுபோன்ற பாவனையோடு, எகிப்தைவிட்டுப் போனதில் விசுவாசத்தினுடைய உறுதி பிரகாசிக்கிறது. கடல்களைப் பிளந்த விசுவாசத்தை இதில் காண்கிறோம். மதில்களை இடிந்துவிழப் பண்ணின விசுவாசத்தையும் காண்கிறோம். மிகப் பெரிதான வெற்றியை இறுதிக்கட்டத்திற்காக வைத்திருப்பது போல, பாவத்தை வென்றதானதொரு விசுவாசத்தை முடிவில் காண்கிறோம். அநீதியோடு போராடி, வெற்றி சிறந்ததொரு விசுவாசமாக அது காட்சியளிக்கிறது. “விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடேகூட சேதமாகாதிருந்தாள்.” அந்தப் பெண்மணி விருந்தினரை உபசரித்தவள் மாத்திரமல்ல, அவள் ஒரு வேசியுங்கூட. இந்தப் பகுதியை வாசிக்கின்ற அனைவருக்கும் நான் இந்தக் கருத்தை மறைக்காமல்

வலியுறுத்திக் கூறுவேன். அவள் ஒரு பாவியாக இருந்தாள் என்பதை வெளிப்படையாகக் கூறாத எவரையும், இலவசமான கிருபையை மறுதலிக்கிறவர்களாகத்தான் நான் கருதுவேன்.

பாவவாழ்க்கையையும் மேற்கொண்டதான இந்த விசுவாசமானது, மற்ற விசுவாசத்திற்கு சற்றும் குறைவானதல்ல என்று நான் கருதுகிறேன். விசுவாசத்திற்கு சிறந்ததொரு மாதிரியைக் காண்பிக்கும்படி யாராவது என்னிடம் கேட்டால் ராகாபின் விசுவாசத்தை நான் குறிப்பிடுவேன். என்ன! அசுத்தமான பாவகிரியைகளோடு விசுவாசம் போராடியதா? மனித இருதயத்திலிருந்து வெளிப்படும் காமவிகாரங்களோடும்கூட விசுவாசம் போராடி ஜெயிக்கிறதா? விசுவாசமே, உனது பரிசுத்தக் கரங்களால் சிற்றின்ப வெறியரையும், அசுத்தரையும் தொட்டு குணமாக்குவாயா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம், "ஆமாம்" என்று விசுவாசமானது புன்னகையோடு பதிலளிக்கிறது. "ஆமாம், பாவத்தின் இந்த அகோரத்தையுங்கூட நான் சந்திக்கிறேன். அறுவெறுப்பான துன்மார்க்க உளையினின்று நான் இந்தப் பெண்ணை விடுவித்தேன். தந்திரமான வலைகளில் சிக்குண்டிருந்தவளை விடுதலையாக்கினேன். மீறுதலின் தண்டனைகளுக்கு அவளைத் தப்புவித்தேன். ஆம் அவளை காப்பாற்றி, மீட்டுக் கொண்டேன். அவளுக்குப் பரிசுத்தமான இருதயத்தைக் கொடுத்தேன். பரிசுத்தமான அழகை அவளில் புதுப்பித்தேன். ஆகவே, இப்பொழுது அவளுடைய பெயர் என்னுடைய விசுவாச வெற்றிவீரர்களின் பட்டியலில் இடம்பெறுகிறது. முற்றிலும் பாவமான நிலையில் இருந்த பெண்ணாக இருந்தாலும், விசுவாசத்தினால் அவள் மீட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறாள்" என விசுவாசம் பதில் அளிக்கும்.

இந்தப் பெண்மணியின் விசுவாசமானது மிகவும் கவனிக்கத்தக்கது. பல்வேறு வகைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் இவளது விசுவாசமானது ஒன்றிலிருந்து மற்றதிற்கு முன்னேற்றிச் செல்லும் பாதையை உடையதாயிருக்கிறது. நீங்கள் நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக இவளது விசுவாசத்தை பல பாகங்களாக நான் உங்களுக்குப் பிரித்துச் சொல்லப் போகிறேன். ராகாபின் விசுவாசமானது, (அ)இரட்சிக்கும் விசுவாசம் (ஆ)தனித்து நின்ற விசுவாசம் (இ)நிலையான விசுவாசம் (ஈ)தன்னையே வெறுக்கும் விசுவாசம் (உ)கருணையுள்ள விசுவாசம் (ஊ)பரிசுத்தப்படுத்துகின்ற விசுவாசம். முதலாவதான விசுவாசத்தை மாத்திரம் படித்துவிட்டு,

நிறைவுள்ளவர்களாகப் போய்விடாதீர்கள். இவளது விசுவாசத்தின் எல்லாப் பரிமாணங்களையும் அறிந்து கொண்டீர்களானால்தான் அது எவ்வளவு மகத்துவமான விசுவாசம் என்பது உங்களுக்குப் புரியும்.

## அ) இரட்சிக்கும் விசுவாசம்!

இந்த அதிகாரத்தில் காணப்படுகின்ற மற்ற விசுவாச வீரர்கள் எல்லாருமே விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டவர்கள்தான் என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் இந்தப் பெண்மணியைக் குறிப்பிட்டு சொல்லும்போது, தனது விசுவாசத்தினாலே, அவள் சேதமாகாதிருந்தாள் எனக் கூறப்பட்டுள்ளது. மற்றவர்களுக்கோ அவர்களுடைய அழிவைக் குறித்து கூறப்படவில்லை. எரிகோ பட்டணம் பிடிபட்டு எல்லாரும் அழிக்கப்படும் தறுவாயிலே இவள் மாத்திரம் தனது விசுவாசத்தினிமித்தமாக பாதுகாத்து வைக்கப்பட்டாள் என அறிகிறோம். அந்தப் பாதுகாப்பானது தற்காலிகமானதல்ல. பட்டயத்துக்கு விலக்கப்பட்ட வெறும் சரீர பாதுகாப்பு மாத்திரம் அல்ல. அவளுடைய ஆத்துமாவும் நரகத்துக்கு நீங்கலாக விடுவிக்கப்பட்டது. ஓ! விசுவாசந்தான் என்னவொரு மகிமையான காரியம். அது பாதாளத்துக்குப் போகின்ற ஆத்துமாவை விடுவிக்கின்றதே. பாவமானது பொங்கிப் பிரவாகிக்கிற நீர்ச்சுழலைப் போன்றிருக்கிறது. அதில் சிக்கி, அதல பாதாளத்தை நோக்கி அடித்துக் கொண்டு போகின்ற மனிதவர்க்கத்தை தமது கரங்கொண்டு தூக்கியெடுத்துக் காப்பாற்றுவதற்கு தெய்வாதீனமான கரங்களைத் தவிர்த்து வேறு எதுவும் இல்லை. பிரவாகித்து வருகின்ற தேவகோபமானது மிகவும் உக்கிரமானது. ஆத்துமாவை அழிவுக்கு நீங்கலாக்கி விடுவிக்கத் தக்க பாவபரிகாரமும் தெய்வீகமானது. இவை அனைத்தையும் செய்து முடிப்பதற்கு விசுவாசம் ஒரு முக்கிய கருவியாக விளங்குகிறது. பாவச்சுழலில் இருந்து விசுவாசமானது பாவியை விடுவிக்கிறது. பாவச்சுழலில் அடித்துச் செல்லப்பட்டு அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிற பாவியை, பரிசுத்தஆவியின் துணையோடு அது மீட்டுக் கொள்கிறது. ஒரு ஆத்துமா இரட்சிக்கப்படுவது எவ்வளவு பெரிய காரியமாயிருக்கிறது பார்த்தீர்களா? நீங்கள் உங்கள் வாழ்நாளில் யாராவது ஒருவரை மரணத்திலிருந்து காப்பாற்றியிருக்காவிட்டால் அது எவ்வளவு பெரிய காரியமென்று உங்களால் உண்மையாக உணர முடியாது. எரிந்து கொண்டிருக்கிற ஒரு வீட்டினுள்ளே நுழைந்து, உடைந்து கொண்டிருக்கிற மாடிப்படிகளைக் கடந்து, புகையின்

நடுவிலே மூச்சுத் திணறி, மாடி அறைக்குச் சென்று, அங்கே கட்டிலில் படுத்திருக்கின்ற ஒரு குழந்தையை வாரி எடுத்துக் கொண்டு, ஜன்னல் அருகே செய்வதறியாது திகைத்து நிற்கும் ஒரு பெண்ணையும் தோளில் சுமந்து கொண்டு, தன் உயிரையும் பணயம் வைத்து, அவர்களைக் காப்பாற்றியிருக்கின்ற ஒரு இளைஞனிடம் விசாரித்துப் பாருங்கள். சகமனிதர்களை மரணத்தின் விளிம்பிலிருந்து காப்பாற்றுவது எத்தனை பெரிய காரியம் என்பதை அவன் விவரிப்பான். ஆற்றின் நடுவிலே மூழ்கிக் கொண்டிருக்கிற ஒரு மனிதனை காப்பதற்காக, ஒரு நொடியில் ஆற்றில் குதித்து, நீந்தி அவனிடம் சென்று, மூழ்குகின்றவனின் மரணபோராட்டங்களின் மத்தியில் அவனைத் தூக்கியெடுத்து கரை சேர்த்த வாலிபனிடம் விசாரித்துப் பாருங்கள். அவனும் சகமனிதனைக் காப்பாற்றுவது எத்துனை பெரிய காரியம் என்பதை விளக்குவான். ஆனால், ஒரு ஆத்துமாவைக் காப்பது எத்தனை மேலான காரியம் என்பதை யாராலும் கூற முடியாது. அதை சொல்லக்கூடியவர் நமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து மாத்திரமே. ஏனென்றால் அவர் ஒருவர் மாத்திரமே பாவிகளின் ஆத்துமாக்களை காப்பாற்றுகிறவராய் இருக்கிறார். ஒரு ஆத்துமா காப்பாற்றப்படுவது எவ்வளவு விலையுயர்ந்தது என்பதை நீங்கள் அறிந்தால் மாத்திரமே விசுவாசத்தின் மேன்மை உங்களுக்கு விளங்கும். “விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி . . சேதமாகாதிருந்தாள்.” ராகாப் உலகரீதியிலாக காக்கப்பட்டிருந்தாலுங்கூட அவள் சுவிசேஷரீதியாகவும் காக்கப்பட்டாள் என்றுதான் நான் நம்புகிறேன். அவள் வேவுகாரரைத் தன்னுடைய வீட்டிலே ஏற்றுக் கொண்டது, வசனத்தை இருதயத்திலே ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாகத் தென்படுகிறது. சிவப்பு நூலை பலகணியிலே அவள் கட்டித் தொங்கவிட்டிருந்தது அவளுடைய விசுவாசத்தை பறைசாற்றுவதாயிருக்கிறது. மீட்பராகிய இயேசுக்கிறிஸ்துவின் இரத்தத்தை விசுவாசிப்பதை படம்பிடித்துக் காட்டுகிறவிதமாக அந்த சிவப்புநூல் காட்சியளிக்கிறது. இரட்சிப்பு - என்கிற வார்த்தையின் நீள, அகல, ஆழங்களை அளவிடக்கூடியவன் யார்? அவளை பூரண பாதுகாப்பிற்குள் கொண்டுவந்ததான மகத்தான காரியத்தை அந்த விசுவாசமானது நடப்பித்தது. பாவிகளே, நீங்களுங்கூட ஆறுதல் அடையலாம், ராகாபை இரட்சித்த அந்த விசுவாசமானது உங்களையும் இரட்சிக்கும். நீங்களும் ராகாபைப் போன்ற குற்றஉணர்வை உடையவர்களாக இருக்கிறீர்களா? தேவன்

உங்களுக்கும் மனந்திரும்புதலை அருளினாரென்றால் நீங்களும் அவளைப் போன்றே இரட்சிக்கப்படலாம். ஓ, பெண்ணே, உன்னை நீயே அறுவெறுக்கிறாயா? இந்த கூட்டத்தாரிடையே இன்று இருந்து, "ஓ, நான் இவ்விடத்தில் இருப்பதற்கே வெட்கப்படுகிறேன். பரிசுத்தமும் உண்மையும் நிறைந்திருக்கின்ற இந்த ஜனங்களின் மத்தியிலே இருப்பதற்கு எனக்கு எந்தத் தகுதியும் இல்லை" என்று மனம் வருந்துகிறாயா? நீ வெளியில் சென்றுவிடாமல் இங்கே தரித்திருக்கும்படி நான் கேட்டுக் கொள்கிறேன். ஆம், மீண்டுமாக இந்த கூட்டத்தாரின் மத்தியில் வா. இதை உன்னுடைய ஜெபவீடாக ஆக்கிக் கொள். நீ அழையா விருந்தாளி அல்ல. உன்னை நாங்கள் வரவேற்கிறோம். இரக்கத்தின் ஸ்தலத்திலே பிரவேசிப்பதற்கு உனக்கு தெய்வீக உரிமை இருக்கிறது. ஆம், உனக்கு புனிதமான உரிமை இருக்கிறது. ஏனென்றால் இங்கு பாவிகள் வரவேற்கப்படுகிறார்கள். நீயும் அப்படிப்பட்டவர்களில் ஒருவராக இருப்பதால் உனக்கும் வரவேற்பு உண்டு. கிறிஸ்துவை விசுவாசி. நீயும் ராகாபைப் போலவே, கீழ்ப்படியாதவர்களோடேகூட சேதமாகாமல், இரட்சிப்பை அடைவாய்.

இதோ, உங்களுக்கு முன்பாக ஒரு நற்செய்தி வைக்கப்பட்டிருக்கிறது. பாவிகளும், பொல்லாதவர்களும் வந்து பாதுகாப்பாக இருக்கும்படியான சரணாலயம் ஒன்று உங்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அது பாதுகாப்பளிக்கும் சரணாலயம் மாத்திரமல்ல, உங்கள் பாவங்களையும், நோய்களையும், குணப்படுத்துகிறதான ஒரு வைத்தியசாலையுங்கூட. சுவிசேஷத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னதாக இருந்த அவர்களுடைய பழையநிலை இனி நீடிப்பதில்லை. அவர்கள் முற்றிலுமாக குணப்படுத்தப்படுகிறார்கள். "கிறிஸ்துவிடம் வாருங்கள் - பிறகு உங்கள் பாவங்களிலேயே நிலைத்திருங்கள்" என்று கூறி நான் யாருக்கும் அழைப்பு விடுப்பதில்லை. அப்படிக் கூறுவேனேயாகில் அது மிகவும் அபத்தமாயிருக்கும். அப்படி கூறுவது, ஒருவனுக்கு விடுதலையளிப்பதாகக் கூறிவிட்டு அவனை சங்கிலிகளால் பிணைத்து வைத்திருப்பதற்கு சமமாயிருக்கும். கிறிஸ்துவோ பாவியின் பாவங்களை மன்னித்து அவனுக்கு முற்றிலுமாக விடுதலையளிக்கிறவராக இருக்கிறார். மீண்டும் சொல்லுகிறேன். எப்பேர்பட்ட பாவியாக இருந்தாலும் கிறிஸ்துவிடம் வரலாம். பரிசுத்தவான்கள் உரிமையோடு அவரிடம் வருவது போல நீங்களும் வரலாம். எப்பேர்பட்ட பாவத்தையும் மன்னிக்கக்கூடியதான இரத்த

ஊற்றானது வழிந்தோடுகிறது. இயேசுக்கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரம், நிர்வாணிகளுக்காக நெய்யப்பட்டிருக்கிறது. நோயுள்ளவர்களை குணமாக்க கல்வாரியின் தைலம் தயாராக உள்ளது. மரித்தவர்களை உயிர்ப்பிப்பதற்காக ஜீவனானது இவ்வுலகில் பிரவேசித்திருக்கிறது. அழிந்து கொண்டிருக்கிற, குற்றமுள்ள ஆத்துமாக்களே, ராகாபின் விசுவாசத்தை தேவன் உங்களுக்குத் தருவாராக. நீங்களும் இரட்சிப்பை பெற்றுக் கொள்வீர்களாக. அவளோடுகூட சேர்ந்து நீங்களும் பரமராஜ்ஜியத்தில் காணப்படுவீர்களாக. தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் இடைவிடாமல் ஸ்தோத்திரம் செலுத்திக் கொண்டிருக்கின்ற, பரிசுத்தமான வெண்ணுடை அணிந்தவர்களின் மத்தியிலே நீங்களும் காணப்படுவீர்களாக.

## ஆ) தனித்து நின்ற விசுவாசம்

ராகாபின் விசுவாசம் தனித்தபடியான விசுவாசம் என்பதை கவனியுங்கள். எரிகோ பட்டணம் தாக்கப்படப் போகிறது. அந்தப் பட்டணத்திலே பல்வேறு பொருளாதார நிலையிலான மக்களும், வித்தியாசமான குணங்களைக் கொண்டவர்களும் இருந்திருப்பார்கள். அந்தப் பட்டணம் பிடிபட்டால் தாங்களும் அழிந்து போவோம் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கொலை செய்யப்படுவார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் இதில் ஆச்சரியம் என்னவென்றால் அவர்களில் ஒருவராவது தங்களுடைய பாவத்தைக் குறித்து மனம் வருந்தவில்லை. யாருமே இரக்கம் காண்பிக்கும்படி கெஞ்சவுமில்லை. ஆனால் வேசியாக வாழ்ந்த இந்தப் பெண் மாத்திரமே அதைச் செய்தாள். அவள் மாத்திரமே மீட்கப்பட்டாள். ஆயிரக்கணக்கானவர்களின் மத்தியிலே இவள் ஒருவள் மாத்திரமே தனித்தபடியான இரக்கம் பெற்றாள். நாம் மாத்திரம் தனித்தபடியாக விசுவாசியாக இருக்க நேர்ந்தால் அது எவ்வளவு கடினமானது என்பதைக் குறித்து நீங்கள் எப்போதாவது சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? உலகத்தில் எல்லோரும் நம்புவதை நாமும் நம்புவது ஒன்றும் கடினமானதல்ல. ஆனால் யாருமே நம்பாத ஒன்றை நாம் மாத்திரம் தனித்து நம்புவதென்பது அவ்வளவு சுலபமானதல்ல. நீங்கள் நினைக்கிறவிதமாக யாருமே நினைக்காவிட்டால் உங்களுக்கு சிரமம்தான். நீதியை நிலைநிறுத்துவதற்காக ஆயிரக்கணக்கானவர்களை எதிர்த்து, தனித்துப்

போராடுவது கடினமானது. ராகாபின் விசுவாசமும் இப்படிப்பட்டதுதான். ராகாபைப் போல நினைக்கக்கூடியவர்கள் அங்கு ஒருவர்கூட இல்லை. அவளுடைய இருதயத்தின் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு, அவளுடைய விசுவாசத்தை மதிக்கத்தக்கவர்கள் யாருமே அங்கு இல்லை. அந்தப் பட்டணத்தில் அவள் தனித்து நிற்கிறாள். யாவரும் அலட்சியப்படுத்துகிற சத்தியத்தை, தனி ஒருவராக பின்பற்றுவது மிகவும் மகத்தான காரியம். தனித்து நின்று போராடியவர்களைக் குறித்ததான சம்பவங்களை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். உலகம் தங்களைப் பழித்தாலும், வசைபாடினாலும் தங்கள் நிலையில் அசையாமல் உறுதியாக தனித்து நின்று, தங்கள் பலவீனத்தையும் பெலனாக மாற்றிக்கொண்டு, உறுதியாக வாழ்ந்தவர்களை, அவர்கள் வாழ்க்கையில் வெற்றியை அடைந்த பிற்பாடு, அவர்களைப் பழித்த அதே உலகமே புகழ்ந்து போற்றிக் கொண்டாடுவதைப் பார்த்திருக்கிறோம். உலகம் அவர்களுக்கு "மாபெருந்தலைவர்" என்கிற பெயரையும்கூட சூட்டிவிடும். ஆனால் அவர்களுடைய வெற்றி எதில் இருந்தது? புயல் போன்ற எதிர்ப்புகளின் மத்தியிலும் கலங்காது, அமைதியோடு தனித்து நின்று, தமது கொள்கையிலிருந்து பின்வாங்காமல் இருந்ததிலேயே அவர்களின் வெற்றி விளங்கிற்று. அநேகர் வந்து எதிர்த்தாலும் தனித்து நின்று தேவனுக்காக உறுதியோடிருந்ததே விசுவாச வீரர்களின் வெற்றிக்குக் காரணம். நாம் சிறந்த வெற்றி வீரராக விளங்க வேண்டுமானால் நாம் தனித்து நின்று போராட வேண்டும். கிறிஸ்தவர்கள் நீரோட்டத்தை எதிர்த்து நீந்தக்கூடியவர்களாக விளங்க வேண்டும். செத்த மீன்தான் நீரோட்டம் செல்லும் போக்கிலேயே செல்லும். ஆனால் உயிரோடிருக்கிற மீனோ தண்ணீரை எதிர்த்து நீந்திச் செல்லும். உலகப்பிரகாரமான பக்தியையுடையவர்கள், மற்றவர்கள் செய்கிற மாதிரியே செய்து கொண்டு போவார்கள். அது ஒன்றும் பாராட்டத்தக்க காரியமல்ல. தனித்து நின்று செயல்படுவதே சிறந்தது. "நான் ஒருவன் மாத்திரமே மீதியாக இருக்கிறேன். என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்களே" என்று தனித்து நின்ற எலியா தீர்க்கதரிசி கூறினார். தன்னம்பிக்கை உடைய மனிதனுக்கு மற்றவர்களின் துணை அவசியமில்லை. தனித்து நிற்க தைரியமில்லாத மனிதன் நேர்மையான மனிதனல்ல. நாகரீகத்தோடு ஒத்துப் போகவேண்டும் என்பதற்காக உங்களில் அநேகர் சக்திக்கு மீறி பணத்தை செலவழிக்கிறீர்கள். அப்போதுதான் மற்றவர்கள் உங்களை மதிப்பார்கள் என்று நினைக்கிறீர்கள். நாகரீகத்தை மேற்கொள்ள

உங்களுக்குத் தைரியமில்லை. நீங்கள் பழகுகின்ற வட்டாரங்களில் இருக்கின்ற சகமனிதர்களின் கருத்துக்களுக்கு மாறாக எந்தக் கருத்தையும் தெரிவிக்க உங்களுக்கு இஷ்டமில்லை. அதனால் கஷ்டங்களுக்கு ஆளாகிறீர்கள். நாகரீகம் என்கிற விலையுயர்ந்த துணியைக் கொண்டு உங்கள் கண்களை மறைத்துக் கொள்கிறீர்கள். ஆகவே தவறான காரியங்களையும், அது வழக்கத்தில் உள்ளது எனக்கூறிக் கொண்டு பொறுத்துப் போகிறீர்கள். ஆனால் தனித்தன்மையோடிருப்பதே சிறந்தது என்பதை உணர்ந்திருக்கின்ற மனிதன், துணிச்சலோடு தனித்து நிற்பான். அவன் அதற்கு முயற்சி செய்து கொண்டிருப்பான் என நான் கூறவில்லை. அவன் தனித்து நின்றுவிடுவான். ராகாபின் விசுவாசமோ அந்தவிதமான மகிமையின் கிரீடத்தை சூட்டிக் கொண்டிருக்கிறது. உண்மையற்ற மனிதர்களின் மத்தியிலே, பாவியாக இருந்தும், அவள் தனது விசுவாசத்தில் தனித்து நின்றவளாகக் காணப்படுகிறாள்.

ஓ, பாவியே, நீயும் இருதயம் நொறுங்குண்டவனாக இருந்தால், தேவன் ஏன் உனக்கும் அவ்விதமான விசுவாசத்தை அருளிச் செய்யமாட்டார்? ஒருவேளை நீ, கர்த்தருடைய ஓய்வுநாளை மதிக்காதவர்களின் வீட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கலாம். பக்தியற்றவர்களோடு வசித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் உன்னுடைய இருதயத்தில் கிருபையானது இடைப்படுமானால், எது சரியோ அதையே நீ செய்வாய். கடவுள் நம்பிக்கையற்றவர்களின் மத்தியிலே நீ ஒருவேளை இருக்கலாம். உன்னுடைய மனசாட்சியின் காரணமாக நீ அவர்களுக்கு உபதேசித்தால், அவர்கள் உன் பேச்சைக் கேட்டு சீறுவார்கள். நீ அவர்களை விட்டு விலகினாலும் அவர்கள் உன்னைத் துன்பப்படுத்தலாம். போய் அவர்களிடம் தைரியமாகப் பேசுவாயா? உன்னால் அதைச் செய்ய முடியுமா என்று பார். நீ மனிதர்களுக்கு அஞ்சுவாயானால் நீ கண்ணியில் விழுவாய். அது உனக்குத் துயரத்தைக் கொண்டுவருவது மாத்திரமல்லாமல், உன்னை பாவத்துக்கும் ஆளாக்குகிறது. எப்பேர்பட்ட மிகக்கொடூரமான பாவியுங்கூட தைரியமுள்ள பரிசுத்தவானாகக்கூடும் என்பதை நினைவில் வையுங்கள். சாத்தானின் சேனையில் இருந்த மகா பொல்லாதவனான மனுஷனுங்கூட, அவனது மனமாற்றத்திற்குப் பிறகு, இயேசுவுக்கு உண்மையான வீரனாக ஜொலிக்க முடியும். பயங்கரமான பாவங்களிலிருந்துங்கூட கிருபையானது பரிபூரண விடுதலையைத் தருவதாயிருக்கிறது. கேளுங்கள், அப்பொழுது தேவன் உங்களுக்கும் அப்படிப்பட்ட உயர்ந்த, தனித்துவம் வாய்ந்த விசுவாசத்தைத்

தந்தருளுவார்.

## இ) நிலையான விசுவாசம்

இந்தப் பெண்மணியின் விசுவாசமானது பிரச்சனைகளின் மத்தியிலும் அசையாமல் உறுதியாக நின்ற விசுவாசம். ஒருமுறை ஒரு சபைப் போதகரிடம் அங்கத்தினர் ஒருவர் கூறினார்: "ஐயா, வெகு காலமாக மழை இல்லாமல் வறட்சி நிலவுகிறது. மழை வரும்படியாக வேண்டிக் கொள்ளுங்கள்". அதற்குப் போதகர், "சரி, வேண்டிக் கொள்கிறேன். ஆனால் அதினால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. இப்போதுதான் காற்று காலமாயிருக்கிறதே" என்று பதில் கூறினாராம். இந்த மாதிரியான விசுவாசத்தை உடையவர்களாகத்தான் அநேகர் இருக்கிறார்கள். நடக்கக்கூடிய வாய்ப்பு தென்பட்டால் மாத்திரமே நம்புகிறவர்களாக மனிதர் இருக்கிறார்கள். தேவனின் வாக்குத்தத்தமும், நடைமுறை சூழலும் ஒன்றோடொன்று ஒத்துப் போகாது என்பது போலத் தோன்றினால், அவர்கள் உடனே வாக்குத்தத்தத்தை விசுவாசிப்பதை விட்டுவிட்டு, சூழ்நிலைக்கேற்றாற்போலத் தங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்ளுகிறார்கள். "இப்படித்தான் நடக்கும்போலத் தோன்றுகிறது. ஆகவே நான் அதை நம்புவேன்" என்கிறவர்களாயிருக்கிறார்கள். அது, காணாமல் விசுவாசிப்பதல்ல, அது கண்டு விசுவாசிப்பது. உண்மையான விசுவாசம் என்ன கூறுமென்றால், "நடப்பதற்கான வாய்ப்பே இருப்பது போலத் தோன்றவில்லை. என்றாலும் நான் விசுவாசிப்பேன்". இதுதான் உண்மையானவிசுவாசம்.மலைகள்இருளில்மறைந்திருந்துபார்வைக்குத் தென்படாவிட்டாலும் அதை பகலில் பார்ப்பது போல நினைப்பதே உண்மையான விசுவாசம். மேகம் மறைத்தாலும் ஊடுருவிப் பார்க்கக் கூடியது உண்மையான விசுவாசம். கண்களால் கண்டு விசுவாசிப்பது விசுவாசமல்ல, விசுவாசக் கண்களால் சகலத்தையும் உணர்ந்து விசுவாசிப்பதே மெய்யான விசுவாசம். "நான் அவரைக் கண்களால் காணாவிட்டாலும் அவரில் நம்பிக்கை கொள்ளுவேன். கடினமான பாறையில் நடப்பது போல கடல் மீது நடப்பேன், பயங்கரமான புயலின் நடுவேயும், வெயிற்காலத்தில் நடப்பது போல நடப்பேன். கொந்தளித்து, சீறி எழும்புகின்ற கடலின் மத்தியிலும், என் படுக்கையில் படுத்திருப்பது போன்ற அமைதியோடு படுத்திருப்பேன்" என்று மெய்யான விசுவாசம் கூறும். ராகாபின் விசுவாசம் மிகவும் சரியான விசுவாசமாக இருந்தது.

ஏனென்றால் அது கடைசி வரைக்கும் உறுதியாகவும் நிரந்தரமாகவும் காணப்பட்டதே.

அவிசுவாசம் வந்து ராகாபோடே உரையாடியது போன்ற ஒரு சிறு கற்பனை பண்ணிப் பார்த்தேன். "ராகாபே, இஸ்ரவேலர் இங்கு வருவார்கள் என நீ நினைத்துக் கொண்டிருப்பது எவ்வளவு முட்டாள்தனமாயிருக்கிறது? அவர்கள் யோர்தானுக்கு அப்புறத்திலிருக்கிறார்களே. அதைக் கடந்து வருவதற்கு ஒரு பாலமும் இல்லையே. எப்படி அவர்கள் வருவார்கள் என நினைத்துக் கொண்டிருக்கிறாய்? இங்கு வருவதற்கு முன்பாக அவர்கள் பல பட்டணங்களைப் பிடிக்க வேண்டும். அதிலும் கானானியர் மிகுந்த பலமுள்ளவர்கள். இஸ்ரவேலரோ வேற்று நாட்டில் அடிமைகளாக இருந்தவர்கள்தானே. போர் செய்யும் திறமை அவர்களுக்கு இல்லை. கானானியர் அவர்களைக் கண்டதுண்டமாக்கி விடுவார்கள். அத்தோடு அவர்களுக்கு முடிவு வந்துவிடும். ஆகவே நீ அந்த வேவுகாரர்களுக்கு அடைக்கலம் கொடுக்காதே. நடக்கமுடியாத ஒரு காரியத்துக்காக நீ ஏன் உன் வாழ்க்கையை அழித்துக்கொள்ள வேண்டும்?" என்று அவிசுவாசம் ராகாபைக் கேட்கிறது. "இல்லையில்லை. என்னுடைய விசுவாசம் யோர்தானுக்கும் முந்தைய நாட்களைச் சார்ந்தது. அப்படி இல்லாவிட்டால் என் விசுவாசம் வறண்டுபோன விசுவாசமாக அல்லவா இருக்கும்!" என ராகாப் பதில் கூறுகிறாள். உண்மையில் பார்த்தால், அவர்கள் யோர்தானை கடந்து சீக்கிரமாக வந்துவிட்டார்கள். அதனால் ராகாபின் விசுவாசம் இன்னும் வலுப்பெறுகிறது. "ஆ, இதோ, நெருங்கி வந்துவிட்டார்களே! பாவிகளே, நீங்கள் இப்போதாவது அவர்களிடம் கருணை காட்டும்படி வேண்டிக்கொள்ள மாட்டீர்களா?" என மனதுக்குள் நினைக்கிறாள். அவளது அவிசுவாச அண்டைவீட்டாரிடமிருந்து வரும் பதில் என்னவாக இருக்கக்கூடும்? "அவசியமில்லை. எரிகோவின் மதில்கள் மிகவும் உறுதியானவை. பலவீனர்களான எதிரிகளால் அதை ஒன்றும் தகர்க்க முடியாது. பார். அந்த வீரர்கள் வெளியே வந்து என்ன செய்கிறார்கள்? தங்கள் கொம்புகளை எடுத்து எக்காள சத்தம் இடுகிறார்கள். இன்னுமா நீ நம்பிக் கொண்டிருக்கிறாய்? அவர்கள் செய்வது முட்டாள்தனமாயில்லை?" ஜனங்கள் பட்டணத்தை சுற்றிச் சுற்றி வருகிறார்கள். அவர்கள் ஒரு வார்த்தையும் பேசுவதில்லை. முடிவில் சில ஆசாரியர்கள் எக்காளத்தை தொனிக்கச் செய்கிறார்கள். "இப்படி எங்காவது கேள்விப்பட்டதுண்டா? வெறும் எக்காள சத்தத்தினால்

ஒரு பட்டணத்தைப் பிடிக்க முடியுமா?" முதலாம் நாள் இப்படி நடந்தது. ஒருவேளை அடுத்த நாளில் அவர்கள் பெரிய ஏணிகளைக் கொண்டுவந்து, அதில் ஏறி பட்டணத்தைப் பிடித்துக் கொள்வார்கள் என்று ராகாப் நினைத்திருக்கலாம். ஆனால் அடுத்த நாளும் பட்டணத்தை சுற்றி வருதலும், எக்காளம் ஊதுதலும் மாத்திரமே நடந்தது. இப்படியாக ஏழு நாட்கள் சென்றது. அந்த நாட்கள் எல்லாம் அந்தப் பெண்மணி தனது ஜன்னலில் சிவப்பு நூலைக் கட்டியே வைத்திருந்தாள். தன் வீட்டிலே தனது தாயையும், தகப்பனையும், சகோதர, சகோதரிகளையும் கூட்டிச் சேர்த்து அவர்களை வெளியே விடாமல் பாதுகாப்பாக வைத்திருந்தாள். ஏழாம் நாளிலே இஸ்ரவேல் ஜனங்கள் பலத்த முழக்கமாக சத்தமிடுகையில் எரிகோவின் அலங்கத்தின் மதில்கள் இடிந்து விழுந்தன. பெண்களுக்கே இயல்பாக இருக்கக்கூடிய பயந்த சுபாவத்தை அவளுடைய விசுவாசம் மேற்கொண்டது. எரிகோவின் அலங்கம் இடிந்து விழுந்தபோதிலுங்கூட அவள் பயமில்லாமல் அமர்ந்திருந்தாள். அவள் வீடு அலங்கத்தின் மதிலின் மீதிருந்தது. அலங்கம் இடிந்து பெரிய சேதம் ஏற்பட்டபோதிலுங்கூட அவளுடைய வீடு ஒரு சேதமும் இல்லாமல் தனித்து நின்றது. அவளும் அவளுடைய வீட்டாரும் பத்திரமாகக் காக்கப்பட்டார்கள். சேற்றிலே செந்தாமரை முளைக்குமென்று நீங்கள் எதிர்பார்ப்பீர்களா? ராகாபைப் போன்ற பாவியான ஒரு இருதயத்திலிருந்துங்கூட இப்படிப்பட்ட திடவிசுவாசம் தோன்றக்கூடும் எனக் கனவிலும் நினைப்பீர்களா? ஆம், இங்கே பிதாதாமே விதைப்பின் எஜமானனாயிருக்கிறார். "என்னுடைய பிதா விதைக்கிறவர்" என்று இயேசுக்கிறிஸ்து குறிப்பிட்டிருக்கிறார். எந்த விவசாயியும் நல்ல நிலத்திலிருந்து நல்ல விளைச்சலைப் பெறுவான். ஆனால், தேவனோ பாறையான இடத்திலும் கேதுருமரங்களை விளையச் செய்யக்கூடியவர். எதிர்பாராத இடங்களிலிருந்தும் மிகப் பெரிதான விசுவாசத்தை எழும்பச் செய்யக்கூடியவர். அவருடைய பெரிதான கிருபைக்கே மகிமை உண்டாவதாக. பாவிகளில் பிரதான பாவியுங்கூட மிகப்பெரிய விசுவாசியாக ஆகலாம். ஆகவே, பாவிகளே, சந்தோஷப்படுங்கள்! கிறிஸ்து உங்களை மனந்திரும்பச் செய்வாரானால், அவருடைய குடும்பத்தில் நீர் கீழானவராயிருப்பதில்லை. விசுவாச வீரர்களின் பட்டியலில் ஒருவேளை உங்கள் பெயரும் இடம்பெறலாம். விசுவாசத்தின் வல்லமையைப் பறைசாற்றுகிறவராக நீங்கள் ஒருவேளை ஆகக்கூடும்.

## ஈ) தன்னைத்தானே வெறுக்கும் விசுவாசம்

இந்தப் பெண்மணியின் விசுவாசமானது தன்னையே வெறுத்த விசுவாசமாகும். அந்த வேவுகாரர்களுக்காகத் தன்னுடைய உயிரையும் பணயம் வைக்கத் துணிந்தாள். அவர்கள் தனது வீட்டில் இருப்பது தெரிந்தால் தன் உயிருக்கு ஆபத்து என்பது அவளுக்குத் தெரியும். வேவுகாரரைப் பாதுகாப்பது தேசவிரோதச் செயல். அவர்களைப் பாதுகாக்கக்கூடிய அளவுக்கு அவளுக்கு பெலன் இல்லாவிட்டாலுங்கூட, தன் உயிரே போனாலும் பரவாயில்லை என்கிற தைரியத்தோடு அவர்களை மறைத்து வைத்ததில் அவளுடைய பெலன் வெளிப்படையாகத் தெரிகிறது. நம்மையே வெறுப்பதென்பது சாதாரண காரியமல்ல. ஒருமுறை ஒருவர் சொன்னாராம்: "நான் மிகவும் நல்லதொரு மதத்தில் இருக்கிறேன். ஏனென்றால் இங்குதான் எனக்கு செலவே கிடையாது. ஒரு பைசாகூட நான் செலவழிக்காவிட்டாலும் என்னை எல்லாரும் பக்தியுள்ளவனாகத்தான் காண்கிறார்கள்". அதைக் கேட்ட மற்றொருவர், "உம்முடைய கஞ்சத்தனமான ஆத்துமா, இயேசுக் கிறிஸ்துவின் அளவிட முடியாத இரக்கத்தினால் மீட்கப்பட்டிருந்தால், நீர் பணத்தைக் குறித்துப் பேசவே மாட்டீர்" என்று கூறினாராம். தன் செல்வத்தைக்கூட வெறுக்காதவனாயிருக்கிற அந்த மனிதனில் விசுவாசமே இல்லை என்றுதான் நான் கூறுவேன். கிறிஸ்துவுக்காக நாம் எதையாவது தராவிட்டால், எவ்விதத்திலாவது உழைக்காவிட்டால், கிறிஸ்துவுக்காக நம்மையே வெறுக்காவிட்டால் அடிப்படையிலேயே நம்மில் கோளாறு இருப்பதாகத்தான் நினைக்க வேண்டும். உங்களில் பலர் மாய்மாலக்காரர்களாயிருக்கிறீர்கள். நீங்கள், "இயேசுவுக்காய் ஒப்புவித்தேன், யாவையும் தாராளமாய்" என்று பாடல் பாடுகிறீர்கள். ஆனாலும் நீங்கள் அவருக்காக ஒன்றும் செய்வதில்லை. இதை நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். யாவையும் என்ன, பாதியைக்கூட நீங்கள் தருவதில்லை. ஆயிரத்தில் ஒரு பங்கைக்கூட அவருக்காக செலவிடுவதில்லை என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும். நீங்கள் ஒரு வருடத்தில் ஆயிரக்கணக்கில் சம்பாதித்தாலும் உங்களையே ஏழை என்று சொல்லிக்கொள்கிறீர்கள். ஆகவே, "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்" என்று சொல்லி, உங்களையே ஏழையாக பாவித்து அதை நீங்களே வைத்துக் கொள்கிறீர்கள். நீங்கள்

உங்கள் பக்தியை எப்படித்தான் நியாயப்படுத்திக் கொள்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் ராகாப் என்ன நினைக்கிறாள்: "இந்த வேவுகாரரினிமித்தமாக நான் இறக்க நேர்ந்தாலும் நான் அதற்குத் தயார். இப்போதே எனக்கு கெட்ட பெயர்தான் இருக்கிறது. இதனிமித்தமாக என் பெயர் இன்னும் கெட்டுப் போனாலும் பரவாயில்லை. தேசத்துரோகியாக என்னைக் கைது செய்தார்களானாலும் பரவாயில்லை. என்னுடைய தேசத்தைக் காட்டிக் கொடுத்ததற்காக எனக்கு என்ன ஆபத்து நேரிட்டாலும் பரவாயில்லை. தேவனுடைய சித்தம் மாத்திரமே இதில் நடைபெற வேண்டும். அதற்காக நான் ஆபத்துக்களையும்கூட சந்திப்பேன்" என்கிறாள். சகோதரர்களே, சகோதரிகளே, நீங்கள் உங்களையே வெறுக்காவிட்டால் உங்கள் விசுவாசத்தைக் குறித்து சந்தேகப்படுங்கள். விசுவாசமும், தன்னைத்தானை வெறுத்தலும் ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் போன்றது. அவை ஒன்றாகப் பிறந்தவை. அவை ஒன்றாகவே வாழவேண்டும். இரண்டிற்கும் போஷாக்கைத் தருவது ஒரே உணவுதான். பாவியான இந்தப் பெண்மணி தன்னையே வெறுத்தவளாகக் காணப்படுகிறாள். விலையேறப்பெற்ற பரிமள தைலத்தை உடைத்து இயேசுவின் சிரசின்மேல் வார்த்த பாவியான மற்றொரு பெண்ணைப் போலவே இவளும் ஜீவனைப் பெற்றுக் கொண்டாள்.

## உ) கருணையுள்ள விசுவாசம்

இந்தப் பெண்மணியின் விசுவாசமானது இரக்கம் நிறைந்த விசுவாசம். அவள் தனக்காக மாத்திரம் விசுவாசிக்கிறவளாக இல்லை. தனது உறவினர்களும் தேவனின் கருணையைப் பெற வேண்டுமென வாஞ்சிக்கிறாள். "நான் இரட்சிக்கப்பட வேண்டுமென ஆசைப்படுகிறேன். அந்த ஆசையே எனது தகப்பனும், தாயும், சகோதரர்களும், சகோதரிகளும்கூட காக்கப்பட வேண்டுமென்பதற்குத் தூண்டுகோலாக இருக்கிறது" என்று அவள் நினைக்கிறாள். எனக்கு ஒரு மனிதனைத் தெரியும். அவன் ஓய்வுநாள்தோறும் சுவிசேஷ செய்தியைக் கேட்க 7 மைல்கள் நடந்தே ஆலயத்துக்குப் போய்வருவான். ஒருமுறை ஆலயத்தில் சகமனிதனொருவன், "உன்னுடைய மனைவி எங்கே?" என்று கேட்டான். "மனைவி வீட்டில் இருக்கிறாள். அவள் எங்கும் போவதில்லை" என இவன் கூறினான். கேள்வி கேட்டவன் ஆச்சரியத்தோடு, "என்ன? நீ உன் மனைவி,

பிள்ளைகளை சுவிசேஷம் கேட்பதற்கு அழைத்து வருவதில்லையா? அவர்களுடைய ஆத்துமாவைக் குறித்து உனக்கு அக்கறை இல்லையா? நீ உன்னை தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயே. ஆனால் அதற்குரிய அடையாளம் உன்னில் காணப்படவில்லையே. நீ ஆயக்காரனைக் காட்டிலும் மிகவும் மோசமானவனாகக் காணப்படுகிறாயே. உன்னுடைய சொந்த வீட்டாரைக் குறித்துகூட நீ கவலைப்படுவதில்லையே. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் தங்கள் சகமனிதர்களின் ஆத்துமாவைக் குறித்து கவலைப்படுவார்களே. ஆனால், உன்னில் அந்த குணம் காணப்படவில்லையே. ஆகவே உனது ஆத்தும நிலையைக் குறித்தும் சந்தேகமாகத்தான் இருக்கிறது" என்று கூறினாராம். நம்முடைய விசுவாசம் உண்மையானதாக இருந்ததானால் நாம் மற்றவர்களையும் அந்த விசுவாசத்திற்குள் அழைத்துவரப் பிரயாசைப்படுவோம். நாம் நம்புகிற எந்த விஷயத்தையும் மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்வதுதானே மனித இயல்பு!

சரியான விசுவாசத்திற்குள் நமக்கு அருமையானவர்களைக் கொண்டுவர வேண்டும் என நினைப்பதே கிறிஸ்தவ ஆவியாகும். அவ்வித குணம் நம்மில் ஏற்பட வேண்டுமென நாம் வாஞ்சிக்க வேண்டும். ஒருவன், "நான் சில காரியங்களை நம்புகிறேன். ஆனால் அதை மற்றவர்களும் நம்ப வேண்டுமென நான் எதிர்பார்க்க மாட்டேன்" என்று கூறுவானாகில் அவன் பொய்யின் ஆவியை உடையவன். அவனே தான் நம்புகிற காரியத்தை உண்மையாக நம்பவில்லை. ஏனென்றால் ஒருவன் ஒரு விஷயத்தைத் தீவிரமாக நம்பினால் அவன் அதை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளத்தான் விரும்புவான். அதிலும் இரட்சிப்பின் விலைமதிப்பை அவன் உண்மையாகவே உணருவானாகில், தனக்கு அருமையானவர்களும் அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென அவன் அதிக அக்கறை செலுத்துவான். விட்ஃபீல்ட் என்கிற பிரசித்திபெற்ற பிரசங்கி சொன்னார்: "நான் இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டவுடனே எனக்கு என்ன தோன்றியது தெரியுமா? எனக்குத் தெரிந்த யாவரும் அந்த இரட்சிப்பை அடைவதற்கு நான் ஒரு கருவியாக இருக்க வேண்டுமென மிகவும் ஆசைப்பட்டேன். என்னோடுகூட சேர்ந்து சீட்டு விளையாடிய என்னுடைய நண்பர்கள், யாருடன் இணைந்து நான் பாவவாழ்க்கையில் ஈடுபட்டிருந்தேனோ அவர்கள், என்னோடு சேர்ந்து மீறுதலுக்குட்பட்டிருந்தவர்கள்

ஆகியோர் அனைவரும் நான் அடைந்த இரட்சிப்பின் இன்பத்தைப் பெறவேண்டுமென விரும்பினேன். முதலாவதாக நான் செய்தது, அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று அவர்களை சந்தித்தேன். அவர்களும் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள நான் என்ன செய்யலாம் என்று பார்த்தேன். அவர்களில் பெரும்பாலானோரை என் இரட்சகரிடம் அழைத்து வந்த சந்தோஷத்தை நான் அடையும் வரைக்கும் என்னால் ஓய்ந்திருக்கமுடியவில்லை". இதுதான் ஆவியின் முதற்பலன். அது, புதிதாகப் பிறந்த கிறிஸ்தவனின் இயல்பு. அவன், தான் உணரும்விதமாகவே மற்றவர்களும் உணரவேண்டும் என்கிற ஆர்வமுடையவனாயிருப்பான். சென்ற வாரத்திலே எனக்கு ஒருவர் கடிதம் எழுதியிருந்தார்: "என்னோடு வேலை பார்க்கிற சகஊழியரும் இரட்சிக்கப்படவேண்டுமெனநான்விரும்புகிறேன்.அதற்காகஜெபித்தும் வருகிறேன். ஆனால் இதுவரை ஒரு மாற்றமும் ஏற்படவில்லை" என எழுதியிருந்தார். இந்த மனிதனின் பக்தியை பெரிதாக எண்ணிக் கொள்ளாதேயுங்கள். நாம் ருசித்ததை மற்றவர்களும் ருசிக்கும்படியாக அவர்களுக்கு நாம் உணர்த்தாவிட்டால், அதற்காக செயல்படாவிட்டால் நாம் மனிதாபிமானமற்ற மாய்மாலக்காரர்களாக இருப்போம். அநேகர் அப்படித்தான் இருக்கிறார்கள் என்று நான் எண்ணுகிறேன். ஆனால் ராகாபின் விசுவாசமோ மிகவும் உறுதியானதாக இருந்தபடியால் அவளோடுகூட அவள் வீட்டார் அனைவரும் பாதுகாக்கப்பட்டார்கள். இதோ, இதைக் கேட்டுக் கொண்டிருக்கிற இளம் வாலிபப் பெண்ணே, உனக்கு ஒரு தகப்பன் இருக்கிறார் அல்லவா? அவர் இயேசுக்கிறிஸ்துவை வெறுக்கிறார். அவருக்காக நீ ஜெபம் பண்ணு. தாய்மார்களே, உங்கள் பிள்ளைகள் இயேசுக்கிறிஸ்துவை பரிகாசம் பண்ணுகிறார்கள். அவர்களுக்காகக் கதறி கண்ணீரோடு ஜெபம் பண்ணுங்கள். ஓ! என்னைப் போன்ற வாலிபர்களே, நமது பெற்றோர் நமக்காக எவ்வளவு தூரம் கதறி ஜெபித்திருக்கிறார்கள் என்பதைக் குறித்து நமக்கு கொஞ்சம்தான் தெரியும். நாம் அவர்களுக்கு எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோம்! எனக்கு ஒரு நல்ல ஜெபிக்கும் தாயைக் கொடுத்ததற்காக நான் தேவனுக்கு செலுத்தும் ஸ்தோத்திரங்கள் சற்றும் போதாது. ஆனால், அந்த சிறுபிராயத்திலே நான் அதை அறியாதவனாயிருந்தேன். அதை நான் தொந்தரவாகக்கூட நினைத்ததுண்டு. "கர்த்தாவே, எனது மகன் சார்லஸை இரட்சியும்" என்று என் தாய் அழுது ஜெபித்த சமயங்களில் என்னால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் போகும். வேறு

யாராவது அப்படி எனக்காக ஜெபித்திருந்தால் நான் அதைப் பெரிதாக எடுத்துக் கொண்டிருந்திருக்க மாட்டேன். அந்நேரங்களில் நானும் என் தாயோடுகூட சேர்ந்து உணர்ச்சிவசப்படுவதைத் தவிர்க்க இயலாது. அத்தகைய உணர்வுபூர்வமான ஜெபத்திற்கு எதிர்த்து நிற்க இயலாது. ஓ! இதைக் கேட்கிற இளைஞனே, இதோ உன் தாய் மரணப்படுக்கையில் இருக்கிறாள். நீ இயேசுக்கிறிஸ்துவை வெறுத்து, அவமதிப்பதே அவளுடைய மரணப்படுக்கையை இன்னும் கசப்பானதாக ஆக்குகிறது. தாயின் உணர்வுகளை மதிக்காத மகனுடைய செய்கை மிகவும் கேடான அவபக்தியாயிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் ஒருவரும் இங்கே இருக்க மாட்டீர்கள் என்று கருதுகிறேன். பக்தியுள்ள தாய் தகப்பன்மாரால் வளர்க்கப்பட்ட பாக்கியமுள்ளவர்கள் யாரேனும் இங்கே இருப்பீர்களானால் இந்த எச்சரிப்பைக் கவனத்தில் கொள்ளுங்கள் - தாய் ஜெபித்தும் குணப்படாதவர்களின் அழிவு மிகவும் பயங்கரமானது. தாயின் ஜெபம் ஒருவனை கிறிஸ்துவிடம் கொண்டுவராவிட்டால், நரகத்தில் அவன் நிலமை மிகவும் மோசமாக இருக்கும். எரிகிற தீயின் நடுவே சொட்டு சொட்டாக தலையின் மீது எண்ணெய் ஊற்றப்பட்டவிதமாக அது இருக்கும். தாயின் ஜெபத்தை அவமதித்து, அழிவை நோக்கி விரைந்து ஓடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்!

அதோ, அங்கே ஒரு வயதான பெண்ணின் கண்களில் கண்ணீர்! அவளுக்கும் குமாரர்கள் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்களை நினைத்து அழுகிறாள். சென்ற வாரம் பிரசங்கத்திற்குப் பிறகு ஒரு சிறு சம்பவம் நிகழ்ந்தது. ஒரு சிறுவனை அவனுடைய தகப்பனார் கேட்கிறார்: “அப்பா உன்னை ஏன் நேசிக்கிறேன் தெரியுமா?” என்று. அதற்கு அந்த சிறுவன், “நான் நல்ல பையனாக இருப்பதினால்தான்” என பதில் கூறினான். “ஆம், நீ நல்ல பையனாக இல்லாவிட்டால் அப்பா உன்னை நேசிக்க மாட்டேன்” என்று அந்தத் தகப்பன் பதில் அளித்தார். நான் அந்தத் தகப்பனிடம் கூறினேன், “இல்லை அவன் கெட்ட பையனாக இருந்தாலும் நீங்கள் அவனை நேசிக்கத்தான் செய்வீர்கள்” என்று. அவர் அதை ஒத்துக் கொண்டார். உறவுகளின் நேசம் அவ்வளவு வலியது. இன்னொரு குடும்பத்தில் அந்தத் தாய் தன் மகன் மீது அவ்வளவு பாசம் வைத்திருப்பதைக் காண்கிறேன். அவள் எண்ணம் முழுவதும் மகன் மீதுதான். இளைஞர்களே, இப்படிப்பட்டதான அன்பை உங்களால் உதாசீனப்படுத்த முடியுமா? இத்தகைய அன்பை நீங்கள் உதைத்துத் தள்ளினாலும் அது உங்களுக்கு எதிராக ஒரு

தீமையும் செய்யாது. உங்களை இன்னும் அதிகமாக நேசிக்கும். அதோ, கூட்டத்திலே அங்கே ஒரு பெண் அழுகிறாள். அவள் இறந்து போன தன் தாயை நினைக்கிறாள். இவளோ ஒரு கொடூரமான மனிதனைக் கணவனாக அடைந்து, அவனும் இறந்துபோக இப்போது விதவையாக இருக்கிறாள். அவள் தனது இளம்பிராயத்தை நினைத்துப் பார்க்கிறாள். தன் தாயின் குடும்பத்திலே இருக்கும்போது, அந்தப் பெரிய வேதாகமத்தை எடுத்து வைத்துக் கொண்டு, எல்லோரும் சுற்றிலும் அமர்ந்து படித்ததை நினைக்கிறாள். அதன் பிறகு, "பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே!" என்று ஜெபித்ததையும் நினைவுகூர்கிறாள். இப்போது ஒருவேளை தேவன் அவளுடைய இருதயத்தில் கிரியை செய்ய ஆரம்பிக்கிறார். இப்போது 70 வயது நிரம்பிய போதிலும் தனது இரட்சகரில் அன்புகூர ஆரம்பிக்கிறாள். அவள் வாழ்நாளின் இந்தக் கடைசி கட்டத்தில் அவளுக்கு ஒரு புதியவாழ்க்கை ஆரம்பமாகிறது. இதுவே அவள் வாழ்நாளின் மிகச் சிறந்த காலமாக இருக்கப் போகிறது. சரியான விசுவாசம், குடும்பங்களிலுள்ளவர்களின் மீதும் இரக்கம் காண்பித்து, அவர்களையும் தேவனுக்குள் அழைத்து வரும் கருவியாக செயல்படும்.

### ஊ) பரிசுத்தப்படுத்துகின்ற விசுவாசம்

ராகாபின் விசுவாசம் பரிசுத்தப்படுத்துகின்ற விசுவாசம். ராகாப் விசுவாசத்தைப் பெற்றுக்கொண்டபின் தொடர்ந்து வேசியாக இருந்தாளா? இல்லை. அந்த வேவுகாரர்கள் அவள் வீட்டுக்குச் சென்றபோதுகூட அவள் வேசியாக இருந்திருக்க மாட்டாள் என்றுதான் நான் நம்புகிறேன். ஆனால் அந்த கெட்டபெயர் அவளோடு ஒட்டிக் கொண்டிருந்தது. அதன் பிறகு அவள் நிச்சயமாக வேசியாக இல்லை. ஏனென்றால் யூதா கோத்திரத்து இளவரசனாகிய சல்மோன் அவளைத் திருமணம் செய்து கொண்டான். அவளுடைய பெயரும் இயேசுக்கிறிஸ்துவின் வம்சவரலாற்றில் இடம்பெற்றிருக்கிறது. அதற்குப் பிற்பாடு அவள் ஒரு பக்தியுள்ள பெண்மணியாக வாழ்ந்தது தெளிவாகத் தெரிகிறது. உங்களுக்கும் உயிருள்ள விசுவாசம் இருக்குமானால் அது உங்களை பரிசுத்தத்தில் நடத்தும். ஆனால், உங்களுக்குள் ஒருவேளை செத்த விசுவாசம் இருக்குமானால், அது உங்கள் ஆத்துமாவை அழித்துவிடும். ஒரு குடிகாரன் சொல்லுகிறான், "ஆம் போதகரே நான் சுவிசேஷத்தை

மிகவும் நேசிக்கிறேன். இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன்" என்று. ஆனால் இந்தக் கூட்டம் முடிந்தவுடனே அவன் சாராயக்கடைக்குச் சென்று குடிபோதையில் ஆழப்போகிறான். இந்தவிதமாக வெறும் வாய்வார்த்தைகளால் கிறிஸ்துவை விசுவாசிப்பதால் எந்தவிதமான பயனும் இல்லை. “போதகரே நீர் சொல்வது மிகவும் சரிதான்" என்று சொல்லுகிற வேறொருவன், இந்தக் கூட்டம் முடிந்ததும் வெளியேபோய் கீழ்த்தரமான வார்த்தைகளைப் பேசப் போகிறான். காமவிகாரமான வார்த்தைகளால்கூடப் பேசி, தான் முன்னிருந்த பாவநிலைமையிலேயே இருக்கப் போகிறான். இவனும் கிறிஸ்துவை விசுவாசிப்பதாகச் சொல்வது தவறு. மனிதனின் ஆத்துமாவை இரட்சிக்கிறதான உண்மையான விசுவாசம் ஒருவனைப் பரிசுத்தப்படுத்தும். “கர்த்தாவே நீர் என்னுடைய பாவங்களை மன்னித்திருக்கிறீர். நான் இனிப் பாவம் செய்ய மாட்டேன். நீர் என்மீது மிகுந்த இரக்கம் பாராட்டியிருக்கிறீர். நான் என் குற்றங்களை விட்டுவிடுகிறேன். நீர் என்னை அன்பாக நடத்துகிறீர். என்னை அன்போடு அரவணைத்திருக்கிறீர். நான் மரிக்கும் வரைக்கும் உமக்கே சேவை செய்வேன். நீர் உமது கிருபையை எனக்கு அளித்து, நான் உம்மைப் போலவே பரிசுத்தமாக இருக்கும்படிக்கு எனக்கு உதவி செய்தருளும்" என்று உண்மையான விசுவாசத்தை உடையவன் ஜெபிப்பான். நீங்கள் பாவத்திலே தொடர்ந்து இருந்து கொண்டு விசுவாசமுள்ளவர்களாகவும் இருக்க முடியாது. விசுவாசிப்பதென்பது பரிசுத்தமாக வாழ்வதற்கே. இவை இரண்டும் சேர்ந்தே காணப்பட வேண்டும். கிருபை பெருகும்படிக்கு பாவத்திலேயே இருப்பதென்பது, கெட்டுப்போன நிலமையிலுள்ள செத்த விசுவாசம். ராகாப் பரிசுத்தமாக்கப்பட்ட பெண். இங்குள்ளவர்களில் சிலரை தேவன்தாமே பரிசுத்தப்படுத்துவாராக. மனிதரை சீர்படுத்தும்படியாக உலகமானது பல்வேறு விதங்களில் முயன்று வருகிறது. ஆனால் அவர்களை நிரந்தரமாக சீர்படுத்துவதற்கு சுவிசேஷ பிரசங்கத்தினால் ஏற்படும் விசுவாசத்தினால் மாத்திரமே முடியும். ஆனால் இக்காலங்களில் பிரசங்கமானது அலட்சியப்படுத்தப்பட்டு வருகிறது. நீங்கள் செய்தித்தாள்களை வாசிக்கிறீர்கள். பல புத்தகங்களை வாசிக்கிறீர்கள். பேராசிரியர்களின் பேச்சுக்களை கேட்கிறீர்கள். கட்டுரையாளர்களின் கட்டுரைகளை ஆர்வத்தோடு படித்து இரசிக்கிறீர்கள். ஆனால் பிரசங்கி எங்கே? பிரசங்கம் எங்கே? ஏற்கனவே தயாரிக்கப்பட்ட பிரசங்க நகல்களை எடுத்துக் கொண்டு, கர்த்தர்தாமே கேட்பவர்களின்

இருதயங்களைத் திருப்பும்படியாக ஜெபித்துவிட்டு, அதை வாசித்து முடிப்பது பிரசங்கமல்ல. அது வாசிப்பு! ஒரு வயதானவர் சொல்லிய கதையொன்று ஞாபகத்துக்கு வருகிறது. அவருடைய சபையின் போதகர் பிரசங்கத்தை அப்படியே படிப்பாராம். ஒருமுறை இந்த வயதானவருடைய வீட்டிற்கு அந்தப் போதகர் வந்தார். "என்ன செய்து கொண்டிருக்கிறீர்?" என்று போதகர் கேட்டாராம். "நான் தீர்க்கதரிசனம் சொல்லிக் கொண்டிருக்கிறேன்" என்று இவர் பதில் கூறினார். "என்ன? நீர் எவ்வாறு தீர்க்கதரிசனம் சொல்ல முடியும்?" எனப் போதகர் வினவினார். "பிரசங்கத்தை படிப்பதை நீங்கள் பிரசங்கம் சொல்லுவதாகக் கூறுகிறீர்கள் அல்லவா? அதுபோல நானும் தீர்க்கதரிசனப் புத்தகங்களைப் படிப்பதை தீர்க்கதரிசனம் சொல்லுவதாகக் குறிப்பிடுகிறேன்" என்றார் அந்த வயதானவர். அவர் சொன்னது சரிதான். பிரசங்கத்தில் நாம் நேரிடையாகவும் வெளிப்படையாகவும் பேச வேண்டியதாயிருக்கிறது. சத்தியத்தை கலப்படமின்றி தெரிவிக்க வேண்டியதாயிருக்கிறது. மனசாட்சியை உருவக்குத்த வேண்டியதாயிருக்கிறது. இவையெல்லாம் இல்லாவிடில், நிலைத்து நிற்கக்கூடிய பெரிய மாற்றத்தை மனிதர்களில் எதிர்பார்க்க முடியாது. சிலருக்குப் பைத்தியமாகத் தோன்றுகின்ற சுவிசேஷமாகிய கடவுளுடைய வார்த்தை வேசிகளை சீர்ப்படுத்துகிறது, திருடர்களைத் திருத்துகிறது, மிகப்பாவியான மனிதனையும் கிறிஸ்துவிடம் அழைத்து வருகிறது. மனிதர்களிலேயே பொல்லாதவனாக இருப்பவனைக்கூட நான் மறுபடியுமாக அன்போடு அழைக்கிறேன் "ஓ! பாவியே வா. கடவுளின் மகிமைக்குள் பிரவேசி. கிறிஸ்துவின் மீது உண்மையான விசுவாசத்தோடும், உண்மையான மனந்திரும்புதலோடும் வா. கிருபையானது நம்மைக் கூட்டிச் சேர்க்கிறது. பணமுமின்றி விலையுமின்றி இயேசுக்கிறிஸ்துவிடம் வந்து பெற்றுக்கொள்". உன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்படும். உன்னுடைய மீறுதல்கள் நினைக்கப்படமாட்டாது. ஆகவே நீ போய் இனி பாவம் செய்யாதிருப்பாய். உன்னைப் புதுப்பிக்கின்ற கடவுள், கடைசிமட்டும் வழுவாமல் காப்பார். இயேசுக்கிறிஸ்துவினிமித்தம் தேவன் ஆசீர்வதிப்பாராக - ஆமேன்

*(மார்ச் 1, 1857ஆம் ஆண்டு, மியூசிக் ஹால், ராயல் சர்ரே கார்டன் என்கிற இடத்திலே, கர்த்தருடைய நாளில் ரெவ. சார்ல்ஸ் ஸ்பர்ஜன் அளித்த தியானத்தின்(0119) சாராம்சம்)*

---

# 4. அன்பு மகனின் நலம் குறித்த கவலையான விசாரிப்பு

***"அப்பொழுது ராஜா: பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா என்று கேட்டான்" 2 சாமு 18:29.***

இந்த வார்த்தைகள் ஒரு பெரிய போருக்குப் பின் தாவீதால் சொல்லப்பட்டவை. அதில் அநேகர் மடிந்து போயிருந்தனர். அப்சலோம் நடத்திக் கொண்டு போன சேனையில் இருபதாயிரம் பேர்கள் விழுந்து போயினர். பட்டயம் மாத்திரமல்ல, காடும் அநேகரைப் பட்சித்துப் போட்டது. தோல்வியினால் முறிந்தோடிய படைவீரர்கள் பயத்தினால் மரங்கள் அடர்ந்த சன்னல்பின்னலான காட்டினுள் ஓடிச் செல்ல நேர்ந்தபோது அதில் மறைந்திருந்த செங்குத்தான மலைச்சரிவுகளும் இருண்ட குகைகளும் அநேகர் மடியக் காரணமாயிற்று. மகன் பொல்லாதவனாயிருந்தாலும், இன்னும் அவனை நேசிக்கிற தகப்பனுடைய கவலை தோய்ந்த கேள்வி, "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?" என்பது. "எவ்விதமாக இவ்வெற்றி நமக்குக் கிடைத்தது?" என்று தாவீது கேட்கவில்லை. ஆனால், "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?" என்ற கேள்வியே வந்தது. "என் சேனையின் மிகப் பெரும் பொறுப்பை சுமந்த யோவாப் உயிரோடிருக்கிறானா?" எனக் கேட்கவில்லை. ஆனால், "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?" எனக் கேட்கிறார். "நமது சேனைத்தலைவர்களில் எத்தனை பேர் விழுந்து போனார்கள்?" என விசாரிக்கவில்லை. ஆனால், "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?" இவ்விடத்திலே தாவீது தன்னை ஒரு ராஜாவாக காட்டிக் கொள்வதைவிட ஒரு தகப்பனாகவே வெளிப்படுத்தியிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஞானத்தைக் காட்டிலும் பாசம் அதிகமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அதிகமான அன்பில் மூழ்கியிருக்கும் ஒரு வயதான தந்தையைக் குறித்ததான சரியான கணிப்புதான் அது. இந்த விஷயத்தில் தாவீது அளவுக்கதிகமான இளகிய மன பலவீனத்தைக் கொண்டிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சகோதரரே, அந்தவிதமான

சூழ்நிலையில் இருக்கும் ஒரு தகப்பனின் உணர்வுகளை புரிந்து கொள்வதைவிட, அவரை குற்றப்படுத்துவதே நமக்கு லேசாக இருக்கும். நமது வாழ்க்கையில் நாம் ஒருபோதும் சந்தித்திராத ஒரு பிரச்சனையைக் குறித்து நியாயம் சொல்லிக்கொண்டு உட்கார்ந்திருப்பதைக் காட்டிலும், அதை அனுபவித்துக் கொண்டிருக்கிறவர்களுக்காக இரக்கப்படுவது புத்திசாலித்தனமானது என நான் கூறுவேன். நாம் ஒருவேளை அந்த நிலமையில் இருந்தோமானால், தாவீதைப் போன்ற உணர்ச்சியையே அடைந்திருப்போம். இங்கே அமர்ந்திருக்கிறவர்களுக்கு வேறு எவ்வளவோ பாரமான கவலைகள் இருந்தாலும், அவை எல்லாவற்றிற்கும் மேலாக, “இளைஞன் பத்திரமாக இருக்கிறானா?, “என் மகன் சுகமாக இருக்கிறானா?, என் தந்தை நலமாக இருக்கிறாரா?, என் மனைவி பத்திரமாக இருக்கிறாளா?” என்கிற சிந்தனை எத்தனை பேருக்குத் தோன்றாமலிருக்கும்? சமீபத்தில் ஒரு படகு நூற்றுக்கணக்கான பயணிகளோடு ஆற்றில் மூழ்கிவிட்டது. நண்பர்களும் உறவினர்களும் கண்ணீரோடு தங்களுக்கு அருமையானவர்களின் சடலங்களை அடையாளங்காணும் நோக்கத்தில் பயத்தோடு இங்குமங்குமாக அலைந்து கொண்டிருக்கிறார்கள். விபத்து நிகழ்ந்த அந்த நேரத்திலிருந்து எந்தத் தகவலும் கிடைக்காத தங்களுடையவர்களைக் குறித்து ஏதேனும் செய்தி கிடைக்காதா என நடுக்கத்தோடு காத்துக் கொண்டிருக்கிறார்கள். இல்லையென்றால் ஆற்றிலிருந்து மீட்கப்படும் சடலங்களிடையே அவர்களை அடையாளங்காண நேரிடுமோ என பயந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைய இரவிலே மனதின் முன்னிலையில் நிற்கிற கேள்வி, “எனக்கு அருமையானவர்கள் பத்திரமாக இருக்கிறார்களா?” என்பதே. நீங்கள் அவர்கள் மீது குற்றம் சாட்டுவீர்களா? தங்களுடைய தினசரி வேலைகளை மறந்து, அன்றாடக கடமைகளை அலட்சியப்படுத்திக் கொண்டிருக்கிறார்களென அவர்களை குற்றப்படுத்துவீர்களா? இந்த கவலை தோய்ந்த ஒரு கேள்வியில் நூற்றுக்கணக்கான மற்ற காரியங்கள் மறக்கப்பட்டுப்போகிறது. நீங்கள் அவர்களை குற்றப்படுத்துவீர்களா? உங்களால் குற்றம் சுமத்த முடியுமா? நிச்சயமாக முடியாது. அவ்வுணர்வு இயற்கையானது. ஆகவே அது நியாயமானதுங்கூட என நான் நினைக்கிறேன். அதற்குப் பிற்பாடு தாவீது பொறுமையில்லாமல், தேவனுக்கு விரோதமானவைகளை பேசிவிட்டதை ஏற்றுக் கொள்ள முடியாதுதான் என்றாலும், ஒரு தகப்பனின் இருதயத்தை அறிந்தவன், வயதான அந்த தகப்பனைக் கண்டனம் செய்வதைக்

காட்டிலும் அவரின் உணர்வை நியாயப்படுத்தவே பார்ப்பான். அந்த வயதான மனிதன் தன் மகனைக் குறித்து, “பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?” என்று கவலையோடு கேட்ட கேள்விக்கு, இல்லை என்கிற விடை தெரிந்த பின்பு, ராஜா மிகவும் கலங்கி, “என் மகனாகிய அப்சலோமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப் பதிலாக செத்தேனானால் நலமாயிருக்கும். அப்சலோமே, என் மகனே, என் மகனே” என்று சொல்லி அழுதார். நாம் ஒருவேளை அந்த இடத்தில் இருந்திருந்தோமானால், யோவாபைப் போன்று உள்ளே சென்று கடினமாக பேசியிருந்திருக்க மாட்டோம். மாறாக, இச்சம்பவம் நடந்திருக்க வேண்டியது தகும்தான் என்றாலும், புத்திரசோகத்தினால் பாதிக்கப்பட்டு அழுகிறவர்களின் அருகில் நாமும் சென்று உட்கார்ந்து, மிகுந்த இரக்கத்தோடு அவர்களுடன் சேர்ந்து நாமும் அழுது, அவர்களின் துயரத்திலிருந்து நாமும் ஏதாவது பாடம் கற்றுக் கொள்ள மாட்டோமா எனப் பார்ப்போம். நமது கவலைகளை நாம் வேறு திசையில் செலுத்தும்போது, துயரத்திலிருப்பவர்களும் பயன் அடையும்படியாக அவர்களது கவனத்தையும் தேவனுடைய நாமத்துக்கு மகிமை உண்டாகும்விதமாக வேறு திசையில் திருப்ப முனைய வேண்டும்.

இன்றைய இரவிலே, நாம் முதலாவதாக, கவலை நிறைந்த இந்தக் கேள்வியைப் பற்றியும், பிறகு அது உபயோகிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் என்பதையும் மூன்றாவதாக அதற்கு அளிக்கக்கூடிய பதில்கள் என்பதையும் பற்றி சிறிது சிந்திப்போம்.

## அ) இது ஒரு கவலை நிறைந்த கேள்வி-“பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?”

இதில் நாம் கவனிக்கும் முதல் காரியம், ***ஒரு தகப்பன் தன் மகனைக் குறித்து கரிசனையோடு கேட்கும் கேள்வி இது.*** “அவன் சுகமாயிருக்கிறானா?” பெற்றோரின் கரிசனம் மிகவும் பெரியது. சில இளம்வயதினர் அதைக் குறித்து போதுமான அளவுக்கு அக்கறைப்படுவதில்லை. அக்கறை கொண்டார்களானால் அவர்கள் மிகுந்த நன்றியுடையவர்களாய் காணப்படுவார்கள். தங்களுடைய யோசனையற்ற நடவடிக்கைகளினால் பெற்றோரின் கவலையை

இன்னும் அதிகப்படுத்தாமல் இருப்பார்கள். அநேகம் வாலிபர்களும் யுவதிகளும் வேண்டுமென்றே தங்களுடைய பெற்றோரைக் கவலைக்கு உட்படுத்தாவிட்டாலும், பெற்றோர் கவலையில் மூழ்குவதற்குக் காரணமாக இருக்கிறார்கள் என்பது உறுதி. தெரியாமல் இப்படி நடந்து கொள்கிறார்கள் என்கிற கருத்தை எப்போதும் ஏற்பதற்கில்லை. கட்டுப்பாடற்ற தவறான நடக்கைகளால் தங்கள் நண்பர்கள் எவ்விதமான விளைவை சந்தித்திருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரிந்திருந்தும் பலபேர் தவறான வழியில் செல்கிறார்கள். தங்களை சுதந்திரப் பறவைகள் என அழைத்துக் கொள்கிற பல இளம் வயதினர், தங்கள் இஷ்டம்போல் நடந்து,தங்களைப்பெற்றவளின்உணர்வுகளைகாலடியில்மிதிக்கிறார்கள். பெற்றோருக்கு தூக்கமில்லாத இரவுகளையும், மனஉளைச்சலையும் ஏற்படுத்துகிறார்கள். கடமையில் தவறாத பிள்ளைகளுக்கு விசேஷித்த வாக்குத்தத்தத்தையும், கலகமுண்டாக்குகிற பிள்ளைகளுக்கு கடினமான சாபத்தையும் கொடுக்கிற தேவனுக்கு முன்பாக அவர்கள் பதில் சொல்ல வேண்டிய பெருங்குற்றமாக அது இருக்கிறது. எல்லா பெற்றோருக்கும் கவலைகள் இருக்கும். தாயின் மடியில் வந்த எந்த குழந்தையும் வெறுமனே பொம்மை போல் வருவதில்லை. அதனோடு சேர்ந்து தாய்க்கு அதை கவனிக்கும் வேலையும், துயரமும், கவலையும் சேர்ந்துதான் வருகிறது. பெற்றோர்-பிள்ளை உறவில் சந்தோஷங்களும் இல்லாமலில்லை. அதே சமயத்தில் இளம்பிராயம் முழுவதிலும் கவனித்து பாதுகாத்து வளர்க்க வேண்டிய அநேகம் கவலைகளும் பொறுப்புகளும் உண்டு. கடலில் அடிக்கிற ஆயிரக்கணக்கான அலைகள் உறுதியான கப்பலின் மீது வந்து மோதினாலும் அது கப்பலைத் தழுவிச் சென்று வீழ்ந்து விடும். ஆனால், இளம் வயது, சிறிய கிளிஞ்சல் படகில் வாழ்க்கைப் பிரயாணம் செய்வதைப் போன்றது. அத்தகைய அலைகள் வந்து மோதி கிளிஞ்சல் படகை மூழ்கடித்துவிடாதபடிக்கு கருத்தோடும் கவலையோடும் கவனிக்க வேண்டிய வேலை பெற்றோருக்கு இருக்கிறது. ஆகவே தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை அதிக கவனத்தோடும் கரிசனையோடும் கஷ்டப்பட்டு கவனித்து வளர்க்கிறார்கள். ஆனால், நமது பிள்ளைகள் குழந்தையாயிருக்கும்போதும், பள்ளிக்குச் சென்று கொண்டிருக்கும்போதும்கூட நமக்கு அவர்கள் அதிக கவலையைக் கொடுப்பதில்லை. நாம் அவர்களை படுக்கைக்கு அழைத்துச் சென்று, முத்தம் கொடுத்துத் தூங்கச் செய்யும்போது எல்லாம் சரியாக, ஒழுங்காக

நடந்து கொண்டிருப்பதாக உணருகிறோம் - ஆனால் அதற்குப் பிற்பாடு வரும் வருடங்களில், அவர்கள் நம் கட்டுப்பாட்டை மீறிச் செல்கையில், தனிமையில் செல்கையில், தாங்களாகவே செயல்படும் நிலைமையில், வீட்டை விட்டு வெளியே செல்கையில், நமது கண்டிப்பைக் காண்பிக்க முடியாத தொலைவிடங்களுக்குச் செல்கையில், நமது அதிகார வரம்பிற்கு வெளியே இருக்கையில், நமது அன்புக்கும்கூட கட்டுப்படாதவர்களாக இருக்கையில் - அப்போதுதான் அநேக பெற்றோர்களுக்கு துயர காலம் ஆரம்பமாகிறது. "நான் பிள்ளைகளை வளர்த்து ஆதரித்தேன். அவர்களோ எனக்கு விரோதமாக கலகம் பண்ணினார்கள்" என்கிற துயர தொனியோடே அநேகம் நரைமயிர்கள் பாதாளத்தில் இறங்கியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அநேகம் தகப்பன்மாரும் தாய்மாரும் மரித்துப் போயிருக்கிறார்கள். கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். கத்தியினாலோ விஷத்தினாலோ அல்ல, தங்கள் மகனுடைய மகளுடைய அன்பற்ற வார்த்தைகளாலும், கொடூரமான செய்கைகளாலும் இறந்து போயிருக்கிறார்கள். தங்களுடைய நன்றிகெட்ட நடக்கையாலே அகாலமாக மரணத்தைத் தழுவின பெற்றோரின் கல்லறைகள், பல மகன்களின் மகள்களின் கண்ணீரினால் பிற்காலத்திலே கழுவப்படுகிறது. பெற்றோர் உயிரோடிருக்கிறதான சிலாக்கியம் பெற்றவர்கள், நாம் எவ்வளவாக அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை சிந்தித்துப் பார்ப்போம். அவர்கள் செய்திருப்பவைகளுக்கு பிரதியுபகாரம் நம்மால் செய்ய முடியாவிட்டாலும், எப்படியாவது நமது நடக்கைகளின் மூலமாக அவர்களுக்கு ஆறுதலை அளித்து, அவர்களுக்கு நமது நன்றியைத் தெரிவிப்பதில் சந்தோஷங்கொள்ளுவோம். கடந்த காலங்களில் தாங்கள் கவலைப்பட்டதைக் குறித்து தொடர்ந்து வருந்தாதபடிக்கு அவர்களுடைய இருதயம் நம்மில் மகிழுவதாக. உலகத்தில் இந்தவிதமான மகன்களையும் மகள்களையும் தாங்கள் கொண்டுவந்ததைக் குறித்து அவர்கள் இருதயம் பூரிப்பதாக. "பிள்ளைகள் சுகமாக இருக்கிறார்களா?" என்று நம்மைக் குறித்து கவலையோடிருக்கிற பெற்றோர்கள் நமக்கு இருந்தால், நாம் கடவுளுக்கு நன்றி செலுத்துவோமாக. நம் மீது அக்கறை கொண்டிருக்கிறவர்களை கடவுள் நமக்கு அருளிச் செய்திருக்கிறார். அவர்களை அவமதிப்பதின் மூலமாக நாம் ஒருபோதும் கடவுளின் இரக்கத்தை அலட்சியப்படுத்திவிட வேண்டாம்.

இரண்டாவதாக, ***தந்தையின் வீட்டை விட்டுச் சென்றுவிட்ட ஒரு மகனைக் குறித்துக் கேட்கப்பட்ட கேள்வி*** இது. "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?" நான் ஏற்கனவே கூறியபடி, பிள்ளைகள் நம்மோடுகூட இருந்த, பள்ளிப் பருவத்திலெல்லாம் நாம் அனுபவிக்கிற கவலையைவிட, அவர்கள் நமது கட்டுப்பாட்டை தாண்டி சென்றுவிட்டபின் ஏற்படுகிற கவலைதான் அதிகமாயிருக்கும். அவர்கள் தங்களுக்கென சொந்த நண்பர்களை ஏற்படுத்திக் கொள்வார்கள். தங்களுடைய விருப்பம் போல வாழ்க்கையை அமைத்துக் கொள்வார்கள். அவர்கள் நாம் இருக்கிற பிரதேசத்தில் இருந்தாலே நாம் அவர்கள் நலனைக் குறித்து அக்கறை உள்ளவர்களாக இருப்போம். அப்படியிருக்க அவர்கள் வேறு ஊரில் இருந்துவிட்டாலோ நமது கவலை இன்னும் அதிகமாக இருக்கும். உங்களில் பலபேருடைய மகனோ அல்லது மகளோ தூரதேசத்தில் இருக்கலாம். "என் மகன் எப்படியிருக்கிறானோ?", "என் மகள் நலமாயிருக்கிறாளா?" என்கிற கேள்வி படுக்கையில் உங்களைத் துளைத்தெடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. அவன் தூரதேசத்தில் இருக்கலாம், அல்லது கப்பலில் மாலுமியாக இருக்கலாம், வெளிநாட்டில் தனது ஜீவியத்திற்காக பொருள் சம்பாதித்துக் கொண்டிருக்கலாம். அவன் உயிரோடிருக்கிறானா, நலமாக இருக்கிறானா என நீங்கள் கவலை கொண்டிருப்பீர்கள். அவன் கடற்பிரயாணத்தில் இல்லாமல் கரையில் ஒரு தேசத்தில் இருக்கிறானென்று அறிந்தீர்களானால், அவன் கர்த்தருடைய நாளில் தேவாலயத்திற்கு ஒழுங்காக போகிறானா என்பதில் அக்கறை காட்டுவீர்கள். மாலை வேளைகளை எங்கே செலவிடுகிறான் என கவலை கொள்வீர்கள். எந்தவிதமான நண்பர்களோடு சகவாசம் கொண்டிருக்கிறானோ, அவன் எஜமானன் எப்படிப்பட்டவனோ, கூட வேலை பார்ப்பவர்கள் யாரோ, தங்கியிருக்கும் இடம் எப்படிப்பட்டதோ என்றெல்லாம் சிந்தித்துக் கொண்டிருப்பீர்கள். இந்த விதமான கவலை நிறைந்த கேள்விகள் உங்கள் இருதயத்தின் ஆழத்தில் அடிக்கடி தோன்றும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. இன்றைய இரவிலே நம்மிடையே சில இளைஞர்கள் வந்திருக்கிறார்கள். லண்டன் மாநகரமாகிய இப்பெரும் பட்டணத்திலே வசிக்கும்படியாக வந்திருக்கிறார்கள். உங்களைக் குறித்து உங்கள் வீட்டிலுள்ளவர்கள் எவ்வளவு கரிசனையோடு எண்ணிக் கொண்டிருப்பார்கள் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ளும்படியாக நினைப்பூட்டுகிறேன். உங்கள் தகப்பனும் தாயாரும் இந்த நேரத்திலே

உங்களைக் குறித்து நினைத்தவர்களாக எவ்வளவு கரிசனையோடு உங்களுக்காக ஜெபித்துக் கொண்டிருப்பார்கள் என்பதை அன்புடன் நினைவுபடுத்துகிறேன். நீங்கள் இப்போது இங்கே இருப்பதை அறிந்தால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவார்கள். ஆனால் சில வேளைகளில் நீங்கள் உங்கள் மாலை நேரங்களை வீணாகக் கழித்துப் போடுவதையும், ஓய்வுநாளின் சில பகுதிகளை எங்கே செலவிடுகிறீர்கள் என்பதையும் அறிந்தால் வருத்தம் அடைவார்கள் அல்லவா? வீட்டில் கற்றுக் கொடுத்திருந்த நற்பழக்கங்களை மறக்கத் தொடங்கிவிட்டார்கள் என்பதை அறிந்தால் எவ்வளவு விசனமடைவார்கள்? தங்கியிருக்கும் அறையில் மற்ற நண்பர்கள் இருப்பதால் தன் மகன் ஜெபிப்பதற்கு முழங்காற்படியிட கூச்சப்படுகிறான் என்பது தெரிந்தால் எவ்வளவு வேதனைப்படுவார்கள்? வேதத்தில் மகனுடைய பெயரை எழுதிக் கொடுத்த தாய்க்கு, தினமும் அதிலிருந்து ஒரு பகுதியை வாசிப்பேன் என்ற வாக்குறுதியை கொடுத்த மகன் அதை வாசிப்பதில்லை, ஆனால் அதற்கு பதிலாக அவ்விடத்தை தீமையான புத்தகங்கள் ஆக்ரமிக்கத் தொடங்கிவிட்டன என்பதெல்லாம் அறிந்தால் வேதனை அடைவார்கள் அல்லவா. இளம் நண்பர்களே, உங்களைக் காட்டிலும் வயதில் சற்று மூத்தவர்களாகிய எங்களில் சிலருக்கு, வீட்டை விட்டு வெளியே வருவதால் ஏற்படுகின்ற உங்களுடைய அனுபவங்கள் தெரியும். அப்படி வந்த எங்களைத் தொடர்ந்து வந்த எங்கள் பெற்றோரின் கண்ணீரும் ஜெபங்களும் கேட்கப்பட்டதால், மிகுந்த மகிழ்ச்சியோடு பிற்பாடு வாழ்ந்திருந்த பெற்றோரைக் கொண்டிருந்த எங்களின் அனுபவங்களையும் நீங்கள் அறிந்து கொள்வீர்கள் என நம்புகிறோம். உங்களுடைய வாழ்க்கையும் அப்படியே அமைவதாக. இல்லையென்றால் நீங்கள் அதிகக் கேடான நிலையை அடைந்து உங்கள் பாவங்களில் அழிந்து போவீர்கள். தாயின் ஜெபங்களையும் மீறி ஒரு இளைஞன் நரகத்தின் ஆழத்தில் அழிந்து போவதென்பது கடினமானதாகும். மகனின் இரட்சிப்புக்காக போராடி ஜெபித்துக் கொண்டிருக்கும் தாய் தகப்பனின் ஜெபங்களையும் மீறி உங்களை நீங்களே அழித்துக் கொள்வதற்கு மிகுந்த பலம் வேண்டியதாயிருக்கும். அப்படி தங்களை அழித்துக் கொண்டவர்களும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் அழிவுக்குட்படும்போது, பெற்றோரின் பராமரிப்பும் ஜெபங்களும் இல்லாமல் தெருக்களில் வளர்க்கப்பட்டு பாவத்தில் வீழ்ந்து அழிபவர்களுக்குக் கிடைக்கும் தண்டனையைக்

காட்டிலும் அது அதிகமாக இருக்கும். ஓ! கர்த்தராகிய இயேசுவே, விதவையின் மகனை உயிரோடே எழுப்பினீரே. அக்கிரமங்களினால் பாவங்களினாலும் மரித்துப் போயிருக்கிற இந்த மகன்களை எழுப்பும். துன்மார்க்கமும் அசுத்தமுமாகிய கல்லறையில் புதைக்கப்படுவதற்காக கொண்டு செல்லப்படுகிறார்களே. "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?" என்கிற கேள்வி, தங்கள் இல்லத்தைவிட்டு போய்விட்ட பிள்ளைகளைக் கொண்டிருக்கும் கிறிஸ்தவ பெற்றோரின் கவலையை நமக்கு ஞாபகப்படுத்தும்.

ஆனால் இதில் மனதை உருக்கும் ஒரு காரியம் இருக்கிறது. ***தன்னையே எதிர்த்த மகனைக் குறித்து ஒரு தகப்பன் கேட்கிற கேள்வி*** இது. அப்சலோம்! பிள்ளையாண்டானாகிய அப்சலோம்!! தாவீது ஏன் அவனைக் குறித்து கவலையாயிருக்க வேண்டும்? அவனுடைய கை தன் தகப்பனுக்கு விரோதமாக எழும்பவில்லையா? தகப்பனின் இரத்தத்தின் மீது அவன் தாகமாயிருக்கவில்லையா? தன் தகப்பனை கொன்று, ராஜ்யபாரத்தை தான் அடைந்து கொள்ளவேண்டுமென்கிற வெறியோடு, மிகப்பெரும் சேனைக்கு தலைமை தாங்கிச் சென்றவனில்லையா? ஏற்கனவே தலைமைப் பதவியை தந்திரமாக அபகரித்திருந்தானே. அப்படியிருக்க தாவீது ஏன் இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டும் என சிந்தித்துப் பார்க்கிறேன். ஒருவேளை தாவீது, "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் இறந்துவிட்டானா? அவன் சென்றுவிட்டானானால் என் ராஜ்ஜியத்தில் சமாதானம் இருக்கும். என்னுடைய போராட்டமான வாழ்க்கைக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" என்கிற நோக்கத்தில் கூறியிருப்பாரோ? இல்லை. தாவீது ஒரு தகப்பன். தகப்பன் தன் பிள்ளைகளை நேசிக்க வேண்டும். அங்கு பேசுவது ஒரு தகப்பன். தகப்பனின் அன்பு, மகனின் விரோதத்தை மேற்கொள்ளும். தன் இருதயத்தின் இரத்தத்தை மகன் அடையப் பார்த்தாலும் தகப்பனின் அன்பு சாகாது, அவன் நேசம் மாறாது. தாய் தகப்பனின் அன்பு எவ்வளவு வலியது! அது கடவுளின் அன்பில் ஒரு சிறு பகுதியை பிரதிபலிக்கிற தன்மையைக் கொண்டது. அதை நாம் எவ்வளவு மரியாதையோடு மதிக்க வேண்டும்! என்னவொரு அருமையான ஆஸ்தியை கடவுள் நமக்கு அருளிச் செய்ய சித்தங்கொண்டிருக்கிறார்! அதிலும் முக்கியமாக தங்கள் பிள்ளைகளின் மீது புனிதமான அன்பின் சுபாவத்தைக் கொண்டிருக்கும் தேவபக்தியுள்ள பெற்றோர் இருப்பது

எத்தகைய சிலாக்கியம்!. அவர்களுடைய அன்பினை தேவன் உன்னதமான நோக்கத்தை அடையும்படிக்குப் பரிசுத்தப்படுத்துகிறார். நமது பிள்ளைகள் மிகவும் கொடிதான பாவத்தில் விழுந்துவிடக்கூடும், ஆனாலும் அவர்கள் நமது பிள்ளைகள்தான். நமது தேவனை அவர்கள் ஒருவேளை அலட்சியப்படுத்தலாம், தங்களுடைய துர்க்குணத்தினால் நமது இருதயத்தை சுக்குநூறாக உடைக்கலாம், அவர்கள் செய்கையை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. அதேவேளையில் அவர்களை நமது பிள்ளைகள் இல்லையென்று ஆக்கிவிட முடியாது. நமது இருதயத்திலிருந்து அவர்களை அழித்துப்போட இயலாது. நமது இருதயம் துடிக்கும் வரைக்கும் அவர்களை இடைவிடாமல் நினைத்துக் கொண்டேயிருப்போம். கிறிஸ்தவர்கள் என சொல்லிக் கொள்கிற சில பெற்றோர், "அந்தப் பெண் இனி ஒருபோதும் என் வீட்டு வாசற்படியை மிதிக்கக் கூடாது" என்று கூறுவதை நான் சிலவேளைகளில் கேட்டிருக்கிறேன். அவர்கள் கிறிஸ்தவர்கள்தானா என்பதில் எனக்கு சந்தேகம். தங்கள் பிள்ளைகளோடு ஒப்புரவாக முடியாத தகப்பன்மாரை நான் சந்திக்கும்போது, அவர்கள் தேவனோடு ஒப்புரவாகவேயில்லை என்று எண்ணுகிறேன். நமது இருதயம் புதுப்பிக்கப்பட்டிருந்ததானால், நமது பிள்ளைகளையே விரோதிக்கிறதான உணர்ச்சி நம்மை ஆட்கொண்டிருக்க முடியாது. கர்த்தர் நம்மை மன்னித்து அவரது குடும்பத்துக்குள் ஏற்றுக் கொண்டிருந்தாரானால், நாமும் நமக்கு விரோதமாக எப்பேர்பட்ட குற்றம் செய்தவர்களையும் மன்னிக்க முடியும். அதிலும் நமது பிள்ளைகள் நமது இரத்தமும் மாமிசமுமாயிருப்பதால் இரண்டு மடங்காக அப்படி செய்ய முடியும். நமது பிள்ளைகளையே கைவிடுவதென்பது இயற்கைக்கு விரோதமானது. இயற்கைக்கு விரோதமானதை மதிக்கவியலாது. ஆயக்காரரும் பாவிகளும்கூட தங்கள் பிள்ளைகளை மன்னிக்கிறார்களென்றால், நாம் அதைக் காட்டிலும் அதிகமாக அப்படி செய்ய வேண்டும். கேள்விப்பட்டிராத பாவத்தின் எல்லைக்கே அவர்கள் சென்றிருந்தாலும், கடவுளின் இரக்கம் எப்போதும் நிலைத்திருப்பது போல, கிறிஸ்தவப் பெற்றோரின் அன்பும் நிலைத்திருக்க வேண்டும். "பிள்ளையாண்டனாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?" என்று தாவீதே சொல்லக்கூடுமானால், அப்சலோமின் நடத்தையில் பாதி அளவிற்குகூட கொடுமையாக நடந்த பிள்ளைகள் எதுவும் நமக்கில்லையே என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். ஆகவே நம்மை துயரப்படுத்தினவர்களை மன்னித்து

அவர்கள் மீது அக்கறையோடு அன்பு செலுத்த வேண்டும்.

வீட்டில் இருப்பவர்களுக்கு மிகுந்த துயரத்தை அளிக்கிற இளம் பிராயத்தினருக்கு இந்த சந்தர்ப்பத்தில் கூறுகிறேன்: நீ இந்த விஷயத்தை சாதாரணமானதாகக் கருதுகிறாயா? பெற்றோரின் கவலை உனக்கு முட்டாள்தனமாகத் தோன்றுகிறதா? உன்னுடைய வாழ்க்கை உனக்கு விளையாட்டுத்தனமானதாகத் தோன்றினாலும், அது வீட்டிலுள்ளவர்களுக்கு மரணத்தைக் கொண்டுவருகிறது. உன் தாயாருக்காக உன் இருதயமானது வறண்டு போனதாக இருந்தாலும், உனது தாயின் உள்ளத்தில் இன்னமும் உன் மீது அன்பு பெருக்கெடுத்தோடுகிறது. அவளுடைய கண்ணீருக்கு நீ காரணமாக இருந்திருக்கிறாய் என்பது உனக்கு கேலிக்கிடமானதாகத் தோன்றலாம். ஆனால் அந்தக் கண்ணீர் உண்மையானவை, அவள் ஆத்தும பாரத்தை அது வெளிப்படுத்துகிறது. அந்த இளகிய மனதை நீ பரிகசிப்பாயா? பெற்றோரின் பக்தியைக் குறித்து கேலி பேசும் அளவுக்கு மிகவும் தாழ்ந்து போன சில இளம்பிராயத்தினரை நான் அறிவேன். அப்படி செய்வது மிகவும் பயங்கரமானது. அவ்வித குற்றமுடையவர்களுக்கு ஐயோ! இருந்தாலும் அநேகம் கிறிஸ்தவ பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் அன்பற்ற தன்மையைப் பொருட்படுத்தாது அவர்களுக்காக ஜெபங்களை ஏறெடுப்பதிலும் அவர்கள் மீது அன்பு செலுத்துவதிலும் ஈடுபடுகிறார்கள். மேலும், தங்கள் பிள்ளைகளின் நிலையைக் கடவுளுக்கு முன்பாக எடுத்துரைத்து, அவருடைய மிகுந்த இரக்கத்தின் நிமித்தமாக தங்கள் பிள்ளைகளிடம் இரக்கம் காண்பிக்குமாறு வேண்டி நிற்கிறார்கள். தவறிழைத்துக் கொண்டிருக்கும் இளம்பிராயத்தினரே, உங்களில் இன்னமும் மனிதத்தன்மை இருக்கிறபடியால், அந்த இளகிய சுபாவத்தின் காரணமாக உங்களை கேட்டுக் கொள்ளுகிறேன், நீங்கள் உங்கள் பெற்றோரின் அந்த அற்புதமான அன்பை உதாசீனப்படுத்துவதைக் கைவிட்டுவிடுங்கள். அவர்கள் மிகுந்த பொறுமையுடன் உங்களை மன்னித்துக் கொண்டிருப்பதை அலட்சியப்படுத்தாதிருங்கள். "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?" என்று தன் தகப்பன் கலக்கத்தோடு வினவுவதை அப்சலோம் கேட்டிருந்தானாகில் அவன் நிச்சயமாக இந்த அளவுக்கு தகப்பனுக்கு விரோதமாகக் கலகம் பண்ணியிருக்க மாட்டான் என்று நான் நிச்சயம் நம்புகிறேன். இங்கிருப்பவர்களில் யாரும் அந்த விதமாக இருக்க மாட்டீர்கள் என

நினைக்கிறேன். மிகவும் கீழ்த்தரமாக நடந்து கொண்டவர்கள்கூட தங்கள் பெற்றோரின் இருதயத்திலுள்ள ஆழமான அன்பை தெரிந்து கொண்டார்களானால், அவர்கள் தங்கள் பெற்றோருடன் ஒப்புரவாகி, மீதியான தங்கள் வாழ்நாள் முழுவதுமாக தங்களின் தவறுக்கு பிராயச்சித்தம் செய்வார்கள்.

***மகன் பத்திரமாக இல்லாமல் இறந்து போயிருந்தானென்றால் அவனுடைய நிலை மிகவும் மோசமானதாயிருக்குமே*** என்கிற கருத்தும் தகப்பனின் கவலை தோய்ந்த கேள்வியில் பிரதிபலிக்கிறது. "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?" என்று தாவீது மிகுந்த துயரத்தோடு கேட்பதற்குக் காரணம், அவன் இறந்து போயிருந்தானென்றால் அவனுடைய நிலமை மிகவும் மோசமானதாயிருக்கும் என்பதுதான். தகப்பனை எதிர்த்துக் கலகம் பண்ணியதில் அவன் இறந்து போயிருக்கிறான். அவனுடைய குற்றமுள்ள ஆத்துமா எந்த நிலைமையில் பாதாளத்தில் இறங்கியிருக்கும்? அன்பானவர்களே, மரித்துப் போனவர்களைக் குறித்து கேட்கப்படும் பயங்கரமான கேள்வி அது. அவன் எங்கே இருக்கிறான்? அவன் ஆத்துமா பத்திரமாக இருக்கிறதா? சடுதியான மரணத்தைத் தழுவுபவர்கள் கடவுளின் பிள்ளைகளாயிருக்க வேண்டுமென்றும், பாவிகள் கிறிஸ்துவைக் கண்டு உணரும் வரைக்கும் மரணத்திற்குத் தப்பித்துக் கொள்ள வேண்டுமென்றும் நான் வேண்டிக் கொள்ள ஆசைப்படுவேன். ஒரு நிலக்கரி சுரங்கத்தின் ஆழத்தில் சகமனிதன் ஒருவனோடு அகப்பட்டுக் கொண்ட ஒரு கிறிஸ்தவனைக் குறித்த சம்பவம் நம்மை வியப்பில் ஆழ்த்தும். மேலேயிருந்து ஒரு கூண்டு இறக்கப்பட்டது. அதில் ஒரே ஒருவர் மாத்திரம்தான் செல்ல முடியும். அந்தக் கூண்டு கிறிஸ்தவனுக்குக் கிடைத்த போதிலும், அவன் சகமனிதனிடம், "என்னுடைய ஆத்துமா இரட்சிக்கப்பட்டிருக்கிறது. நான் கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன். நீயோ விசுவாசியல்ல. நீ இறந்து போவாயானால் உனக்கு பெருத்த நஷ்டம். கூண்டில் ஏறித் தப்பிச் செல்" என்று கிறிஸ்தவன் கூறுகிறான். தன்னுடைய ஜீவன் போனாலும் பரவாயில்லை என்று கூறி, அந்த மனந்திரும்பாத மனிதன் தப்பிப் பிழைத்துக் கொள்ளும்படியாக விட்டுக் கொடுத்துவிட்டான். நாம் கிறிஸ்துவினுடையவர்களாய் இருந்தோமானால், இரட்சிக்கப்படாதவர்களுக்காக நாம் மரிக்கவும் தயாராக இருப்பதே

கிறிஸ்துவைப் போல இருப்பதற்கு ஒப்பாகும். அப்போதுதான் நாம் தாவீதின் விருப்பத்தைக் கொண்டவர்களாகக் காணப்படுவோம் - "நான் உனக்குப் பதிலாகச் செத்தேனானால் நலமாயிருக்கும்." மரணம் - கிருபையின் மூலமாக நல்ல நம்பிக்கையை அடைந்திருப்பவர்களுக்கு மரணத்தின் கசப்பு இல்லை. ஆனால் நம்பிக்கை இல்லாமல், கிறிஸ்து இல்லாமல், மோட்சம் இல்லாமல் மரிப்பவர்களுக்கு - அது மரணமேதான். உங்களுடைய மகனோ அல்லது மகளோ எதிர்பாராதவிதமாக திடீரென்று எடுத்துக் கொள்ளப்படுவதை நீங்கள் அறிந்தால், மிகவும் கவலையோடு, "அவர்கள் பத்திரமாக இருப்பார்களா?" என்கிற கேள்வியைக் கேட்பீர்கள் என்பதை என்னால் எண்ணிப் பார்க்க முடிகிறது. மனந்திரும்பாத ஆணோ அல்லது பெண்ணோ மரிக்கும்போது அவர்கள் இரண்டு முறை மரிப்பவர்களாவார்கள். இரண்டாவது மரணம் மிகவும் பயங்கரமானது. என் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறவர்களில் சிலர் இந்த ஆபத்தான நிலமையில் இருக்கிறீர்கள் அல்லவா? நண்பர்களே, இந்தக் கட்டடத்திற்குள்ளாக இப்போது மரணம் பிரவேசித்து உங்களை ஆட்கொள்ளுமானால் நீங்கள் எங்கே இருப்பீர்கள்? மரண அம்புகள் இப்போது உங்களை நோக்கி எய்யப்பட்டிருக்குமானால் நீங்கள் எங்கே இருப்பீர்கள்? உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். உங்களுக்குக் கிறிஸ்துவுக்குள் நம்பிக்கை இல்லையென்றால், அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலமாக பாவமன்னிப்பைத் தேடிக் கண்டடையும்படியாக தேவன்தாமே உங்களுக்கு உதவி செய்வாராக.

அந்தோ! ***இந்தக் கேள்வியானது, அது கேட்கப்பட்ட வேளையில் உண்மையில் இறந்து போயிருந்த மகனைக் குறித்து ஒரு தந்தையால் கேட்கப்பட்டது.*** அது, அப்சலோமின் சுகத்தைக் குறித்து மிகவும் தாமதமாகக் கேட்கப்பட்ட கேள்வி. கலகம் செய்தவனாகிய அந்த மகனின் காரியம் யாவும் முடிந்து விட்டது. யோவாபின் கையிலிருந்த மூன்று வல்லயங்கள் அப்சலோமின் நெஞ்சிலே ஊடுருவிப் போயிருக்க அவன் தலைமயிர் கார்வாலி மரத்தில் மாட்டிக் கொண்டிருக்க அவன் சடலம் வானத்துக்கும் பூமிக்கும் நடுவாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது. அவன் செய்திருந்த குற்றங்களுக்கு அவன் நியாயப்படியான தண்டனையை அடைந்திருந்தபோதும், அவனுடைய தகப்பன் கேட்கிறார், "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?" என்று. நமது பிள்ளைகள் மரித்துப் போன பிற்பாடு அவர்களைக் குறித்து

நலம் விசாரிப்பது மிகவும் தாமதமானது. தனது பிள்ளைகளைக் குறித்து தான் கவனமாக இருந்திருக்கவில்லை என்கிற எண்ணமானது தாவீதின் இருதயத்தில் பலமுறை குத்தி வருத்தத்தை விளைவித்திருக்கும். தாவீதின் வாழ்க்கையில் நிகழ்ந்த பல சம்பவங்களின் மூலமாக அது அடையாளமாகக் காட்டப்பட்டிருப்பது நம்மை பயத்தில் ஆழ்த்துகிறது. முழுவதுமாக ஏலியைப் போன்ற அளவுக்கு இல்லாவிட்டாலும், குடும்ப நிர்வாகத்தில் தாவீது மிகவும் கவனக்குறைவாகவே இருந்திருக்கிறார். மகன் கேட்பது எதுவாக இருந்தாலும் மறுக்காமல் அதை அனுமதித்த தகப்பனாக ஒரு மகனுடைய விஷயத்தில் செயல்பட்டதை நாம் வாசிக்கிறோம். தங்களுடைய மகன்கள் விஷயத்தில் இப்படியாக நடந்து கொள்கிற எந்த மனிதனையும் ஒரு நல்ல தகப்பனாக என்னால் கருத முடியாது. பலதார மணம் செய்யும் வழக்கம் ஒழுங்கான குடும்பம் உருவாவதை முற்றிலுமாக அழித்துவிடும். தாவீது இந்த விஷயத்தில் பெரும் தவறு செய்திருக்கிறார். மேலும் தாவீது அரசியல் விவகாரங்களில் அதிகமாக ஈடுபட்டுக் கொண்டிருந்ததால், அவருடைய பிள்ளைகளுக்கு அளவுக்கு மீறிய சுதந்திரம் அளிக்கப்பட்டிருந்தது. தாவீது இப்போது கேட்பது வீண்: "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?" இந்தக் கேள்வி மிகவும் தாமதமாக, காலங்கடந்து கேட்கப்படுகிறது. உங்கள் மகன் துன்மார்க்கனாகவும் குடிகாரனாகவும் ஆன பிற்பாடு கைகளைப் பிசைந்து கொள்வதால் பிரயோஜனமில்லை. அவன் சிறியவனாக இருக்கும்போதே அவனை நல் ஒழுக்கத்துக்குட்படுத்துங்கள். அவன் பாலகனாக இருக்கும்போதே உங்கள் ஜெபத்தோடும் கண்ணீரோடும் அவனைக் கிறிஸ்துவிடம் கொண்டுவாருங்கள். தாய்மார்களே, சோதனை நிறைந்த இடங்களுக்கு உங்களுடைய மகள்களை நீங்கள் செல்ல அனுமதித்தீர்களானால், அவர்கள் உங்களுக்கு இழுக்கு ஏற்படுத்தும் காலம் வருவதற்கு அதிகநாள் செல்லாது. நமது பிள்ளைகள் சிறுவர்களாக இருக்கும்போதே அவர்களுக்குச் செய்யக்கூடியதை நாம் செய்துவிடுவோம். உலோகமானது உருகிய நிலையில் இருக்கும்போதுதான் அதை நமது இஷ்டப்படி வளைத்து நாம் விரும்பியவைகளை செய்ய முடியும். அது குளிர்ந்து கடினப்பட்டுவிட்டதானால், அதை எவ்வளவுதான் அடித்தாலும் நாம் விரும்பும் வடிவத்தைப் பெற இயலாது. ஓ, நமது பொறுப்பில் விடப்பட்டிருக்கும் பிள்ளைகளை அவர்கள் நடக்க வேண்டிய வழியிலே நடத்தும்படிக்கு கிருபை பெறுவோமாக. அப்போதுதான் அவர்கள்

தங்கள் முதிர்வயதிலும் அதை விடாமல் கடைப்பிடிப்பார்கள். சிறிய செடியாக இருக்கும்போதே வளைத்துத் திருப்பினால்தான் உண்டு. பெரிய மரமான பிற்பாடு அதை உங்களால் வளைத்துத் திருப்ப முடியாது. இதை நன்றாக சிந்தித்துப் பாருங்கள். உங்களுக்கு சந்தர்ப்பம் இருக்கும்போதே அதைப் பிடித்துக் கொள்ள விழிப்பாக இருங்கள். இல்லையென்றால் உங்கள் பிள்ளைகள் பாவத்தில் விழுந்தபின்போ அல்லது பாதாளத்தில் அழியும்போதோ "ஐயோ, எனக்கு ஐயோ" என்று ஆத்துமபாரத்தோடு புலம்பிக் கண்ணீர் வடிப்பதால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. கல்வியறிவில்லாத ஒரு ஏழைத் தாயின் துயரத்தை என்னால் ஒருபோதும் மறக்கவியலாது. அவரைக் கிறிஸ்துவிடம் நடத்துவதற்கு நான் கருவியாக இருந்தேன். கிறிஸ்துவுக்குள்ளாக அவர் மிகுந்த மகிழ்ச்சியோடு சிலகாலங்கள் இருந்ததை அறிவேன். ஆனால் சிலகாலம் கழித்து அவர் மிகுந்த துயரத்தோடும் ஆவியில் கட்டுண்டவராகவும் இருந்ததைப் பார்த்தேன். "உங்களை வருத்தப்படுத்துவது எது?" என்று கேட்டேன். அவர் கூறிய பதில், "என் பிள்ளைகள்! என் பிள்ளைகள். அவர்கள் எல்லோரும் இப்போது வளர்ந்துவிட்டார்கள். எல்லோரும் கடவுள் பக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். என் கணவர் ஐந்தாறு பிள்ளைகளோடு என்னை விட்டுவிட்டு இறந்து போய்விட்டார். நான் காலை முதல் இரவு வரை கடினமாக உழைத்தேன். இந்த பிள்ளைகளுக்கு உணவு உடை அளிக்க வேண்டுமானால் அப்படி உழைத்தால்தான் முடியும் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? என்னால் முடிந்த அளவிற்கு அவர்களை நன்றாக வளர்த்தேன். ஆனால், ஐயோ, நான் அவர்களுடைய ஆத்துமாக்களைக் குறித்து எண்ணிப் பார்க்கவில்லையே. எப்படி என்னால் எண்ணிப் பார்த்திருக்க முடியும்? நான் என்னுடைய ஆத்துமாவைக் குறித்தே நினைத்துப் பார்த்ததில்லையே. நான் இப்போது இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். ஆனால் அவர்களோ உலகப்பிரகாரமாகவும், கவலையீனமாகவும் இருக்கிறார்களே. இந்த நிலையை என்னால் மாற்ற முடியவில்லையே" என அழுதாள். தன் பிள்ளைகளின் மீதுள்ள பாசத்தினால் உந்தப்பட்டு, அவர்களிடம் சென்று அவர்களுடைய ஆவிக்குரிய நிலையைக் குறித்துப் பேசவேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டு, முதலாவதாக தனது மூத்த மகனுடைய வீட்டிற்கு சென்றிருக்கிறாள். அவனுக்கு இப்போது திருமணமாகி பிள்ளைகள் இருக்கிறார்கள். அவனிடம் தனது மனந்திரும்புதலைக் குறித்து கூறி, தனது இரட்சிப்பையும், கர்த்தரில்

அடைந்திருக்கும் மகிழ்ச்சியையும் பற்றி கூறத் தொடங்கும்போது, மகன் கொடூரமாக நகைத்து அவளை இகழ்ந்து பேசியது அவள் இருதயத்தை உடைத்துவிட்டிருக்கிறது. என்னால் இயன்ற அளவிற்கு அவளைத் தேற்றி ஆறுதல் அளிக்கத்தான் முடிந்தது. சிறுபிள்ளைகளை வளர்த்துக் கொண்டிருக்கிற வாலிபவயதுள்ளவர்களுக்கு நான் கூறுகிறேன், இந்த சந்தர்ப்பத்தைத் தவறவிட்டுவிடாதீர்கள். தவறவிட்டீர்களானால் நீங்கள் பின்னாளில் கதறவேண்டி வரும் :"ஓ அப்சலோம், என் மகனே, என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப் பதிலாக செத்தேனானால் நலமாயிருக்கும். உன்னுடைய அநியாயத்தின் காரணமாக நீ விழுந்தாய். உன்னுடைய இரத்தப்பழி உன் பெற்றோரின் கையில் கேட்கப்படுகிறது." இந்த கவலை நிறைந்த கேள்விக்குரிய பதில் பட்டயம் போலத் தாக்கிவிடாதபடிக்கு, ஞானமுள்ள பெற்றோர் சரியான வேளையிலே இக்கேள்வியைக் கேட்டுக் கொள்ளும்படியாக கடவுள் அருள் செய்வாராக,

## ஆ) எந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் இக்கேள்வி பொதுவாக உபயோகப்படுத்தப்படும்?

கேள்வி இன்னதென்று முதலில் பார்த்தோம். இரண்டாவதாக, அது கேட்கப்படும் சந்தர்ப்பங்களைப் பார்ப்போம். "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?"

இப்போது கேட்கப்பட்டிருக்கிற மாதிரி, ***சரீரப்பிரகாரமான நலனைக் குறித்து***ம் கேட்கப்படும். ஒரு பயங்கரமான அழிவு ஏற்பட்டு நொடிப்பொழுதில் நூற்றுக்கணக்கானவர்கள் பாதிப்படைந்திருக்கையில் இந்தக் கேள்வி எல்லோருடைய வாயிலிருந்தும் வரும். சென்ற புதன்கிழமை காலையில் அநேக குடும்பங்கள் இந்தக் கேள்வியைத்தான் கேட்டிருப்பார்கள். தங்களுக்கு அருமையானவர்கள் வீடுதிரும்பாததால் இரவு முழுவதும் விழித்திருந்து காத்திருந்தவர்கள், காலையில் வெளியிடப்பட்ட அந்த பயங்கரமான பட்டியலில் இந்தக் கேள்வியோடுதான் தங்களுக்கு அருமையானவர்களைத் தேடியிருப்பார்கள். மகனுக்காகவோ, தகப்பனுக்காகவோ, மகளுக்காகவோ, தாய்க்காகவோ இப்படி காத்திருக்கும் இரவுகள் எவ்வளவு பயங்கரமானவை. காலையில் வரும் செய்திகள் எவ்வளவு

துயரமானவை! என்னுடைய வீட்டிற்கு அருகாமையிலேயே ஒரு வீட்டார் அனைவரும் தங்கள் சிறுகுழந்தையை பணிப்பெண்ணின் பொறுப்பில் விட்டுவிட்டு, அந்த நாளை உல்லாசமாகக் கழிக்க வேண்டுமென்று சென்றிருந்தார்கள். அவர்களில் யாருமே வீடு திரும்பவில்லை. பணிப்பெண்ணை அனுப்பிவிடும்படிக்கும், அந்தக் குழந்தையை ஏற்றுக் கொள்ளும்படிக்கும் யாருமே வரவில்லை. எஜமானனும், எஜமாட்டியும், மற்றவர்களும் திரும்ப வராத நிலையில், குழந்தையை காத்துக் கொண்டிருந்த அந்தப் பணிப்பெண்ணின் கவலையை நீங்கள் கற்பனை செய்து பார்க்கலாம். இன்னொரு வீட்டில் புதிதாகப் பிறந்த குழந்தையோடு மாடியில் படுத்திருக்கும் ஒரு தாய். வெளியில் சென்றிருந்த அவரது கணவனும் மற்ற குழந்தைகளும் வீடு திரும்பவில்லை. இந்த மாதிரியான துயரங்கள் நமக்கு நேரிடாமல் இருப்பதாக! இம்மாதிரியான சந்தர்ப்பங்களில்தான் பயத்தோடு அந்த கேள்வி கேட்கப்படுகிறது, "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?"

***நோயின் கொடூரம் தாக்கும் காலங்களிலும்*** இந்தக் கேள்வி கேட்கப்படும். இருபத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் நிகழ்ந்த சம்பவங்கள் ஞாபகத்திற்கு வருகின்றன. நான் முதன்முதலில் லண்டனுக்கு வந்தபோது, காலரா வியாதி எங்கும் பரவியிருந்தது. இரவும் பகலும் வீடுவீடாக செல்ல வேண்டிய கடமைக்கு உட்பட்டிருந்தேன். பார்க் தெருவில் என் நண்பர்களை சந்திக்கும்போது ஒவ்வொரு முறையும், "அவர் இறந்து விட்டார், அந்த அம்மாள் மரித்துப் போய்விட்டார்கள்" என்கிற துயர செய்தியைப் பரிமாறிக் கொள்வோம். அந்த துயரத்தினால் நான் நோய்வாய்பட்டுகூட போனேன். நமக்குத் தெரிந்தவர்களையும் உறவினர்களையும் குறித்து இம்மாதிரியான கேள்வி எழும்புவது இயற்கையே, "அவர் இன்னும் உயிரோடிருக்கிறாரா? அவர் சுகமாயிருக்கிறாரா?"

வருங்காலத்தில் இந்த மாதிரியான துயரங்களை நீங்கள் உங்கள் வாழ்க்கைப் பாதையில் சந்திக்க நேர்ந்தால், உங்களுக்கு அருமையானவர்களை இழந்துவிட்டதான பயம் தோன்றியதானால், நீங்கள் கிறிஸ்தவர்களாக இருக்கும்பட்சத்தில் அவ்வேளைகளில் விசுவாசத்தை இழக்காமல் கடவுளை சார்ந்து இருங்கள் என புத்தி கூறுகிறேன். உங்கள் மனம் குழம்பிப் போகும் அளவிற்கு நீங்கள்

கவலை அடைந்தீர்களானால், ஆபத்துக் காலங்களில் உங்களால் ஒரு பிரயோஜனமும் இருக்காது என்பதை எண்ணிப் பாருங்கள். உங்கள் ஆத்துமாவில் நீங்கள் அமைதலைக் கொண்டிருந்தீர்களானால் நீங்கள் உபயோகமுள்ளவர்களாக இருப்பீர்கள். ஆனால் மனதின் கட்டுப்பாட்டை இழந்து, சூழ்நிலையின் பயங்கரத்தை எண்ணி மிகுந்த துயரத்திற்குள் ஆழ்வீர்களானால் உங்களால் எந்தப் பிரயோஜனமும் உதவியும் இருக்காது. பொறுமையோடு உங்கள் ஆத்துமாவைக் காத்துக் கொள்ளுங்கள். எப்படியும் உலகமானது கடவுளின் கரத்தில்தானே இருக்கிறது. கடவுள் பரலோகத்திலிருந்து தீர்மானித்திருக்காவிட்டால் பிள்ளையாண்டானாகிய அப்சலோம் இறந்திருக்க மாட்டான். உங்கள் பிள்ளைகள் உன்னதமானவரின் நடத்துதலுக்கு அப்பால் இல்லை. அவர்கள் உங்களுக்கு எவ்வளவுதான் அருமையானவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு எவ்வளவு பெரிய ஆபத்து வந்தாலும், ஆளுகிறவர் ஒருவர் இருக்கிறார். அவர் சகலத்தையும் ஆளுகிறார். பொறுமையில்லாமல் முறுமுறுப்பதைவிட அமைதலான ஜெபத்திற்கு அதிக வல்லமையுண்டு. உங்களுக்குப் பிரியமானவர்கள் இறந்துபோய்விட்டால், நீங்கள் விசுவாசத்தை இழப்பதன் மூலமாக அவர்களைத் திரும்பப் பெற முடியாது. அவர்கள் உயிரோடிருக்கையில் தேவையில்லாமல் நீங்கள் மனத்தளர்ச்சியாகவோ அவிசுவாசமாகவோ இருப்பது சரியல்ல. “அமைதலாய் இருப்பதிலேயே உங்கள் பெலன் இருக்கிறது.” நீங்கள் ஒரு கிறிஸ்தவர்கள் என்பதை நினைவில் வையுங்கள். கடவுளற்ற மற்றவர்களைப் போல இல்லாமல், கிறிஸ்தவர்கள் நிதானத்தோடு தங்களை அடக்கி ஆளவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறார்கள். விசுவாசத்தினால், கிறிஸ்தவர்கள் பதட்டமின்றி செயல்படுவது மற்றவர்களுக்கு ஆச்சரியத்தை வரவழைக்கும். மற்றவர்கள் பதறிக் கொண்டிருக்கையிலே, கிறிஸ்தவ ஆண்களும் பெண்களும் அமைதலோடு நடந்து கொள்வதைப் பார்க்கையில் “என்ன இது?” என்ற கேள்வி பிறருக்கு எழும். “கடவுளின் கரம் இதில் செயல்பட்டிருக்கிறது” என்பதை கிறிஸ்தவர்கள், தங்களை அறியாமலேயே பறைசாற்றுகிறவர்களாக காணப்படுவார்கள். ஆகவே நீங்கள் அந்த விசனமான கேள்வியை கேட்க நேரிடும்போது, கடவுள் மீதுள்ள விசுவாசத்தோடு, அமைதலாக உங்களுக்குள் கேட்டுக்கொள்ளுங்கள்.

ஆனால் நண்பர்களே, சில வேளைகளில் நாம் இந்தக் கேள்வியை நமது நண்பர்களைக் குறித்தும் பிள்ளைகளைக் குறித்தும் ***அவர்களுடைய நித்திய வாழ்க்கை சம்பந்தமாக*** கேட்க வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் மரித்துவிட்டார்கள். ஆனால் அவர்கள் கிறிஸ்துவுக்குள்ளாக மரிக்கவில்லையென்று நாம் அச்சப்படுகிறோம். ஆகவே நாம், "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?" என்கிறவிதமாக விசாரிக்கிறோம். கிறிஸ்தவ ஊழியக்காரரிடம் இந்தக் கேள்வியை கேட்கும்போது அது அவருக்கு மிகுந்த மனசங்கடத்தை வருவிக்கும். பெரும்பாலானவர்களின் நிலையைக் குறித்து அவரால் எதுவும்கூறக் கூடாமல் இருக்கும். மரித்தவரைக் குறித்து எதுவும் கூறும் அளவிற்கு அவருக்கு அநேகமாக மரித்தவரைப் பற்றி எதுவும் தெரியாமலிருக்கலாம். மரணப்படுக்கையில் இருந்த வேளையில் அவரை சந்திக்கச் சென்ற ஒன்றிரண்டு சந்தர்ப்பங்களில் அவர் கூறிய சில வார்த்தைகள் வேண்டுமானால் உற்சாகத்தைத் தருவதாக இருக்கலாம். இருந்தாலும் அதைக் கொண்டு என்ன சொல்ல முடியும்? மரணத்தறுவாயில் இருப்பவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதும், பிறரை ஏமாறச் செய்வதும் வெகு சுலபம். ஆகவே நாம் நியாயந்தீர்ப்பதையும் முடிவுகூறுவதையும் கடவுளின் கரத்திலேயே ஒப்புவித்துவிடுவது நல்லது. மரணப்படுக்கையிலிருந்தவரின் வாழ்க்கை முழுவதையும் நன்கு அறிந்திருந்தவரும், வியாதியின் தறுவாயில் அவரோடேகூடவே இருந்து அவரை மேலும் அறிந்திருந்தவர்கள் அவரது நிலையைக் குறித்து என்னவென்று தீர்மானிப்பது? இதற்கு நான் கூறும் பதிலாவது, முந்தைய காலங்களில் பக்தியாக இல்லாதவராக வாழ்ந்து, கடைசிகாலங்களில் மிகவும் தாமதமாக மனந்திரும்புதல் ஏற்பட்டாற்போலத் தோன்றினால், அதற்குரிய அடையாளங்களும் மிகவும் கொஞ்சமானதாகத்தான் தென்பட்டிருந்ததானால் - நம்பிக்கையிருந்தாலும், உண்மையின்படி தீர்மானித்துக் கொள்ளுங்கள். நீங்கள் நம்பிக்கை கொள்வதற்கு அனுமதியுண்டு, ஆனால் அது உள்ளதின்படி உண்மையாயிருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, நான் சிலபேரிடம் காண்கிற அஞ்ஞானத்தைக் கைவிடுங்கள். தங்கள் வாழ்நாள் முழுவதையும் கடவுள் பயமின்றி வாழ்ந்து முடித்தவர்கள், தங்கள் வாழ்நாளில் ஒருபோதும் கிருபையின் அடையாளத்தை சிறிதளவாவது காண்பிக்காமல் வாழ்ந்தவர்கள், மரணதறுவாயில் பக்தியின் அடையாளத்தை ஒன்றிரண்டு முறை காண்பித்துவிட்ட

காரணத்தினால் அவர்களுடைய மகனையாவது, மகளையாவது, நண்பனையாவது அணைத்துக் கொண்டு அவருடைய ஆத்துமா சுகமாக இருப்பதாக ஆறுதலாகக் கூறுகிற அஞ்ஞானத்தை விட்டுவிடுங்கள். உங்களுக்குள்ளாக வேண்டுமானால் நம்பிக்கை கொண்டிருங்கள். ஆனால் நீங்கள் என்ன வார்த்தைகளைக் கூறுகிறீர்கள் என்பதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். கடவுள் பக்தியில்லாமல் வாழ்ந்த அதிகமான நாட்களின் பலனைக் காட்டிலும், மரணதறுவாயில் கூறிய சில வார்த்தைகளுக்கு நீங்கள் அதிகமான மதிப்பளித்தீர்களானால் அது மிகவும் முட்டாள்தனமானது. அவை அந்தக் குடும்பத்தில் மீதியாயிருப்பவர்களுக்கு மிகுந்த கேடு விளைவிக்கும். தங்கள் வாழ்நாள் முழுவதும் இஷ்டம்போல வாழ்ந்துவிட்டு, மரிக்கும்போது பரிசுத்தவான்களாக ஆகிவிடலாம் என்கிற எண்ணத்தை அது அவர்களுக்குள் ஏற்படுத்திவிடும். தன்னுடைய மகன் கடவுள் பயமின்றி வாழ்ந்துவிட்டு, மரித்துப் போனபோது, ஒரு தகப்பன் தன்னுடைய மற்ற பிள்ளைகளைக் கூட்டிவைத்து, "பிள்ளைகளே, மரித்துப்போன உங்கள் சகோதரனைக் குறித்த நல்நம்பிக்கை எனக்கு இருக்குமானால் நன்றாக இருந்திருக்கும். அவன் தன் வாழ்நாள் முழுவதையும் கிறிஸ்தவனாக இல்லாமல் கழித்துப் போட்டான். அவன் முழுவதுமாக அழிந்துவிட்டான் என்றுதான் அஞ்சுகிறேன். அவன் வாழ்ந்ததைப் போல நீங்களும் வாழாதபடிக்கு நான் உங்களை அன்போடு எச்சரிக்கிறேன். இல்லையென்றால் அவனைப் போலத்தான் நீங்களும் மடிந்து போவீர்கள்" என்று ஒரு தகப்பன் சொல்வானாகில் அவன் கூற்றில் இருக்கும் உண்மையைக் குறித்து நாம் பாராட்டலாம். அப்படிப்பட்ட தகப்பனைப் போல ஒருவேளை என்னால் சொல்ல முடியாவிட்டாலும், அவ்வார்த்தைகளின் உண்மையை நான் மேன்மையானதாகக் கருதுவேன். "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?" என்கிற கேள்விக்கு நீங்கள் பதில் அளிக்கவேண்டியதாக இருந்தால், உங்களையும் மற்றவர்களையும் ஏமாற்றிக்கொள்ளும்விதமான நம்பிக்கையை அளிக்காதீர்கள். ஒருவனுடைய வாழ்க்கை முழுவதையும் அறியாதிருக்கும்பட்சத்தில் ஒருசில காரியங்களை வைத்துக் கொண்டு எதையும் தீர்மானித்துவிடாதிருங்கள். நிச்சயமிருந்தால்தான் எதையும் தீர்மானிக்க முடியும். ஏனென்றால், "அவர்களுடைய கனிகளால் அவர்களை அறிவீர்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறதே.

இளைஞர், முதிர்வயதானவர்கள் ஆகியோரின் ***ஆவிக்குரிய நிலையைக் குறித்து*** அவர்கள் உயிரோடே இருக்கையிலேயே, நாம் கவலையுடன் கேட்கிற நடைமுறைக் கேள்வி "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?".

"பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?" என்பதற்கு அவன் எதிர்காலத்தில் சுகமாயிருப்பானா? என்பது அர்த்தம் - அதாவது இந்த உலகத்திலும் இனி வரப்போகும் உலகத்திலும் அவன் சுகமாயிருப்பானா எனக் கேட்கும் கேள்வி. கடவுளை அறியும்படி விசாரித்துக் கொண்டு ஒருவன் வருவதை நாம் காண்கிறோம். தனது கவலைகளையெல்லாம் அவன் கூறுவதைக் கேட்கிறோம். அவனது கண்ணீரைக் காண்கிறோம். அதனால் அவன் பாதுகாப்பான நிலைக்கு வந்துவிட்டதாகக் கூற முடியுமா? இல்லை, அத்தோடு அவன் நிறுத்திக் கொண்டானாகில் பாதுகாப்பாக இல்லை. அதுமுதல் அவனை கடவுளின் ஆலயத்தில், நன்றாக கவனித்துக் கேட்கிறவர்களின் மத்தியில் இருக்கக் காண்கிறோம். பிரசங்கத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் உன்னிப்பாக கவனிப்பதற்காக ஆசனத்தில் முன்னுக்கு வருகிறான். ஆம், அவன் கவனத்தோடு கேட்கிறான் என்பது நிச்சயம். இப்போது அவன் பாதுகாப்பாக இருக்கிறானா? அத்தோடு நிறுத்திக் கொண்டானாகில் அவன் பாதுகாப்பாக இல்லை. அவன் தேடுகிறவன்தான். அதைக் குறித்த சந்தேகமில்லை. அவன் இப்பொழுது வேதாகமத்தை வாசிக்கத் தொடங்கியிருக்கிறான். ஜெபத்தின் மூலமாக கடவுளிடம் வருவதற்கு முயற்சிக்கிறான். இல்லை, இதுவரைக்கும் வந்தால்கூட அவன் பத்திரமாக இல்லை. அவன் இயேசுக்கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிற நிலைக்கு வரவேண்டும். பரிகாரபலியாகிய அவரது இரத்தத்திற்கு தன்னை ஒப்புவிக்க வேண்டும். இல்லையென்றால் அவன் பாதுகாப்பாக இல்லை. ஞாயிறு பாலர் பள்ளியின் ஆசிரியர்களே, உங்கள் மாணாக்கர்களைக் குறித்து நீங்கள் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி, அவர்கள் பாதுகாப்பான நிலையில் இருக்கிறார்களா? அவர்கள் இருளிலிருந்து வெளிச்சத்தை நோக்கி திரும்பியதான நிலைக்கு வந்துவிட்டார்களா? சாத்தானின் பிடியிலிருந்து இயேசுக்கிறிஸ்துவின் கரத்துக்குள் வந்துவிட்டார்களா? "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?" அவன் இரட்சிக்கப்பட்டிருக்கிறானா? என்பதுதான் விஷயம்.

கிறிஸ்தவர்களில் ஒரு பிரிவினரைக் குறித்து கேள்விப்படுகிறேன். ***இரட்சிக்கப்பட விரும்புகிறவர்களை*** அவர்கள் தங்கள் அங்கத்தினராக ஏற்றுக் கொள்கிறார்களாம். அவர்களுடைய திட்டத்தை நான் நியாயந்தீர்க்கவில்லை, ஆனால் அதை பின்பற்ற நான் துணியமாட்டேன். இரட்சிக்கப்பட ஆசைப்படுதல் என்பது சாதரணமான விஷயம். விரும்புதல் வெகுசுலபம். இரட்சிக்கப்படுதல் என்பதில்தான் விஷயமே இருக்கிறது. அந்தக் கேள்வியின் மீதில்தான் நமது கவனம் முழுவதும் அதிகரிக்க வேண்டும். "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?" - சுகமாக இருப்பதாக நம்பிக் கொள்வதாலோ, தூண்டுவதாலோ, அறிவிப்பதாலோ அல்ல, உண்மையில் "சுகமாயிருக்கிறானா?" அவன் கர்த்தருக்குள்ளாக நித்தியமான பாதுகாப்பைப் பெற்றிருக்கிறானா? இதை நீங்கள் அனைவரும் கேட்டு, உங்களுக்குள் பதில் கூறிக் கொள்ளுங்கள்.

## இ) "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?" என்கிற கேள்விக்கு வரக் கூடிய பதில்கள்.

வேற்றூர்களிலிருந்து லண்டன் மாநகரத்திற்கு வந்திருக்கும் பிள்ளைகளைக் குறித்து இந்த கேள்வியைக் கேட்கும் கடிதங்கள் அடிக்கடி வருகிறது - "என் மகன் ஹேரி சுகமாயிருக்கிறானா! என் மகன் ஜான் சுகமாயிருக்கிறானா?". சிலவேளைகளில் அதற்கு பதில்: "இல்லை, அவன் சுகமாக இல்லை. அவன் மிகுந்த ஆபத்தில் இருப்பதை வருத்தத்தோடு தெரிவிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்" என்று பதில் அளிக்க வேண்டியதாக இருக்கிறது. ஒருவன் பாதுகாப்பாக இல்லை என்பதை எப்போதெல்லாம் அறியலாம் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

அவன் அப்சலோமைப் போல தன் தகப்பனுக்கு விரோதமாக செயல்படும்போது அவன் பாதுகாப்பாக இல்லாமலிருக்கிறான். அவன் ஆராதனைக் கூட்டங்களில் கலந்து கொள்கிறவனாய் இருக்கலாம். ஜெபிக்கிறவனாய் இருக்கலாம். கிறிஸ்தவன் என்கிற பெயரை உடையவனாகக்கூட இருக்கலாம். ஆனால் அவன் தன் பெற்றோரை விரோதிக்கும்பட்சத்தில் அவன் பாதுகாப்பானவனாக இல்லை. அப்படி இருக்கவே முடியாது. வேதவசனம் கூறுகிறது, "தான்

கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?" சகோதரன் என்கிற இடத்தில் தகப்பன் என்கிற வார்த்தையை வைத்துப் படித்தால் இவ்வசனம் இன்னும் வலிமையாக இருக்கும். பூலோகத்திலுள்ள தன் பெற்றோர் மீது அன்புகூராமலிருக்கிறவன், பரலோகத்திலிருக்கிற தன் பிதாவில் எப்படி அன்புகூருவான்? அப்படிப்பட்டவன் பாதுகாப்பான நிலையில் இல்லவே இல்லை.

"பிள்ளையாண்டான் சுகமாயிருக்கிறானா?" இல்லை. சமீபகாலங்களில் அவனை தீயநண்பர்களோடு பார்க்கிறோம். நல்லொழுக்கம் இல்லாத மற்ற இளைஞர்களோடு அவன் பழகிக் கொண்டிருக்கிறான். தரக்குறைவான பாடல்களும் பேச்சுவார்த்தைகளும் அதிகமாக இருக்கின்ற இடத்திலே அவன் தன் மாலைப்பொழுதுகளை செலவிட விரும்புகிறான். இளைஞனாகிய அப்சலோம் அவ்விடத்திலே பாதுகாப்பாக இல்லை. அவன் ஒருவேளை ஒழுக்கமுடையவனாக இருந்தாலும், இந்த மாதிரியான சகவாசத்தை நாடி அவன் போவானாகில் அவனது ஒழுக்கம் அதிக நாட்களுக்கு நீடிக்காது. நீங்கள் நிலக்கரி இருக்கும் இடத்திலே உட்கார்ந்தீர்களானால், அது உங்களை சுடாவிட்டாலும், அதன் கருப்பு நிறம் உங்கள் மீது ஒட்டிக் கொள்ளும். நீங்கள் தீயவர்களின் தோழமையை தேர்ந்தெடுத்தீர்களானால், ஒருவேளை நீங்கள் அவர்கள் அளவுக்குக் கெட்டுப் போகாவிட்டாலும் உங்களுடைய நற்பெயரைக் கெடுத்துக் கொள்வீர்கள். இங்கேயும் அப்சலோம் சுகமாயிருப்பதில்லை.

அப்சலோம் பத்திரமாயில்லாமற் போனதற்கு இன்னொரு காரணம் அவன் விலையுயர்ந்த பழக்கவழக்கங்களை ஏற்படுத்திக் கொண்டதுதான். "அப்சலோம் இரதங்களையும் குதிரைகளையும், தனக்குமுன் ஓட ஐம்பது சேவகரையும் சம்பாதித்தான்" என்று வேதவசனம் குறிப்பிடுகிறது. இவ்விதமான ஆடம்பரம் தீங்குக்கு அடையாளமாயிருக்கிறது. தேவையில்லாதவைகளில் பணத்தை ஊதாரித்தனமாக செலவிடுகிற இளைஞன் பாதுகாப்பாக இருப்பதில்லை. சொற்ப சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிற சில இளைஞர்கள் இந்த லண்டன் மாநகரத்திலே பணக்காரர்கள் போல நடந்து கொள்வதைப் பார்க்கையில் அதில் ஏதோ தவறு இருக்கிறது என்று நாங்கள் அஞ்சுகிறோம். எளியவர்களாய் இருந்தாலும் உண்மையையும் மரியாதையையும் உடைய இவர்களுடைய தகப்பன்மார் இவர்களை இவ்வளவு டாம்பீகமான ஆடைஅலங்காரத்தில்

கண்டார்களானால் தங்கள் மகன்களை அடையாளங்கண்டு கொள்ளகூட மாட்டார்கள். தங்களுடைய தகுதிக்கும் வரம்பிற்கும் மிஞ்சி இளைஞர்கள் பகட்டான வாழ்வை நாடி ஓடுவது தீமைக்கு அடையாளம். அவரவர் வருமானத்திற்கும் நிலமைக்கும் ஏற்ப செலவழிக்க மனிதனுக்கு உரிமையிருக்கிறது. பகட்டான வாழ்க்கை, தீமையை சுட்டிக்காண்பிப்பதாக இருந்தாலும், பதவியையும் பொக்கிஷத்தையும் பொறுத்து செல்வந்தர்கள் வாழுகின்ற முறையைக் குறித்து நான் எதுவும் சொல்வதற்கில்லை. சில விடலைப் பருவத்தினர், படிப்பை முடிக்கும் தறுவாயிலிருப்பவர்கள், அவர்களின் கைச்செலவுக்குக் கொடுக்கப்படும் தொகை அவ்வளவு அதிகமாகவும் இல்லை. இருந்தாலும் அவர்கள் மிகவும் ஆடம்பரமாக சகலவிதமான உல்லாசங்களிலும் ஈடுபடுவதை நான் காணும்போது, இந்த "பிள்ளையாண்டானாகிய அப்சலோம்" சுகமாக இல்லை என்று நிச்சயமாக உணருகிறேன்.

இன்னொரு காரியம். ஒருவனுடைய தோற்றத்தை வைத்தே அந்தப் பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாக இல்லை என்பதை நீங்கள் கூறிவிடலாம். "இஸ்ரவேலர் அனைவருக்குள்ளும் அப்சலோமைப்போல் சவுந்திரியமுள்ளவனும் மெச்சிக் கொள்ளப்பட்டவனும் இல்லை. உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அவனில் ஒரு பழுதும் இல்லாதிருந்தது. அவன் தன் தலைமயிர் தனக்கு பாரமாயிருப்பதினால் வருஷாந்தரம் சிரைத்துக் கொள்ளுவான். சிரைக்கும்போது அவன் தலைமயிர் ராஜாவுடைய நிறையின்படி இருநூறு சேக்கல் நிறையாயிருக்கும் " என்று வேதவாக்கியம் கூறுகிறது. தங்கள் ஆடை அலங்காரத்திலும், முடியை அழகுபடுத்திக் கொள்வதிலும், தங்கள் தோற்றத்தைக் குறித்தும் வாலிபவயதினர் அளவுக்கு மீறி அக்கறை செலுத்தும்போது அவர்கள் பாதுகாப்பாக இல்லை. ஏனென்றால் பெருமைப்படுதல் ஆபத்தில் வந்து முடியும். இளைஞர்களும் யுவதிகளும் அவரவர் நிலைமைக்கேற்ப உடுத்திக் கொள்ளட்டும். அதற்காக நாங்கள் அவர்களைக் குற்றப்படுத்துவதில்லை. **Mr. Jay** என்பவர் கூறியது என் நினைவுக்கு வருகிறது, "பெண்களே உங்கள் வருமானம் எவ்வளவு என்பதை எனக்குச் சொல்வீர்களானால், நீங்கள் எத்தனை ரிப்பன்களைக் கட்டிக் கொள்ளலாம் என்பதை நான் உங்களுக்குக் கூறுவேன்" என்றார். நானும் அப்படியேதான் கூறுவேன் என நினைக்கிறேன். தங்கள் அழகிலும், உடையிலும் வீணாகக் காலத்தை செலவிடுகிற

இளம்வயதினர் பலவிதமான சோதனைகளுக்குள் அகப்படுகிறார்கள். அவர்களுடைய நற்குணங்களையும், நல்ல தீர்மானங்களையும் அரித்துப் போடுகிற புழுவாக அது அவர்களுடைய மூளையிலும் இருதயத்திலும் செயல்படுகிறது. அழகிய தோற்றத்தில் அதிகமாக அக்கறை செலுத்துகிற வாலிபவயதினர் பாதுகாப்பான நிலையில் இல்லை.

இளைஞனாகிய அப்சலோம் சுகமாக இல்லை என்பது அவன் துன்மார்க்க காரியங்களில் ஈடுபட ஆரம்பித்தபோது நமக்கு நிச்சயமாகத் தெரியும். அப்சலோம் என்ன செய்தான் என்பதை சிந்தித்துப் பாருங்கள். அதைக் குறித்து நான் விவரமாக பிரசங்கிக்க அவசியமில்லை. அநேகமான இளைஞர்கள் வெளிப்பார்வைக்கு கெட்டவர்கள் போலத் தோன்றாவிட்டாலும், அவர்கள் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் வழிவிலகிப் போயிருக்கிறார்கள். அவர்களுடைய இரகசியம் முழுவதையும் அம்பலமாக்கினால், சமுதாயத்தில் அவர்களை ஏற்றுக் கொண்டிருக்கிற மரியாதைக்குரியவர்களின் அருகில் அமரவும் வெட்கப்படுவார்கள். அப்படிப்பட்ட பிள்ளையாண்டானாகிய அப்சலோம் பத்திரமானவனாக இல்லை.

“பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?” இல்லை, அரசே, “நாங்கள் கடைசியாக அவனைப் பார்த்தபோது, யுத்தத்தில் ஜனங்கள் அவனை சுற்றிலும் மடிந்து கொண்டிருக்கக் கண்டோம்.” ஆகவே அவன் சுகமாயில்லை. மற்றவர்கள் விழுந்து கொண்டிருக்கிற இடத்தில் அவன் எப்படி பத்திரமாக இருக்க முடியும்? ஆம், நான் ஒருமுறை இளைஞன் ஒருவனைக் கீழ்த்தரமான கேளிகை விடுதியிலிருந்து நள்ளிரவில் வந்துகொண்டிருக்கக் கண்டேன். “இந்த பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயில்லை” என நான் நினைத்துக் கொண்டேன். ஏனெனில் அங்கு செல்பவர்களில் அநேகர் அழிந்து போகிறார்கள். குதிரைப் பந்தயத்தில் பணம் கட்டிக் கொண்டிருக்கிறவனைக் காண்கிறேன். “இந்த பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயில்லை, ஏனெனில் அங்கு செல்கிற திரள்கூட்டத்தார் அழிந்து போகிறார்கள்” என நினைத்தேன். கட்டுப்பாடுகளற்ற விதத்தில் வாழ்கிற கூட்டத்தாரோடு ஒரு மாலையில் அவனைக் கண்டேன். நான் எனக்குள் சொல்லிக் கொண்டேன், “இந்தப் பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயில்லை. விலைமதிப்பில்லாத வாழ்க்கையை வேட்டையாடுகின்ற கூட்டத்தால் இவன் சூழப்பட்டிருக்கிறானே.”

மற்றவர்கள் விழுந்து போய்க் கொண்டிருக்கிறதான இடத்தில் நாம் இருப்பது நமக்கு ஒருபோதும் பாதுகாப்பானதல்ல. அவர்கள் அழியும்போது நாம் மாத்திரம் அழியமாட்டோமா? இதிலுள்ள ஆபத்தை நான் அவனிடம் சுட்டிக் காட்டியபோது அவன் அதிலுள்ள ஆபத்தைப் பாராமல் என்னிடம் கோபமாகப் பேசினான். தன்னை எப்படிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று தனக்குத் தெரியும் என்றான். அவன் கூறுவதை சுலபமாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் அவனைத் துன்மார்க்கனாய் ஆக்கக்கூடிய கீழ்த்தரமான கேளிக்கை விடுதிகளுக்குப் போய்க்கொண்டிருக்கிறான். ஆனால் அவன் கூறிக்கொள்வது: "தங்களைப் பாதுகாத்துக் கொள்ள இயலாத சில இளைஞர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் என்னால் என்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். நான் விரும்புகிற இடத்தில் என்னால் எல்லைக்கோடு போட்டுக் கொள்ள முடியும். நான் உல்லாசத்தை விரும்புகிறவன். ஆனால் நான் கெட்டவனல்ல. நான் சுதந்திரப்பறவை, நான் துன்மார்க்கனல்ல." உண்மைதான் மகனே, ஆனால் எழுதப்பட்டிருக்கிறதே, "பிள்ளையாண்டானாகிய அப்சலோம் பத்திரமாக இல்லை" என்று. பத்திரமாக இருப்பதாக அவன் நினைத்துக் கொண்டிருப்பதில் பாதியளவுகூட அவன் பத்திரமாக இல்லை. தன்னைக் குறித்து மிதமிஞ்சிய நம்பிக்கை கொண்டிருப்பது அதிக ஆபத்தானது. அதிலும் மற்றவர்கள் விழுந்து கொண்டிருக்கிற இடத்தில் தன்னால் ஜெயித்துவிட முடியும் என நினைத்துக் கொண்டிருப்பது ஆபத்தானது. இந்தப் பிள்ளையாண்டானாகிய அப்சலோம் பத்திரமாக இல்லை.

இன்று இரவிலே இங்கு வந்திருக்கிற இளைஞனைக் குறித்த விளக்கமே நமது கேள்விக்குரிய அடுத்த பதிலாகும். அவன் ஒரு நல்ல இளைஞன். எல்லோரும் அவனை அறிந்திருக்கிறோம். அவனை நேசிக்கிறோம். நம் மத்தியில் அவன் வருவதைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறோம். அவன் சுவிசேஷத்தை மிகவும் கவனமாகக் கேட்பவன். சுவிசேஷத்தை நேசிப்பவன், ஆனால் அவன் இன்னும் முடிவெடுக்கவில்லை. கிறிஸ்துவை தனது கர்த்தராக அறிக்கையிட்டு, கடவுளின் ஜனங்களோடு சேர்ந்து இருப்பதைக் குறித்த முடிவுக்கு வரவில்லை. "கொஞ்சம் குறைய என்னைக் கிறிஸ்தவனாக சம்மதிக்கப் பண்ணுகிறாய்" என்று சொல்லுகிற நிலையிலே காணப்படுகிறான். ஆனால் இன்னும் அவன் சம்மதிக்கவில்லை. இந்த இளைஞன்

பத்திரமாக இருக்கிறானா? இல்லை. நம்பிக்கையோடு இருக்கிறான். கடவுள் ஆசீர்வதிக்கட்டும்! அவனுடைய பாதுகாப்பிற்காக நாமும் முடிந்த அளவு ஜெபிப்போம். ஆனால் அவன் இன்னும் பாதுகாப்பாக இல்லை. நதியில் மூழ்கிப்போன பிரின்ஸஸ் ஆலிஸ் என்கிற மரக்கலத்திலிருந்து மீட்டு எடுக்கப்பட்டாலும் அவர்கள் அனைவரும் மடிந்திருந்தனர். ஏறக்குறைய பாவத்திலிருந்து மீண்டுவிட்டேன் என்கிறவர்கள் அனைவரும் காணாமற் போனவர்களே. ஏறக்குறைய உயிரோடிருக்கிறேன் என்பீர்களானால் நீங்கள் மரித்தவர்களே. கொஞ்சங்குறைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறதென்றால் நீங்கள் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டவர்கள். ஏறக்குறைய உயிர்ப்பிக்கப்பட்டிருப்பதாக நினைத்தால் உயிர்ப்பிக்கப்படவேயில்லை. கொஞ்சங்குறைய கிறிஸ்தவன் என்றால் நீங்கள் கடவுளற்றவர்கள், நம்பிக்கையில்லாதவர்கள். நீங்கள் ஏறக்குறைய இரட்சிக்கப்பட்டவர்களாக மரித்தால் நீங்கள் மொத்தத்தில் நஷ்டத்திற்குள்ளாகவே இருப்பீர்கள்.

ஓ, எனதருமை இளம் சகோதரரே! "ஆம் இந்த பிள்ளையாண்டானாகிய அப்சலோம் பத்திரமாக இருக்கிறான். அவன் தீர்மானித்துவிட்டான். அவன் தன்னை இயேசுக்கிறிஸ்துவின் கரத்தில் ஒப்புவித்துவிட்டான். இயேசுக்கிறிஸ்து அவனைக் கடைசிமட்டும் காத்துக் கொள்ளுவார்" என்று உங்களைக் குறித்த கேள்விக்கு விடையளிக்க ஆசைப்படுகிறேன். பரிசுத்தஆவியானவர்தாமே இதற்கு உங்களை வழிநடத்துவாராக.

இன்னொரு சந்தோஷமான காரியம் மீதியாயிருக்கிறது. அந்தக் கேள்விக்கு மிகுந்த சந்தோஷமான விடையொன்றிருக்கிறது. அதை நான் கூறப் போகிறேன் "ஆம்." பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறான்.

எப்படி? ஏனென்றால் அவன் கிறிஸ்துவில் ஒரு விசுவாசி. அவன் தன்னை இயேசுவுக்கு ஒப்புவித்திருக்கிறான். தன்னைத் தானே பாதுகாத்துக்கொள்ள முடியாது என்பது அவனுக்குத் தெரியும். ஆகவே கிறிஸ்து அவனை பாதுகாத்து இரட்சிக்கும்படியாக அவன் கிறிஸ்துவிடம் வந்திருக்கிறான். கிறிஸ்துவினுடையவனாக என்றென்றைக்கும் இருக்கும்படியாக அவன் தன்னை முழுவதுமாக கிறிஸ்துவின் கரத்தில் ஒப்படைத்திருக்கிறான்.

இந்த இளைஞன் இரட்சிக்கப்பட்டிருக்கிறான். ஏனென்றால் அவன் சுவிசேஷத்தை நேசிக்கிறான். வீணானவைகளைக் கேட்பதற்கு எங்கும் போகாமல், சுவிசேஷத்தைக் கேட்பதற்கு மாத்திரம் செல்கிறான். சத்தியத்தில் உறுதியாயிருக்கிறான். களங்கமில்லாத ஞானப்பாலை அறிந்திருக்கிறான். கள்ள உபதேசங்களினால் வஞ்சிக்கப்பட்டு வழி-விலகிவிட மாட்டான். ஏனென்றால் அவன் அதை வெறுக்கிறான். இங்கேயும் அங்கேயும் போய் பலகாரியங்களைக் கேட்டுக் கொண்டிருப்பதில் அவனுக்கு மகிழ்ச்சியில்லை. தனது ஆத்துமாவை இரட்சித்தது எதுவென்று அவனுக்குத் தெரியும். அந்த ஆரோக்கியமான உபதேசத்தை விடாமல் பற்றிக் கொண்டிருப்பான். இந்த இளைஞன் பத்திரமாக இருக்கிறான்.

இவன் பத்திரமாக இருக்கிறான் என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால் அவன் மிகுந்த தாழ்மையுள்ளவன். அவன் இன்னும் பூரணமடையவில்லை. அப்படி அவன் சொல்லிக் கொள்வதுமில்லை. தனது நிலையைக் குறித்து அவன் பெருமை கொள்வதில்லை. குழுவில் தன்னை முதன்மையானவனாகக் காட்டிக் கொள்வதில் அவனுக்கு விருப்பமில்லை. உபயோகமாக இருக்கும்விதத்தில் எவ்விடத்திலிருந்தாவது செயல்பட ஆர்வமுள்ளவன். தான் ஒரு சரியான கிறிஸ்தவனா என்கிற கேள்வியை அடிக்கடி கேட்டு, தன்னை கிருபைக்கு ஒப்புவிக்கிறான். அவன் மிகவும் தாழ்மையுள்ள இளைஞன். ஆகவே அவன் பாதுகாப்பாக இருக்கிறான். அப்படிப்பட்டவனை கர்த்தர் பாதுகாக்கிறார். மேலும் அவன் தன்னைக் குறித்த அவநம்பிக்கை உடையவன். தவறான பாதையில் சென்றுவிடுவோமோ என்கிற பயத்தில் அடியெடுத்து வைக்க எப்போதும் தயங்குகிறவன். பாதை காட்டும்படியாக எப்போதும் முழங்காலில் நின்று மன்றாடுபவன். கடவுளின் நடத்துதலுக்காக காத்திருப்பவன். கர்த்தருடைய வசனமும் ஆவியானவரின் வழிநடத்துதலும் இல்லாமல் எந்தக் காரியத்தையும் செய்யத் துணிய மாட்டான். அவன் ஜெபிக்கிற மனிதன். ஆகவே அவன் பாதுகாப்பாக இருக்கிறான். கிருபாசனத்தண்டையிலே கிட்டிச் சேர்ந்தவனை யாரால் வீழ்த்த முடியும்? தினசரி வாழ்க்கையில் மிகவும் கவனத்தோடு நடக்கிறவன். கர்த்தரின் சித்தத்திற்கு கீழ்ப்படிய தன்னை ஒப்புவிக்கிறவன். பரிசுத்தமாக நடப்பதற்கு முயற்சிக்கிறான். பரிசுத்தமாக இருப்பதே பாதுகாப்பானது.

உலகமக்கள் அவனை போலியானவன் என்றும் மாய்மாலக்காரன் என்றும் கூறுகிறார்கள். சகலராலும் இகழ்ந்து ஒதுக்கப்பட்ட மீட்பரின் சிஷ்யன் இவன் என்று முத்திரை குத்துகிறார்கள். அவன் ஒரு குணசாலி, இல்லையென்றால் அவனை இவ்வளவு துன்பப்படுத்த மாட்டார்கள். கடவுளின் ஜனங்களோ அவனை நேசிக்கிறார்கள். அவனும் அவர்களை நேசிக்கிறான். அவன் அவர்கள் மத்தியில் தங்குகிறான். கடவுளின் ஆலயத்தைக் குறித்து அவன் கூறுவதாவது, "இங்கேதான் எனக்கு அருமையான நண்பர்களும் உறவினர்களும் இருக்கிறார்கள், இங்கே தேவனாகிய என் மீட்பர் ஆளுகிறார்."

இப்படிப்பட்ட இளைஞனைக் குறித்து அவனுடைய தகப்பனுக்கும் நண்பர்களுக்கும் எழுதுங்கள், "இந்த பிள்ளையாண்டான் சுகமாயிருக்கிறான்" என்று. அவன் கிறிஸ்துவில் இருக்கிறான். அவன் கிறிஸ்துவின் சபையில் இருக்கிறான். அவன் கடவுளுக்கு ஊழியம் செய்ய ஆவலாயிருக்கிறான். அவன் தனது எஜமானனுக்காக வேலை செய்ய ஆரம்பித்துவிட்டான். அவன் இயேசுவிடம் ஆத்துமாக்களை அழைத்துவர முயற்சிக்கிறான். பரிசுத்தஆவியானவர் தேவனுக்கு மகிமை வரும்படியாக அவனிலும் அவன் மூலமாகவும் கிரியை செய்கிறார். ஆம், அவன் தகுந்த பாதுகாப்பில் இருக்கிறான் "இயேசுவின் கைகள் காக்க" பத்திரமாக இருக்கிறான்.

*(செப்டம்பர் 5, 1878ஆம் ஆண்டு, மெட்ரோபாலிடன் டாபர்நாகிள், நியுயிங்டன் என்கிற இடத்திலே, வியாழன் மாலை, ரெவ. சார்லஸ் ஸ்பர்ஜன் அளித்த தியானத்தின்(1433) சாராம்சம்)*

- - - - - - -

# 5. பட்டுப்போன அத்திமரம்

*அவர்களை விட்டு நகரத்திலிருந்து புறப்பட்டு, பெத்தானியாவுக்குப் போய், அங்கே இராத்தங்கினார். காலையிலே அவர் நகரத்துக்குத் திரும்பி வருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது வழியருகே ஒரு அத்திமரத்தைக் கண்டு, அதனிடத்திற் போய், அதிலே இலைகளையன்றி வேறொன்றையுங் காணாமல்: இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக் கடவது என்றார். உடனே அத்திமரம் பட்டுப் போயிற்று. சீஷர்கள் அதைக் கண்டு: இந்த அத்திமரம் எத்தனை சீக்கிரமாய்ப் பட்டுப்போயிற்று! என்று சொல்லி ஆச்சரியப்பட்டார்கள்" மத் 21:17-20.*

இது ஒரு அற்புதம் கலந்த உவமையுமாகும். அற்புதங்களைக் குறித்த புத்தகங்கள் நம்மிடம் உண்டு, அதேபோல உவமைகளைக் குறித்த புத்தகங்களும் உண்டு. இந்த சம்பவத்தை நாம் இவற்றுள் எதோடு சேர்க்கலாம் என்று கேட்டால் இரண்டிலும் சேர்த்துக் கொள்ளுங்கள் என நான் பதிலளிப்பேன். தனிப்பட்ட வகையில் இது ஒரு அற்புதமான சம்பவம். அத்தோடுகூட மனதில் பதியும் உவமையுமாகும். இது, ஒரு பொருளை மாதிரியாகக் கொண்டு நமது கர்த்தர் வெளிப்படுத்திய உவமை. மனிதரின் கண்களுக்கு முன்பாக அவர் கொண்டுவருகிற இந்த உண்மையை, அவர்களுடைய மனதில் ஆழமாகப் பதியும்படி செய்கிறார். இதை ஒரு உவமையாகவே நான் உங்களுக்கு முன்பாக அதிகமாக எடுத்துக் காண்பிக்கவிருக்கிறேன். அவ்விதமாக நீங்கள் இந்த சம்பவத்தைப் பார்க்கவில்லையானால், அதைத் தவறாக விளங்கிக் கொண்டுவிடுவீர்கள். வேதாகமத்தைக் காட்டிலும் நாம் ஏதோ அதிக புத்திசாலிகள் போல எண்ணிக் கொண்டு, அதை சீர்தூக்கிப் பார்க்க நம்மால் முடியும் என்பது போன்ற அலட்சிய மனப்பான்மையோடே வேதாகமத்தை நாம் கையாளுவதில்லை. மனிதனுடைய ஆவியைக் காட்டிலும் பரிசுத்தஆவி மிக உயர்ந்தது என நாம் நம்புகிறோம். மேலும், எது சரி எது நல்லது என்பதை எந்த மனிதனைக் காட்டிலும் சிறப்பாகத் தீர்மானிக்கக் கூடியவர் நமது கர்த்தரும் ஆண்டவருமாகிய இயேசுக்கிறிஸ்து என்பதையும் நாம் விசுவாசிக்கிறோம். நாம் இருக்க வேண்டிய இடம் அவர் பாதத்தின் அருகே. நாம் குற்றம் கண்டுபிடிக்கிறவர்கள் அல்ல, நாம் அவரைப் பின்பற்றுகிறவர்கள்.

இயேசு எதை செய்தாலும், என்ன கூறினாலும் அதை ஆழ்ந்த மரியாதையோடு கவனிப்பவர்கள். அவர் கூறுபவைகளிலிருந்து நம்மால் கூடியமட்டும் அதிகமாக அறிந்து கொள்ளவேண்டும் என்பதே நமது பிரதானமான வாஞ்சையாகும். அவருடைய எளிமையான செயல்களில் நாம் அபூர்வமானவைகளைக் காண்கிறோம். அவருடைய எளிமையான வார்த்தைகளில் நாம் ஆழமான போதனைகளைப் பெற்றுக் கொள்கிறோம். அவர் எதையாவது சொன்னாலோ அல்லது செய்தாலோ, மோசே முட்செடியின் அருகில் நின்ற வண்ணமாக, நாமும் பரிசுத்த பூமியில் நிற்பதைப் போல உணருகிறோம்.

பொறுப்பற்ற மனிதர்கள், இந்த சம்பவத்தைக் குறித்து சிறிதும் ஞானமில்லாத வகையில் நம் முன் பேசியிருக்கிறார்கள். நமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து பசியடைந்ததின் நிமித்தமாக, தனது பசியை ஒன்றிரண்டு அத்திப்பழங்களை சாப்பிட்டுத் தீர்த்துக் கொள்ளலாம் என்கிற நோக்கில், தவறுதலாக எண்ணி அந்த அத்திமரத்தண்டையில் சென்றுவிட்டார் என்பது போல அவர்கள் வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். அது அத்திப்பழக் காலமாயிராதபடியினால் அவர் அதில் பழத்தை எதிர்பார்த்ததே சரியில்லை, அதுமட்டுமில்லாமல் அவர் வெறுத்துப் போய், மரத்திற்கு ஏதோ பொறுப்பு இருப்பது போல அதை சபித்துப் போடுகிறார் என்று பேசியிருக்கிறார்கள்.

இந்த சம்பவத்தை சரியான கண்ணோட்டத்தில் பார்க்காததினால்தான் அவர்கள் இப்படிப்பட்ட எண்ணங் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் கூறுவது சரியல்ல. எருசலேமின் அழிவைக் குறித்து நமது கர்த்தர் தமது சீஷர்களுக்குக் கற்பிக்க விரும்பினார். எருசலேமில் அளிக்கப்பட்ட வரவேற்பானது அவருக்கு பல நன்மைகளை வாக்களிப்பது போலத் தோற்றமளித்தது. ஆனால் முடிவில் ஒன்றுமில்லாத நிலைதான் ஏற்பட்டது. ஓசன்னா என்கிற அவர்களுடைய ஆர்ப்பரிப்பு, முடிவில், "அவனை சிலுவையில் அறையுங்கள்" என்கிற கூச்சலாக மாறிற்று.

எருசலேம் நகரம், நேபுகாத்நேச்சரால் முற்காலத்தில் அழிக்கப்பட்ட போது, தீர்க்கசரிசிகள் அதைக் குறித்து எச்சரித்துப் பேசியதோடு மாத்திரமல்லாமல், ஜனங்களை உணர்த்தக்கூடிய விதமான அடையாளங்களையும் உபயோகித்தார்கள். நீங்கள் எசேக்கியேல் புத்தகத்தைத் திறந்து வாசித்தீர்களானால் அதில் பலவிதமான அடையாளங்களையும் மாதிரிகளையும், வரப்போகிற அழிவுக்கு

முன்னடையாளமாக பதிவு செய்திருப்பதைக் காணலாம். அந்த அடையாளங்கள், எதைக் குறிக்கிறதென்று அறிந்து கொள்ளும் ஆவலை மக்களுக்குத் தூண்டின, கவனத்தை ஈர்த்தன. அவை சாதாரண மக்களின் மத்தியிலும் அவர்களின் இருதயத்திலும் தீர்க்கதரிசன எச்சரிப்புகளை வழங்கின. இப்போது, மீண்டுமாக கடவுளின் நியாயத்தீர்ப்பு, குற்றம் நிறைந்த அந்தப் பட்டணத்தின் வாயிலுக்கு வந்தது. வார்த்தைகள் - இயேசுக் கிறிஸ்து மொழிந்த வார்த்தைகள் - யாவும் விழலுக்கு இறைத்த நீராயிற்று. சிந்திய கண்ணீர் - இரட்சகரின் கண்ணீருங்கூட - வீணாயிற்று. அடையாளம் கொடுக்க வேண்டிய நேரம் வந்தாயிற்று - அழிவைக் குறித்ததான அடையாளம். "கர்த்தராகிய நான் உயர்ந்த விருட்சத்தைத் தாழ்த்தி, பச்சையான விருட்சத்தைப் பட்டுப்போகப் பண்ணினேன் என்று வெளியின் விருட்சங்களுக்கெல்லாம் தெரியவரும்" என்று எசேக்கியேல் மூலமாக உரைக்கப்பட்டது. நமது கர்த்தர் இதே காட்சியைத்தான் இங்கு உபயோகித்திருக்கிறார். இயற்கைக்கு மாறான ஒரு அத்தி மரத்தை நமது கர்த்தர் காண்கிறார். இலைகள் தோன்றுகிற சமயம் அதுவாக இல்லாதபோதும், அம்மரம் இலைகளால் மூடப்பட்டிருந்தது. ஒரு காரியத்தை கற்பிப்பதற்கு இது ஒரு அருமையான சாதனமாக இருப்பதை நமது கர்த்தர் காண்கிறார். ஆகவே அவர் தமது சீஷர்களை அழைத்துக் கொண்டு அங்குபோய், அதில் இலைகளோடு சேர்ந்து அத்திப்பழங்களும் இருக்கிறதா எனப் பார்க்கச் செல்கிறார். அதில் ஒன்றுமில்லாதிருந்ததை அவர் கண்டு, அந்த மரமானது ஒருபோதும் கனிகொடுக்கக் கூடாதபடிக்கு அதை சபித்துப் போடுகிறார். உடனடியாக அந்த மரம் பட்டுப்போகத் தொடங்கிற்று. நமது கர்த்தர் அந்த மரத்தை வேறு காரணங்களுக்காக உபயோகித்துக் கொள்ளும்படியாகக் கூறியிருக்கலாம். அதனை எரிபொருளாக்கி, குளிர்ந்துபோன கை கால்களுக்கு அனல் தர உபயோகித்துக் கொள்ளுங்கள் என கூறியிருக்கலாம். ஆனால் அவரோ, குளிர்ந்து போன இருதயங்களில் அனல் மூட்டுவதற்கு அதை உபயோகித்திருப்பது அதைக் காட்டிலும் மேலானதாயிருக்கிறது. இங்கு எந்த மனிதனுக்கும் யாதொரு கெடுதலும் செய்யப்படவில்லை. இங்கு சற்றும் உபயோகமில்லாத ஒரு மரம்தான் இருக்கிறது. அதற்கு துன்பம் ஏதும் விளைவிக்கவில்லை. கோபமாக செயல்படவில்லை. அதை ஒரு காட்சிப்பொருளாக உபயோகித்து சொல்லப்பட்டதாகிய இந்த விளக்கத்தில் கர்த்தர், "இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக் கடவது" என்று மாத்திரமே

சொல்கிறார். உடனே அந்த மரம் பட்டுப்போயிற்று. சாதாரணமான ஒரு பொருளை உபயோகித்து நமது கர்த்தர் சகல காலங்களிலும் உள்ளவர்களுக்கு ஒரு பெரிய காரியத்தைக் கற்றுத் தந்திருக்கிறார். அந்த மரம் பட்டுப்போனது அநேக ஆத்துமாக்கள் உணர்வடைய ஏதுவாயிற்று. அப்படி இல்லையென்றால், கனி கொடாத ஒரு மரம் பட்டுப் போவதால் யாருக்கும் எந்த நஷ்டமும் இல்லையே. தலைசிறந்த போதகராகிய அவர், மரத்தை அழிப்பதைக் காட்டிலும், சத்தியத்தை விளக்குவதற்கும், நற்காரியங்களை விதைப்பதற்கும் அதை ஒரு காட்சி-விளக்கமாக உபயோகிப்பார் அல்லவா. அற்புதமான ஒரு விளக்கத்தைத் தருவதற்கு செய்து காண்பித்த இந்த சம்பவத்தில் நமது கர்த்தர் மீதே குற்றம் கண்டுபிடிக்கத் துணிகிற அற்பமானவர்கள், இதையே வேறு ஏதாவதொரு போதகர் சொன்னால் ஆகா ஓஹோ எனப் புகழத் தயங்க மாட்டார்கள்.

பட்டுப்போன இந்த அத்திரமானது யூதர்களின் நிலமையை விளக்கும் ஒரு பொருத்தமான விசேஷித்த உருவகமாக இருக்கிறது. அந்த தேசமானது தேவனுக்கு பெரிய காரியங்களை செய்வதுபோலக் காணப்பட்டது. மற்ற தேசங்கள் இலைகளற்ற தேசங்களாக காணப்பட்டது. அதாவது, உண்மையான கடவுளோடு எந்தத் தொடர்பும் இல்லாதவர்களாக அவர்கள் இருக்கையிலே, யூதர்களோ பலவிதங்களில் பக்திமார்க்கத்தில் நிறைந்தவர்களாகக் காணப்பட்டார்கள். வேதபாரகர், பரிசேயர், ஆசாரியர், ஜனத்தின் மூப்பர்கள் ஆகிய அனைவரும் நியாயப்பிரமாணத்தை ஆதரிப்பவர்களாகவும், ஒரே கடவுளை தாங்கள் ஆராதிப்பதில் பெருமை கொண்டவர்களாகவும், அவருடைய கட்டளைகளை விடாப்பிடியாகக் கடைப்பிடிப்பவர்களாகவும் தங்களைப் பறைசாற்றிக் கொண்டனர். "தேவாலயம், தேவாலயம், தேவாலயம்" என்பதுதான் அவர்களது நிரந்தரமான நோக்கமாயிருந்தது. "நாங்கள் ஆபிரகாமின் சந்ததி" என்கிற வார்த்தை எப்போதும் அவர்கள் வாயிலிருந்தது. அவர்கள் இலைகளால் நிறைந்த அத்திமரம் போன்றவர்கள். ஆனால் அவர்களில் கனி இல்லை. ஏனென்றால் அவர்கள் பரிசுத்தமாக இல்லை, நீதியாக இல்லை, உண்மையாக இல்லை, தேவனிடம் விசுவாசமாக இல்லை, அயலானை நேசிக்கிறவர்களாக இல்லை. யூத ஆலயம், ஆவிக்குரிய ஜீவனை ஆதாரமாகக் கொண்டிராமல், வெறும் கவர்ச்சிகரமான தோற்றத்தை மாத்திரம் கொண்டிருந்தது. நமது கர்த்தர் தேவாலயத்தை உற்றுப் பார்த்தார். ஜெபவீடு, கள்ளர் குகையாக மாறியிருப்பதைக்

கண்டார். யூத ஆலயத்தை ஜீவனற்றதாகவும், கனியற்றதாகவும் இருக்கும்படியாக சபித்துப் போட்டார். அது அப்படியே ஆயிற்று. ஜெபஆலயங்கள் திறந்திருந்தது. ஆனால் அதன் போதனைகள் உயிரற்றவையாக ஆனது. பல ஆண்டுகளாக இஸ்ரவேலுக்கு எந்த செல்வாக்கும் இல்லாமற் போனது. பல நூற்றாண்டுகளாக யூத சந்ததி பட்டமரமாகவே இருந்தது. கிறிஸ்து வந்தபோதுகூட அங்கே பக்தியின் தோற்றம் மாத்திரமே காணப்பட்டது. அந்த பக்தி மார்க்கமானது பரிசுத்த நகரத்தைக்கூட காப்பாற்ற வல்லமையற்றதாக இருந்தது. கிறிஸ்து, யூதர்களின் மத அமைப்பை அழித்துப் போடவில்லை. அதை அப்படியே விட்டுவிட்டார். ரோமர்கள் வந்து மேற்கொள்ளுமட்டும் அவர்கள் அடிமரத்திலிருந்து பட்டுப்போய்க் கொண்டிருந்தார்கள். ரோம சேனையாகிய கோடாரியைக் கொண்டு கனியற்ற அதன் அடிமரத்தையும் அவர் நீக்கிப் போட்டார்.

சகல தேசங்களுக்கும் இது என்னவொரு அருமையான பாடம்! தேசங்கள் செழிப்பாகக் காணப்படலாம், பக்தி வழிகளை எல்லோரும் காண்கிறவிதத்தில் நடத்துகிறவர்களாக இருக்கலாம், இருந்தாலும் ஒரு தேசத்தை உண்மையாக உயர்த்தக்கூடிய நீதியான முறைகளில் தவறுகிறவர்களாக இருக்கக் கூடும். தேசங்கள் கலாச்சாரங்களினால் அலங்கரிக்கப்படிருக்கலாம். கலைகளிலும், வளர்ச்சியிலும், பக்திமார்க்கத்திலும் சிறந்து விளங்கினாலும், அதில் உள்ளான தேவபக்தியோ, நீதிக்கேற்ற கனிகளோ காணப்படாவிட்டால், அவை சிலகாலம் செழித்திருந்து, பிறகு பட்டுப்போய்விடும்.

சபைகளுக்கு இது என்னவொரு அருமையான பாடம்! எண்ணிக்கையிலும் செல்வாக்கிலும் பிரசித்தி பெற்ற அநேக சபைகள் இருந்தன. ஆனால் விசுவாசம், அன்பு, பரிசுத்தம் ஆகியவைகள் பாதுகாக்கப்படாததால், கனிகளில்லாமல் பக்திவேஷம் மாத்திரம் போடும்படியாக, பரிசுத்தஆவியானவர் அவைகளை விட்டுப் போய்விட்டார். சபை நிர்வாகத்தை மாத்திரம் கொண்டிருக்கிற அடிமரங்களாக அவ்வித சபைகள் நின்றுகொண்டிருக்கின்றன. அதன் கிளைகளும் அதிக தொலைவிற்கு நீடித்திருக்கிறது. ஆனால் அது செத்த மரமாயிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அவைகள் இன்னும் அதிகமதிகமாக அழுகிப் போய்க்கொண்டேயிருக்கின்றன. சகோதரரே, இன்று நம் மத்தியிலுங்கூட அம்மாதிரியான சபைகள்

இருக்கின்றன. இந்த சபை அப்படி ஆகாதிருப்பதாக! வசனத்தைக் கேட்பதற்கு அதிகமான ஜனங்கள் நம்மிடையே வரலாம். அநேகம் ஆண்களும் பெண்களும் மனமாற்றம் அடைந்ததாகக் கூறலாம். இருந்தாலும், மிக முக்கியமான தேவபக்தியானது அவர்கள் மத்தியில் இல்லையென்றால் சபைகளும் கூட்டங்களும் என்னத்திற்கு? நாம் அதிக பிரயோஜனமுள்ள ஊழியத்தை செய்து கொண்டிருக்கலாம், ஆனால் தேவனின் ஆவி இல்லையென்றால் அதனால் என்ன பிரயோஜனம்? நமக்கு அதிக காணிக்கை வரலாம், வெளி ஊழியங்களை அதிகமாக நாம் ஒருவேளை செய்யலாம். ஆனால் ஜெபஆவி இல்லாமலும், விசுவாச ஆவி இல்லாமலும், கிருபையின் ஆவியும் பரிசுத்தமாகுதலும் இல்லாமல் என்ன பயன்? மிதமிஞ்சிய பக்தியை உடையவர்கள் போலத் தோற்றமளித்தாலும், உள்ளத்தில் பரிசுத்தமும், கிறிஸ்துவோடு ஐக்கியமும் இல்லாதவர்களாயிருந்து, அதனால் தேவனின் பார்வையில் ஆகாதவர்களாகக் காணப்படும்படியான மரமாக நாம் ஆகிவிடக் கூடாதேயென்று அஞ்சுகிறேன். அம்மரம் உண்மையில்லாமலும், கேலிக்கூத்தாகவும், மாயையாகவும் வானத்தை எட்டும் வகையில் இருப்பதைக்காட்டிலும், கோடாரியானது அம்மரத்தின் அடிச்சுவடுகூட இல்லாமல் வெட்டிவிடுவதே நல்லது.

இந்த வசனத்தின் மூலமாக நாம் கற்றுக் கொள்கிற பாடம் இது. ஆனால், அது தேசங்களைக் குறித்தும் சபையைக் குறித்தும் மாத்திரம்தான் கூறுகிறது என்று நீங்கள் எண்ணிக் கொள்வதை நான் விரும்பவில்லை. இந்த வசனம் கூறும் கருத்துக்கள் முழுவதையும் நாம் விவரமாகப் படித்து அறிந்து, நீங்கள் அந்த சிந்தனையை உங்கள் இருதயத்தில் கொண்டவர்களாக வீடுதிரும்ப வேண்டுமென்பதே எனது விருப்பம். இந்த காலை வேளையிலே கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவருடைய இருதயத்திலும் தனிப்பட்ட விதத்தில் பேசுவாராக! இந்த பிரசங்கத்தை தயாரித்த வேளையிலே நான் என் இருதயத்தை அதிகமாகப் பரிசோதித்துக் கொண்டேன். கேட்கிறவர்களாகிய நீங்களும் அதேவிதமாக பரிசோதித்தறிய வேண்டுமென ஜெபிக்கிறேன். தேவபக்தியை பிறர் அறியும் வண்ணமாக வெளிவேஷமாகத் தரித்துக் கொண்டிருப்பவர்களாக மட்டும் காணப்பட்டு, அதற்கேற்ற கனிகள் இல்லாதவர்களாக நாம் இருந்துவிடாதபடிக்கு பயந்து நடக்க வேண்டும். பரிசுத்தவான்கள் என்றழைக்கப்படுகிறவர்கள் பரிசுத்தமாக நடந்து கொள்ளாவிட்டால், அது பரிசுத்த மனிதர்களுக்கே இழுக்காக இருக்கும்.

அப்படியானால் பரிசுத்தமே உருவான கடவுளுக்கு அதைக் காட்டிலும் எவ்வளவு அதிகமாக இருக்கும். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு, கிறிஸ்தவ வாழ்க்கையை வாழாதவர்கள் உண்மையில் பொய்யர்கள். தேவனுக்கும் மனிதர்களுக்கும் அருவருப்பானவர்கள். சத்தியத்தை அவமதிப்பவர்கள். மதத்திற்கு இழிவுண்டாக்குபவர்கள். பட்டுப்போகின்ற சாபத்தை அடையும்படிக்கு முன்னோக்கிச் செல்பவர்கள்.

இந்த செய்தியை மிகுந்த பயபக்தியோடும் வல்லமையோடும் நான் இன்று பிரசங்கிப்பதற்கு பரிசுத்தஆவியானவர்தாமே எனக்கு உதவி செய்வாராக!

இதில் நாம் கவனிக்கும் முதலாவது காரியம் - ***முதன்மையாயிருக்க விரும்புகிற, ஆனால் அதற்கேற்ற கனிகளில்லாதவர்கள் அநேகர் இவ்வுலகில் உண்டு.*** நாம் இரண்டாவதாக பார்க்கப் போவது - ***இவர்களை சோதித்து அறியப் போவது கிறிஸ்து ராஜா.*** மூன்றாவதாக நாம் காணவிருப்பது - ***அந்த சோதனையின் முடிவு மிகவும் பயங்கரமானதாயிருக்கும்.*** பரிசுத்தஆவியானவரே, எங்களுக்கு உதவி செய்யும்!

## அ) முதன்மையாயிருக்க விரும்புகிற, ஆனால் அதற்கேற்ற கனிகள் இல்லாதவர்கள் அநேகர் இவ்வுலகில் உண்டு.

முதன்மையாயிருக்க விரும்புகிறவர்கள் ஒன்றும் அரிதானவர்கள் அல்ல. ஏராளமானவர்கள் இப்படி இருக்கிறார்கள். அவர்களிடம் காணப்படும் அடையாளங்களைப் பார்க்கலாம். ***சக மனிதர்களைக் காட்டிலும் அவர்கள் மிகவும் உயர்ந்தவர்களாகக் காணப்படுவார்கள்.*** நம்பிக்கையூட்டுபவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய வெளிப்பிரகாரமான நடவடிக்கைகள் மிகவும் பாராட்டத்தக்க விதத்தில் இருக்கும். அவர்கள் கனிதரும் மரங்களைப் போலத் தோற்றமளிப்பார்கள். உயர்தரமான அநேகம் கனிகளை கூடை கூடையாக அவர்கள் விளைவிப்பார்கள் என்று நீங்கள் எதிர்பார்ப்பீர்கள். அவர்கள் தங்கள் பேச்சினாலும், நடவடிக்கைகளினாலும் நம்மைக் கவர்ந்து கொள்ளுவார்கள். நாம் அவர்களைப் பார்த்து பொறாமைப்பட்டு, நம்மை நாமே நொந்து கொள்ளுவோம். இந்தவிதமாக நம்மையே கடிந்து

கொள்ளுவது நம்மை பாதிக்காது. ஆனால் மாய்மாலக்காரர்களைப் பார்த்து பொறாமை கொள்ளுவதுதான் பிற்காலங்களில் தீமையை விளைவிக்கும். அவர்களுடைய மாய்மாலம் கண்டுபிடிக்கப்படும்போது, நாம் சோர்ந்துபோய், அவர்களை மாத்திரமல்ல, பக்தியையே வெறுக்கக் கூடியவர்களாக ஆகிவிடுவோம். எல்லாம் உடையவர்கள் போலக் காணப்பட்டாலும், உண்மையில் எதுவுமில்லாதவர்களான மனிதர்களை நீங்கள் அறிவீர்களா? என்ன பரிதாபம்! நாம் அவர்களைப் போல இருக்கிறோமா? அந்த மனிதனைப்பாருங்கள்! அவன் துணிகரமானதொரு விசுவாசத்தைக் கொண்டிருக்கிறான். அலட்சியமானதொரு நம்பிக்கை உடையவனாய் அதில் சந்தோஷமாயிருக்கிறான். அன்பின் ஆவியைக் கொண்டிருந்தாலும் சத்தியத்தைக் குறித்த கவலையற்றிருக்கிறான். சரளமாகப் பேசுகிறான்! வேதாகமக் கருத்துகளை ஆழமாக யூகிக்கிறான். இருந்தாலும் அவன் மறுபிறப்பின் மூலமாக தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசித்தவன் அல்ல. கடவுளைக் குறித்து அவனுக்கு சரியாகக் கற்றுத்தரப்படவில்லை. சுவிசேஷம் அவனுக்கு வார்த்தையாக மாத்திரம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. பரிசுத்தஆவியின் கிரியையை அவன் அறியாதவனாயிருக்கிறான். அப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள் அல்லவா? பாரம்பரிய முறைகளை ஆதரிக்கிறவர்கள் போலக் காணப்பட்டாலும், தங்கள் நடவடிக்கைகளில் சமயப்பற்றில்லாமையை வெளிப்படுத்துகிறவர்களாக இருப்பவர்களும் நம்மிடையே இருக்கிறார்கள் அல்லவா? தங்கள் வாயினால் சொல்வது போல, தங்கள் வாழ்க்கையில் செயல்படாத ஆண்களையும் பெண்களையும் நாம் அறிவோமல்லவா? அப்படிப்பட்டவர்கள் இருப்பதை நாம் நிச்சயமாக அறிவோம். எல்லா திராட்சைத் தோட்டங்களிலும், பிறர் கவனத்தை ஈர்க்கும் வகையில், இலைகளால் நிறைந்திருக்கிறதான அத்திமரங்கள் காணப்படுகிறது. இருந்தாலும் நமது கர்த்தருக்குக் கனிகளைத் தருகிறவைகளாக அவை இல்லை.

அப்படிப்பட்ட ஜனங்கள் ***காலத்துக்கு மாறானவர்களாக இருப்பார்கள்.*** அது அத்திப்பழ காலமாயிருக்கவில்லை. இருந்தாலும் அந்த மரமானது இலைகளால் மூடப்பட்டிருந்தது. அத்திமரங்களில், பழுத்த பழங்கள் இருப்பதை அறிவிக்கவே இலைகள் தோன்றுவது வழக்கம். நான் அடிக்கடி பார்த்திருக்கிறதான காட்சியை நீங்களும் கண்டிருப்பீர்கள் என நம்புகிறேன். அத்திமரத்தில் முதலாவது கனிகள் ஏற்படும், அதன் பிற்பாடுதான் இலைகள் உருவாகும். வருடத்தின் ஆரம்பத்தில்

கிளைகளின் நுனிகளில் பச்சையான முடிச்சு போன்றவைகள் உருவாவதைப் பார்த்திருப்பீர்கள். அவைகள் பெரிதாகி பச்சை நிற அத்திக்கனிகளாக மாறும். அதன் பிற்பாடுதான் இலைகள் உண்டாகும். மரம் முழுவதும் இலைகளால் நிறைந்து காணப்படும் வேளையிலே அத்தியானது நன்றாகப் பழுத்து, உண்ணக்கூடிய நிலையில் இருக்கும். அத்திமரம் முழுவதும் இலைகளால் நிறைந்து காணப்படுமானால் நீங்கள் அங்கு அத்திப்பழத்தை எதிர்பார்க்கலாம். அத்திப்பழம் இல்லாத பருவத்தில் இலைகள் உண்டாகாது. இந்த அத்திமரமானது தன் பருவத்திற்கு முன்பாக அதிகமான இலைகளை உருவாக்கிற்று. ஆகவே தன் காலத்திலுள்ள மற்ற அத்திமரங்களைக் காட்டிலும் மேலானதாகத் தோன்றியது. உண்மைதான், ஆனால் அது இயற்கைக்கு மாறானது. அது உண்மையான வளர்ச்சியின் ஆரோக்கியமான விளைவல்ல. இப்படி இயற்கைக்கு மாறானவைகள் திராட்சைத் தோட்டங்களிலும் காடுகளிலும் ஏற்படுவதுண்டு. அவை போன்றவைகள் ஆவிக்குரிய உலகிலும் தோன்றுவதுண்டு. சில ஆண்களும் பெண்களும் தங்களைச் சுற்றிலும் இருப்பவர்களைக் காட்டிலும் பன்மடங்கு உயர்ந்தவர்களாகக் காணப்படுவதுண்டு. தங்களுடைய விசேஷித்த குணங்களினால் நம்மை பிரமிக்கச் செய்வதுண்டு. சிறந்தவர்களைக் காட்டிலும் மிகவும் சிறந்தவர்களாகக் காணப்படுவார்கள். உயர்ந்தோரைக் காட்டிலும் மிக உயர்ந்தோராக காணப்படுவார்கள். வெளிப்பிரகாரமாகவாவது அப்படி இருப்பார்கள். சுற்று சூழலினால் குளிர்ந்து போகாமல் மிகுந்த ஆர்வத்தோடிருப்பது போல் காணப்படுவார்கள். அவர்களுடைய ஆத்துமாவானது தங்களுக்குள்ளாக ஒரு அனலை உருவாக்கி வைத்திருக்கும். பரிசுத்தவான்களின் பின்வாங்குதலோ, பாவிகளின் பொல்லாத தன்மையோகூட அவர்களுக்கு இடறலாக இராது. அவர்கள், சூழ்நிலைகளால் பாதிப்படைந்துவிடாத மிகுந்த மனோபலம் வாய்ந்தவர்கள். அநேக நற்குணங்களையும் கொண்டிருப்பார்கள். இந்த அத்திமரம், கனி எற்படும் முன்னதாகவே இலைகளால் நிறைந்து காணப்பட்டதைப் போல அவர்களும் நற்குணங்களாகிய இலைகளால் நிறைந்து காணப்படுவதில் சிறந்தவர்கள்.

அவர்கள் ***இயல்பாக அடையவேண்டிய வளர்ச்சியை மீறி வளர்ந்தவர்கள்*** என்பதை கவனியுங்கள். நான் முன்னரே சொன்னபடி, முதலாவது அத்திக்கனி, அதன் பிறகு அத்தி இலைகள் வருவதுதான் இயற்கை. ஆனால் சில பேர் தங்களிடம் கொஞ்சமாவது கனி

உருவாவதற்கு முன்பாகவே பக்தியாய் இருப்பது போல பகிரங்கமாகக் காண்பித்துவிடுகிறார்கள் என்பதைப் பார்த்தோம். நமது இளம் பிராயத்தினர், கிறிஸ்துவை விசுவாசிக்கும் போது, முதலாவது, வீட்டிலே பரிசுத்தமாக நடந்து கொண்டு, வெளியிடங்களிலே தேவபக்தியுள்ள நடக்கையின் மூலமாகத் தங்களுடைய விசுவாசத்தை நிருபித்து, அதன் பின்னர் முன்னே வந்து கர்த்தராகிய கிறிஸ்துவில் தாங்கள் விசுவாசம் வைத்திருப்பதை பகிரங்கமாக அறிக்கையிடுகிறவர்களாயிருக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். முதலாவது பரிசுத்த மனிதனாகவும், பின்னர் பகிரங்கமாக அறிவிக்கிறவனாகவும் நடந்து கொள்வது சரியானதாகவும் இயற்கையாகவும் இருக்கும். முதலாவது விளக்கு ஏற்றப்பட வேண்டும், அடுத்ததாக அது பிரகாசிக்க வேண்டும். முதலாவது மனந்திரும்புதலும் விசுவாசமும் அடைந்தபின்னர் அடுத்ததாக தனது மனந்திரும்புதலையும் விசுவாசத்தையும் வேதபூர்வமாக அறிக்கையிடும் விதமாக கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறவேண்டும். ஆனால் இக்காலத்தில் ஜனங்களோ இருதயத்தை ஆராய்வது அவசியமற்றது போல எண்ணுகிறார்கள். இரட்சிப்பின் மிகவும் அத்தியாவசியமான பகுதியை அவர்கள் ஒதுக்கித் தள்ளத் துணிகிறார்கள். அவர்கள் எழுப்புதல் கூட்டங்களில் பங்குபெற்றுவிட்டு, தங்களுடைய இருதயமானது புதுப்பிக்கப்படாமலேயே, விசுவாசத்தையோ மனந்திரும்புதலையோ அடையாமலேயே, தங்களை இரட்சிக்கப்பட்டவர்களாக அறிவித்துக் கொள்ளுகிறார்கள். உணர்ச்சிவசப்படுகிற நிலையை வைத்து இரட்சிப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுகிறார்கள். தீர்மானம் மட்டுந்தான் செய்கிறார்கள். ஆனால் அத்தோடு பூரணமடைந்து விட்டோம் என்கிற எண்ணத்தை வளர்த்துக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட எண்ணத்தை அடைந்த உடனேயே உபதேசிக்கத் தொடங்கிவிடுகிறார்கள். தான் அடைந்திருக்கிற புதிய நிலையை ஆராய்ந்து பார்க்காமல், தன்னை மற்றவர்களுக்கு ஒரு உதாரணமாகக் காண்பிக்கத் தொடங்கிவிடுகிறார்கள். மனமாற்றத்தினால் விரைவான வளர்ச்சி ஏற்படக்கூடும் என்பதை நான் மறுக்கவில்லை. உண்மையாகவே அப்படி இருக்குமானால் அதை நான் மிகவும் போற்றுவேன். ஆனால் அப்படிப்பட்டவர்களின் வாழ்க்கையில் கனிகளைப் பார்ப்பதற்கு முன்பாக நான் தீர்மானித்து விடமாட்டேன். அவனுடைய குணாதிசயத்தில் ஏற்பட்ட மாற்றம் தெளிவாகவும் உண்மையாகவும் தோன்றுமானால், எவ்வளவு விரைவாக அந்த செயல் அவனில் நடைபெற்றது என்பதைக் குறித்து நான் கவலைப்பட

மாட்டேன். ஆனால் அந்த மாற்றத்தை நாம் காண்பது அவசியம். மாவானது பதமடைவதற்கு குறிப்பிட்ட கால அவகாசமும் சற்று வெப்பமும் அவசியம். இல்லையென்றால் பதார்த்தம் சரியாக வராது. நண்பர்களே, நீங்கள் ஒருபோதும் கனிகொடுப்பதை விட்டுவிட்டு, நேரிடையாக இலைகளை உருவாக்க வந்துவிடாதீர்கள். இந்த கட்டடத் தொழிலாளி கூறுவதைப் போல இருக்காதீர்கள்: "கடின உழைப்பையும், மிகுந்த பொருட்களையும் ஏன் அஸ்திபாரம் கட்டுவதற்கு செலவிட வேண்டும்? அதுதான் வெளியில் தெரியவே போவதில்லையே. நான் சிறிது நேரத்தில் ஒரு வீட்டையே கட்டி முடித்து விடுவேன். நான்கு சுவர்களும், அதன் கூரையும் கட்டுவதற்கு எவ்வளவு காலம் ஆகப்போகிறது?". உண்மைதான், ஆனால் அத்தகைய வீடு எவ்வளவு நாளைக்கு நிற்கும்? அஸ்திபாரம் இல்லாமல் வீடு கட்டுவது சரிதானா? அஸ்திபாரத்தை விட்டுவிட்டீர்களானால், முழு வீட்டையுமே கட்டுவதை விட்டுவிடலாமே! மனிதர்கள் மதவெறியர்களாகவோ அல்லது கடவுள் நம்பிக்கையற்றவர்களாகவோ இருக்கின்ற இன்றைய காலகட்டத்தில், தேவபக்தியானது, மக்களிடையே காளானைப் போல ஒரு இரவிலே தோன்றி மறு இரவிலே மடிந்து போகிற நிலையில் காணப்படுகிறதல்லவா? பாவத்தைக் குறித்து சரிவர உணர்த்தாவிட்டால் அது அழிவை ஏற்படுத்திவிடாதா? மனந்திரும்புதல் மேம்பூச்சாகவும், விசுவாசம் போலியாகவும், மறுபிறப்பு பொய்யானதாகவும், தேவபக்தி நடிப்பாகவும் இருக்குமானால் அது ஆத்துமாவின் அழிவையல்லவா ஏற்படுத்தும்! பிரியமானவர்களே, இது ஒருபோதும் சரியானதாக இராது. நாம் இலைகளை காண்பிக்கும் முன்னதாக அத்திப்பழங்களை உருவாக்க வேண்டும். பகிரங்க அறிவிப்பிற்கு முன்னால், உள்ளான மாற்றங்கள் தோன்ற வேண்டும். ஞானஸ்நானத்திற்கு முன்னதாக விசுவாசம் ஏற்பட வேண்டும். சபையோடு ஐக்கியப்படுவதற்கு முன்பாக கிறிஸ்துவோடு ஐக்கியம் உருவாக வேண்டும். இயற்கையின் வழிமுறைகளை மீறிக் கொண்டு நீங்கள் தாண்டிச் செல்ல முடியாது. கிருபையின் செயல்பாட்டை நீங்கள் தள்ளிவிட முடியாது. அப்படி செய்தீர்களானால் கனிகளற்ற, வெறும் இலைகளால் நிறைந்த உங்களை குணப்படுத்த முடியாதபடி சாபமாகிப்போவீர்கள்.

***இந்தவிதமான மக்கள் பொதுவாக மற்றவர்களின் கவனத்தைக் கவருவார்கள்.*** அந்த அத்திமரத்தை நமது ஆண்டவர் "தூரத்திலிருந்தே" பார்த்தார் என்று மாற்கு குறிப்பிடுகிறார். மற்ற மரங்கள் எல்லாம் இலைகள்

இல்லாமல் இருந்தது. அவர் எருசலேமுக்கு சமீபமாய் மலையில் ஏறி வந்தபோது இந்த ஒரு மரத்தை வெகுதொலைவிலிருந்தே பார்த்தார். அத்திமரமானது முழுவதும் இலைகளால் நிறைந்து காணப்படுகின்ற வேளையிலே அது தொலைவிலிருந்தே கண்டுகொள்ளக்கூடிய வகையில் மிகவும் செழுமையாகத் தோற்றமளிக்கும். பெத்தானியாவிலிருந்து நகரத்துக்குப் போகின்ற வழியில் அது இருந்தது. வழிப்போக்கர்கள் யாவரும் அதைக் காணும்படியாகவும், அந்தப் பருவத்தில் அது மாத்திரம் இலைகளுடன் செழிப்பாகக் காணப்படுவதைக் குறித்து ஆச்சரியப்படும்விதமாகவும் அது இருந்தது. பொய்யான பக்தியைக் கொண்டிருக்கிற மனிதர்கள் அநேகமாகத் தனித்து தென்படுவார்கள். ஏனென்றால் அவர்களுக்கு அடக்கத்தோடோ அமைதியாகவோ நடந்து கொள்கிற பண்பு இருக்காது. தங்களை முதன்மையாகக் காட்ட விரும்புவார்கள். மேலான ஊழியத்தை நாடுவார்கள். தங்களை தலைமைப்பதவிக்கு உயர்த்திக் கொள்ள முயற்சிப்பார்கள். அவர்கள் கடவுளோடு தனித்து நடந்திருக்க மாட்டார்கள். தனிப்பட்ட பக்தியில் கவனம் செலுத்த மாட்டார்கள். மனிதர்கள் மத்தியில் காணப்படுவதையே விரும்புவார்கள். அது அவர்களுடைய பலவீனமும் கண்ணியுமாயிருக்கிறது. பிரபலமாயிருப்பதால் வருகின்ற சிறிய கஷ்டநஷ்டங்களை ஏற்றுக் கொண்டாவது அதை அடைவதற்கு பேராசைப்படுவார்கள். அதனால் அவர்கள் இன்னும் அதிகமான பேரின் கவனத்தை ஈர்ப்பார்கள். அவர்கள் ஆவிக்குரியவிதத்தில் தவறும்போது அது பலபேர் அறியக்கூடியதாகிவிடுகிறது. அது மிகுந்த தீமையை ஏற்படுத்திவிடுகிறது. ஏனென்றால் அவர்களுடைய பாவமானது, அவர்கள் ஊழியம் செய்வதற்கு ஒப்புக்கொண்ட கர்த்தருடைய நாமத்திற்கு மிகுந்த அவமரியாதையை உண்டாக்குகிறது. கனிகளில்லாமல், ஆலயத்திற்குப் போகிற பொதுவழியில் பிறர் காணத்தக்க வகையில் பிரபலமாக இருப்பதைக் காட்டிலும், காட்டின் ஒரு மூலையில் மறைந்து இருப்பது மேலானது.

இந்தவிதமான மனிதர்கள் பிறர் கவனத்தை ஈர்ப்பது மாத்திரமல்லாமல், ***நல்லோர்களின் கவனத்தையும் ஈர்ப்பார்கள்.*** மற்ற மரங்களைக் காட்டிலும் முன்னதாகவே கனியைக் கொடுக்கின்ற மரத்தை நோக்கி நாம் போவதைக் குறித்து யார் குற்றம் சொல்ல முடியும்? நல்லவர்களாகத் தென்படுகிறவர்களிடம் பழக்கம் வைத்துக் கொள்ள விரும்புவது சரியானதுதான் இல்லையா? நமது இரட்சகரும்

அவருடைய சீஷர்களும் இலைகளுள்ள அந்த அத்திமரத்தை நோக்கிப் போகிறார்கள். அந்த மரமானது அவர்கள் கவனத்தைக் கவர்ந்தது மாத்திரமல்ல, அவர்களைத் தன்னருகே வரவழைத்தது. கர்த்தருக்குள் சகோதரனாகவும், மற்றவர்களைக் காட்டிலும் பக்தியுள்ளவர்களாயும், பலரைக் காட்டிலும் கடவுளுக்கு பயந்தவராகவும் தோன்றுகிற ஒருவருடைய வசீகரிக்கும் குணாதிசயங்களால் கவரப்படுவது இயற்கைதான் அல்லவா? யெகூ போல, "நீ என்னோடேகூட வந்து கர்த்தருக்காக எனக்கு இருக்கிற பக்தி வைராக்கியத்தைப் பார்" என்று ஒருவன் கூறினால் நாம் சந்தோஷத்தோடே அவனுடைய இரதத்தில் ஏறிவிடுவோமல்லவா? அவன் பக்தியுள்ளவனாகவும், தாராளமனப்பான்மையும் தாழ்மையும் கொண்டவனாகவும், உபயோகமானவனாகவும் இருந்தால் அப்படிப்பட்டவர்களோடு சகவாசம் வைத்துக் கொள்வது நமது பாக்கியம் என்று நினைப்போம் அல்லவா?. புதிய விசுவாசிகளும், தேவனைத் தேடுகிறவர்களும் இப்படித்தான் செய்வார்கள். ஆனால், அவர்களுடைய நம்பிக்கை தவறாகும்போது அது மிகவும் சோகமாகத்தான் போய்விடுகிறது.

யாராவது முதன்மையானவர்களாகத் தென்பட்டு, தைரியத்தோடு பகிரங்கமாக செயல்படுவதைக் காணும்போது அவர்களைக் குறித்து நாம் என்ன நினைக்க வேண்டும் எனக் கேட்டால், அவர்களை நியாயந்தீர்க்காதிருங்கள் என்று கூறுவேன். யாரையுமே நம்பக்கூடாதென்கிற பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள். உங்களுடைய கர்த்தர் தூரத்திலேயே நின்று, "அந்த மரம் பிரயோஜனமற்ற ஒன்று" என்று கூறிவிடவில்லை. அவர் தமது சீஷர்களோடு அதனருகே சென்று அதை கவனமாக ஆராய்ந்து பார்த்தார். ஒருவேளை அப்படி முதன்மையாகத் தென்படுகிறவர்கள் தெய்வீகக் கிருபையின் அற்புதமாயிருக்கலாம். அவர்கள் அப்படி இருக்க வேண்டுமென நம்பிக்கை வைத்து அவர்களுக்காக நாம் ஜெபிப்போம். கர்த்தரும் அவரின் அன்பும் அவர்களுக்குள் பெருகுவதாக! குளிர்காலத்திலும் கனிகொடுக்கக் கூடிய தமது அத்திமரங்களை கடவுள் வைத்திருக்கிறார். மற்றவர்களின் அன்பு தணிந்து போகும் வேளையிலும், நற்செயல்களை செய்யக்கூடிய தமது பரிசுத்தவான்களைக் கர்த்தர் வைத்திருக்கிறார். கர்த்தர் தமது சத்தியத்திற்கு நல்ல முன்மாதிரிகளாக இருக்கும்படியாக சிலரை எழுப்புகிறார். இவர்கள் யுத்தத்தில் முன்நிற்கிற பலவான்கள். வாலிப வயதினருக்கும் நல்ல முதிர்ச்சியைத் தர கர்த்தரால் கூடும். புது

விசுவாசிகளை அவர் உபயோகிக்கவும் கூடும். "சிலபேர் பிறக்கும்போதே தாடியுடன் பிறக்கிறார்கள்" என்று ஒரு பழமொழி கூறுவதுண்டு. கர்த்தர் சில பேருக்கு அதிகமான கிருபைகளை வழங்கி, அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சி வேகமாகவும் உறுதியாகவும் ஆகும்படியாக செய்யலாம். ஆகையால் முதன்மையாயிருக்கும் சகோதரர்களைக் குறித்து சந்தேகப்பட நமக்கு உரிமையில்லாதபடிக்கு கடவுள் இப்படியாக அடிக்கடி செய்திருக்கிறார். எனவே இப்படியான கிருபைகளை ஒருவேளை தேவன் அவர்களுக்கு வழங்கியிருக்கலாம் என்றுதான் நாம் எண்ணிக்கொள்ள வேண்டும். அவர்களிடத்தில் கிருபையின் அடையாளங்களோ, விசுவாசத்தின் அத்தாட்சியோ இல்லை என்பதை மிகுந்த மனவருத்தத்தோடே நாம் காணும் வரைக்கும், கடவுளின் கிருபை வரங்களில் மகிழ்ச்சி கொண்டவர்களாக, நன்மையே நடக்கும் என்கிற உறுதியுடையவர்களாக சந்தோஷத்தோடே இருப்போமாக. நாம் சந்தேகப்பிராணிகளாக இருப்போமாகில் நமது சந்தேகத்தை நம்மைக் குறித்தே திருப்புவோமாக. நம்மை நாமே சந்தேகித்துக் கொள்வதாவது ஆரேக்கியமான நிலைக்கு வழிவகுக்கும். மற்றவர்களை சந்தேகிப்பது கொடூரமானது. நாம் நியாயாதிபதிகள் அல்ல. அப்படியே நினைத்துக் கொண்டாலும், அதை நமது சொந்த நியாயஸ்தலத்திற்குள் வைத்துக் கொண்டவர்களாக, நமது நியாயசனத்தில் அமர்ந்து, நமது சொந்த ராஜ்ஜியமாகிய நம் இருதயத்திற்குள்ளாகவே நியாயந்தீர்த்துக் கொள்வதே நல்லது.

முதன்மையாக இருப்பவர்கள் போல காணப்படுகிறவர்கள் தாங்கள் காட்சியளிப்பது போலவே உண்மையிலும் இருப்பார்களானால் அது மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கும். அன்று காலையிலே அந்த அத்திமரத்திலே அத்திப்பழங்கள் இருந்திருக்குமானால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். அந்த பசுமையான பழங்கள் அவருக்கு ருசிக்கக் கிடைத்திருக்குமானால் அது நமது இரட்சகருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்திருக்கும். முதன்மையான நிலையில் இருப்பவர்களை கர்த்தர் பரிசுத்தத்திலும் முதன்மையை அடையச் செய்யும்போது, அப்படிப்பட்டவர்கள் சபைக்கும், குடும்பத்திற்கும், அயலகத்தாருக்கும் ஆசீர்வாதமாக இருக்கும்படியாகச் செய்வார். அவர்கள் முழு உலகத்திற்கும்கூட ஆசீர்வாதமாகக் காணப்படுவார்கள். கர்த்தர் நட்ட செடிகள் யாவற்றிற்கும் அவர் தமது கரத்தினால் தண்ணீர் ஊற்ற வேண்டுமென நாம் ஜெபிக்க வேண்டும். வேறுவிதமாக

சொல்வோமானால், தமது வலக்கரமாக செயல்படும்படிக்கு, தாம் பலப்படுத்தியதான அந்த மனிதர்களை, அவர்தாமே தமது கிருபையினால் தாங்க வேண்டுமென நாம் ஜெபிக்க வேண்டும்.

ஆனால் இன்றைக்கு நாம் இந்த வசனத்தை நம் இருதயத்தில் சிந்தித்தவர்களாக வீட்டுக்குச் செல்லும்போது, நம்மைக் குறித்து இவ்விதமாகவே எண்ணிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. நம்மில் அநேகர் பல ஆண்டுகளாக இந்த அத்திமரத்தைப் போன்ற நிலையில்தான் இருக்கிறோம். வெளிப்படையான தோற்றத்திலும் பக்திமார்க்கத்திலும் முதன்மையான நிலையில் இருக்கிறவர்கள் பலர். அதைப் பொறுத்தமட்டில் வெட்கப்பட ஒன்றுமில்லை. இருந்தாலும் நம்மில் பலபேரிடம் இந்த உவமையானது பேசுகிறது என்பது நிச்சயம். ஏனென்றால் நம்மிலும் அநேகர் தமது பக்தியை பகிரங்கமாக அறிவிக்கிறவர்களாகவும், இந்த மரத்தைப் போல எல்லோரும் "தூரத்திலிருந்தே" பார்க்கக் கூடியதான பாதையில் இருப்பவர்களாகவும் காணப்படுகிறோம். நம்மில் அநேகர் தைரியமாக பகிரங்க அறிக்கை செய்கிறவர்களாகவும் இருக்கிறோம். மனிதர்கள் முன்பாகவும் தூதர்களுக்கு முன்பாகவும் நமது அறிக்கையை திரும்பத் திரும்ப சொல்வதற்கு நாம் வெட்கப்பட மாட்டோம். ஆகவேதான் நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்விகள் இருக்கிறது: நாம் அறிவிப்பதின்படி உண்மையாக இருக்கிறோமா? அல்லது நம்மிடம் இல்லாத விசுவாசத்தை சத்தம் போட்டு பேசிக் கொண்டிருக்கிறோமா? நம்மில் அன்பின் ஜீவன் இல்லாமலிருந்து "சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும்" இருந்தோமானால் அதனால் என்ன நன்மை? கிரியை எதுவும் இல்லாமல் வெறுமனே பேசுகிறவர்களாகக் காணப்பட்டோமானால் பயன் என்ன? வேதாகமக் கொள்கைகளை பேசுகிறவர்களாக இருந்து அதைக் கடைப்பிடிக்கிறவர்களாகக் காணப்படாமல் இருந்தோமானால் பிரயோஜனம் உண்டா? பரிசுத்தம் இல்லாதவர்களாக இருந்தோமானால்? அப்படியானால் நாம் ஒருபோதும் கர்த்தரை தரிசிக்க மாட்டோம். இந்த அற்புதம் கலந்த உவமையில் எவ்வளவு பயங்கரமான கருத்து அடங்கி இருந்தாலும், அது நம்மில் அநேகரோடே சம்பந்தப்படுவதாகத்தான் இருக்கிறது. பிரசங்கியான எனக்கும் அது எவ்வளவு சம்பந்தமுடையதாயிருக்கிறதென்பதை நான் உணருகிறேன். அதே ஆவியினால் நான் மேலும் சிந்திக்கிறேன்: இந்த சபையின் ஒவ்வொரு கண்காணியும், ஒவ்வொரு மூப்பரும், ஒவ்வொரு

அங்கத்தினரும், உங்கள் மத்தியிலிருக்கிற ஒவ்வொரு ஊழியரும் தங்கள் இருதயத்தை பலமாக ஆராய்ந்து பார்ப்பீர்களா என்று மிகுந்த கவலையுடன் எதிர்பார்க்கிறேன். இன்று காலையிலே இவ்விடத்திலே வந்திருக்கிற கிறிஸ்துவின் ஒவ்வொரு ஊழியரும் தங்கள் இருதயத்தை ஆராய்ந்து, "ஆம் கர்த்தாவே, நானும் இந்த அத்திமரத்தைப் போலவே முதன்மையான நிலையிலும் பகிரங்க அறிவிப்பிலும் ஈடுபட்டிருக்கிறேன். இந்த மரத்தைப் போல கனிகள் இல்லாத நிலையில் நான் காணப்படாதபடிக்கு எனக்கு அருள் செய்தருளும்" என்று வேண்டிக் கொள்வீர்களாக.

## ஆ) கனிகள் ராஜாவாகிய இயேசுவால் பரிசோதிக்கப்படும்.

அவர், அவர்களின் அருகிலே வருவார். அவர்களின் அருகிலே வரும்போது அவர்களில் ***ஏதேனும் கனி அகப்படுமோ*** என்று பார்ப்பார். முதலாம் ஆதாம் இலைகளுக்காக அத்திமரத்தை நாடி வந்தார். ஆனால் இரண்டாம் ஆதாமோ கனிகளுக்காக வருகிறார். அவர் நமது குணாதிசயங்களைத் துருவித்துருவி ஆராய்கிறார். உண்மையான விசுவாசம் காணப்படுகிறதா, உண்மையான அன்பு இருக்கிறதா, ஜீவனுள்ள நம்பிக்கை, ஆவியின் கனியாகிய சந்தோஷம் காணப்படுகிறதா? சுயவெறுப்பு, இடைவிடாத ஜெபம், கடவுளோடு இணைந்து நடத்தல், பரிசுத்தஆவி உள்ளத்தில் வாசமாயிருப்பது முதலானவைகள் நம்மிடம் காணப்படுகிறதா என்று அவர் பரிசோதிக்கிறார். இவைகளில் எதுவும் காணப்படாமல், நாம் ஆலயத்திற்குப் போவதாலோ, சபைக்கு போவதாலோ, ஜெபக்கூட்டங்களில் பங்குபெறுவதாலோ, திருவிருந்தில் கலந்து கொள்வதாலோ, பிரசங்கம் கேட்பதாலோ, வேதவாசிப்புகளினாலோ அவர் திருப்தியடைந்துவிடப் போவதில்லை. ஏனென்றால் இவைகள் யாவும் வெறும் இலைகளால் சூழப்பட்டிருப்பதற்கு சமம். ஆவியின் கனிகள் நம்மில் காணப்படாவிட்டால், அவர் நம்மைக் குறித்து திருப்தியடையப் போவதில்லை. அவருடைய பரிசோதனை, நிராகரிக்க முடியாதபடி உயரிய அளவில் இருக்கும். உங்களுடைய வார்த்தைகளையோ, உங்களுடைய தீர்மானங்களையோ, உறுதிமொழிகளையோ இயேசுக்கிறிஸ்து கவனிப்பதில்லை என்பதை அறியுங்கள். உங்களுடைய உண்மையான மனநிலையையும்,

உள்ளான விசுவாசத்தையும், கடவுளின் ராஜ்ஜியத்திற்கேற்ற கனிகளை உருவாக்கும்படியாக பரிசுத்தஆவியானவரை நீங்கள் சார்ந்து இருக்கிறீர்களா என்பதையுமே அவர் நோக்குகிறார்.

***கனிகளை எதிர்பார்ப்பதற்கு நமது கர்த்தருக்கு உரிமை இருக்கிறது.*** அவர் அந்த அத்தி மரத்தினிடம் சென்ற போது அதனிடமிருந்து கனிகளை எதிர்பார்ப்பதற்கு அவருக்குக் காரணம் இருந்தது. ஏனென்றால் இயற்கைவிதியின்படி அத்திமரத்தில் இலைகள் உருவாவதற்கு முன்பாக கனிகள் தோன்றியிருக்க வேண்டும். இலைகள் வந்துவிட்டதானால் அதில் நிச்சயம் கனிகள் இருக்கும். அது அத்திப்பழக் காலமில்லை என்பது உண்மைதான். அது அத்திப்பழக் காலமில்லையென்றால் இலை உருவாவதற்கும் அது காலமல்ல. ஏனென்றால் அத்திப்பழம்தான் முதலில் உருவாக வேண்டும். இந்த மரமோ, பழங்கள் இருப்பதற்கு அடையாளமான ஏராளமான இலைகளை தன்னில் கொண்டிருப்பதின் மூலமாக தன்னிடம் அத்திப்பழங்களும் இருப்பதுபோல் விளம்பரப்படுத்தியது. காலம் எவ்வளவு மோசமானதாக போனாலும், நாம் காலத்தைப் பின்பற்றுகிறவர்களாயிராமல், என்றும் மாறாத ஒரே சத்தியத்தையேபின்பற்றுவோம்என அறிவிக்கிறவர்களாகஇருக்கிறோம். மனிதர்களிடையே நாம் மீட்கப்பட்டவர்களாகவும், கோணலும் மாறுபாடுமான இந்த சந்ததியினின்று மீட்டெடுக்கப்பட்டிருப்பதாகவும் கிறிஸ்தவர்களாகிய நாம் அறிவிக்கிறோம். உலகத்தையும் அதன் மாறுதல்களையும் தனக்கு வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டிருக்கிற மனிதர்களிடமிருந்து கர்த்தர் கனிகளை எதிர்பார்க்க மாட்டார். தனது வார்த்தைகளை விசுவாசிக்கிற விசுவாசிகளிடமிருந்து கனிகளை எதிர்பார்ப்பார். பிரசங்கியிடமிருந்தும், ஞாயிறு பாடசாலை ஆசிரியரிடமிருந்தும், சபை ஊழியர்களிடமிருந்தும், வேதவகுப்புகளை நடத்துகிற சகோதரிகளிடமிருந்தும், தன்னைச் சுற்றிலும் அமர்ந்திருக்கிற இளைஞர்களுக்கு சுவிசேஷ வழிகாட்டியாக இருக்கிற சகோதரனிடமிருந்தும் இயேசுக்கிறிஸ்து கனிகளை எதிர்பார்ப்பார். சுவிசேஷ ஒழுங்கிற்கு தம்மை ஒப்புவித்திருக்கிற அனைவரிடமிருந்தும் அவர் கனிகளை எதிர்பார்ப்பார். இலைகளால் சூழப்பட்டிருக்கிற அத்திமரத்திடமிருந்து அவர் கனிகளை எதிர்பார்த்தது போலவே, அவரைப் பின்பற்றுகிறவர்களாகத் தம்மை அறிவித்துக் கொள்கிற அனைவரிடமும் இருந்து பெரிய காரியங்களை எதிர்பார்க்க அவருக்கு உரிமை இருக்கிறது. ஓ! இந்த விஷயம் ஒரு பிரசங்கியை எவ்வளவாக

அசைத்து நடுங்கச் செய்ய வேண்டும்! அதேவிதமாக அது உங்கள் ஒவ்வொருவரிலும் பாதிப்பை ஏற்படுத்த வேண்டுமல்லவா?

***கர்த்தர் கனிகளையே ஆவலுடன் தேடுகிறார்.*** இரட்சகர் மரத்தினருகில் வந்தபோது, இலைகளின் மீது அவருக்கு ஆர்வம் இல்லை. ஏனென்றால் அவர் பசியாக இருந்ததாக நாம் வாசிக்கிறோம். மனிதருடைய பசியை அத்திமரத்து இலைகளால் போக்க முடியாது. ஒன்றிரண்டு அத்திப்பழங்களை சாப்பிட ஆவலாயிருந்தார். நம்மிடமிருந்தும் அவர் கனிகளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். நமது பரிசுத்தத்தின் மீது அவர் பசியாயிருக்கிறார். அவர் நம்மில் சந்தோஷங் கொள்வதால் நமது மகிழ்ச்சி பரிபூரணமாகும் படிக்கு அவர் ஆவலோடிருக்கிறார். அவர் இந்த சபையிலுள்ள ஒவ்வொருவரிடமும் வருகிறார். அதிலும் முக்கியமாக சபையின் தலைவர்களிடம் வருகிறார். தமது ஆத்துமாவுக்குப் பிரியமான கனிகள் ஏதேனும் உங்களிடத்தில் இருக்கிறதா என்று பார்க்கிறார். அவரை நாம் நேசிக்கிறோமா என்று பார்ப்பார். சகமனிதர்களிடம் நமக்கு அன்பு இருக்கிறதா என்று பார்ப்பார். வெளிப்படுத்தப்பட்டிருப்பவைகளில் உறுதியான விசுவாசம், ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாகப் போராடுதல், ஜெபத்தில் இடைவிடாமல் வேண்டுதல், நமது வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் மிகவும் கவனத்தோடு வாழுதல் போன்ற காரியங்கள் நம்மில் இருக்கிறதா என்று பார்ப்பார். கடவுளின் கட்டளைகளுக்கும் பரிசுத்தஆவியானவரின் ஒப்புதலுக்கும் ஏற்ற விதத்தில் நமது செயல்பாடுகள் இருக்கிறதாவென எதிர்பார்ப்பார். இவைகளை அவர் நம்மில் காணாவிட்டால், அவருடைய பங்கை அவர் பெறவில்லை என்றுதான் அர்த்தம். தமது ஜனங்களை பரிசுத்தமானவர்களாக மாற்றுவதற்கேயல்லாமல் வேறு எதற்காக அவர் மரித்தார்? தமக்கென நற்காரியங்களை செய்வதற்கு வைராக்கியமுள்ள ஒரு ஜனத்தை சுத்திகரிப்பதற்கேயல்லாமல் வேறு எதற்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார்? இரத்தத்தின் பெருந்துளிகளான வியர்வையும், ஐந்து காயங்களும், மரணவேதனையும் கிரயமாக செலுத்தியது நம்மை தமக்கென சொந்தமாக்கிக் கொள்வதற்கேயல்லாமல் வேறெதற்காக? நாம் அவரை மகிமைப்படுத்தவில்லையானால் அவர் பாடுபட்டு அடைந்தவைகளை நாம் பறித்துக் கொள்வதைப் போலாகிவிடும். நமது பரிசுத்தமும் வைராக்கியமுமான தேவபக்தி நிறைந்த வாழ்க்கையின் மூலமாக அவரது புகழை அறிவிக்கவில்லையானால்

பரிசுத்தஆவியானவரை துக்கப்படுத்துகிறவர்களாய் இருப்போம்.

இன்னொன்றை கவனியுங்கள். கிறிஸ்து ஒரு ஆத்துமாவிடம் வரும்போது, ***அவர் அதை மிகுந்த கவனத்துடன் பரிசோதிக்கிறார்.*** அவர் தம்மை பரிகாசம் செய்ய விடமாட்டார். அவரை ஏமாற்ற முடியாது. அத்திமரமாக இருந்துகொண்டு இலைகளை மாத்திரம் கொண்டிருப்பது இயற்கைக்கு விரோதமான தவறுதல் என நான் நினைத்தேன். ஆனால் நமது கர்த்தர் அப்படி ஒருபோதும் தவறாக நினைத்துவிட மாட்டார். அப்பொழுதுதான் முளைத்துக் கொண்டிருக்கிற இளம் அத்திமரத்தைகூட அவர் கவனியாமல் இருக்க மாட்டார். அது எந்த வயதில் இருந்தாலும் ஆவியின் கனி அதில் இருக்கிறதா என்பதை அவர் அறிவார். சரளமாக பேசுவதையெல்லாம் இருதயத்திலிருந்து வருவதாக அவர் தவறாக எண்ணிவிட மாட்டார். வெறும் உணர்ச்சிவசப்படுதலை உண்மையான நற்பண்பென நினைத்துவிட மாட்டார். பிரியமானவர்களே, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து உங்களுடைய உண்மை நிலையை பரிசோதிக்க வருகையிலே நீங்கள் சரியான நபரிடம்தான் பரிசோதனைக்கு உட்படுகிறீர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். உங்கள் சகமனிதர்கள் உங்களைக் குறித்து அவசரமாக தீர்ப்பு சொல்லிவிடுவார்கள். அவர்கள் குற்றம் கண்டுபிடிப்பவர்களாகவோ அல்லது உங்கள் தவறுதலை கண்டுகொள்ளாதவர்களாகவோ இருப்பார்கள். நாம் என்ன நிலமையில் இருக்கிறோம் என்பதை கிறிஸ்து மிகச் சரியாக அறிவார். அவர் வெளிப்படையான தோற்றத்தின்படியாக அல்ல, உண்மையின்படியே நியாயந்தீர்ப்பார். ஓ! இன்றைக்கு பரலோகத்தை நோக்கிய நமது விண்ணப்பம் இப்படியாக இருப்பதாக: "ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவே, வாரும், வந்து உம்முடைய கண்களால் என்னைப் பரிசோதித்தருளும். நான் உமக்கேற்கும் விதத்தில் வாழ்கிறேனா இல்லையா என்பதை ஆராய்ந்தருளும்! என்னுடைய தவறுகளைத் திருத்திக் கொள்வதற்காகவும், கிருபையால் போஷிக்கப்படும்படிக்கும், நீர் பார்க்கிறவண்ணமாகவே நானும் என்னைக் காண கிருபை செய்யும். நான் அறிக்கையிடுகிறவிதமாக நடந்து கொள்ளச் செய்யும். நான் அப்படி இல்லையென்றால், எனது பாவநிலையை எனக்கு உணர்த்தி, என்னுடைய ஆத்துமாவில் கிரியை செய்யத் தொடங்கும். நான் உம்முடையவனாக இருப்பேனாகில், உமது பார்வையில் சரியானவனாகக் காணப்படுவேனாகில், அன்போடு உறுதிப்படுத்துகிற உம்முடைய வார்த்தையை அனுப்பி எனது பயத்தை

மீண்டுமாக நீக்கிப் போடும். நீரே என்னுடைய இரட்சிப்பின் தேவன் என்று நான் மிகவும் களிகூருவேன்."

## இ) முதன்மையாகத் தென்பட்டும் கனியற்றவர்களாயிருக்கிறவர்களிடத்தில் கிறிஸ்து வருவதின் விளைவு மிகவும் பயங்கரமானதாக இருக்கும்.

பரிசோதிக்கிறவர் கனிகளை எதிர்பார்த்து வந்தபோது ***இலைகளையன்றி வேறொன்றையும் காணவில்லை.*** இலைகளையன்றி வேறொன்றும் இல்லையென்றால், பொய்யைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்று அர்த்தம். மிகவும் கடூரமாக சொல்வது போல இருக்கிறதா? நான் விசுவாசி என்று சொல்லிக் கொண்டு, என்னிடத்தில் விசுவாசமே இல்லையென்றால் அது பொய்யில்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்? நான் மனந்திரும்பிவிட்டதாக கூறிக் கொண்டிருந்தாலும், மனந்திரும்பாதவனாக இருந்தால் நான் கூறுவது பொய்தானே? கடவுளின் ஜனங்களோடு நான் சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்தும் இருதயத்தில் கடவுள் பயமற்றவனாக இருந்தால் அது பொய்தானே? நான் கர்த்தருடைய பந்தியில் வந்து அப்பத்திலும் பாத்திரத்திலும் பங்கு பெற்றாலும், அவருடைய சரீரத்தைக் குறித்து ஒருபோதும் நிதானித்து அறியாதவனாக இருந்தால் அது உண்மைக்குப் புறம்பானதுதானே? நான் எனது சீரழிந்துபோன நிலையை ஒருபோதும் உணராமலும், ஒருபோதும் உறுதியான அழைப்பைப் பெறாமலும், கடவுளால் நான் தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறேனா என்பதை ஒருபோதும் அறியாமலும், ஒருபோதும் மீட்பின் இரத்தத்தை சார்ந்திராமலும், பரிசுத்தஆவியினால் ஒருபோதும் புதுப்பிக்கப்படாமலும் இருந்தேனாகில், கிருபையின் கோட்பாடுகளைக் குறித்து நான் வாதிடுவது பொய் அல்லவா? இலைகளையன்றி ஒன்றுமில்லையென்றால் பொய்யைத் தவிர வேறு எதுவும் இல்லை, அதை நமது இரட்சகர் காணவும் செய்கிறார். கனிகளற்று வெறும் செழுமையான இலைகளை மாத்திரம் கொண்டிருப்பது அவருக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கும். கிருபையைப் பெறாமல் விசுவாசி போல நடப்பது, செத்த ஆத்துமா நடத்துகிற நாடகக் காட்சியாகும். பரிசுத்தமில்லாமல் பக்திவேஷமிடுவது அசுத்தங்களை போட்டு எரிப்பதில் உருவாகின்ற வெளிச்சத்திற்கு ஒப்பானது. நான் பயப்படுத்தும் வார்த்தைகளைத்தான் பேசுகிறேன். நான் அச்சமுற்றிருக்கையில் எப்படி

பயமின்றி பேசமுடியும்? நீங்களும் நானும் உயிரோடிருக்கிறவர்கள் என்று பெயர் பெற்றிருந்தாலும் செத்தவர்களாகக் காணப்படுவோமானால் நாம் எவ்வளவு பயங்கர நிலையிலிருப்போம்! நமது நிலைமை அழிவைக் காட்டிலும் மேலானது. அது அழிவின் அழிவு. பாவநிலையிலேயே இருந்து கொண்டு பக்திமான்கள் போலக் காண்பிப்பது, சாணத்தின் மீது வாசனைத் திரவியத்தை தெளித்து அதை அப்படியே விட்டுவிடுவதற்கு சமம். பிசாசின் குணாதியங்களைக் கொண்டிருக்கிற ஒரு ஆவிக்கு தேவதூதனின் பெயரை அளிப்பது பரிசுத்தஆவியானவருக்கு விரோதமாக செய்யும் பாவத்தைப் போன்றதாகும். நாம் மனமாற்றத்தை அடையாமலிருந்தோமானால், தேவஜனங்களோடே நமது பெயரும் எழுதப்பட்டிருப்பதில் பிரயோஜனம் உண்டா?

அதில் கனிகள் இல்லையென்பதை நமது கர்த்தர் கண்டுகொண்டுவிட்டார். அது மிகவும் பயங்கரமானது. அடுத்தபடியாக அவர் அம்மரத்திற்கு ***ஆக்கினைத் தீர்ப்பளிக்கிறார்.*** அவர் அதற்குத் தீர்ப்பளித்தது சரிதான் அல்லவா? அவர் அதை சபித்தாரா? அது ஏற்கனவே ஒரு சாபமாக நின்றது. பசியுள்ளவர்களுக்கு ஆசை காண்பித்து அவர்களைத் தங்கள் வழியை விட்டு விலகிவரச் செய்து அவர்களை ஏமாற்றும்படியான நோக்கத்தில் அந்த மரம் இருந்தது. ஏழைகளையும் தேவையுள்ளவர்களையும் பரியாசம் பண்ணுவதற்கு தேவன் விடமாட்டார். வெறுமையான பக்திவேஷம் சாபத்தில் முடியும். அப்படிப்பட்டவை சத்தியத்தின் தேவனிடமிருந்து தண்டனை பெற வேண்டாமா? அந்த மரமானது தான் இருந்த இடத்திற்குத் தகுந்தபடி உபயோகமாக இல்லை. எந்த மனிதனுக்கும் அது புத்துணர்ச்சியை அளிக்கவில்லை. ஒரு விசுவாசி மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க வேண்டிய நிலையில் இருக்கிறான். ஆனால் கனியற்ற தன்மையுடையவனோ உண்மையில், தீமையான விளைவுகளைத்தான் மற்றவர்களுக்கு அளிக்கக் கூடியவனாக இருக்கிறான். கடவுளின் கிருபையை அவன் பெற்றிருக்காவிட்டால், அவனால் ஒரு பிரயோஜனமும் இல்லை. அவன் ஒரு சாபமாகக்கூட இருப்பான். தமது ஜனத்திற்கு வெற்றியை அளிக்கக் கூடாதபடிக்கு, கர்த்தருக்கு விசனத்தை உண்டுபண்ணுகிறவனாக, கூடாரத்தில் இருந்த ஆகானைப் போல இருப்பான்.

அந்த அத்திமரத்தைப் பட்டுப்போகச் செய்ததின் மூலமாக நமது

கர்த்தர் அதை ஒரு நல்ல நோக்கத்திற்கு உபயோகித்துக் கொண்டார். வீணான மாய்மாலக்காரர்களுக்கு அந்த மரம் ஒரு அடையாளமாகவும் எச்சரிப்பாகவும் ஆனது. தேவபக்தியற்றவர்கள் விசுவாசிகளைப் போல தோற்றமளித்துவிட்டு, வழிவிலகிப் போகும்போது, அதன் மூலமாக மற்றவர்கள் படிப்பினையைப் பெற்றுக் கொள்கிறார்கள். தேவனுடைய வழிகளில் சரிவர நடக்காதவர்களின் அழிவை அவர்கள் காணும்படியாக நேரிடுகிறது. அவர்கள் ஞானமுள்ளவர்களாக இருந்தால் அதை தவறாகக் கருதமாட்டார்கள். பிரபலமான பக்திமான்கள் ஒவ்வொருவரும் அழிவை அடையும்போது கடவுள் அதை அப்படியாகத்தான் காண்பார்!

இரட்சகர் அதை நியாயந்தீர்த்த பிற்பாடு ***அதற்குரிய தண்டனையை அளிக்கிறார்.*** என்ன தண்டனை? “இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக் கடவது.” அம்மரத்தின் நிலமையை உறுதிப்படுத்துகிறதான வாக்குதான் இது. அந்த மரம் இதுவரை கனி கொடுக்கவில்லை. இனிமேலும் கொடுக்காது. ஒரு மனிதன் கடவுளின் கிருபையைப் பெற்றுக் கொள்ளாமலேயே, அதைப் பெற்றுக் கொண்டவனைப் போல இருக்க மனதுள்ளவனாக இருந்தால், அந்த நியாயாதிபதி, “கிருபையைப் பெற்றுக் கொள்ளாமலேயே இரு” எனக் கூறிவிடுவார். கடவுளை விட்டு விலகி இருப்பவர்களைப் பார்த்து கடைசியில் அந்த மேன்மையான நியாயாதிபதி சொன்ன ஒரே வார்த்தை, “என்னை விட்டு அகன்று போங்கள்” என்பதுதான். அவர்கள் தங்கள் வாழ்க்கை முழுவதும் விலகிப் போய்க்கொண்டேயிருந்தார்கள். மரணத்திற்குப் பிறகு அவர்களுடைய குணம் அழியாமல் அவர்களோடே ஒட்டிக் கொண்டு வந்துவிட்டது. கிருபையற்ற நிலையை நீங்கள் தெரிந்து கொண்டீர்களானால், கிருபையற்ற நிலையில் தொடர்ந்து இருப்பதே உங்களுடைய முடிவாகும். “அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்“. கர்த்தராகிய ஆண்டவர் உங்களில் ஒருவருக்கும் இந்தவிதமான தீர்ப்பை ஒருபோதும் கூறாதிருப்பாராக. நாம் மனந்திரும்பும்படியாக அவர் நம்மைத் திருப்பி, அவருடைய நாமத்திற்கு மகிமையும் புகழ்ச்சியும் உண்டாகும்படிக்கு நம்மில் நித்தியஜீவனை ஏற்படுத்துவாராக.

***அதன் பிற்பாடு அந்த மரத்தில் ஒரு மாறுதல் உண்டானது.*** அது உடனடியாக பட்டுப்போகத் தொடங்கினது. அதில் அதிர்ச்சி ஏதேனும் ஏற்பட்டதை சீஷர்கள் பார்த்தார்களா என்பது எனக்குத் தெரியவில்லை.

ஆனால் அடுத்தநாள் காலையிலே அவர்கள் அந்த வழியாகப் போகையிலே அது வேரோடே பட்டுப்போயிருந்ததாக மாற்கு தமது சுவிசேஷத்தில் எழுதுகிறார். அதன் இலைகள் மாத்திரம் வாடித் தொங்கவில்லை. அடிமரத்தின் பட்டையானது மாத்திரம் காய்ந்து உரிந்து போயிருக்கவில்லை. அதன் முழு உருவமும் சீர்குலைந்து போயிருந்தது. வித்தியாசமான விதத்தில் கிளைகள் உருவாகின்ற அத்திமரத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? இலைகளற்ற அதன் கிளைகள் வித்தியாசமான விதத்தில் தோற்றமளிக்கும். இந்த அத்திமரம் ஒரு எலும்புக்கூடு போலத் தோற்றமளித்திருக்கும் என நான் எண்ணுகிறேன்! அது இரண்டு தரம் செத்துப் போனது. வேரோடே செத்துப் போனது. இந்தவிதமாகத்தான் கள்ள விசுவாசியும் அழிவை அடைகிறான். எரிகிற சூளையின் அடிப்பாகத்திலே விழுந்த பொருள் தனது தன்மையை எல்லாம் இழந்து காய்ந்து கருகிப் போவது போல ஆகிறான். அந்த மனிதன் இனி ஒருபோதும் முன்னைப் போல ஆவதில்லை. அவனுடைய மகிமையும் அழகும் அவனைவிட்டு முற்றிலுமாக நீங்கிப் போகிறது. அந்த மரத்தை ஒரு கோடாரி வெட்டவில்லை, அதற்கு நெருப்பு வைக்கப்படவில்லை. ஒரு வார்த்தை மாத்திரமே சொல்லப்பட்டது. அந்த வார்த்தையானது அம்மரத்தை வேரோடே பட்டுப்போகச் செய்தது. ஒரு காலத்தில் தைரியமான விசுவாசியாகக் காணப்பட்டவன், இடிமுழக்கங்களோ கொள்ளை நோயோ இல்லாமல், சடுதியில் காயீன் அடைந்த தீர்ப்பைப் பெற்றான். அது ஒரு பயங்கரமான தீர்ப்பு. தோட்டக்காரன் கையில் கோடாரியோடே வந்து, "மரமே, கனி கொடு. இல்லையானால் வெட்டி எறியப்படுவாய்" என்று கூறுகிற நிலமை ஏற்படாதபடிக்குப் பார்த்துக் கொள்ளுங்கள். இவ்வித எச்சரிப்பு பயங்கரமானது. ஆனால் எதுவும் கூறாமல் தானே பட்டுப்போய் அழியும்படிக்கு விட்டுவிடுவதைப் பார்க்கிலும் இவ்வித எச்சரிப்பைப் பெறுவது ஒருவிதத்தில் நல்லது.

இப்பொழுது நான் என் பாரத்தைக் கூறிவிட்டேன். உங்களைக் காட்டிலும் எனக்குத்தான் அது அதிக பாரமாக இருக்கிறது. ஏனென்றால் நான்தான் இங்கே எல்லோரின் முன்னிலையிலும் நிற்கிறேன். உங்களில் அநேகரைக் காட்டிலும் நான் அதிகமாக விசுவாசத்தை வெளிப்படுத்துகிறவனாக காட்சி அளிக்கிறேன். அவருடைய கிருபையானது என்னோடேகூட இல்லாவிட்டால், செழிப்பானவனாக என்னைப் பார்த்தறிந்த உங்கள் அனைவருடைய கண்களுக்கு முன்பாகவும் நான்தான் வேரோடே பட்டுப்போக நேரிடும். அவருடைய

மகிமைக்குப் புகழ்ச்சியாக கனி கொடுக்காதவர்களைக் குறித்து கர்த்தர் காண்பித்த என்னவொரு பயங்கரமான உதாரணம்!

இதமான சில வார்த்தைகளைக் கூறி இந்த செய்தியை முடிக்க விரும்புகிறேன். எந்த மனிதனும், "இது மிகவும் கடுமையானது" என்று சொல்லாதிருப்பானாக. சகோதரரே, நாம் நம்புகிற காரியங்களில் நாமே உண்மையாக இருக்க வேண்டியது என்ன கடினமானதா? நமது கர்த்தர் செய்கிற எதுவும் கடுமையானது என்று எண்ணாதிருங்கள் என வேண்டிக் கொள்கிறேன். அவர் மிகவும் சாந்தமும் இளகியமனதும் உடையவர். அவர் அழித்த ஒரே காரியம் இந்த அத்திமரத்தை மாத்திரந்தான். எலியா தீர்க்கதரிசி வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்து மனிதர்களை அழித்தது போல அவர் எந்த மனிதனையும் அழிக்கவில்லை. எலிசா தீர்க்கதரிசி காட்டிலிருந்த கரடிகளைக் கொண்டு பிள்ளைகளை அழித்தது போல அவர் யாரையும் அழிக்கவில்லை. கனி கொடுக்காத ஒரு மரத்தை மாத்திரமே அவர் பட்டுப்போகும்படி செய்தார். அவர் மிகுந்த அன்பும் இளகியமனமும் கொண்டவர். நீங்கள் பட்டுப்போவதை அவர் விரும்பவில்லை. நீங்கள் உண்மையோடு நடந்து கொண்டீர்களானால் அப்படி ஆகவும் மாட்டீர்கள். நீங்கள் சொல்லுவதின்படி நடந்து கொள்கிறீர்களா என்பதைத்தான் அவர் எதிர்பார்க்கிறார். நீங்கள் மாய்மாலக்காரர்களாய் இராதேயுங்கள் என்று அவர் கூறினால் நீங்கள் அதற்கு எதிர்த்து நிற்கிறீர்களா? அவருடைய கடிந்து கொள்ளுதலை நீங்கள் வெறுத்துத் தள்ள ஆரம்பித்தீர்களானால், நீங்கள் இருதயத்தில் உண்மையற்றவர்களாகக் காணப்படுவீர்கள். அதற்கு மாறாக, தாழ்மையோடு அவர் பாதத்தில் விழுந்து வணங்கி, "கர்த்தாவே, இந்த தெய்வீகமான செய்தி எனக்கு பொருந்துமானால், என் பாவத்தின் வல்லமையை நான் உணரும்படியாகவும், எனது இரட்சிப்பிற்காக உமதண்டை ஓடி வரும்படியாகவும் நான் எனது மனசாட்சியில் அதனை உணரும்படியாகச் செய்தருளும்" என்று கெஞ்சிக் கேட்க வேண்டும். இந்த விதமாக அநேக மனிதர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள் - இத்தகைய கடுமையான, ஆனால் உண்மை நிறைந்த காரியங்கள் பல மனிதர்களை, அவர்கள் தவறுதலாக நம்பிக் கொண்டிருந்தவைகளிலிருந்து, கிறிஸ்துவுக்கும் தங்களுடைய ஆத்துமாவுக்கும் உண்மையோடு நடந்து கொள்ளும்படியாக அழைத்து வந்திருக்கிறது.

சிலர் இப்படியாகக் கூறுவார்கள், "நான் என்ன செய்ய வேண்டுமென எனக்கு இப்போது தெரிகிறது. ஆளை விடுங்கள். நான் பகிரங்கமாக என் விசுவாசத்தைக் காண்பிக்கப் போவதேயில்லை. நான் இலைகளை உடையவனாக இல்லாமலே இருந்து விடுகிறேன்" என்பார்கள். சிநேகிதனே, அதுவும் கோபத்தை உள்ளடக்கிக் கொண்டிருக்கிற எதிர்ப்பின் ஆவிதான். அதற்கு பதிலாக நீங்கள் என்ன சொல்ல வேண்டுமென்றால், கர்த்தாவே, என்னுடைய இலைகளை எடுத்துப் போட்டுவிடும் என்று நான் கேட்கவில்லை. என்னில் கனிகளை உருவாக்கும் என வேண்டுகிறேன். இலைகள் இல்லாமல் கனிகள் நன்றாகப் பழுக்காது. இலைகள் மரத்தின் ஆரோக்கியத்திற்கு அவசியம். மரத்தின் ஆரோக்கியம் கனிகள் பழுப்பதற்கு அவசியம். விசுவாசத்தை பகிரங்கமாக வெளிப்படுத்துவது அவசியம், அதை மறுக்கக் கூடாது. கர்த்தாவே நான் ஒரு இலையையும் இழக்க மாட்டேன் என்று அவரிடம் வேண்டி கொள்ளுங்கள்.

*"கர்த்தரை சொந்தமாக்கிக் கொள்ளவோ,*

*அவருக்கென உழைக்கவோ வெட்கப்படேன்.*

*அவரது வார்த்தையையும்*

*சிலுவையின் மகிமையையும் போற்றுவேன்."*

கர்த்தாவே, நான் ஒரு மூலையில் அமர்ந்திருக்க விரும்பவில்லை. எனது நல்நடக்கையை மனிதர்கள் பார்க்கும்படியான இடத்திலிருப்பது எனக்கு மகிழ்ச்சிதான். அதைக் கண்டு அவர்கள் பரலோகத்திலிருக்கிற என் பிதாவை மகிமைப்படுத்துவார்களே. என்னை எல்லோரும் பார்க்க வேண்டுமென நான் கேட்கவில்லை. ஆனால் அப்படி பார்ப்பதைக் குறித்து நான் வெட்கப்பட மாட்டேன். ஆனால் கர்த்தாவே, பிறர் பார்க்கும்படியாக என்னைத் தகுதிப்படுத்தும். ஒரு சேனைத் தலைவன், படைவீரனிடம், "இங்கே உறுதியாக நில். வெற்றுத் துப்பாக்கியால் சுடாதபடிக்கு, உன் துப்பாக்கியில் குண்டுகளை நிரப்பி ஆயத்தமாயிரு" என்று கூறும்போது அதற்கு அவன், "இவ்வளவு முக்கியமான இடத்தில் என்னால் நிற்க முடியாது. நான் வேண்டுமானால் கடைசி வரிசையில் நின்று கொள்கிறேன்" என்று கூறுவானாகில் அது சரியான பதிலாக இருக்குமா? கோழையே! நீ போலியானவனாக இருக்கக் கூடாது என்பதற்காக உன் தலைவன் உன்னை எச்சரிக்கிறான். நீயோ உன்

உண்மை நிலையை வெளிப்படுத்துகிறாய். இங்கிருக்காதே. ஓடிப் போ! நீ நிச்சயமாக தீமை விளைவிப்பவன்தான். கர்த்தரின் கடிந்து கொள்ளுதலை ஏற்றுக் கொள்ள முடியாதவர்களெல்லாம் நிச்சயமாக அவருடையவர்கள் அல்ல. இத்தகைய தெய்வீக உண்மைகள் நம்மை அவரை விட்டு விலகிப் போகச் செய்யாதிருக்கட்டும். அதற்கு பதிலாக நாம் கர்த்தரிடம் நெருங்கி வந்து, "கர்த்தாவே, என்னுடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் நான் உறுதிப்படுத்திக் கொள்ள உதவி செய்யுமாறு வேண்டுகிறேன். நீர் எதிர்பார்க்கிற கனிகளை நான் கொடுக்கும்படிக்கு எனக்கு உதவி செய்யும். உம்முடைய கிருபை அதை நடப்பிக்கும்" என்று ஜெபிக்க வேண்டும்.

கனி கொடாத தன்மைதான் நமது இயல்பாயிருக்கிறது. அதை நமக்கு உணர்த்தும்படிக்கு இங்குள்ள ஒவ்வொருவரும் கர்த்தரிடம் கெஞ்சி மன்றாட வேண்டுமென நான் புத்தி கூறுகிறேன். நாம் சிறிதளவு கனி கொடுக்கிறவர்களாயிருந்தாலும் அதன் போதாத நிலையை உணர்ந்து துக்கப்படும்படியாக கர்த்தர் அருள் செய்வாராக. உங்களைக் குறித்து நீங்களே திருப்தியடைவது ஆபத்தானது. நீங்கள் பரிசுத்தமாகவும், குற்றமில்லாதவர்களாகவும்இருப்பதாகநினைத்துக்கொள்வது பெருமைக் குழியின் விளிம்பில் நிற்பதற்கு சமம். நீங்கள் உங்கள் தலையை மிகவும் நிமிர்த்திக் கொண்டு பெருமையோடு நடந்தீர்களானால் வாசல்நிலையில் இடித்துக் கொள்வீர்கள். உயரமான போலி மரக்கால்களை வைத்துக் கொண்டு நடந்தீர்களானால் கீழே விழுந்துவிடுவீர்களோ என நான் அச்சம் கொள்வேன். அதற்கு பதிலாக நீங்கள் இவ்விதமான எண்ணம் உடையவர்களாக இருந்தால் பத்திரமாக இருப்பீர்கள்: "கர்த்தாவே, நான் உமக்கு ஊழியம் செய்கிறேன். நான் ஏமாற்றுக்காரனல்ல. நான் உம்மை நேசிக்கிறவன். நீர் உமது ஆவியின் கிரியைகளை என்னில் நடப்பிக்கிறீர். ஆனாலும், நான் எவ்விதமாக இருக்க விரும்புகிறேனோ அந்த அளவிற்கு நான் இல்லை. நான் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இல்லை. நான் பரிசுத்தமாக இருக்க விரும்புகிறேன். அதை அடைவதற்கு எனக்கு உதவி செய்யும். கர்த்தாவே, நீர் என்னை உருவாக்கி, கொத்தி, எரு போட்ட பிறகும் நான் இவ்வளவு குறைவான கனிகளைத் தருகிறவனாக இருக்கிறேனே என்பதை நினைக்கும் போது மண்ணின் தூசியைப் போல உணருகிறேன். என்னை ஒன்றுமில்லாதவனாக கருதுகிறேன். கர்த்தாவே என் மேல் இரக்கமாயிரும் என்று கெஞ்சுகிறேன். நான் எல்லாவற்றையும் செய்திருந்தாலுமே

என்னை அப்பிரயோஜனமான ஊழியக்காரனாகத்தான் கருதுவேன். அப்படியிருக்க இவ்வளவு குறைவாக செய்திருக்கின்ற நிலமையில் நான் எப்படி என் அவமானத்தை மறைப்பேன்?"

இந்த அறிக்கையை நீங்கள் செய்த பின்பு, கர்த்தரும் அதைக் கேட்ட பிற்பாடு, வேதாகமத்திலிருந்து ஒரு அடையாளத்தை நீங்கள் மனதில் பதித்துச் செல்ல விரும்புகிறேன். ஒரு வேளை இந்த செய்திக்கு பிற்பாடு, நீங்கள் உங்களைக் குறித்து மிகவும் பிரயோஜனமற்றவர்களாகவும், ஜீவனற்றவர்களாகவும், கனிகளற்றவர்களாகவும் உணர்ந்து, கடவுளுக்கு செய்ய வேண்டிய அளவுக்கு ஊழியம் செய்யவோ, அதிக கிருபைக்காக ஜெபிக்கவோகூட திராணியற்றவர்களாக நினைத்தீர்களானால், இதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். நீங்கள் இந்த பன்னிரெண்டு கோல்களைப் போன்றவர்கள். அவைகள் மிகவும் காய்ந்ததும், உயிரற்றவையுமாய் இருந்தது. அவைகள் கோத்திரத் தலைவர்களின் கையிலிருந்த கோல்கள். அதை அவர்கள் செங்கோல்களைப் போல உபயோகித்திருந்தனர். அந்த பன்னிரெண்டு கோல்களும் கர்த்தரின் சந்நிதியில் வைக்கப்பட்டன. அதில் ஒன்று ஆரோனின் கோல். அதுவும் மற்றவர்களுடைய கோல்களைப் போலவே காய்ந்ததாயும் உயிரற்றதாயும் இருந்தது. கர்த்தரின் வாசஸ்தலத்திலே அந்த பனிரெண்டு கோல்களும் வைக்கப்பட்டன. அடுத்த நாள் காலையிலே நாம் அவைகளைப் பார்க்கிறோம். அதில் பதினொரு கோல்கள் காய்ந்தவண்ணமாகவே இன்னும் காணப்பட்டது. ஆனால், ஆரோனின் கோலைப் பாருங்கள்! என்ன ஆயிற்று? அது செத்ததாக காய்ந்து இருந்ததே! இப்போது பாருங்கள் அதில் துளிர் விட்டிருக்கிறது. மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது! மேலும் பாருங்கள், அதில் பூ பூத்திருக்கிறது! அதில் வாதுமைப் பூக்கள் காணப்படுகிறது. அவை இளஞ்சிவப்பாகவும் வெண்மையாகவும் காணப்படுமென்பதை நீங்கள் அறிவீர்கள். வெகு அற்புதம்! மேலும் கவனியுங்கள், அது வாதுமைப் பழங்களைத் தந்திருக்கிறது! பச்சை நிற வாதுமைப்பழங்களின் உள்ளே உடைத்துப் பார்த்தால் வாதுமைக் கொட்டைகளும் இருக்கின்றன. அந்த காய்ந்து போன கோல்களின் மீது தெய்வீக வல்லமை வந்து இறங்கியதால் அது துளிர்விட்டு, பூ பூத்து, வாதுமைப் பழங்களைத் தந்திருக்கிறது. ஜீவனும் தயையும் இருப்பதற்கு அடையாளமாக கனிகள் தோன்றுகிறது. கர்த்தாவே, இந்த காலை வேளையிலே இந்த காய்ந்து போன குச்சிகளை எடுத்து அவைகளைத் துளிர்க்கச் செய்யும். கர்த்தாவே இதோ நாங்கள் ஒரு கட்டாக இங்கே இருக்கிறோம். நீர் அன்று

நடப்பித்த அந்த அற்புதத்தை, ஆயிரக்கணக்கான எங்கள் மத்தியிலே நடப்பியும். நாங்கள் துளிர் விட்டு, பூ பூத்து, கனி கொடுக்கும்படியாகச் செய்யும். உமது தெய்வீக வல்லமையோடு வந்து, விறகுக் கட்டையாக இருக்கிற இந்தக் கூட்டத்தாரை செழிப்பான தோட்டமாக மாற்றியருளும். காய்ந்திருக்கிற இந்த கோல்களிலிருந்து இன்றைக்கு நமது கர்த்தர் சில அத்திப்பழங்களைப் பெற்றுக் கொண்டாரானால் எவ்வளவு நலமாயிருக்கும்! "கர்த்தாவே, பாவியாகிய என் மேல் இரக்கமாயிரும்" என்று சொல்கிற ஒரு அத்திப்பழம்! "கர்த்தாவே, விசுவாசிக்கிறேன், என் அவிசுவாசம் நீங்கச் செய்யும்" என்று கூறுகிற மற்றொரு அத்திப்பழத்தில் இருக்கிற சுவை! "அவர் என்னை அடித்தாலும், நான் அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்" என்று கூறுகிற இன்னொரு அத்திப்பழம்! - இப்படியான அத்திப்பழங்கள் இருந்தால் ஒரு கூடை நிறைய கனிகள் நமது கர்த்தருக்குக் கிடைக்குமே. அதன் சுவையில் நமது கர்த்தர் மகிழுவார். எங்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக, இன்றைக்கு, எங்களிடத்திலே கனிகளை உருவாக்கும்படியாக வாரும் பரிசுத்தஆவியானவரே! ஆமேன், ஆமேன்!

*(செப்டம்பர் 29, 1889ஆம் ஆண்டு, மெட்ரோபாலிடன் டாபர்நாகிள், நியுயிங்டன் என்கிற இடத்திலே, கர்த்தருடைய நாளின் காலையிலே, சார்ல்ஸ் ஸ்பர்ஜன் அளித்த தியானத்தின்(2107) சாராம்சம்)*

---

"பூர்வ பாதைகள்" - மொழிபெயர்ப்பு வெளியீடுகள்:

1. இளைஞர்களுக்கான அறிவுரைகள் (ஜெ.சி.ரைல்)
2. சார்ல்ஸ் ஸ்பர்ஜனின் போதனைகள் - பாகம் 2
3. கிறிஸ்தவப் பெற்றோரின் கடமைகள்
4. பொதுஆராதனை (ஜெ.சி.ரைல்)
5. சில அடிப்படைக் கேள்விகள் (ஜான் ப்ளான்சர்ட்)



ls60



# சார்ல்ஸ் ஹேடன் ஸ்பர்ஜன்
# (1834-1892)

இங்கிலாந்திலுள்ள எஸெக்ஸ், கெல்விடான் என்கிற இடத்தில் சூன் மாதம் 19ஆம் தேதி 1834ஆம் ஆண்டிலே பிறந்தார். இவருடைய தந்தையும், தாத்தாவும் போதகர்களாக இருந்த படியினால் சுவிசேஷத்தைக் குறித்த அறிவைப் பெற்றிருந்தார்.

ஆனால் 1850ஆம் ஆண்டு வரைக்கும் மறுபிறப்படையாதவராகத்தான் இருந்தார். அந்த ஆண்டின் ஜனவரி மாதத்தின் ஒரு காலையிலே மறுபிறப்படைந்தார். அதே ஆண்டின் ஆகஸ்டு மாதத்தில், விவசாயிகள் அடங்கிய ஒரு சிறு கூட்டத்தாருக்கு அவர் தமது முதலாவது பிரசங்கத்தைப் பிரசங்கித்தார்.

ஓராண்டிற்குப் பிறகு, ஒரு கிராம சபை அவரைத் தங்களுடைய போதகராக வரும்படி அழைத்தது. தமது 19ஆம் வயதில், 1854ஆம் ஆண்டில் லண்டனிலுள்ள சௌத்வார்க், நியூ பார்க் ஸ்ட்ரீட் ஆலயத்தில் மேய்ப்பனாக நியமிக்கப்பட்டார். அதுதான் பிற்காலத்தில் மெட்ரோபாலிடன் டேபர்நாகிள் ஆக ஆனது. 1855ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கி, ஸ்பர்ஜனுடைய பிரசங்கங்கள் வாரந்தோறும் வெளியிடப்பட்டது. அந்த பழக்கம் அவர் மரித்து 24 ஆண்டுகள் ஆன பிறகும்கூட 1916ஆம் ஆண்டு வரை தொடர்ந்தது. லண்டனில் அவர் பிரசங்கியாக இருந்த காலங்களில், அவர் ஒவ்வொரு ஞாயிறும் 6000 பேர் அடங்கிய கூட்டத்தாருக்குப் பிரசங்கித்தார். அதையும் தவிர வாரந்தோறும் தமது பிரசங்கங்களை வெளியிட்டார். மாதாந்திரப் பத்திரிகையிலும் எழுதி வந்தார். போதகர்களுக்கென ஒரு பயிற்சி நிலையத்தைத் தொடங்கி நடத்தினார். இரண்டு அநாதை ஆசிரமங்களையும், முதியோர் இல்லம் ஒன்றையும் தொடங்கினார். அநேக ஊழியப் பயிற்சி ஸ்தலங்களையும் ஏற்படுத்தினார்.

அவரது இறுதிக் காலங்களில் சுகவீனத்தினால் சரீரத்தில் வேதனைகள் ஏற்பட்டது. அவருடைய ஊழியத்தை எதிரிகள் தாக்கினார்கள். இருந்தாலும் தளராது, 1892 ஜனவரியில் மரணத்தை சந்திக்கும் வரையிலும் தொடர்ந்து அவர் பிரசங்கித்து வந்தார். ஸ்பர்ஜனுடைய வாழ்க்கையின் வெற்றிக்குக் காரணம், அவருடைய ஜெப வாழ்க்கையும், தமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்துவின் அன்பிலும் கிருபையிலும் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்ததுமே.

பூர்வ பாதைகள்

பூர்வ பாதைகள் வெளியீடு